# நிறுவனச் சட்டவியல்

(பட்டப் படிப்பிற்குரியது)

வி. கே. பால்கிருஷ்ண சங்கரய்யா நாயுடு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—620

# நிறுவனச் சட்டவியல்

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

வி. கே. பாலகிருஷ்ண சங்கரய்யா நாயுடு,
பி.ஏ., எம்.எல்.,
பேராசிரியர்,
சட்டக் கல்லூரி, மதுரை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—April, 1975

T.N T.B.S (C.P.) No. 620

© Tamilnadu Textbook Society

# COMPANY LAW

V. K. BALAKRISHNA SANKARIAH NAIDU

Price Rs. 7—10

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

*Printed by*
MANI PRINTERS,
7, Muthial Naicken Street
Madras-7.

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந்தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப்பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'நிறுவனச் சட்டவியல்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 620 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 655 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும், கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

# வழக்குப் பட்டியல்

A

1. Adams *v.* Thrift (102).
2. A. Lakshmanaswami Mudaliar *v.* Life Insurance Corporation of India (58).
3. Ad. Sait *v.* Bank of Mysore (60).
4. Allen *v.* Gold Reefs of West Africa.
5. A. L. Underwood Ltd. *v.* Bank of Liverpool (81).
6. Anand Bihari Lal *v.* Dinshaw (80).
7. Andrews *v.* Gas Meter Co. (71).
8. Alexander *v.* Automotive Telephone Co. (122).
9. Ashburry Railway Carriage and Iron Co. *v.* Ritchie (57).

B

10. Bank of Peshawer *v.* Madho Ram (109).
11. Bowman *v.* Secular Society (15).
12. Brown *v.* British Abrasive Wheel Co. (70).
13. Bradford Banking Co. *v.* Briggs (72).
14. Borlands Trustee *v.* Steel Bros. (73).
15. Browne *v.* Trinidad (75).
16. Burland *v.* Earle (76).
17. Bloomenthal *v.* Ford. (117).
18. Barlett *v.* Mayfair Property Co. (137).
19. Bond *v.* Barrow Haematitle (148).

C

20. Chinistaivilla Rubber Estates Ltd. (100).
21. Cook *v.* Deeks (182).
22. Craven Ellis *v.* Cannons Ltd. (190).

D

23. Derry *v.* Peek (95), (100), (102).
24. Dixon *v.* Kennaway (115), (117).
25. Dawson *v.* African Consolidated Land and Trading Co. (121).

E

26. Ex parte More (54).
27. Eby *v.* Positive Life Assurance Co. (74).
28. Edington *v.* Fitzmaurice (95).
29. Egles Field *v.* Marquis of Londenvy (97).
30. E and W Insurance Co. Ltd. *v.* Mrs. Kamala Mehta (121).
31. Erlanger *v.* New Sombrero Phosphate Co. (165).
32. Elder *v.* Elder and Weston Ltd. (220).

F

33. Forest *v.* Manchester, etc. Railway Co. (58).
34. Fass *v.* Habottle (77), (218).
35. Foster *v.* Coles Foster and Sons Ltd. (139).
36. Flitcrafts case (206).

G

37. Greenberg *v.* Cooperstein (25).
38. Gilford Motor Co. *v.* Horme (28), (40).
39. Govt. Stock Rly. Co. *v.* Manila Rly. (86), (87), (162).
40. Golloway *v.* Halls Concerts Society (122).

H

41. Howard *v.* Patent Ivory Manufacturing Co. (80).
42. Houghton and Co. *v.* Northard Lome and Wills Ltd. (83).
43. Henderson *v.* Lacon Esq. (97).
44. Household Fire Insurance Co. *v.* Grant (110).
45. Hopkinson *v.* Mortimer Harley and Co. Ltd. (126).
46. Harold Holdsworth & Co. *v.* Caddies (190).

I

47. In re: F. G. (Films) Ltd. (29).
48. In re: Sir Minshaw Maneekji Petit (29).
49. In re: Daimler & Co. Ltd. *v.* Continental Tyre and Rubber Co. Ltd. (30).

50. In re: Scientific Poultry Breeding Association (52).
51. In re: Indian Mechanical Gold Extraordinary Co. (53).
52. In re: Patent Tyre Co. (53).
53. In re: Cyclists Touring Club (53).
54. In re: Iron & Steel Co. (54).
55. In re: Sharpe (60).
56. In re: John Beauforte (London) Ltd. (61).
57. In re: Port Canning and Land Investment Co. (61).
58. In re: New British Iron Co. (75).
59. In re: South of England Natural Gas Co. Ltd. (86).
60. In re: Metropolitan Coal Consumers Association (97).
61. In re: Oltas Lapji Diamond Mines (116).
62. In re: South of London Grey-hound Race Courses Ltd. *v.* Wake (116).
63. In re: Barrow (118).
64. In re: European Central Rail Co. (122).
65. In re: Bengal Electric Lamps Ltd. (125).
66. In re: Discoverers Finance Corporation Ltd. (130).
67. In re: The Indian Specie Bank Ltd. (130).
68. In re: Sussex Brick Co. (131).
69. In re: M. F. R. D. Cruz (154).
70. In re: National Motor Mail Coach Co. Ltd. (167).
71. In re: Brahamanabaria Loan Co. Ltd. (196).
72. In re: Hartley Beard Ltd. (199).
73. In re: Yenirlyiye Tobacco Co. Ltd. (226).
74. In re: German Date Coffee Co (226).
75. In re: Patiala Banaspathi Co (228).
76 In re: Bengal Flying Club (228).
77. In re: Gathapordo Ltd. (229).
78. In re: Patent Steam Engines Co. (229).
79. In re: Eric Holmes (Property Ltd.) (247).

J

80. Jennings *v.* Hammond (24).
81. Jones *v.* Lipman (28).
82. Jonson *v.* Lyttle's Iron Agencies (125).

K

83. Khusiram *v.* Hanutlal (77).
84. Kotla Venkatasamy *v.* Ramamurthy (79).
85. Kredit Bank *v.* Shenkers (81).

86. Karberg's Case (98);
87. Kelner *v.* Baxter (167).
88. Kayl *v.* Croydon Tramway Co. (198).

L

89. Lotman *v.* Browgham (56, 59).
90. London Country Council *v.* Attorney General (58).
91. Lakshmi Ratanlal Cotton Mills Ltd. *v.* J. K. Jute Mills Co. (82).
92. Laroeque *v.* Beauchemin (122).
93. Ladies Dress Association *v.* Pulbrooke (126).
94. Lennard's Carrying Co. *v.* Asiatic Petroleum Co. (171)
95. Lakshmi *v.* Indian Motor Co. (221).

M

96. Macura *v.* Northern Insurance Co. Ltd. (9, 40).
97. Moosa *v.* Ebrahim (15).
98. Mewa Ram *v.* Ram Gopal (25).
99. Menier *v.* Hooperi Telegraph Co. (70, 78).
100. Matheran Steam Tramways Co. *v.* Long (73).
101. Mohamed *v.* Rawat Bombay House (83).
102 Motilal Chunilal *v.* Thaharlal Chimanlal (111).
103. Madhava Ram Chandra Kamath *v.* Canara Banking Corporation (125).
104 Moode *v.* W and F Shepherd Ltd. (131).
105 Mosiri Bibi *v.* Dharma Das Gosh (151).
106. Meenakshi Mills Co. Ltd. *v.* Assistant Registrar of Joint Stock Companies (195).
107. Mohan Lal Chandmul *v.* The Punjab Co. Ltd. (221).
108. Murlidhar *v.* Bengal Steamship Co. (224).

N

109 Nagappa Chettiar *v.* Madras Race Club (78, 197).
110. Nash *v.* Lynde (86).
111. New Brunwicket *v.* Muggendge (94).
112. Nelson *v.* James Nelsons and Sons Ltd. (190).

O

113. Official Liquidator *v.* Suleman Bhai (144).
114. Oriental Navigation Co. *v.* Bhanaram Agarwala (228).
115. Official Liquidator *v.* Venkataratnam (247).

116. Official Liquidator *v.* Raka Chemicals Food Products Ltd. (248).

P

117. Pulbrook *v.* Richmond Consolidator Mining Co. (76).
118. Pram Nath Sanyal *v.* Kali Kumar Dutt (86).
119. Peek *v.* Gurney (99)
120 Pusala Sanyasi and Others *v.* Guntur Cotton, Jute and Paper Mills Co. (109).
121. Prayam Prasad *v.* Gaya Bank and Traders Association Ltd. (126).
122. Percival *v.* Wright (170).

R

123. Rayfields *v.* Hands and Others (76).
124 Royal British Bank *v.* Turquand (80).
125. Ruben *v.* Great Fingal Consolidated Ltd. (81, 116).
126. Rama Corporation *v.* Provid Tin and General Investment Co. (83).
127 Rajagopal Iyer *v.* South Indian Rubber Works (98).
128. Rainsgate Victoria Hotel Co. *v* Montifoire (110).
129. Ramana Bai *v.* Ghasi Ram (110).
130. Rain Ford *v.* James Keith Blackman & Co. (117).
131. R. Matholone *v.* Bombay Life Assurance Co. (131).
132. Re. Isle of Thanet Electric Supply Co. (140).
133. Re. Eric Homes Property Ltd. (163).
134. Ramakisan Das *v.* Sathyanathan (176).
135. Rathinaveluswamy *v.* M. R. S. Manickavelu Chettiar (198).
136. Re. Walters Deed of Guarantee (206).
137. Re. Hindustan Co-operative Insurance Society Ltd. (221).
138. Rajahmundry Electric Supply Corporation *v.* A. Nageswara Rao (222).

S

139. Salomon *v.* Salomon (6, 39).
140. State Trading Corporation *v.* The Commercial Tax Officer (11).
141. Senaji *v.* Pennaji (26).
142. Smith, Stone and Knight Ltd. *v.* Brimingham Corporation (30).
143. Stephus Mysore Reefs Mining Co. (55)

# 1. முதனிலை

## (Preliminary)

**நிறுவனம் என்றால் என்ன?**

பலர் ஒன்று கூடி வியாபாரம் செய்யும் நோக்கமுடன் நிறுவும் இயக்கத்திற்கு நிறுவனம் என்று பெயர். அவ்வாறு ஒன்று சேர்ந்தவர்கள் ஆதரவாளர்கள் (Subscribers) என்றும், பின்னர் நிறுவனம் பதிவானவுடன் பங்குநர்கள் (Share-holders) என்றும் அல்லது உறுப்பினர்கள் (Members) என்றும் குறிப்பிடப்படுகின்றனர். மேற்படி நிறுவனம் சட்டப்படி பதிவானவுடன் அதன் உறுப்பினர்களினின்றும் முற்றிலும் வேறாய் நின்று ஒரு தனி நபராகத் திகழ்கிறது (Separate existence apart from the members). அத்தகைய நபரை ஒரு செயற்கை நபர் என்றும் (Artificial Person) அல்லது சட்டமுறையான நபர் (Legal Person) என்றும் குறிப்பிடுகிறோம். மேலும், ஒரு நிறுவனம் கால வரையறையின்றி நிலையாக இயங்குவதோடு (Perpetual existence), தனக்கென உரிய முத்திரை (Common Seal) உடையதாகும். ஒரு நிறுவனத்தின் குறைந்த அளவு உறுப்பினர்கள் இருவரே ஆயின் அது தனியார் நிறுவனம் (Private Company) என்றும், குறைந்த அளவு உறுப்பினர்கள் எழுவர் ஆயின் அது பொது நிறுவனம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இவ்விருவகையான நிறுவனங்களில் உறுப்பினர்களின் பொறுப்பை வரம்புற்றதாகவும் (Limited liability) அல்லது வரம்பற்றதாகவும் (Unlimited liability) அல்லது பொறுப்புறுதி அளித்த அளவினதாகவும் (Guaranteed amount) அமைத்துக் கொள்ளலாம். மேற்கூறிய இயல்புகளைப் படைத்ததே இன்றைய நிறுவனமாகும் (Modern Company).

**வரையறை** (Definition)—பி. 3.

நிறுவனச் சட்டத்தில் 3ஆவது பிரிவில் நிறுவனம் வரையறை செய்யப்பட்டுள்ளது. அதன்படி நிறுவனம் என்பது இந்திய நிறு

வனச் சட்டப்படி (1956) நிறுவப்பட்டு பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது உள்ள நிறுவனமாகும் (Existing Company). உள்ள நிறுவனம் என்பது 1956ஆம் வருடத்திற்கு முன்பு இயற்றப் பட்ட நிறுவனச் சட்டங்களின்படி நிறுவப்பட்டு பதிவு செய்யப் பட்ட நிறுவனமாகும். இவ் வரையறை ஒரு நிறுவனத்தின் இயல்பு களை விளக்குவதாயில்லை. மேற் கூறிய இயல்புகளைக் கொண்டு ஒரு நிறுவனத்தைக் கீழ்க்கண்டவாறு வரையறை செய்யலாம். நிறுவனம் என்பது பலர் ஒன்று கூடி நிறுவியதும், அதன் உறுப் பினர்களின்றும் வேருய் நின்று ஒரு தனி நபராகத் திகழ்ந்து குறிப் பிட்ட குறிக்கோள்களுக் கிணங்க நிலையாக இயங்குவதோடு தனக் கென தனி முத்திரை படைத்ததொரு இயக்கமாகும். நிறுவனத் தின் குறைந்த அளவு உறுப்பினர் எழுவராயின் அது பொது நிறுவனம் என்றும் (Public Company), இருவராயின் அது தனி யார் நிறுவனம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

தொடக்க நிலையில் வியாபாரத்தையே நோக்கமாகக் கொண்ட நிறுவனங்கள், நாளாவட்டத்தில் நிலைத்த பின்னர், தற்காலத்தில் பல்வேறு நோக்கங்களுடன் பல்வேறு துறைகளில் நுழைந்து, அவைகளில் நெடுத்தூண்களாக விளங்கி, நாட்டின் வளத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாயிருப்பது மறுக்கமுடி யாத உண்மையாகும்.

**நிறுவனங்கள் தோன்றிய வகையும், சூழ்நிலைகளும், அது வளர்ந்து இன்றைய நிலையை அடைந்த வரலாறும் (Origin, History and Development of Companies)**

பண்டைக் காலங்களில் போக்குவரத்து வளர்ச்சி அடையாத போது, வியாபாரம் சிறிய அளவில் ஒரு நாட்டின் அவ்வப் பகுதி களுக்குள் நடைபெற்றது. ஆனல், நாளடைவில் போக்குவரத்து வளரவளர வியாபாரம் நாடெங்கும் வளர்ந்து பிற நாடுகளில் நிலைகொண்டு உலகெங்கும் பரவலாயிற்று. வியாபாரம் பெருகப் பெருக, ஒரு தனி மனிதனின் முதலீடு மட்டும் போதவில்லை. ஆகவே, பெருத்த அளவில் வியாபாரம் செய்யப் பலர் ஒன்று சேர்ந்து முதலீடு செய்ய வேண்டிய நிலை உண்டாயிற்று. இவ்வாறு பலர் ஒன்று திரண்டு பொருள் திரட்டி வியாபாரம் செய்வதற்கு இரண்டு சாதனங்கள் தோன்றின. ஒன்று கூட்டாண்மை நிறுமம் (Partnership Firm), மற்ருென்று நிறுவனம் (Company).

கூட்டாண்மை நிறுமத்தில் கூட்டாளிகளின் பொறுப்பு வரம் பற்றதாகும் (Unlimited). ஒரு கூட்டாண்மை நிறுமம் நிலையான தன்று. ஒரு கூட்டாளி இறந்தாலும், நொடிப்புநிலையுற்ருலும்

(Insolvent), பித்துநிலையுற்றாலும் (Insane) நிறுமம் கலைக்கப்படும். மேலும் ஒரு கூட்டாண்மை நிறுமத்தில் வங்கித் தொழிலாயின் பத்து நபர்களுக்கு மேலும், இதரத் தொழிலாயின் இருபது நபர்களுக்கு மேலும் ஒன்று சேரமுடியாது. ஆகையால் வியாபாரத்தை மிகப்பெரிய அளவில் செய்வதற்குச் சிறுபான்மையினரின் முதலீடு போதுமானதாயில்லை. மேற்கூறிய காரணங்களால், கால வரையறையின்றி நிலையாக நின்று, பெருவாரியான மூலதனத்தைத் திரட்டி, வியாபாரத்தை மிகப்பெரிய அளவில் செய்வதற்கு நிறுவனமே சாலச்சிறந்த சாதனமாகக் காணப்பட்டது இவ்வாறு தோன்றிய நிறுவனம் அதன் பல்வேறு சிறப்பியல்புகளாலும் நன்மைகளாலும் காலப்போக்கில் காட்டு வெள்ளம்போல் பெருகி பல துறைகளில் நுழைந்து நாடெங்கும் பரவலாயிற்று.

### வரலாறு (History)

இந்திய நிறுவனச் சட்டம் ஆங்கில நிறுவனச் சட்டத்தைத் தழுவியுள்ளதால், இந்திய நிறுவனங்களின் வரலாற்றை ஆராயுமுன், இங்கிலாந்து நாட்டில் அவைகளின் வரலாற்றை அறிவது அவசியமாகும்.

### இங்கிலாந்து நாட்டு நிறுவனங்களின் வரலாறு

இங்கிலாந்து நாட்டில் நிறுவனங்களின் வரலாறு மிகத் தொன்மையதாயினும், சென்ற ஒரு நூற்றாண்டுக் காலமாகத்தான் நிறுவனங்கள் துரிதமாகத் தோன்றிட அந்நாட்டின் நாடாளு மன்றம் (Parliament) வழிவகை செய்தது. அந்த நாட்டின் நிறுவனங்களின் வரலாற்றைப் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :

முதலாவதாக, பபுள் சட்டத்திற்கு (Bubble Act of 1720) முன்பகுதி. இக் காலத்தில் மக்கள் வியாபாரத் துறையில் ஒரு நிறுவனத்தை ஒரு தனிப்பட்ட செயற்கை நபராக ஈடுபடச் செய்வதை நன்றாய் அறிந்திருந்தனர். இம்மாதிரி பல நிறுவனங்கள் வெளிநாடுகளிலும் இயங்கியதோடு, அவைகள் பலவித உரிமைகளையும் சலுகைகளையும் (Rights and Privileges) பெற்றிருந்தன. இவைகளில் புகழ் பெற்றது கிழக்கு இந்திய நிறுவனம் (East India Company). மேலும் இக்காலத்தில் நிறுவனங்கள் இருவகையில் இயங்கின. ஒருவகையில், நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தம் சொந்த முதலைக்கொண்டு தன் போக்காக நிறுவனத்தின் விதிகளின்படி வியாபாரம் செய்தனர். இவைகள் கட்டுப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் (Regulated Companies) எனப்பட்டன. மற்றொரு வகையில், நிறுவனம் ஒரு தனிப்பட்ட

செயற்கை நபராக வியாபாரம் செய்தது. இவைகள் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் (Joint Stock Companies) எனப்பட்டன. பின் கூறிய வகைதான் இன்றைய நிறுவனத்திற்கு (Modern Company) அடிப்படையாக அமைந்தது.

பதினேழாம் நூற்றூண்டின் இறுதியில் ரண்டாவது வகையைச் சேர்ந்த நிறுவனங்கள் (Joint Stock Companies) பெருவாரியாகத் தோன்றின. ஆனால், பதினெட்டாம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் பெரும்பாலான நிறுவனங்கள் நிலையற்ற வாணிபங்களில் (Speculative Trades) இறங்கின. இவ்வகையில் மிகவும் புகழ் பெற்றது (South Sea Company) என்ற நிறுவனமாகும். பல நிலையற்ற வாணிபங்களில் ஈடுபட்டு, அந்த நிறுவனம் ஒரு நீர்க் குமிழிப்போல் வெடித்து மறைந்தது உலகம் உணர்ந்த உண்மையாகும். இப் போக்கைப் போக்குவதற்கு நாடாளு மன்றம் தலையிட்டு பபுள் சட்டத்தை (Bubble Act of 1720) இயற்றியது.

பபுள் சட்டம் இயற்றப்பட்ட 1720ஆம் ஆண்டு முதல் 1825ஆம் ஆண்டுவரை நிறுவன வரலாற்றின் இரண்டாவது பகுதியாகும். இப்பகுதியில் பபுள் சட்டம், தனி நபராகச் செயல்படும் நிறுவனம் நிறுவப்படுவதை மிகவும் கடினமாக்கியது. அத்தகைய நிறுவனங்கள் அரசர் பட்டயமின்றி (Royal charter) அல்லது சட்டத்தின் அனுமதியின்றிச் செயல்படுவது குற்றம் என்று பபுள் சட்டம் குறிப்பிட்டது. மேலும் இச்சட்டம் கைமாறும் பங்குகளைப் (Transferable shares) பெற்றிருப்பது குற்றமெனக் குறிப்பிட்டது. இச் சட்டம் விதித்த கடுமையான தடைகளால், நிறுவனங்களின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. வியாபாரம் செய்யும் நோக்கமுடன் ஒன்றுசேர விரும்பியவர்கள் வேறுவழியின்றிப் பதிவு செய்யப்படாத நிறுவனங்களாக இயங்கினர். ஆனால், அவைகள் சட்டத்தின் பலவித இடர்ப்பாடுகளுக்குட்பட்டு இயங்கின. இவைகள் கூட்டாண்மைபோல் செயல்பட்டதால் (Large Partnerships) எனக் குறிப்பிடப்பட்டன. ஆகையால், அவை தனி நபர் தகுதி பெறவில்லை. மேலும் அவை நிறுவனத்தின் பெயரால் வழக்குகள் செய்யமுடியாது. பங்குகளை மற்ற உறுப்பினர்களின் இசைவு இன்றி மாற்ற முடியாது. இந்த நிலைமை 1825ஆம் ஆண்டு வரை நீடித்தது.

1825ஆம் வருடத்திலிருந்து 1844ஆம் வருடம் வரை வரலாற்றின் மூன்றாவது பகுதியாகும். 1825ஆம் ஆண்டுச் சட்டம் பபுள் சட்டத்தைப் புறக்கணித்து நிறுவனங்கள் பதிவு செய்துகொள்ள வழிவகை செய்ததுமின்றி, உறுப்பினர்களின் பொறுப்பைக் குறிப்

பிட்ட தொகைக்குக் கட்டுப்படுத்தியது. அடுத்தபடியாக 1834-ல் இயற்றிய சட்டம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சலுகைகளைப் பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கும் வழங்கியது. இவ்விரு சட்டங்களும் தேவையான பலன்களைத் தராமையால், 1837ஆம் ஆண்டு ஒரு புதிய சட்டம் தோன்றியது. இச் சட்டம் நிறுவன நிர்வாக முறைகளைப்பற்றிய விதிகளை வழங்கியது. ஆனால், மேற்கூறிய சட்டங்கள் காலாந்தரக் கணக்குகளைப்பற்றியும் (Periodical Accounts), துவக்குநர்கள் (Promotors), இயக்குநர்கள் (Directors) முதலானோர் மோசடிகள் செய்வதைத் தவிர்க்கவும் திட்டங்கள் வகுக்கவில்லை. மேலும் இச்சட்டங்களின் வாயிலாக மோசடி செய்யும் நிறுவனங்கள் தோன்றுவது மிகவும் எளிதாக இருந்தது.

மேற்கூறிய குறைகளை நீக்க, 1844-ல் இரண்டு சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை இரண்டும் நிறுவன வரலாற்றிலேயே மிகவும் முக்கியத்துவம் பெற்றவை. ஏனெனில் இவை ஒவ்வொன்றும் நிறுவனத்தின் ஒவ்வொரு சிறப்பியல்பைத் தெளிவுபடுத்தியது. ஆகவே 1844ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டகாலம் நிறுவன வரலாற்றின் நான்காவது பகுதியாகும். இதில் முதல் சட்டம் நிறுவனங்களை நிறுவுவதற்கு அரசருக்கு மனுச் செய்வதைத் தவிர்த்து, சட்டத்தின் முறைகளைக் கடைபிடித்து நிறுவனத்தை நிறுவும் முறையை ஏற்படுத்தியது. இந்த முறைதான் இன்றைய நிறுவனச் சட்டத்திலும் பின்பற்றப்பட்டுள்ளது. இரண்டாவது சட்டம் நிறுவனங்கள் கலைக்கப்படுவதையும், துவக்குநர்கள், இயக்குநர்கள் இழைக்கக்கூடிய தீமைகளைத் தவிர்க்கவும் வழிவகுத்தது.

1855ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலம் நிறுவன வரலாற்றின் கடைசிப் பகுதியாகும். இவ்வாண்டில் வெளியிடப்பட்ட சட்டம் நிறுவனத்தின், முக்கிய இயல்பான வரம்புற்ற பொறுப்பை (Limited Liability) ஏற்றுக்கொண்டது. இதன் பின்னர் 1856ஆம் ஆண்டு தோன்றிய சட்டம், அமைப்பு முறையேடு (Memorandum of Association), செயல்முறை விதிகள் (Articles of Association) முதலியவைகளைத் தயாரித்து நிறுவனங்களை நிறுவும் வகையினை வகுத்தது. அதன் பின்னர் 1862 ல் இயற்றப்பட்ட சட்டம், நிறுவனங்களை நிறுவும் முறைகளை எளிமைப்படுத்தி, நிறுவனத்தின் வரம்புற்ற பொறுப்பை(Limited liability) அதனுடன் தொடர்பு கொள்ளும் அனைவரும் அறியும்படி வகை செய்தது. இச் சட்டத்தினை ஆங்கிலச் சட்டவல்லுநர் பாமர் (Palmer) நிறுவனத்தின் பேருரிமைப் பத்திரம் (Magna Carta) என்று குறிப்பிட்டுள்ளார். இதன் பின்னர் 1908, 1929-ல்

தோன்றிய சட்டங்கள் 1862ஆம் ஆண்டுச் சட்டத்தில் வேறு மாறுதல்களைச் செய்யவில்லை. கடைசியாக 1948ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம், 1929ஆம் ஆண்டுச் சட்டத்தில் பல திருத்தங்களைச் செய்தது. இந்த 1948ஆம் ஆண்டுச் சட்டத்தைத் தழுவியே இந்திய நிறுவனச் சட்டம் (Indian Companies Act, 1956) இயற்றப்பட்டுள்ளது.

**இந்தியா**

இந்தியாவில் முதலில் 1850ஆம் ஆண்டுக் கூட்டுப்பங்கு நிறுவனச் சட்டம் (Joint Stock Companies Act) இயற்றப்பட்டது. அதன் பின்னர், 1857, 1860ஆம் ஆண்டுகளில் இரண்டு சட்டங்கள் தோன்றின. இவை மூன்றையும் புறக்கணித்த 1882ஆம் ஆண்டுச் சட்டத்தை, 1913ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் ரத்து செய்தது. 1936-ல் உருவான சட்டம், 1913-ல் தோன்றிய சட்டத்தில் பல மாறுதல்கள் கொண்டு காணப்பட்டது. இறுதியாக 1956ஆம் ஆண்டு இன்றைய இந்திய நிறுவனச் சட்டம் இயற்றப்பட்டது. 1960ஆம் வருடத்திற்குப் பிறகு வருடா வருடம் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. பிற்பகுதிகளில் இவைகள் யாவும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

**நிறுவனத்தின் இயல்புகள்** (Characteristics) : ஒரு நிறுவனம் பற்பல இயல்புகளைப் படைத்தது. அவைகளில் பல நன்மைகளையும் (Advantages), சில தீமைகளையும் (Disadvantages) கொண்டவையாகும். அவற்றின் விவரம் பின்வருமாறு :

**நன்மை நல்கும் தன்மைகள்** (Advantages)

1. **செயற்கை நபர்** (Artificial Person),: முதற்கண் குறிப்பிடத்தக்கது நிறுவனம், அதனின் உறுப்பினர்களினின்றும் வேறுய் நின்று ஒரு தனி நபராக இயங்குகிறது. நிறுவனத்தின் திரை (Corporate Veil) அதன் உறுப்பினர்கள் அனைவரையும் மறைத்து சட்டத்தின் முன்பு நிறுவனத்தை ஒரு தனி நபராகச் செயல்படச் செய்கிறது. ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினராக இருந்தபோதிலும், நிறுவனம் அக் குடும்பத்தினின்று முற்றிலும் வேறுபட்ட ஒரு தனி நபர் ஆகும். இந்த நிலைமையை வலியுறுத்தி வெள்ளிடை மலைபோல் தெளிவாக்கியது புகழ் பெற்ற சாலமோன் v. சாலமோன் அண்ட் கம்பெனி லிமிடெட், 1897 ஏ.சி. 22 (Salomon v. Salomon and Co., Ltd., 1897 A. C. 22) என்ற வழக்கு. இவ்வழக்கின் விவரங்கள் பின் வருமாறு : சாலமோன் என்பவர் தோல் வியாபாரம் செய்து வந்தார். வியாபாரம் மிகவும் செழிப்பாக நடந்து கொண்டிருக்கையில், நிறுவனத்தின் நன்மைகளை அடைவதற்கு, அவர், அவரது மனைவி, அவர்தம் மக்கள் ஐவர் ஆக ஏழு பேர் கொண்ட நிறுவனம்

ஒன்றை நிறுவினர். பின்னர் தன் வியாபாரத்தை அந்த நிறுவனத்திற்கு 39,000 பவுன்களுக்கு விற்ருர். விற்ற தொகைக்கு, நிறுவனத்தின் ஒரு பவுன் மதிப்புள்ள 20,001 பங்குகளை தன் பெயருக்கும் மற்ற ஆறு பேருக்கு தலைக்கு ஒரு பங்கு வீதமும், பணமாக இரண்டாயிரம் பவுன்களும், மீதி 10,000 பவுன்களுக்கு நிறுவனத்தின் கடனீட்டுப் பத்திரங்களையும் பெற்ருர். மேற்படி கடனீட்டுப் பத்திரங்களுக்கு (Debentures) நிறுவனத்தின் சொத்துகளின் பேரில் பிணையம் (Security) வழங்கப்பட்டது. ஆனுல், எதிர்பாராமல் நிறுவனத்தின் வியாபாரம் வெகு விரைவில் வீழ்ந்தது. சாலமோன் எவ்வளவோ முயன்றும் பயனின்றி, நிறுவனம் நிலைகுலைந்து கலைக்கப்பட்டது (Wound up). நிறுவனத்தின் எஞ்சியுள்ள சொத்துகள் ஆருயிரம் பவுன்கள் என மதிப்பிடப்பட்டது. இத்தொகையை, பிணைக் கடனுளரான (Secured creditor) சாலமோன் தனக்குத்தான் சேர வேண்டுமென்று கூறினர். ஆனுல் பிணையமில்லாக் கடனுளர்கள் (Unsecured creditors), சாலமோனும் நிறுவனமும் வெவ்வேறு நபர்கள் அல்ல, அவர்கள் இருவரும் ஒருவரே, ஆகையால் நிறுவனத்தின் சொத்துகள் தங்களுக்குத்தான் சேரவேண்டும் என்று தீவிரமாக வாதித்தனர். நீதி மன்றம், நிறுவனம் ஒரு தனி செயற்கை நபர் என்றும், அதன் சொத்துகளை பிணைக் கடனுளரான சாலமோன் அடைய வேண்டியது என்றும் முடிவு செய்தது.

2. கால வரையறையின்றி நிலையாகச் செயலுறுதல் (Perpetual existence): ஒரு நிறுவனம் உடலும் உயிரும் அற்ற ஒரு செயற்கை நபர். எனவே, அதற்கு மரணம் என்பது கிடையாது. அதன் உறுப்பினர்கள் அனைவரும் அடியோடு மாறினுலும், மாண்டாலும், நொடிப்பு நிலையுற்ருலும் (Insolvency) அல்லது பித்து நிலையுற்ருலும் நிறுவனம் செயலுறுதல் பாதிக்கப்படுவதில்லை. ஆகவே, நிலையாக, காலவரையறையின்றி வியாபாரம் தொடர்ந்து நடைபெற நிறுவனமே சாலச்சிறந்த சாதனமாகும். அது தனக்கென ஒரு முத்திரை கொண்டு இயங்குகிறது (Common Seal). நிறுவனத்தின் பெயரால் செய்யப்படும் மிக முக்கியச் செயல்கள், அம் முத்திரையிட்டுச் செய்யப்படும். உதாரணமாக ஒரு நிறுவனம் வழங்கும் பங்கு உறுதிச்சீட்டுகளில் அதன் முத்திரை பதிக்கப்படுகிறது. ஒரு நிறுவனத்தின் ஒப்பாவணங்களிலும் (Deeds) அதன் முத்திரை பொறிக்கப்படுகிறது.

3. வரம்புற்ற பொறுப்பு (Limited liability): நிறுவனம் நிலைகுலைந்தாலும், வரம்புற்ற பொறுப்புள்ள நிறுவனத்தின் உறுப்பினர்களின் பொறுப்பு, அவர்கள் ஏற்றுக்கொண்ட பங்குத் தொகையின் அளவேயாகும். எனவே, நிறுவனத்தின் கடன்கள்

முழுவதற்கும் பங்குநர்கள் (Shareholders) பொறுப்பல்லர். சட்டி சுட்டது கைவிட்டது என்றபடி, உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் கொண்ட பங்களவேயானதால், நிலையற்ற வியாபாரங்களிலும் (Speculative business) துணிகரமாய் இறங்குவதற்கு நிறுவனம் சாலச்சிறந்த சாதனமாகிறது என்பதில் ஐயமில்லை.

4. **சட்ட நடவடிக்கைகள்** (Legal Proceedings) : நிறுவனம் ஒரு தனி நபராகையால், அது தொடரும் சட்ட நடவடிக்கைகள் யாவும் நிறுவனத்தின் பெயரிலும், அதற்கு எதிராகத் தொடரப் படும் சட்ட நடவடிக்கைகள் நிறுவனத்தின் பெயரிலும் செய்யப் படுகின்றன. இதனால் நிர்வாகத்தில் அல்லது அங்கத்தினர்களில் ஏற்படும் மாறுதல்கள், நிறுவனத்தின் சட்ட நடவடிக்கைகளை எவ்வகையிலும் பாதிப்பதில்லை.

5. **கைமாறும் பங்குகள்** (Transferable Shares) : ஒரு நிறுவனத்தின் பங்கு ஓர் அசைபொருள் (Movable Property) என்று 82ஆவது பிரிவு கூறுகிறது. ஆகையால், உறுப்பினர்கள் தம் விருப்பம்போல் வேண்டும்போது தங்கள் பங்குகளை, செயல்முறை விதிகளில் உள்ள கட்டுதிட்டங்களுக்குட்பட்டு, வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யலாம். இதனால் நிறுவனத்திலிருந்து விலக விரும்புகிறவர்களும் அல்லது பங்குத்தொகையைப் பணமாக்க விரும்புபவர்களும் எளிதில் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

6. **மூலதனம்** (Capital) : ஒரு வியாபாரத்திற்கு இன்றி அமையாதது தேவையான மூலதனம். ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான மூலதனத்தை, அதன் பங்குகளை (Shares) பொதுமக்களுக்கு வழங்கி எளிதில் பெறுகிறது. இந்த நன்மையைக் கருதியே பல தனியார் நிறுவனங்களும் (Private Companies), கூட்டாண்மை நிறுமங்களும் (Partnership Firms), பொது நிறுவனங்களாக மாற்றப்படுகின்றன.

7. **கடன் வாங்குதல்** (Borrowings) : பங்குத் தொகை போதாவிடில், ஒரு நிறுவனம் தன் சொத்துகளின் பேரில் எளிதில் கடன் பெறலாம். அல்லது கடனீட்டுப் பத்திரங்களை வழங்கி (Debentures) தனக்குத் தேவையான கடன் தொகையைப் பெறலாம். மேற்படி கடனீட்டுப் பத்திரங்களுக்கு ஒரு நிறுவனம் தன் சொத்துகளின் பேரில் படரும் பற்று (Floating charge) வழங்கலாம். படரும் பற்று ஒரு நிறுவனம்தான் வழங்கமுடியும், ஒரு தனி நபர் அல்லது கூட்டாண்மை நிறுமம் வழங்க முடியாது. படரும்

பற்றின் சிறப்பியல்புகள் பிற்பகுதியில் விரிவாக விளக்கப் பட்டுள்ளன.

8. சொத்து உரிமை : நிறுவனம் ஒரு செயற்கை நபர். அது சொத்துகளைத் தன் பெயரில் வாங்கவும், அவைகளை அனுபவிக்கவும், விற்கவும் முழு உரிமை உடையது. நிறுவனத்தின் சொத்துகள் யாவும் நிறுவனத்திற்கே உரியவை. நிறுவனம் செயலுறுங்கால் (Going Concern) பங்குநர்களுக்கு அந்தச் சொத்துகளில் கடுகளவு உரிமையும் கிடையாது.

9. வரிச் சலுகைகள் (Concessions in Taxes) : நிறுவனங்களை ஊக்குவதற்கும், அவைகளின் எண்ணிக்கையை பெருக்கவும் வரி விதிக்கும் சட்டங்கள் (Laws of Taxation) நிறுவனங்களுக்குப் பற்பல சலுகைகளையும் விலக்குகளையும் (Exemptions) வழங்கியுள்ளன.

தீமை தரும் தன்மைகள் (Disadvantages)

நிறுவனத்தினால் சிற்சில சமயங்களில் தீமைகளும் விளைகின்றன. அவை பின்வருமாறு :

1. திரை தூக்கப்படுதல் (Lifting of the Corporate Veil) : நிறுவனத்தின் திரை, சட்டத்தின் கண்களுக்கு, அதனைச் சார்ந்த உறுப்பினர்களை மறைத்தாலும், அது ஓர் இரும்புத்திரை அன்று. சட்டசபையும் நீதிமன்றமும் தேவை என்று கருதும்போது நிறுவனத்தின் திரையை விலக்கி அதன் உள்ளக்கிடக்கைகளைக் (Realities behind the legal facade) காண்கின்றன. அவ்வாறு நிறுவனத்தின் திரை கிழித்தெறியப்படும் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் பிற்பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

2. இயற்றியவனுக்கே இன்னலை விளைவித்தல் : கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல் நன்மைக்குப் பதிலாகத் தீமையும் விளைவதுண்டு. சில சமயங்களில் ஒரு நிறுவனத்தால் நிறுவனம் உண்டாக்கியவனையே திண்டாட வைத்ததைக் கண்கூடாகக் காட்டுகிறது மெக்கூரா v. நார்த்தர்ன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (Macura v. Northern Insurance Co., Ltd., 1925, A.C. 619) என்ற வழக்கு. மெக்கூரா என்பவர் ஒரு பெரிய தேக்குமரக் காட்டின் (Timber Forest) அதிபர் (Owner). அவர் தீயினாலுண்டாகக்கூடிய சேதத்தைத் தவிர்க்க, அத் தேக்கு மரங்களைப் போதிய தொகைக்குக் காப்பீடு செய்தார். பின்னர் நிறுவனம் நல்கிடும் நன்மைகளை அடைய, ஒரு நிறுவனம் நிறுவி, அதன் பங்குகள் யாவற்றையும், ஒன்றைத்தவிர தானே எடுத்துக்கொண்டார். அந்த நிறுவனத்திற்குத் தனக்குரிய தேக்கு மரக் காட்டினை

விற்ருர். அதன் பிறகு அத் தேக்கு மரக் காடு தீக்கிரையாயிற்று. நிறுவனத்தின் பங்குகள் யாவும் தனக்குரிமையானவையென்றும், ஆகையால் நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு தன்னுடைய இழப்பு என்று கூறி காப்பீடு நிறுவனத்திடம் (Insurance Company) இழப் பீடு கோரினர். ஆனல், நீதிமன்றம் நிறுவனமும் மெக்கூராவும் வெவ்வேறு நபர்கள் என்றும், ஆகையால் நிறுவனத்தின் இழப்பு அவருடைய இழப்பு அன்று என்றும், காப்பீடு நிறுவனம் அந்த இழப்பிற்குப் பொறுப்பன்று என்றும் முடிவு செய்தது. இவ்வாறு இயற்றியவனுக்கே நிறுவனம் சில வேளைகளில் இன்னலை விளைவிக் கிறது.

3. **சட்டச் சடங்குகள், விளம்பரம், செலவுகள்** (Statutory formalities, Publicity and expenses) : ஒரு நிறுவனத்தை நிறுவு வதற்குப் பற்பலச் சட்டச் சடங்குகள், விளம்பரங்கள், செலவுகள் தவிர்க்க முடியாத தேவையாகின்றன. இதனுல் கல்யாணம் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப்பார் என்ற முதுமொழியோடு, நிறுவனத்தை நிறுவிப்பார் என்று கூறுவதும் மிகையாகாது.

4. **கலைக்கப்படுதல்** (Winding up) : ஒரு நிறுவனத்தைக் கலைப்பது எளிதன்று; அதற்கான சட்டச் சடங்குகளைக் காணுங் கால், ஒரு திருமணத்தைக் கலைப்பது எவ்வளவு கடினமும் கால தாமதமுமாகுமோ அவ்வளவு கடினமும் காலதாமதமும் ஒரு நிறுவனத்தைக் கலைப்பதற்கும் ஆகும்.

5. **மேலாண்மை** (Administration) : சட்டத்தின் கெடுபிடி களையும் கடுமையையும் கருதும்போது, நிறுவனத்தை நிர்வகிப்பது கடினம் என்பது தெளிவு. ஏனென்றல் சட்டத்தின் விதிகளை அறிந்தோ அறியாமலோ தவறினுலும் மீறினுலும், நிர்வாகிகள் சிறைசெல்வர் ; தண்ட வரி தருவர் ; சட்டத்தின் கடுமையை வலி யுறுத்த, ஆங்கில சட்ட வல்லுநர் கவர் (Gower) என்பவர் 'நிறு வனத்தின் நிர்வாகிகள் ஒவ்வொரு நாள் காலையும் கொடிய குற்ற வாளிகளாகக் கண் விழித்தெழுகிருர்கள்' என்று கூறியது மிகை யாகாது. பெருவாரியான பிரிவுகள் பகரும் தண்டனைகளைப் பார்க்குங்கால், நிறுவனச் சட்டமா அல்லது குற்றவியல் சட்டமா என்ற ஐயம் எழுகிறது. நிறுவனச் சட்டம் ஓர் இரண்டாவது குற்றவியல் சட்டம் (Second Penal Code) என்று கூறுவதில் தவறில்லை.

6. **சட்ட நடவடிக்கைகள்** (Legal Proceedings) : வழக்குகளில் ஒரு நிறுவனம் வாதியானல் (Plaintiff) செலவுத் தொகைகளுக்குப் பிணையம் (Security for Costs) வழங்கும்படி கட்டளையிடப்படு கிறது.

7. **சட்டத்தின் இடர்ப் பாடுகள் அல்லது முட்டுக்கட்டைகள்** (Legal obstacles) : நிறுவனத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட சிறப்பு விதிகளும் (Special Rules), கோட்பாடுகளும் (Doctrines), குறிப்பாக வரம்பு மீறுதல் கோட்பாடு (The Doctrines of ultra vires) பல சந்தர்ப்பங்களில் சங்கடங்களை விளைவிக்கின்றன.

8. **நிறுவனம் நிர்வாகிகள் கைப்பாவை** : நிறுவனம் ஒரு செயற்கை நபர். ஆகையால், நிர்வாகிகள் மூலமாக அது செயலுறுகிறது. எனவே, நிர்வாகிகள் கைப் பொம்மையாக, கண் கட்டுப் பாவையாக, இயக்குநர்கள் இசைக்கு நடனமாடும் நிலையில் (Dancing to the tunes of the Directors) உள்ளது நிறுவனம். இத் தீங்குகளைத் தவிர்க்க, உறுப்பினர்களின் கண் விழிப்பும், அரசினரின் கண்காணிப்பும் மிகவும் தேவைப்படுகிறது.

9. **வரம்புற்ற பொறுப்பு** (Limited liability) : நிறுவனத்தின் பெயருடன் ஒளிரும் வரம்புற்ற பொறுப்பு என்ற வார்த்தைகள், பொதுமக்களுக்குச் சிகப்புக் கொடி காட்டி, உறுப்பினர்களின் பொறுப்பு பங்களவே யாகும் என்பதை நினைவூட்டி எச்சரிக்கிறது. இது நிறுவனத்துடன் தொடர்புகொள்ள விழைபவர்களைத் தயக்கமுறச் செய்கிறது.

10. (i) **குடி உரிமை** (Citizenship Right) : ஒரு செயற்கை நபரான நிறுவனத்திற்குக் குடியுரிமை உண்டா இல்லையா என்பது சில காலம்வரை தெளிவாகவில்லை. மாகாண உயர் நீதி மன்றங்களுக்குள் (State High Courts) மாறுன கருத்துகள் இருந்தன. ஆனால், உச்ச நீதி மன்றம் (Supreme Court), தி ஸ்டேட் டிரேடிங் கார்ப்போரேஷன் ஆஃப் இந்தியா *v*. தி கமர்ஷியல் டாக்ஸ்'ஆபீஸர் (The State Trading Corporation of India *v*. The Commercial Tax Officer, A.I.R. 1963, S.C. 1811), டாடா இன்ஜினீரிங் லோகோமோடிவ் லிமிடெட் *v*. தி ஸ்டேட் ஆஃப் பீகார் (Tata Engineering Locomotive Ltd. *v*. The State of Bihar, A.I.R. 1965, S. C. 40) என்ற வழக்குகளில் இந்த நிலைமைக்குப் முற்றுப்புள்ளி வைத்து, நிறுவனம் ஒரு குடிமகன் அன்று என்று திட்டவட்டமாகத் தெரிவித்தது. எவ்விதம் நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் மணமானவர்களானுலும் நிறுவனம் மணமானவராகக் கருத முடியாதோ, அவ்விதமே, நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் குடிமக்களாக இருந்தபோதிலும், நிறுவனம் குடிமகளுக முடியாது என்பதை உச்ச நீதிமன்றம் வெட்ட வெளிச்சமாக்கியது. மேலும், இந்தியக் குடியுரிமைச் சட்டம் (Indian Citizenship Act, 1955) குழுக்களுக்கும் சங்கங்களுக்கும் குடியுரிமை வழங்கவில்லை. மேற் கூறியவைகளால், ஒரு நிறுவனம்

ஒரு குடிமகன் அன்று என்பதும், அது குடிமகன் உரிமைகள் யாவும் பெறமுடியாது என்பதும் தெளிவாகும்.

(ii) குற்றங்களும் தீங்குகளும் (Crimes and Torts): நிறுவனத்தின் நல்லகாலம், சில காலம்வரை அது, செயற்கைப் பிறவி என்ற காரணத்தால் குற்றம், தீங்கு முதலியன செய்யவல்லதன்று என்று கருதப்பட்டது. ஆனல், இது தவருன கருத்து என்ற எண்ணம் ஏற்பட்டு நிலைமை மாறலாயிற்று. நிறுவனத்திற்கு அறிவில்லாத போதிலும், உடல் உறுப்புகள் இல்லாவிட்டாலும் அதனை இயக்கிவரும் இயக்குநர்களின் அறிவையும், எண்ணங்களையும் நிறுவனத்திற்குச் சாற்றி, அதன் பெயரால் செய்யப்படும் குற்றங்களுக்கும், தீங்குகளுக்கும், நிறுவனம் பொறுப்பாக்கப்படுகிறது. இந்தக் கொள்கைக்கு உறுப்புக் கொள்கை (Organic Theory) என்று பெயர். இந்தக் கொள்கையின் அடிப்படையில் நிறுவனம், குற்றம், தீங்கு முதலியவைகளுக்குப் பொறுப்பாகின்றது. ஆனல், நிறுவனம் ஒரு செயற்கை நபராகையால் அதைக் கைது செய்யவோ (arrest) அல்லது சிறையிலிடவோ (imprisoned) முடியாது.

மேற்கூறிய நன்மைகளையும் தீமைகளையும் சீர்தூக்கி நோக்குங்கால், நன்மைகள் மிகவும் தலைதூக்கி நின்று தாண்டவமாடுவது திண்ணம். எனவே, பொதுமக்கள் நிறுவனங்களைப் போற்றி, பேணி, பெருக்குவதில் வியப்புறுவதற்கில்லை,

நிறுவனத்தை நிறுவும் வகை (Mode of Forming a Company)

ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்குக் கீழ்க்கண்டவைகளைச் செய்ய வேண்டும்:

முதற்கண், 12ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி, நிறுவனம் பொது நிறுவனமா (Public Company) அல்லது தனியார் நிறுவனமா (Private Company) என்பதையும், உறுப்பினர்களின் பொறுப்பு வரம்புற்றதா (Limited liability) அல்லது வரம்பற்றதா (Unlimited liability), அல்லது பொறுப்புறுதி அளவினதா (Guaranteed amount) என்பதையும் முடிவு செய்து கொண்டு, தனியார் நிறுவனமாயின் குறைந்தது இரண்டு நபர்களும், பொது நிறுவனமாயின் குறைந்தது ஏழு நபர்களும் ஒன்று சேர்ந்து நிறுவனத்தின் அமைப்பு முறையோடு (Memorandum) தயாரித்து அதில் கையெழுத்திட்டு, மற்றும் நிறுவனச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள முறைகளைப் பின்பற்ற வேண்டும். அமைப்பு முறையேட்டில் கையெழுத்திட்டவர்கள் ஆதரவாளர்கள் எனப்படுவர். ஆதர

வாளர்கள் (Subscribers) பின்கண்டவைகளைத் தயாரிக்க வேண்டும்.

(a) **அமைப்பு முறையேடு** (Memorandum of Association): ஆதரவாளர்களுக்கு (Subscribers) உதவியாக, நாடாளும் மன்றம் (Parliament), நிறுவனச்சட்டத்தின் முதல் பின் இணைவில் (First Schedule) B, C, D, E அட்டவணைகளில் (Tables) குறிப்பிட்டுள்ளது. இவைகளை மேற்கூறிய மூவகையான நிறுவனங்கள், அதாவது, வரம்புற்றது, வரம்பற்றது, பொறுப்புறுதி நிறுவனம், தத்தமக்கு ஏற்றவாறு அவைகளையே அல்லது தமது தேவைக்கு ஏற்றவாறு சட்ட வரம்பிற்குட்பட்ட மாறுதல் செய்து அமைப்பு முறையேட்டை அமைத்துக் கொள்ளலாம். அமைப்புமுறை ஏட்டில் ஆதரவாளர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது ஒவ்வொரு சாட்சியுடன் கையெழுத்திட்டு, தங்களைப்பற்றிய விவரம், தொழில், முகவரி முதலானவற்றைக் குறிப்பிட வேண்டும். அமைப்பு முறையேட்டின் பகுதிகளும் அதன் முக்கியத்துவமும் பிற்பகுதியில் விவரமாக விளக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்திற்குக் குறிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டணம் (Stamp fees) செலுத்த வேண்டும்.

(b) **நிறுவனத்தின் பெயர்**: அடுத்தபடியாக நிறுவனத்தின் பெயரை நிச்சயிக்க வேண்டும். ஒவ்வாத பெயர்களைப் பதிவாளர் ஒப்புக்கொள்ளமாட்டார். ஆகவே, நிறுவனத்திற்குத் தக்கதொரு பெயர் சூட்டவேண்டும். பின்னர் பெயரின் இறுதியில் வரம்புற்ற பொது நிறுவனமாயின், 'வரம்புற்றது' (Limited) என்ற வார்த்தையும், வரம்புற்ற தனியார் நிறுவனமாயின், 'தனியார் வரம்புற்றது' (Private Limited) என்ற வார்த்தைகளையும் குறிப்பிடவேண்டும்.

(c) **செயல் முறை விதிகள்** (Articles of Association): அடுத்தபடியாக ஆதரவாளர்கள் (Subscribers) செயல் முறை விதிகளைத் தயாரிக்கவேண்டும். அவர்களுக்கு உதவியாக நிறுவனச் சட்டத்தின் முதல் பின் இணைவில் (First Schedule) அட்டவணை A-ல் (Table A) நிறுவனத்தின் மாதிரிச் செயல்முறை விதிகள் தரப்பட்டுள்ளன. அவைகளை நிறுவனங்கள் அப்படியே அல்லது அதற்கு ஏற்றவாறு சட்டவரம்பிற்குட்பட்ட மாறுதல்களைச் செய்து அமைத்துக் கொள்ளலாம். செயல் முறை விதிகளின் சிறப்புகளும் பிற்பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வரம்பற்ற நிறுவனமும் (Unlimited Company) பொறுப்புறுதி நிறுவனமும் (Guarantee Company), தனியார் நிறுவனமும் (Private Company) கட்டாயமாகச் செயல்முறை விதிகளை ஆதரவாளர்

களால் கையெழுத்திடப்பட்டு அமைப்பு முறையேட்டுடன் பதிவாளருக்கு (Registrar) அனுப்பவேண்டும். ஆனால், வரம்புற்ற பொது நிறுவனம் (Public Limited Company) செயல்முறை விதிகளை அனுப்ப வேண்டிய கட்டாயம் இல்லை. அவைகள் அவ்வாறு அனுப்பாவிட்டால் அவைகளுக்கு அட்டவணை 'A'-ல் உள்ள மாதிரிச் செயல்முறை விதிகள் பயன்படுத்தப்படும். செயல்முறை விதிகளுக்கும் குறிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டணம் (Stamp fees) செலுத்தவேண்டும்.

(d) **ஒப்பந்தங்கள்** (Contracts) : நிறுவனம் மேலாண்மை முகவர் (Managing Agent) அல்லது செயலாளர்களும் பொருளாளர்களும் (Secretaries and Treasurers) அமர்த்துவதற்கு ஒப்பந்தங்கள் செய்திருந்தால், அந்த ஒப்பந்தங்களின் நகல்களைப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(e) **உறுதி மொழி** (Declaration) : சட்டப்படி யாவும் சரிவர பின்பற்றப்பட்டுள்ளன என்று இயக்குநர் அல்லது மேலாண்மை முகவர் அல்லது செயலாளர்களும் பொருளாளர்களும் அல்லது மேலாளர் அல்லது செயலாளர் அல்லது ஒரு வழக்கறிஞர் (Advocate) அல்லது பட்டயக் கணக்கர் உருவப்படிவம் எண் 1-ல் (Form No. 1) உறுதிமொழி உரைக்க வேண்டும்.

(f) **இயக்குநர்களின் இசைவு** : செயல்முறை விதிகளில் அல்லது திட்ட அறிவிப்பில் இயக்குநர்களாக குறிப்பிடப்பட்டவர்களின் இசைவு உருவப்படிவம் எண் 29-ல் (Form No. 29) தரப்படவேண்டும் [பி. 266 (1a)]

(g) **இயக்குநர்கள் பட்டியல்** : இயக்குநர்களாக இருக்க இசைந்தவர்களின் பட்டியல் உருவப்படிவம் எண் 30-ல் (Form No. 30) தரப்படவேண்டும் [பி. 266 (4)].

(h) இயக்குநர்களாக அமர்த்தப்பட்டவர்கள், தகுதிக்குரிய பங்குகளை (Qualifying Shares) ஏற்றுக்கொண்ட பொறுப்பு உருவப்படிவம் எண் 31-ல் (Form No. 31) தரப்படவேண்டும். ஆனால் இயக்குநர்களாக அமர்த்தப்பட்டவர்கள் அமைப்பு முறையேட்டில் தகுதிக்குரிய பங்குகளை ஏற்று கையெழுத்திட்டிருந்தால் இது தேவையில்லை [பி. 266 (b) (III) ].

(i) இயக்குநர்கள், மேலாண்மை முகவர்கள் (Managing Agents), செயலாளர்களும் பொருளாளர்களும், மேலாளர்

முதலியவர்களைப் பற்றிய முழுவிவரங்கள் உருவப்படிவம் எண் 32-ல் (Form No. 32) தரப்படவேண்டும் [பி 303]

(j) **அலுவலகத்தின் முகவரி** (Registered Office): நிறுவனத்தின் அலுவலகம் உள்ள முகவரி உருவப்படிவம் எண் 18-ல் (Form No. 18) தரப்பட வேண்டும் [பி. 146].

**குறிப்பு**—உருவப்படிவங்கள் 18-ஐயும் 32-ஐயும் நிறுவனம் பதிவான முப்பது நாள்களுக்குள் அனுப்பிவைக்கலாம்.

நிறுவனத்தின் அமைப்பு முறையேடு செயல்முறை விதிகளுடன் மேற்கூறிய விவரங்களையும் சேர்த்து நிறுவனத்தைப் பதிவு செய்வதற்குப் பதிவாளரிடம் அளிக்க வேண்டும். பதிவாளர் மேற்கூறியவைகளைப் பார்வையிட்டு மனநிறைவு பெற்றால் மேற்கூறியவைகளைப் பதிவுசெய்து, நிறுவனம் பதிவு செய்யப்பட்டது என்பதற்குச் சான்றுச் சீட்டினை (Certificate of incorporation) தம் கையெழுத்திட்டு வழங்கவேண்டும். அவ்வாறு சான்றுச் சீட்டு வழங்கப்பட்ட தேதியிலிருந்து நிறுவனம் ஒரு தனி நபராகக் (Separate person) கருதப்படுகிறது. மேலும் பதிவு செய்யப்பட்டதற்கு வழங்கப்பட்ட சான்றுச் சீட்டு, நிறுவனம் பதிவு செய்யப்படுவதற்குக் கடைபிடிக்க வேண்டிய சட்டமுறை விதிகள் யாவும் கடைபிடிக்கப்பட்டுள்ளன என்பதற்கு ஒரு முடிவான சான்றாகும். அதன் பிறகு எக்காரணம் கொண்டும் நிறுவனம் பதிவு செய்யப்பட்டது செல்லாதது என்று குறைகூற முடியாது. ஆகையால் அமைப்பு முறையேட்டில் கையெழுத்திடவில்லை, அல்லது பொய்க் கையெழுத்துச் செய்யப்பட்டுள்ளது அல்லது நிறுவனத்தின் நோக்கங்கள் (Objects) சட்ட விரோதமானவை (Illegal) என்ற காரணங்களுக்கும் நிறுவனம் பதிவு செய்யப்பட்டது செல்லாது என்று கருதமுடியாது. மூசா v. இப்ராகீம் (Moosa v. Ebrahim, 40, Cal, 1) என்ற வழக்கில் அமைப்பு முறையேட்டில் கையெழுத்திட்டோர் அனைவரும் இளவர்கள் (Minors) என்று வாதம் செய்யப்பட்டது. இருந்தபோதிலும் சான்றுச் சீட்டுதான் முடிவானது என்று நீதிமன்றம் கூறியது.

மேற்கூறிய காரணங்களுக்கு ஒன்று சட்டபடி நிறுவனம் கலைக்கப்பட வேண்டும் அல்லது போமேன் v. செக்யூலர் சொசைட்டி (Bowman v. Secular Society, 1917, A.C. 406) என்ற வழக்கில் குறிப்பிட்டபடி, அரசினர் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதைப் புறக்கணிக்கும்படி (Cancel) நீதிப் பேராணை மனுச் செய்யவேண்டும் (Writ petition).

நிறுவனம் பதிவானபோதிலும் உடனே தன் தொழிலைத் தொடங்க முடியாது. சட்டப்படி திட்ட அறிவிப்பை (Prospectus) வெளியிட்டு, அல்லது திட்ட அறிவிப்பிற்குப் பதிலாக விவரப்பட்டி பதிவாளரிடம் வழங்கி (Statement in lieu of Prospectus) பங்குகளை வழங்கிய பிறகு 149ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட உறுதி மொழியை (Declaration) இயக்குநர் அல்லது செயலாளர் உருவப் படிவம் எண் 19-ல் (Form No. 19) தாக்கல் செய்து நிறுவனம் தொழிலைத் தொடங்குவதற்குரிய சான்றுச் சீட்டை (Certificate of Commencement of Business) பதிவாளரிடமிருந்து பெறவேண்டும். அதன் பின்னர் தான் நிறுவனம் தொழிலை ஆரம்பிக்கவும் கடன் பெறுவதற்கும் முயலலாம்.

மேலே குறிப்பிட்டவைகளோடு இதரச் சட்டங்களின் விதிகளைப் பின்பற்றவேண்டிய நிலையும் நிறுவனத்திற்கு உண்டாகலாம். உதாரணமாகக் கீழ்க்கண்ட சட்டங்களைக் குறிப்பிடலாம்;

1. நிறுவனம் பத்து இலட்சம் ரூபாய்களுக்கு மேற்பட்ட பங்குகளை வழங்குவதாயின் மூலதனம் வழங்குதலைக் கட்டுப் படுத்தும் சட்டப்படி (The Capital Issues Control Act) ஆணையாளரின் ஆணை பெறவேண்டும்.

2. நிறுவனம் பெரும் தொழிற்சாலைகளை நடத்த முற்படின் அதற்குரிய மத்திய அரசு இலாகாவின் இசைவைப் பெற்ற பிறகே தொழிலை ஆரம்பிக்கவேண்டும்.

3. நிறுவனம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிச் அல்லது இறக்குமதி செய்வதாயின் இறக்குமதி ஏற்றுமதிச் சட்டப்படி (Import and Export Control Act) அனுமதி பெறவேண்டும்.

4. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வெளிநாட்டு நாணய மாற்றம் கட்டுப்பாட்டுச் சட்டப்படி (Foreign Exchange Regulation Act) அதன் விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

**நிறுவனத்திற்கும் அதனை ஒத்த வேறு பல இயக்கங்களுக்கும் உள்ள வேறுபாடுகள்** (Distinction between Company and other Association of Persons).

1. **ஒரு நிறுவனத்திற்கும் ஒரு கூட்டாண்மை நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள்** (Distinction between a Company and a Partnership Firm).

| நிறுவனம் (Company) | கூட்டாண்மை நிறுமம் (Partnership Firm) |
|---|---|
| (1) சட்டத்தின் கண் நிறுவனம் ஒரு தனி நபர். | (1) சட்டத்தின் கண் கூட்டாண்மை நிறுமம் ஒரு தனி நபர் அல்ல. |
| (2) நிறுவனத்தின் கடன்களுக்குப் பங்குநர்கள் பொறுப்பல்ல. | (2) கூட்டாண்மையின் கடன்களுக்குக் கூட்டாளிகள் (Partners), கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புள்ளவராகிறார்கள் (Joint and several liability). |
| (3) நிறுவனம் கலைக்கப்பட்டால் (Wound up) பங்குநர்களின் பொறுப்பு அவர்கள் பங்களவையாகும். | (3) கூட்டாண்மையில், கூட்டாளிகள் கடன் முழுவதற்கும் பொறுப்பாகிறார்கள். |
| (4) பங்குநர்களைத் தங்கள் விருப்பப்படி உரிமை மாற்றம் செய்யலாம். அதற்கு நிறுவனத்தின் இசைவு தேவையில்லை. | (4) கூட்டாளிகள் தங்கள் பங்கை மாற்றக் கூட்டாளிகளின் இசைவு இன்றிப் பிறருக்கு உரிமை மாற்றம் செய்யமுடியாது. |
| (5) நிறுவனத்தின் சொத்துகளில் பங்குநர்களுக்கு உரிமை கிடையாது. | (5) கூட்டாண்மையின் சொத்துகள் கூட்டாளிகளின் கூட்டுச் சொத்தாகும். |
| (6) நிறுவனம் வரம்பு மீறுதல் (Ultra vires) கோட்பாட்டிற்குட்பட்டது. அந்த வரம்பை மீறிய செயல்கள் செல்லாது | (6) கூட்டாண்மை எவ்விதத் தடையுமின்றிச் சட்டத்திற்குட்பட்ட எதையும் செய்யலாம். |

| நிறுவனம் | நிறுமம் |
|---|---|
| (7) பங்குநர்கள் நிறுவனத்துடன் எவ்வித ஒப்பந்தமும் செய்து கொள்ளலாம். | (7) ஒரு கூட்டாளி நிறுமத்துடன் ஒப்பந்தம்செய்ய முடியாது. ஏனெனில், நிறுமம் ஒரு தனி நபர் அல்ல. |
| (8) பங்குநர் நிறுவனத்தின் முகவர் அல்ல. ஆகையால் பங்குநரின் செயல் நிறுவனத்தை பாதிக்காது. | (8) ஒவ்வொரு கூட்டாளியும் நிறுமத்தின் முகவர் (Agent) நிறுவனத்திற்காகச் செய்யப்பட்ட கூட்டாளியின் செயல்கள் நிறுமத்தைக் கட்டுப்படுத்தும். |
| (9) நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் அடியோடு மாறினாலும், மாண்டாலும், நொடிப்பு நிலையுற்றாலும் (Insolvent) நிறுவனம் பாதிக்கப்படுவதில்லை. | (9) கூட்டாளி ஒருவர் இறந்தாலும், விலகினாலும், நொடிப்பு நிலையுற்றாலும், வேறொருவர் புதிதாகச் சேர்ந்தாலும், நிறுமம் கலைக்கப்படுகிறது (Dissolution). |
| (10) உறுப்பினர்கள் எண்ணிக்கையில் உச்ச வரம்பு கிடையாது. | (10) கூட்டாண்மையில், வங்கித் தொழிலாயின் பத்து நபர்கள் என்றும், இதர வியாபாரங்களாயின் இருபது நபர்கள் என்றும் உறுப்பினர்கள் உச்சவரம்பைச் சட்டம் கட்டுப்படுத்துகிறது. இந்த உச்சவரம்பை மீறினால் கூட்டாண்மை சட்டவிரோதமானது. |
| (11) ஒவ்வொரு நிறுவனமும், நிறுவனச் சட்டப்படி பதிவு செய்யப்பட வேண்டும். தவறினால் அது சட்டவிரோதமாகும். | (11) கூட்டாண்மை பதிவு செய்யப்பட வேண்டும் என்ற கட்டாயம் சட்டம் ஏற்படுத்தவில்லை. ஆனால், பதிவு செய்யாவிட்டால், அது, பல இடர்ப்பாடுகளுக்கு இலக்காகின்றது. |

| நிறுவனம் | நிறுமம் |
| --- | --- |
| (12) நிறுவனத்தின் அமைப்பு முறையேடும் (Memorandum of Association) செயல் முறை விதிகளும் (Articles of Association) பொது ஆவணங்களாகும் (Public Documents). பொது மக்களுக்கு அவைகள் கொள்நிலை அறிவிக்கையாகும் (Constructive notice). | (12) கூட்டாண்மை ஒப்பந்தம் (Partnership Agreement) அத்தகைய பொது ஆவணமல்ல. அது பொது மக்களுக்குக் கொள்நிலை அறிவிக்கை ஆகாது. |
| (13) நிறுவனம் வருடா வருடம் ஆண்டறிக்கையும் (annual report), தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும் (Audited Accounts) உறுப்பினர்களுக்கு அனுப்பவேண்டும். | (13) கூட்டாண்மைக்கு இவ்விதக் கடமையில்லை. |
| (14) நிறுவனம் நொடிந்தவர் என்று தீர்ப்புச் செய்ய முடியாது (cannot be adjudged as insolvent). | (14) ஒரு நிறுமம் நொடிந்தவர் (insolvent) என்று முடிவு செய்யப்படும். |
| (15) நிறுவனம் வேறு நிறுவனங்களில் உறுப்பினராகலாம். | (15) நிறுமம் அவ்விதம் நிறுவனங்களில் உறுப்பினராக முடியாது. |

**2. நிறுவனத்திற்கும் பொழுதுபோக்குச் சங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள் (Distinction between a Company and a Club).**

| நிறுவனம் | பொழுதுபோக்கும் சங்கம் |
| --- | --- |
| (1) நிறுவனம் ஒரு தனி நபர். | (1) சங்கம் ஒரு தனி நபர் அல்ல. |
| (2) ஆதாயம் அடைவதே முக்கிய நோக்கம். | (2) ஆதாயம் அடையும் நோக்கமே கிடையாது. |
| (3) நிறுவனச் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டது. | (3) நிறுவனச் சட்டத்தின்கீழ் பதிவானாலும் அதன் பெரும் பகுதி இதனை பாதிப்பதில்லை. |

| நிறுவனம் | நிறுமம் |
|---|---|
| (4) நிறுவனத்தின் வியாபாரம் விற்பனைவரிக்குட்பட்டது. | (4) சங்கத்தின் விற்பனைக்கு வரி கிடையாது. ஏனென்றால் உறுப்பினர்களும் சங்கமும் வெவ்வேறு நபர்களல்ல. |
| (5) பங்குநர்கள் பொறுப்பை அவர்கள் இசைவு இன்றி அதிகப்படுத்த முடியாது. | (5) உறுப்பினர்கள் பொறுப்பை அவர்கள் இசைவு இன்றி அதிகப்படுத்தலாம். |
| (6) பங்கு ஆதாயம் அளிக்கிறது. | (6) பங்கு ஆதாயம் (dividend) அளிப்பதில்லை. |

3. நிறுவனத்திற்கும் இந்து கூட்டுக்குடும்ப நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள் (Distinction between a Company and a Joint Hindu Family Firm)

| நிறுவனம் | இந்து கூட்டுக்குடும்ப நிறுமம் |
|---|---|
| (1) நிறுவனம் உறுப்பினர்கள் உடன்பாட்டினால் உண்டாகிறது (Arises from Contract). | (1) இந்து கூட்டுக்குடும்ப நிறுமம் தகுதி நிலையில் தோன்றியதே தவிர உடன்பாட்டினால் உண்டாவதல்ல (Arises from Status and not from Contract.) |
| (2) ஆண், பெண் ஆகிய இருபாலரும் உறுப்பினர்களாகலாம். | (2) குடும்பத்தில் பிறக்கும் ஆண் உறுப்பினரே நிறுமத்தில் உறுப்பினராவார். |
| (3) உறுப்பினர்கள் (Members) இயற்கை நபராகவோ, செயற்கை நபராகவோ (artificial person) இருக்கலாம். | (3) உறுப்பினர்கள் யாவரும் இயற்கை நபர்கள் (Natural Persons) |
| (4) நிறுவனம் ஒரு தனி நபர். | (4) நிறுமம் ஒரு தனி நபர் அல்ல. |
| (5) பொது நிறுவனமாயின் குறைந்தது எழுவரும், தனியார் நிறுவனமாயின் குறைந்தது இருவரும் இருக்க வேண்டும். | (5) இதில் உறுப்பினர்களுக்குக் குறைந்த வரம்பு கிடையாது. |

| நிறுவனம் | இந்து கூட்டுக்குடும்ப நிறுமம் |
|---|---|
| (6) நிறுவனம் வரம்பு மீறல் கோட்பாட்டிற்குட்பட்டது (Doctrine of ultra vires). | (6) வரம்புமீறல் கோட்பாட்டிற்குட்பட்டதல்ல. |
| (7) இளவர் (Minor) உறுப்பினராக முடியாது. | (7) இளவரும் நிறுமத்தில் ஓர் உறுப்பினர். |
| (8) பிறப்பினால் பங்குநராக முடியாது. பங்குநராகக் குறிப்பிட்ட முறைகளைப் பின்பற்றவேண்டும். பங்குகளைப் பிறருக்கு வழங்கித்தான் பங்குநர்களை அதிகமாக்கலாம். | (8) பிறப்பினால் உறுப்பினராகிறார். ஆண் மகன் பிறக்கப் பிறக்க உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாகிறது. |
| (9) உறுப்பினர் இறந்தால் அவர் உரிமையை சட்டச் சார்பாளர் (Legal representative) பெறுகிறார். அதனால் உறுப்பினர்கள் எண்ணிக்கை பாதிக்கப்படுவதில்லை. | (9) உறுப்பினர் இறப்பதால், உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைகிறது. |
| (10) உறுப்பினர்கள் அனைவரும் இறந்தாலும் நிறுவனம் பாதிக்கப்படுவதில்லை. | (10) உறுப்பினர்கள் அனைவரும் இறந்தால், நிறுமம் மறைகிறது, |
| (11) பங்குநர்களின் பொறுப்பு அவர்கள் பங்களவேயாகும். | (11) உறுப்பினர்கள் பொறுப்பு அவர்கள் பங்களவேயாயினும் மேலாளர் (Manager) அல்லது குடும்பத் தலைவர் முழுப் பொறுப்புள்ளவர். |
| (12) நிறுவனம் பதிவு செய்யப்படவேண்டும். | (12) நிறுமம் பதிவு செய்யப்படவேண்டியதில்லை. |
| (13) ஒரு நிறுவனம் கடன் வாங்குவதற்குப் படரும் பற்று வழங்கலாம் (Floating charge). | (13) இந்துக் குடும்பம் படரும் பற்று வழங்க முடியாது. |

| நிறுவனம் | இந்துக் கூட்டுக் குடும்ப நிறுமம் |
|---|---|
| (14) நிறுவனம் வருடா வருடம் ஆண்டறிக்கையும், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும் உறுப்பினர்களுக்கு அனுப்பவேண்டும். | (14) இத்தகைய கடமை இந்து கூட்டுக் குடும்பத்திற்குக் கிடையாது. |
| (15) நிறுவனம் நிறுவனச் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டது. | (15) இந்து கூட்டுக் குடும்ப நிறுமம் இந்துமதச் சட்டத்திற்குட்பட்டு இயங்குகிறது. |

4. பொது நிறுவனத்திற்கும், பொது இணையத்திற்கும் உள்ள வேறுபாடுகள் (Distinction between a Public Company and a Public Corporation)

| பொது நிறுவனம் | பொது இணையம் |
|---|---|
| (1) நிறுவனச் சட்டப்படி நிறுவப்பட்டுப் பதிவு செய்யப்படுகிறது. | (1) தனி முறையான சட்டத்தின்படி நிறுவப்படுகிறது (Created by Special Act). |
| (2) நிறுவனச் சட்டத்தின் விதிகளின்படி இயங்குகிறது. | (2) தனிமுறைச் சட்டத்தின் விதிகளின்படி இயங்குகிறது. |
| (3) குறைந்தது ஏழு பங்குநர்கள் இருக்கவேண்டும். | (3) பங்குநர்களே கிடையாது. |
| (4) மூலதனம் பெரும்பாலும் பங்குகள் வாயிலாகப் பெறுகிறது. | (4) தேவையான மூலதனம் அரசினர் வழங்குகின்றனர். |
| (5) இயக்குநர்கள் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். | (5) இயக்குநர்கள் அரசினரால் நியமிக்கப்படுகின்றனர். |
| (6) நிறுவனச் சட்டத்தின் விதிகளின்படி கலைக்கப்படுகிறது (Wound up). | (6) பொது இணையம் கலைக்கப்படுவதில்லை. |
| (7) நிறுவனத்தின் ஆதாயமும் இழப்பும், பங்குநர்களை பாதிக்கிறது. | (7) பொது இணையத்தின் ஆதாயமும் இழப்பும் (Profit and Loss) பொது மக்களை பாதிக்கிறது. |

5. **நிறுவனத்திற்கும் சட்ட முரணுன சேர்க்கைக்கும் உள்ள வேறுபாடுகள்** (Distinction between a Company and an Illegal Association)

| நிறுவனம் | சட்ட முரணுன சேர்க்கை |
| --- | --- |
| (1) நிறுவனம் சட்டப்படி பதிவு செய்யப்படுகிறது. | (1) சட்ட முரணுன சேர்க்கை பதிவுசெய்யப்படுவதில்லை. |
| (2) சட்டமுறையானது. | (2) சட்ட முரணுனது. |
| (3) நிறுவனம் ஒரு தனி நபர். | (3) தனி நபர் அல்ல. |
| (4) நிறுவனம் வழக்காடலாம். | (4) சட்ட முரணுன சேர்க்கை வழக்குப் போடமுடியாது. |
| (5) நிறுவனத்தின் கடன்களுக்கு உறுப்பினர்கள் பொறுப்பில்லை. | (5) கடன்கள் முழுவதற்கும் உறுப்பினர்கள் பொறுப்பாகிறுர்கள். |
| (6) உறுப்பினர்கள் பொறுப்பு அவர்கள்பங்களவேயாகும். | (6) உறுப்பினர்களின் பொறுப்பு வரம்பற்றது. |
| (7) நிறுவனத்தின் உறுப்பினர்கள் குற்றவாளிகளல்லர். | (7) உறுப்பினர்கள் குற்றவாளிகளெனத் தண்டிக்கப்படுகின்றனர். |

**சட்ட முரணுன சேர்க்கைகள்** (Illegal Associations)

பலர் ஒன்றுகூடி வியாபாரம் செய்வதைக் கட்டுப்படுத்த நிறுவனச் சட்டத்தில் 11-ஆவது பிரிவில் சில தடைகள் விதிக்கப் பட்டுள்ளன. இத் தடைகளை மீறித் தோன்றும் நபர்களின் சேர்க்கை (Association of Persons) சட்ட முரணுன சேர்க்கையாகும் (Illegal Association).

அப் பிரிவின்படி, பத்து நபர்களுக்கு மேற்கொண்ட யாதொரு நிறுவனமும், சேர்க்கையும், அல்லது கூட்டாண்மையும், நிறுவனச் சட்டப்படி நிறுவனமாகப் பதிவாகாமல், வங்கித் தொழிலை நடத்தும்பொருட்டு உருவாக்கப்படக்கூடாது.

இருபது நபர்களுக்கு மேற்பட்ட யாதொரு நிறுவனமும், சேர்க்கையும் அல்லது கூட்டாண்மையும் ஆதாயம் அடையும் நோக்கமுடைய வேறு தொழிலைச் செய்யும்பொருட்டு, நிறுவனச் சட்டப்படி ஒரு நிறுவனமாகப் பதிவாகாமல், உருவாக்கப்படக் கூடாது.

இந்தப் பிரிவு ஓர் இந்து கூட்டுக் குடும்பத்தை பாதிக்கவில்லை. ஆனல், ஒரு சேர்க்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட இந்து கூட்டுக்

குடும்ப நிறுமங்கள் (Hindu Joint Family Firms) சேர்ந்தால், சேர்க்கையின் எண்ணிக்கை இருபது நபர்களுக்கு மிகையாகக் கூடாது. மேலும், நிறுமத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் சேர்க்கையில் உறுப்பினராகக் கருதப்படுவர். உறுப்பினர்களின் தொகையைக் கணிப்பதற்கு இளவர்களைக் கணக்கில் கொள்வதில்லை (Minors excluded).

இப் பிரிவுக்கு மாறாகத் தொழிலைச் செய்யும் ஒரு நிறுவனத்தின் அல்லது சேர்க்கையின் அல்லது கூட்டாண்மையின் ஒவ்வொரு உறுப்பினரும் தொழிலில் ஏற்படும் கடன்கள் முழுவதற்கும் பொறுப்பாகின்றனர்.

இப் பிரிவுக்கு மாறாக உருவாக்கப்பட்ட, ஒரு நிறுவனத்தின், அல்லது சேர்க்கையின் அல்லது கூட்டாண்மையின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆயிரம் ரூபாய்கள் வரையில் தண்டவரி விதிக்கப் படுவர்.

**சட்ட முரணான சேர்க்கையின் விளைவுகள்** (Consequences of illegality)

1. சட்ட முரணான சேர்க்கை ஒரு தனி நபர் அல்ல. அதனால், அது எந்த நபருடனும் எந்தவிதமான ஒப்பந்தமும் (Contract) செய்ய முடியாது. அது ஒப்பந்தம் செய்தாலும், அதைச் சட்டப் படி நிறைவேற்றும் உரிமை அதற்குக் கிடையாது [ஜென்னிங்ஸ் *v*. ஹேம்மண்ட் (Jennings *v*. Hammond, 9, Q. B. D. 225)]

2. சேர்க்கையில் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அதன் கடன்கள் முழுவதற்கும் முழு பொறுப்புள்ளவராவர்.

3. சேர்க்கை உறுப்பினர்பேரில் அல்லது வேறு ஒரு நபர் பேரில் எவ்வித வழக்கும் தொடரமுடியாது. அவ்விதமே சேர்க்கையின்பேரில் ஒரு உறுப்பினர் எவ்வித வழக்கும் தொடர முடியாது.

4. உறுப்பினர்கள், சேர்க்கையின் சொத்துகளில் பங்கு பெறுவதற்கும் அல்லது அதைக் கலைப்பதற்கும் வழக்குத் தொடர முடியாது (Cannot Sue for Partition or dissolution).

5. சேர்க்கையோ அல்லது உறுப்பினரோ அல்லது கடனவரோ, சேர்க்கையைக் கலைப்பதற்கு மனு செய்ய முடியாது.

6. மூன்றும் நபர்கள் (Third Parties) சேர்க்கை சட்ட விரோதமானது என்பதை அறியாமல் அதனுடன் தொடர்பு

கொண்டால், அதன் காரணமாக அவர்கள் சேர்க்கையின்பேரில் வழக்குத் தொடரலாம்.

7. சேர்க்கையில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ஆயிரம் ரூபாய்கள் வரை தண்டவரி (Fine) விதிக்கப்படுவர்.

சட்ட முரணான சேர்க்கையின் தீயவிளைவுகளை விளக்குகின்றன கீழ்க்காணும் வழக்குகள் :—

1. கிரீன்பர்க் v. கூப்பர்ஸ்டைன் (Greenberg v. Cooperstein, 1926, ch. 657.)

உறுப்பினர்கள் செலுத்தும் கட்டணத் தொகையிலிருந்து உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கும் நோக்கமுடன் இருபது நபர்களுக்கு மேற்பட்ட ஒரு சேர்க்கை (Association) நான்கு கிளைகளுடன் (Branches) தொடங்கப்பட்டது. மேற்படி சேர்க்கை நிறுவனச் சட்டப்படி அல்லது இதர இந்தியச் சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை. உறுப்பினர்களிடையே வேற்றுமை மூண்டு பிளவு ஏற்படவே, மூன்று உறுப்பினர்கள், சேர்க்கையைச் சரிவர நிர்வாகம் செய்ததற்கும், கட்டணத் தொகைகளைக் கோரியும் செயலாளர் மீது வழக்குப் போட்டனர். எதிர்வாதி (Defendant) வழக்கை எதிர்த்து, சேர்க்கை சட்ட முரணானதாகையால் வழக்கினைத் தள்ளுபடி செய்ய வேண்டுமெனக் கூறினார். ஆனால், நீதி மன்றம் சேர்க்கை சட்டவிரோதமானாலும், கட்டணத் தொகை சட்ட விரோதமான செயலுக்குப் பயன்படுத்தும் முன்னர் திருப்பிக் கேட்பதில் தவறில்லை என்று முடிவு செய்து வாதியின் கோரிக்கையை அனுமதித்தது.

2. மேவா ராம் v. ராம் கோபால் (Mewa Ram v. Ram Gopal, 43, All. 735.)

மேற்கூறிய 'Greenberg' வழக்கை ஆதாரமாகக் கொண்டு அலகாபாத்தில் இவ்வழக்குப் போடப்பட்டது. அவ்வழக்கில், சில வருடங்களாக வியாபாரம் செய்து வந்த சட்ட முரணான சேர்க்கையின் உறுப்பினர் ஒருவர், சேர்க்கையின் சொத்துகளைப் பங்கிடவும் (Partition) சேர்க்கையைக் கலைக்கும்படியும் (dissolution) கோரினார். ஆனால் நீதிமன்றம், 'Greenberg' வழக்கில் கட்டணத் தொகை சட்டவிரோதமான செயலுக்குப் பயனாகுமுன் வழக்குத் தொடங்கப்பட்டதால், அதன் சூழ்நிலை முற்றிலும் மாறானது என்பதைத் தெளிவுபடுத்தி, இந்த வழக்கில் சேர்க்கை, சட்ட விரோதமான செய்கையில் சில காலம் ஈடுபட்டமையால், வாதியின் வழக்கு அனுமதிக்க முடியாது என்று முடிவு செய்தது.

3. செனுஜி v. பென்னுஜி [Senaji v. Pennaji, 59 M.L.J. 435 (P.C.)]

இவ் வழக்கில் மூன்று கூட்டாண்மை நிறுமங்கள் (Partnership Firms) கொண்ட ஒரு சேர்க்கை பொருளீட்டும் நோக்கமுடன் வியாபாரம் செய்தது. கூட்டாண்மை நிறுமம் ஒரு தனிநபர் அல்லாமையால், மேற்படி சேர்க்கையின் உறுப்பினர்கள், மூன்று நிறுமங்களின் கூட்டாளிகளின் எண்ணிக்கையாகும் என்றும், அத் தொகை இருபது நபர்களுக்கு மேற்பட்டதால், சேர்க்கை சட்டவிரோதமானது என்றும், அதனுல் அந்தச் சேர்க்கையைக் கலைக்கவோ அல்லது கணக்குகளைக் கோரியோ வழக்கிட முடியாது என்றும் முடிவு செய்தது சென்னை உயர்நீதி மன்றம்.

**நிறுவனத்தின் திரை தூக்கப்படுதல் (Lifting the Corporate Veil)**

ஒரு நிறுவனம் பதிவானவுடன், அது உறுப்பினர்களினின்று முற்றிலும் வேருன ஒரு தனி செயற்கை நபர் (Artificial Person) என்று சட்டவியல் கற்பனை செய்துள்ளது (Fiction of Law). இந்தக் கோட்பாடு நிறுவனச் சட்டவியலின் வேரூன்றிய கோட்பாடாகும். இருப்பினும் அதனை வேரோடு களைந்தெறிந்து, நிறுவனத்தின் கற்பனைத் திரையைக் கிழித்து, சட்டசபையும் (Legislature), நீதிமன்றமும் அதன் உண்மை நிலையினைக் கண்டறிய சிற்சில சூழ்நிலைகளில் முற்படுகிறது. இச்செயல், நிறுவனத்தின் திரை தூக்கப்படுதல் என்று குறிப்பிடப்படுகிறது.

கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் நாடாளுமன்றம் (Parliament) நிறுவனத்தின்மேல் உள்ள கற்பனை ஓட்டை உடைத்து (break open the corporate shell) அதன் உள்ளக் கிடக்கைகளை ஊன்றி நோக்கும்படி உத்திரவிட்டுள்ளது :

1. நிறுவனச் சட்டத்தின் 45ஆவது பிரிவின்படி, ஒரு நிறுவனம் தனியார் நிறுவனமாயின் (Private Company), அதன் உறுப்பினர்கள் இருவருக்கும் குறைந்த பிறகும், பொது நிறுவனமாயின் (Public Company), அதன் உறுப்பினர்கள் எழுவருக்கும் குறைந்த பிறகும், நிறுவனம் தொடர்ந்து தொழிலை ஆறு மாதங்களுக்குமேல் நடத்துமாயின், அதனை அறிந்த அங்கத்தினர்கள் அனைவரும், நிறுவனத்தின் கடன்கள் முழுவதற்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் (Joint and Several liability) பொறுப்பாகிறார்கள் ஆகையால், நிறுவனம் தம்மிலும் வேறுபட்ட ஒரு தனி நபர் என்று கூறி பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது.

2. நிறுவனச் சட்டத்தின் 147ஆவது பிரிவின்படி, ஒரு நிறுவனத்தின் பெயரால் செய்யப்படும் எந்தச் செயலும், அல்லது ஒப்பந்தத்திலும், நிறுவனத்தின் பெயரைச் சரிவரக் குறிப்பிடா விட்டாலும் அல்லது நிறுவனத்தின் உரிய முத்திரையை இடாவிடி னும் அந்தப் பிரிவில் கூறியுள்ள விதிகளை மீறினாலும், மேற்படி செயலையும் ஒப்பந்தத்தையும் செய்தவரே அதற்கு முழுப் பொறுப் புள்ளவராகிறார்.

3. நிறுவனச் சட்டத்தின் 542ஆவது பிரிவின்படி, நிறுவனத் தைக் கலைத்துக்கொண்டிருக்கும்போது. நிறுவனத்தின் இயக்கு நர்கள் அல்லது அலுவலர்கள் கடன்காரர்களையும் மற்றவர்களை யும் மோசடி செய்யும் வகையில், நிறுவனத்தை நடத்தியதாக நீதிமன்றம் தீர்மானித்தால், அவ்விதம் அதனை நடத்தியவர்களும் அதற்கு உடந்தையானவர்களும், நிறுவனத்தின் கடன்களுக்குப் பொறுப்புள்ளவராகிறார்கள்.

4. கொண்ட நிறுவனமும் (Holding Company) கொள்ளப் பட்ட நிறுவனமும் (Subsidiary Company) தனித்தனி நபர்களான போதிலும், நிறுவனச் சட்டத்தின் 212ஆம் பிரிவில், கொண்ட நிறுவனம் தன் பங்குநர்களுக்கு, கொள்ளப்பட்ட நிறுவனத்தின் கணக்குகளையும் காண்பிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. இது அவை இரண்டும் வெவ்வேறான நபர்கள் என்பதை மறுக்கும் முறையில் உள்ளது.

5. வருமான வரிச் சட்டத்தில் (Income Tax Act) இயக்குநர் அடையும் ஊதியமும் நிறுவனத்தின் ஊதியமாகக் கணக்கிடப் பட்டு வரி விதிக்கப்படுகிறது. இதனால் நிறுவனமும் இயக்குநரும் வெவ்வேறு நபர்களாகக் கருதப்படவில்லை என்பது தெளிவா கிறது.

6. இந்திய முத்திரைவரிச் சட்டம் (Indian Stamp Duty Act), மரணவரிச் சட்டம் (Estate Duty Act), இந்திய நிதிச் சட்டம் (Indian Finance Act), வெளிநாட்டு நாணயமாற்றுக் கட்டுப்பாடு சட்டம் (Foreign Exchange Control Act) முதலானவை நிறுவனத்தின் திரையை விலக்கி அதன் உண்மை நிலையினைக் காண வழி கண்டுள்ளன.

நீதிமன்றங்களும் கீழ்க்கண்ட சூழ்நிலைகளில், ஒரு நிறு வனத்தின் துகிலுரித்து அதன் உண்மை நிலையினை ஊடுருவிப் பார்க் கின்றன.

1. மோசடி (Fraud) : மோசடியை மறைக்கும் மூடுதிரையாக ஒரு நிறுவனம் பயன்படுத்தப்பட்டால், நீதிமன்றம், நிறுவனத்தின் திரையை நீக்கி, அதன் உண்மை நிலையைக் கண்டு முடிவு செய்கிறது. இதைக் கீழ்க்காணும் வழக்குகள் விளக்குகின்றன :—

கில்போர்டு மோட்டார் கம்பெனி v. ஆர்னே (Gilford Motor Co., v. Horne, 1933, 1 ch. 935).

இவ்வழக்கில் ஆர்னே (Horne) என்பவர் கில்போர்டு மோட்டார் கம்பெனியின் மேலாண்மை இயக்குநராக (Managing Director) இருந்தார். அவர் அந்த நிறுவனத்திலிருந்து விலகினால், நிறுவனத்தின் வாடிக்கைகாரர்களை (Customers) தன்னிடம் வரும்படி தூண்டுவதில்லை என்று நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்தார். ஆனால், அவர் அந்த நிறுவனத்தை விட்டு விலகிய பிறகு, வேறொரு நிறுவனம் நிறுவி அதனுடன் தன் முன்னாள் நிறுவனத்தின் வாடிக்கைகாரர்களைத் தொடர்பு கொள்ளும்படி தூண்டினார். ஆனால் நீதிமன்றம், ஆர்னே நிறுவிய நிறுவனம் போலியானது (sham) என்றும், மோசடி செய்வதற்கு உறுகருவியாக நிறுவனம் உபயோகப்படுத்தப்பட்டது என்றும், அதனால் நிறுவனமும் ஆர்னேயும் வெவ்வேறான நபர்கள் அல்ல; அவர்கள் இருவரும் ஒருவரே; ஆகவே, ஆர்னே ஒப்பந்தத்தை மீறியதற்குப் பொறுப்பாகிறார் என்று உண்மைக்கு உகந்த உறுதியான முடிவை வழங்கியது.

ஜோன்ஸ் v. லிப்மேன் [Jones v. Lipman (1962) 1. W.L.R. 832].

இவ் வழக்கில், A என்பவர் தன் நிலத்தை B என்பவருக்கு விற்பதாக ஒப்பந்தம் செய்திருந்தார். பின்னர், A என்பவர் மேற்படி ஒப்பந்தத்தை தவிர்ப்பதற்காக, தன் நிலத்தைத் தானே நிறுவிய ஒரு நிறுவனத்திற்கு விற்றுவிட்டார். ஆனால், நீதிமன்றம், அந்த நிறுவனம் ஒரு போலி நபர் என்றும் (Sham Person), Aயும் அவர் நிறுவிய நிறுவனமும் ஒருவரே என்றும் கூறி, நிறுவனத்திற்கு விற்பனை செய்தது செல்லாதென முடிவு செய்தது.

மேற்கூறிய வழக்குகள் ஒரு நிறுவனத்தின் போர்வையில் மோசடிகள் செய்ய முடியாதென்பதை விளக்குகின்றன.

2. வருமானவரியைத் தவிர்க்க ஒரு நிறுவனத்தைப் பயன்படுத்தினால், நிறுவனத்தின் திரை தூக்கப்பட்டு, அதன் உண்மை நிலை ஆராயப்படுகிறது. இந்த நிலையைப் பின்வரும் வழக்கு விளங்கச்செய்கிறது :—

இன் ரி சர் தின்ஷா மானெக்ஜீ பெட்டிட் (In Re: Sir Dinshaw Maneckjee Petit, A.I.R. 1927, Bomb. 371).

இவ் வழக்கில் ஒரு பெரிய செல்வந்தர் பெரும் தொகைகளே வைப்புத் தொகைகளிலும் (Deposits), பங்குகளிலும் (Shares) முதலீடு (invested) செய்து, அதற்குரிய வட்டியும் பங்கு ஆதாயமும் (Dividends) பெற்ருர். அவைகளுக்குரிய வருமான வரியைத் தவிர்க்க, அவர் நான்கு தனியார் நிறுவனங்கள் (Private Companies) நிறுவி, தமக்குச் சொந்தமான முதலீடுகளே (Investments) மேற்படி நிறுவனங்களுக்கு மாற்றி, அதற்கு மறுபயனுக(consideration), அவைகளின் பங்குகளேப் பெற்றுக்கொண்டார். முதலீடுகளுக்குரிய ஊதியமும் ஆதாயமும், அந்தந்த நிறுவனங்கள் பெற்றன. அந்த நிறுவனங்களிடமிருந்து அவர் மேற்படி தொகைகளேக் கடனுகப் பெற்றுக்கொண்டு, அந்தக் கடன்களேத் திருப்பிச் செலுத்துவதேயில்லே. இவ்விதம் தமக்கு எவ்வித வருமானமும் கிடையாது, நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன்கள் வருமானமல்ல என்று கூறி வருமான வரிகளேத் தவிர்க்க முயன்ருர். ஆனல், நீதிமன்றம் மேற்படி தனியார் நிறுவனங்கள் வருமான வரிகளேத் தவிர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும், அந்த நிறுவனங்கள் அச் செல்வந்தரின் நிழல்கள் (Mere shadows) என்றும், நிறுவனங்களின் ஊதியங்கள் யாவும் செல்வந்தருடைய ஊதியம் என்றும் முடிவு செய்தது.

3. நிறுவனம் உறுப்பினர்களின் முகவராக (Agent) உட்கிடையாகவோ அல்லது வெளிப்படையாகவோ (impliedly or expressly) இருப்பின், நீதிமன்றம், நிறுவனத்தையும் உறுப்பினர்களேயும் வெவ்வேருகக் கருதுவதில்லே. இந் நிலேயைக் கீழ்க்கண்ட வழக்கு விளக்குகிறது :—

இன் ரி எஃப்.ஜி. (பில்ம்ஸ்) லிட். [(In Re F.G. (Films) Ltd., (1953, 1 W.R.L. 433)]

இவ் வழக்கில் ஓர் அமெரிக்கரும் இரண்டு ஆங்கிலேயர்களும் சேர்ந்து ஒரு நிறுவனத்தைத் தொடங்கினர்கள். அந்த நிறுவனம் இங்கிலாந்து நாட்டில் பதிவு செய்யப்பட்டது. அதன் பங்குகளில் 90 சதவீதம், அமெரிக்கருக்குச் சொந்தமானது அந்த நிறுவனம் இந்தியாவில் "Monsoon" என்ற படம் தயாரித்தது. ஆனல், திரைப்படங்களேக் கண்காணிக்கும் குழு (Film Censor Board), அப் படத்தை அமெரிக்கருக்குச் சொந்தமானது எனக் கூறி அதை ஆங்கில நிறுவனத்தின் படமாகப் பதிவு செய்ய மறுத்தது. அக் கருத்து மிகவும் சரியானது என்று நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

4. ஒரு நிறுவனம் உறுப்பினர்களின் நம்பகராக இருப்பின் (Trustee of the members), அது உறுப்பினர்களினின்றும் வேறு நபராகக் கருதப்படாது.

5. ஒரு நிறுவனத்தின் தன்மையையோ அல்லது அதன் உறை விடத்தையோ கண்டறிய அதன் திரை தூக்கப்படுகிறது. (Determination of the character and residence of the company). இந் நிலையைக் கீழ்க்கண்ட வழக்கு விளக்குகிறது :—

இன் டைய்ம்லெர் அண்ட் கம்பெனி லிமிடெட் *v.* காண்டி னென்டல் டயர் அண்ட் ரப்பர் கம்பெனி லிமிடெட் [In Daimler and Co, Ltd. *v.* Continental Tyre and Rubber Co. Ltd. (1916, A. C. 307)].

இவ் வழக்கில் ஒரு ஜெர்மனி நாட்டின் நிறுவனம் உற்பத்தி செய்த டயர்களை (tyres) விற்பதற்கு, இங்கிலாந்தில் ஒரு நிறுவனம் நிறுவப்பட்டுப் பதிவு செய்யப்பட்டது. அதில் பெரும் பாலான பங்குகள் ஜெர்மானியர்களுக்குச் சொந்தமானது. மேலும், அந் நிறுவனத்தின் இயக்குநர்கள் அனைவரும் ஜெர்மனியில் வசிக்கும் ஜெர்மானியர்கள். அந்த நிறுவனம் முதல் உலகப்போர் மூண்டபோது, வியாபாரக் கடன்களைத் தண்டல் செய்ய வழக்குத் தொடுத்தது. ஆனால், நீதிமன்றம், அந்த நிறுவனம் விரோதி நாட்டைச் சேர்ந்தது என்று முடிவு செய்து, வழக்கைத் தள்ளியது.

6. பல நிறுவனங்கள் கூட்டாக ஒரு குடும்பத்தைப் போல் தொடர்புற்றிருந்தால் (Group Enterprises), நீதிமன்றங்கள், அவைகள் அனைத்தையும் ஒரே நபராகச் சில சூழ்நிலைகளில் முடிவு செய்கின்றன. இதற்குக் கீழ்க்கண்ட வழக்கு ஓர் உதாரணமாகும்.

ஸ்மித் ஸ்டோன் அண்ட் நைட் லிமிடெட் *v.* பிர்மிங்ஹாம் கார்ப்பொரேஷன் (Smith, Stone and Knight Ltd. *v.* Birmingham Corporation, 1939 4 All. E.R. 116.)

இவ் வழக்கில், கொண்ட நிறுவனம் ஒன்று (Holding Company), கொள்ளப்பட்ட நிறுவனத்திற்கு (Subsidiary Company) சொந்தமான நிலத்தை, அரசினர் எடுத்துக்கொண்ட தற்குரிய ஈடு தொகையைப் (Compensation) பெறுவதற்கு உரிமை உடையது என்று நீதி மன்றம் முடிவு செய்தது.

7. பொதுக் கொள்கை காரணமாக (On grounds of Public policy), ஒரு நிறுவனத்தின் திரை தூக்கப்படுகிறது.

8. இயக்குநர்கள் புரியும் குற்றங்களும் தீங்குகளும் (Crimes and Torts), நிறுவனம் செய்ததாகக் கருதப்பட்டு அது தண்டிக்கப் படுகிறது.

9. ஒரு நிறுவனத்தின் பெரும்பான்மையான பங்குநர்கள் செய்யும் தீர்மானம், நிறுவனத்தின் தீர்மானமாகச் சட்டசபையும் நீதிமன்றமும் கருதுகின்றன.

**நிறுவனங்களின் வகைகளும் அவைகளை வகுக்கும் முறைகளும் (Kinds and classification of Companies)**

நிறுவனங்களைக் கீழ்க்கண்ட முறைகளில் பலவகைகளாகப் பிரிக்கலாம்.

I. நிறுவனங்கள் நிறுவப்படும் முறைகளைக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :-

(a) பட்டயம் பெற்ற நிறுவனம் (Chartered Company)

(b) சட்டப்படி அமைந்த நிறுவனம் (Statutory Company)

(c) நிறுவனச் சட்டப்படி பதிவான நிறுவனம் (Company Registered under the Companies Act).

(a) **பட்டயம் பெற்ற நிறுவனம் :** இவ்வகை நிறுவனம் பலர் கூடி அரசர் அல்லது அரசிக்கு மனு செய்து அவர் அளிக்கும் பட்டயத்தின்படி பிறக்கின்றது. இத்தகைய நிறுவனம் பட்டயத்தில் (Charter) குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களுக்கிணங்கச் செயல்பட வேண்டும். இருந்தபோதிலும் இத்தகைய நிறுவனம் ஒரு இயற்கை நபரைப்போல (Natural person) எல்லா உரிமைகளையும் உடையதாகும். ஆகையால், வரம்புமீறல் கோட்பாடு (Doctrine of ultra vires) இதன் செயல்களை பாதிக்காது. ஆனால், அது பட்டயத்தில் குறிப்பிட்ட குறிக்கோள்களை மீறினால், பட்டயம் புறக்கணிக்கப்படும் (revoked). இத்தகைய நிறுவனங்கள் இங்கிலாந்து நாட்டில் தோன்றின. இந்தியாவில் இம்மாதிரி நிறுவனங்கள் கிடையாது. இவ்வகையில் தோன்றிய நிறுவனங்களில் சிறப்புப் பெற்றவைகளில் சில பின்வருமாறு :—

(1) தி ஈஸ்ட் இண்டியா கம்பெனி (The East India Company).

(2) தி பேங்க் ஆஃப் இங்கிலாந்து (The Bank of England).

(3) தி பி. அண் ஓ. ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி (The P. and O. Steam Navigation Company).

(b) சட்டப்படி அமைந்த நிறுவனம் (Statutory Company) : இவ்வகையான நிறுவனம் நாடாளுமன்றம் (Parliament) அல்லது மாநிலச் சட்டமன்றம் (State Legislature) இயற்றிய சட்டங்களினுல் தோன்றுகிறது. இந்த நிறுவனத்தைப் பிறப்பித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களுக்கிணங்க இது இயங்க வேண்டும். அவைகளை மீறினுல் மேற்படி செயல்கள் வரம்பு மீறுதல் கோட்பாட்டினுல் பாதிக்கப்பட்டு, சட்டப்படி செல்லாதவையாகும் (Doctrine of ultra vires). இவைகள் 'வரம்புற்றது' என்ற வார்த்தையைப் பெயரின் இறுதியில் குறிப்பிடத் தேவையில்லை. (i) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், (ii) ஆயுள் காப்பீடு இணையம் (Life Insurance Corporation) முதலியன இவ்வகையைச் சேர்ந்த நிறுவனங்களாகும்.

(c) நிறுவனச் சட்டப்படி பதிவான நிறுவனம் (Company Registered under the Companies Act) : இத்தகைய நிறுவனம் நிறுவனச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டு பிறக்கிறது. இந்த நிறுவனமும் அதன் அமைப்பு முறையேட்டில் (Memorandum of Association) குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களுக்கிணங்க இயங்க வேண்டும். இல்லாவிடில், அவைகளை மீறிய செயல்கள் வரம்பு மீறுதல் கோட்பாட்டினுல் பாதிக்கப்பட்டுச் செல்லாதவையாகும் (Doctrine of ultra vires).

II. நிறுவனங்கள், அவைகளின் குறைந்த அளவு உறுப்பினர்களைக் கொண்டு (Minimum number of members) இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு :—

(a) பொது நிறுவனம் (Public Company)

(b) தனியார் நிறுவனம் (Private Company)

(a) பொது நிறுவனம் (Public Company) : குறைந்தது ஏழு உறுப்பினர்கள் கொண்ட நிறுவனமாயின் அது பொது நிறுவனம் எனப்படும். இந்த நிறுவனத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை உச்சவரம்பு (Maximum limit) கிடையாது. இத்தகைய நிறுவனங்கள் பொதுமக்களிடமிருந்து மூலதனம் பெறுவதால், நிறுவனச் சட்டம் இவைகளுக்கு அதிகமான கட்டுப்பாடுகள் விதித்துள்ளன.

(b) தனியார் நிறுவனம் (Private Company) : தனியார் நிறுவனம் என்பது நிறுவனச் சட்டத்தின் 3ஆவது பிரிவில் கூறியுள்ளபடி கீழ்க்காணும் கட்டுவரம்புகளை அதன் செயல்முறை

விதிகளில் (Articles of Association) கொண்டதாயிருக்க வேண்டும். அவற்றின் செயல்முறை விதிகள் :

(a) திட்ட அறிவிப்பு (Prospectus) வெளியிடுவதைத் தடை செய்யவேண்டும்.

(b) பங்குகள் கை மாறுவதைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும்.

(c) உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கு மேற்படாமல் அளவுபடுத்தவேண்டும். மேற்கூறிய எண்ணிக்கையை கணக்கிட, நிறுவனத்தின் பணியாளர்களும், உறுப்பினராயிருந்த கடந்தகால பணியாளர்களும் கணக்கிடப்படமாட்டார்கள். மேலும் கூட்டுப் பங்குநர்கள் ஒரு நபராகக் கணக்கிடப்படுவார்கள்.

**தனியார் நிறுவனத்தின் தனிச் சலுக்கைகள்** (Privileges of a Private Company)

(a) நிறுவனம் பதிவு செய்யப்படுவதற்குக் குறைந்தது இரண்டு உறுப்பினர்கள் இருந்தால் போதுமானது.

(b) திட்ட அறிவிப்பு (Prospectus) வெளியிடத் தேவையில்லை. திட்ட அறிவிப்பிற்குப் பதிலாக விவரப்பட்டியும் (Statement in lieu of Prospectus) தாக்கல் செய்யப்பட வேண்டியதில்லை

(c) குறைந்த அளவுப் பங்குத்தொகை பெறுவதற்கு முன்பே பங்குகளை வழங்கலாம்.

(d) நிறுவனம் பதிவானவுடன் தொழிலைத் தொடங்கலாம். தொழில் தொடங்குவதற்குரிய சான்றுச் சீட்டுப் பெற வேண்டிய தேவையில்லை.

(e) சட்ட முறையான கூட்டம் (Statutory meeting) கூட்டத் தேவையில்லை. சட்ட முறையான அறிக்கையும் (Statutory Report) பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டியதில்லை.

(f) 81-வது பிரிவின்படி, புதிதாக வழங்கும் பங்குகளை பழைய உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

(g) நலன் கொண்ட இயக்குநர், (Interested Director) இயக்குநர் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

(h) பொதுக்கூட்டத்தின் குறைவெண் வரம்பிற்கு (Quorum) இரண்டு உறுப்பினர்கள் நேரில் கலந்து கொண்டால் (Personally present) போதுமானது.

(i) நிறுவனத்திற்கு இரு இயக்குநர்கள் இருந்தால் போதும். மேலும் எல்லா இயக்குநர்களும் ஆயுட்கால இயக்குநர்களாக (Life time Directors) அமர்த்தப்படலாம். இயக்குநர்கள் தவணைமுறையில் (By rotation) பதவி விலக வேண்டியதில்லை.

**தனியார் நிறுவனம் பொது நிறுவனமாக மாறுதல்** (Conversion of a Private Company into a Public Company)

ஒரு தனியார் நிறுவனம் தனித் தீர்மானம் செய்து செயல் முறை விதிகளில் உள்ள 3ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட தடைகளை விலக்கினால், அது பொது நிறுவனமாக மாறிவிடும். அவ்வாறு மாறிய முப்பது நாட்களுக்குள், திட்ட அறிவிப்பு அல்லது திட்ட அறிவிப்பிற்குப் பதிலான விவரப்பட்டியலை பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும். நிறுவனம் கொண்ட மாறுதல் அதன் அடையாளத்தை (Identity) மாற்றுவதில்லை.

**சட்டத்தால் மாற்றப்படுதல்** (Statutory Conversion)

ஒரு தனியார் நிறுவனம், 43A பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளில், பொது நிறுவனமாகக் கருதப்படுகிறது. அப் பிரிவின்படி ஒரு தனியார் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்குத் தொகையில் 25 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையை ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவனங்கள் கொண்டிருந்தால், அது ஒரு பொது நிறுவனமாக மாறுகிறது. அவ்வாறு மாறுதலான மூன்று மாதங்களுக்குள் மேற்படி மாறுதலைப் பதிவாளருக்கு அந்த நிறுவனம் அறிக்கை அனுப்ப வேண்டும். ஆனால் 43A பிரிவில் கீழ்க்கண்ட மூன்று விலக்குகளும் குறிப்பிடப் பட்டுள்ளன. அதன்படி,

(a) ஒரு தனியார் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்குத் தொகை முழுவதையும் வேறோர் தனியார் நிறுவனம் அல்லது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் (Foreign Company) கொண்டிருந்தால் அது பொது நிறுவனமாகாது.

(b) ஒரு தனியார் நிறுவனத்தின் பங்குகளை ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் கொண்டிருப்பதோடு மேற்படி வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தனியார் நிறுவனங்களாகக் கருதப்படுமாயின் மத்திய அரசு அவ்வாறு கட்டளையிட்டால் அது பொது நிறுவனமாகாது.

(c) பங்குத்தொகை கொண்டுள்ள நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவும் தனியார் நிறுவனமாயிருப்பதோடு, அந்த நிறு

வனம் ஒவ்வொன்றிலும் வேறு நிறுவனம் பங்கு கொண்டிருக்கவும் கூடாது அவைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கு மேற்படக்கூடாது. மேற்படி விதிகளுக்குட்பட்ட நிறுவனம் அல்லது நிறுவனங்கள் ஒரு தனியார் நிறுவனத்தில் பங்கு கொண்டிருந்தால் அது பொது நிறுவனமாக மாறுது.

மேலும் 43ஆவது பிரிவின்படி அதன் மீது விதிக்கப்பட்ட தடைகளை மீறினல் அது பொது நிறுவனமாகக் கருதப்படும். ஆனல் தடைகள் மீறப்பட்டது எதிர்பாராமல் ஏற்பட்டாலும், அல்லது கவனப்பிசகினல் விளைந்ததாலும், நிறுவனம் பொது நிறுவனமாகக் கருதப்படமாட்டாது.

**பொது நிறுவனம் தனியார் நிறுவனமாக மாறுதல்** (Conversion of a Public Company into a Private Company)

ஒரு பொது நிறுவனம் தனித் தீர்மானம் செய்து, செயல் முறை விதிகளை மாற்றி, 3ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட தடைகளை விதித்து, மேற்படி மாறுதலுக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற்றதாயின், அது ஒரு தனியார் நிறுவனமாக மாறுகிறது. மேற்படி மாறுதல் அதன் அடையாளத்தை மாற்றுவதில்லை (No change of Identity).

III. உறுப்பினர்களின் பொறுப்பின் தன்மையைக்கொண்டு நிறுவனங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :

(a) வரம்புற்ற நிறுவனம் (Limited Company).

(b) வரம்பற்ற நிறுவனம் (Unlimited Company).

(c) பொறுப்புறுதி நிறுவனம் (Guarantee Company).

(a) **வரம்புற்ற நிறுவனம் :** இவ்வகையான நிறுவனம் ஒரு பொது நிறுவனமாகவோ அல்லது தனியார் நிறுவனமாகவோ இருக்கலாம். உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் ஏற்றுக் கொண்ட பங்குத் தொகையின் அளவேயாகும். ஆனல் இத்தகைய நிறுவனங்களில் இயக்குநர்களும், மேலாண்மை முகவர்களும், மேலாளர்களும் வரம்பற்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம்.

(b) **வரம்பற்ற நிறுவனம் :** இதில் உறுப்பினர்களின் பொறுப்பு வரம்பில்லாதது. இந்த நிறுவனம் பொது நிறுவனமாகவோ அல்லது தனியார் நிறுவனமாகவோ இருக்கலாம்.

மேலும் இந் நிறுவனம் பங்குத் தொகையுள்ளதாக இருக்கலாம். அல்லது பங்குத் தொகை இல்லாமலும் இருக்கலாம். இத்தகைய நிறுவனம் மீண்டும் வரம்புற்ற நிறுவனமாகப் பதிவு செய்துக் கொள்ளலாம்.

(c) பொறுப்புறுதி நிறுவனம்: இதில் உறுப்பினர்களின் பொறுப்பு அவரவர் அளித்த பொறுப்புறுதியின் அளவேயாகும். இந்த நிறுவனம் பங்குத் தொகையுள்ளதாக இருக்கலாம் அல்லது பங்குத் தொகை இல்லாமலுமிருக்கலாம். மேலும் நிறுவனம் ஒரு பொது நிறுவனமாகவோ அல்லது தனியார் நிறுவனமாகவோ இருக்கலாம்.

IV. நிறுவனங்களை அவைகளுக்குள்ள தொடர்பை கொண்டு இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

(a) கொண்ட நிறுவனம் (Holding Company).

(b) கிளை நிறுவனம் (Subsidiary Company).

(a) **கொண்ட நிறுவனம்** (Holding Company)

கொண்ட நிறுவனம் என்பது நிறுவனச் சட்டத்தில் 4ஆவது பிரிவில் வரையறை செய்யப்பட்டுள்ளது. அதன்படி கொண்ட நிறுவனம் என்பது வேறொரு நிறுவனத்தைக் கிளை நிறுவனமாகக் கொண்டதாகும். ஒரு கொண்ட நிறுவனம் அதனுடைய ஐந் தொகை குறிப்புடன் (Balance Sheet), கிளை நிறுவனத்தின் ஐந் தொகைக் குறிப்பு, ஆதாயம் இழப்பு கணக்குகள் (Profit and Loss Accounts) இயக்குநர் குழு அறிக்கை, தணிக்கையாளர் அறிக்கை, கொண்ட நிறுவனம் கிளை நிறுவனத்தில் கொண்டுள்ள நலனைப்பற்றிய முழுவிவரங்கள் முதலியனவற்றைச் சேர்த்து வழங்க வேண்டும்.

ஒரு கிளை நிறுவனம், அதன் கொண்ட நிறுவனத்தில் உறுப்பினராக முடியாது. ஆனால் 42ஆவது பிரிவில் இதற்குச் சில விலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி ஒரு கிளை நிறுவனம் தன் உறுப்பினரின் சட்டச் சார்பாளர் என்ற முறையில் கொண்ட நிறுவனத்தில் உறுப்பினராய் இருக்கலாம். மேலும் ஒரு கிளை நிறுவனம் ஒரு நம்பகர் (Trustee) என்ற முறையில் கொண்ட நிறுவனத்தில் உறுப்பினராயிருக்கலாம். ஒரு கிளை நிறுவனம் 1956ஆம் ஆண்டுச் சட்டம் வருவதற்குமுன் அதன் கொண்ட நிறுவனத்தில் உறுப்பினராயிருந்தாலும் அல்லது கிளை நிறுவனம் ஆவதற்கு முன்பே கொண்ட நிறுவனத்தில் உறுப்பினராய்

இருந்தால், மேலும் தொடர்ந்து உறுப்பினராயிருக்கலாம். ஆனால் அதன் ஓட்டு உரிமையைப் பயன்படுத்த முடியாது.

**கொண்ட நிறுவனத்தின் உரிமைகள்**

ஒரு கொண்ட நிறுவனம் தீர்மானம் செய்து அதன் சார்பாளர்களை (Representatives) நியமித்து கிளை நிறுவனத்தின் கணக்குகளைப் பார்வையிடச் செய்யலாம். மேலும் கொண்ட நிறுவனத்தின் உறுப்பினர்கள் கிளை நிறுவனத்தைப் பற்றி புலன் விசாரணை செய்யும்படி மத்திய அரசுக்கு மனுச் செய்யலாம். அவ்வாறு அமர்த்தப்பட்ட பார்வையாளர்கள் (Inspectors) அந்தக் கிளை நிறுவனத்துடன் தொடர்புடைய இதர நிறுவனங்களையும் புலன் விசாரணை செய்யலாம்.

(b) **கிளை நிறுவனம்** (Subsidiary Company) *(பி-4)*

ஒரு நிறுவனத்தின் இயக்குநர் குழுவின் அமைப்பை வேறொரு நிறுவனம் கட்டுப்பாடு செய்தால் அது கட்டுப்படுத்தும் நிறுவனத்தின் கிளை நிறுவனமாகும். ஒரு நிறுவனத்தின் ஓட்டுரிமைகளில் பாதிக்குமேல் வேறொரு நிறுவனம் பெற்றிருந்தால் அது அதன் கிளை நிறுவனமாகும். ஒரு நிறுவனத்தின் சம உரிமைப் பங்குகளில் (Equity Shares) பாதிக்கு மேலாக வேறொரு நிறுவனம் பெற்றிருந்தால் அது அதன் கிளை நிறுவனமாகும்.

ஒரு நிறுவனம் கிளை நிறுவனமா என்பதை முடிவு செய்ய, வேறொரு நிறுவனம் நம்பகர் என்ற நிலையில் (Trustee) அதன் பங்குகளைக் கொண்டிருந்தாலும், அல்லது கடனீட்டுப் பத்திரங்களுக்கு (Debentures) பிணையமாய் வழங்கப்பட்ட பொறுப்புரிமை அமைப்பு ஆவணப்படி (Debenture Trust Deed), வேறொருவர் அதன் பங்குகளையோ அதிகாரங்களையோ பெற்றிருந்தாலும் அல்லது கடன் வழங்குவதைத் தொழிலாகக் கொண்ட வேறொரு நிறுவனத்தின் சார்பாளர் (Nominee) அல்லது கிளை நிறுவனம், கடன் தொகையை பாதுகாப்பதற்காக அதன் பங்குகளையோ அல்லது அதிகாரங்களையோ பெற்றிருந்தாலும், அவைகள் கருதப்படமாட்டாது. ஆனால் வேறொரு நிறுவனத்தின் சார்பாளர் அல்லது அதன் கிளை நிறுவனத்தின் சார்பாளர் அதன் பங்குகளையோ அல்லது அதிகாரங்களையோ நம்பகர் என்ற முறையில் அல்லாமல் பெற்றிருந்தால், அந்த நிறுவனம் ஒரு கிளை நிறுவனமாகக் கொள்ளப்படும். வெளிநாட்டு நிறுவனங்கள் அவைகள் பதிவு செய்யப்பட்ட நாட்டின் சட்டப்படி கொண்ட நிறுவனமா அல்லது கிளை நிறுவனமா என்பது முடிவு செய்யப்படும்.

**V.** நிறுவனங்களை அவைகள் பதிவு செய்யப்பட்ட நாடுகளைக் கொண்டு இருவகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :

(a) வெளி நாட்டு நிறுவனம் (Foreign Company).

(b) உள்நாட்டு நிறுவனம் (Inland Company).

(a) **வெளிநாட்டு நிறுவனம் :** வெளிநாட்டில் பதிவான நிறுவனம் வெளிநாட்டு நிறுவனம் எனப்படும். வெளிநாட்டு நிறுவனம் இந்தியாவில் உள்ள அலுவலகத்தில் அதனுடையவும் அதன் கிளை நிறுவனங்களுடைய ஐந்தொகைக் குறிப்புகளும், ஆதாய இழப்பு கணக்குகளும் வைத்திருக்க வேண்டும். மேலும், அதனுடைய பெயர்ப் பலகையில் அதனுடைய பெயரையும் அது பதிவான நாட்டின் பெயரையும் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். மேற்படி விவரங்களை அதன் திட்ட அறிவிப்பிலும், கடிதங்களிலும், விலைப்பட்டிகளிலும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். உறுப்பினர்களின் பொறுப்பு வரம்புற்றதாயின் அதையும் அவைகளில் குறிப்பிட வேண்டும். வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியிடும் திட்ட அறிவிப்புகள் 603—608 பிரிவுகளைப் பின்பற்ற வேண்டும். உள்நாட்டு நிறுவனங்களைப்போலவே, வெளிநாட்டு நிறுவனங்களும் 209ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள படி கணக்குப் பதிவேடுகளை இந்தியாவில் உள்ள அதன் அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும். வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள அலுவலகங்களின் விவரங்களையும், அதன் ஐந்தொகைக் குறிப்பு ஆதாய இழப்பு கணக்குகளையும் மூன்று நகல்கள் பதிவாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும் (National Grindlays Bank Ltd.) என்பது வெளி நாட்டு நிறுவனத்திற்கு ஒரு உதாரணமாகும்.

(b) **உள்நாட்டு நிறுவனம் :** இந்தியாவில் பதிவான நிறுவனம் உள்நாட்டு நிறுவனம் எனப்படும்.

**VI.** நிறுவனங்களில் உள்ள சொந்தத்தைக் கொண்டு Ownership) அவைகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :

(a) அரசினர் நிறுவனம் (Government Company).

(b) பொது நிறுவனம் (Public Company).

(a) **அரசினர் நிறுவனம் :** அரசினர் நிறுவனம் என்பது 617ஆவது பிரிவில் வரையறை செய்யப்பட்டுள்ளது அதன்படி, ஒரு நிறுவனத்தின் பங்குகளில் 51 சதவீதத்திற்கு மேல் மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது இவ்விரு அரசுகளும் சேர்ந்து

கூட்டாகப் பெற்றிருந்தால், அந்த நிறுவனமும் அதன் கிளை நிறுவனமும் அரசினர் நிறுவனம் எனப்படும். 1960ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசினர் நிறுவனத்தில் மேலாண்மை முகவர் (Managing Agent) அமர்த்த முடியாது. இந்த நிறுவனத்தின் தணிக்கையாளர் மத்திய அரசால், தணிக்கைத்துறைத் தலைவரின் (Comptroller and Auditor-General) அறிவுரையின்படி அமர்த்தப்படுகின்ரூர். தணிக்கைத்துறைத் தலைவர் நிறுவனத்தைத் தணிக்கை செய்யும் முறைகளைக் குறிப்பிடுவதோடு, சோதனைத் தணிக்கையும் (Test Audit) செய்யலாம். தணிக்கையாளர் அறிக்கையும், அதைப்பற்றி தணிக்கைத்துறைத் தலைவர் கருத்துரைகளும் (Comments) நிறுவனத்தின் பொதுக்கூட்டத்தில் வைக்க வேண்டும். மேலும், நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையை மத்திய அரசினர் நாடாளும் மன்றத்திற்கும், மாநில அரசினர் சட்ட சபைகளுக்கும் அறிவிக்க வேண்டும்.

அரசினர் நிறுவனமும் மற்ற நிறுவனங்களைப்போல் நிறுவனச் சட்டப்படி பதிவு செய்யப்படுகிறது. ஆனால், மத்திய அரசு, அரசினர் நிறுவனத்திற்கு நிறுவனச் சட்டத்தின் சில விதிகளுக்கு விலக்கு வழங்கலாம். அவ்வாறு வழங்கப்பட்ட விதிவிலக்குகள் நாடாளும் மன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். [Modern Bakery (India) Ltd., Hindustan Teleprinters Ltd., Heavy Electricals (India) Ltd.] முதலியன அரசினர் நிறுவனங்களுக்கு உதாரணங்கள்.

பொது நிறுவனம் :— ஒரு நிறுவனத்தின் பங்குகளைப் பொது மக்கள் பெற்றிருந்தால், அது பொது நிறுவனம் எனப்படும்.

நிறுவனங்களில் உள்ள சொந்தத்தை கொண்டு (Ownership) நிறுவனங்களை வேறொரு வகையில் இருவகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :

(a) பொது நிறுவனம் (Public Company).

(b) ஒரு நபரின் நிறுவனம் (One man Company).

ஒரு நபர் நிறுவனம் :— ஒரு நிறுவனம் சட்டப்படி பொது நிறுவனமாயிருந்தாலும் அதன் பங்குகளில் மிகப் பெரும் பகுதியை ஒரு நபரே பெற்றிருந்தால் அது உண்மையில் ஒரு தனி நபரின் நிறுவனமாகும். இதற்குச் சாலச்சிறந்த எடுத்துக்காட்டு மிகப் புகழ்பெற்ற (Salomon *v.* Salomon and Co. Ltd., 1897, A.C. 22) என்ற வழக்காகும். இவ்வழக்கின் முழு விவரங்களும் அதன் விளைவுகளும் முன் படலத்தில் (Chapter) விளக்கப்பட்டுள்ளன.

இவ் வழக்கில், முதன்முதலாக, ஒரு பொது நிறுவனத்திற்குத் தேவையானது ஏழு தனி நபர்களே தவிர, அவர்கள் இரத்த பாசமுடையவர்களாக இருக்கலாம் என்று தெளிவாக்கப்பட்டது. ஒரே குடும்பத்தைச் சார்ந்த ஏழு நபர்கள் மட்டுமே உறுப்பின ராகக்கொண்ட பொது நிறுவனம் சட்டப்படி முறையானதென அவ் வழக்கில் முடிவு செய்யப்பட்டது. மேலும் ஒரு நிறுவனத் தில், தலைக்கு ஒரு பங்குபெற்ற ஆறு நபர்களும் மீதியுள்ள எல்லாப் பங்குகளையும் பெற்றுள்ள ஏழாவது நபரின் நம்பகர்களாக (Trustee) இருந்தபோதிலும் அந்த நிறுவனம் முற்றிலும் சட்டப் படி முறையானது.

ஒரு நபரின் நிறுவனம் அந்த நபரினின்று சட்டப்படி வேறு பட்ட நபராகும். அதன் விளைவாக, கிணறுவெட்ட பூதம் புறப் பட்டதைப்போல், நன்மைக்குப் பதிலாகச் சில சமயங்களில் தீமை யும் விளைவதுண்டு. இயற்றியவனுக்கே இன்னலை விளைவித்த நிறு வனத்தைக் கண்கூடாகக் கண்டோம். (Macura v. Northern Assurance Co. Ltd., 1925, A.C. 617) என்ற வழக்கில். இவ் வழக்கின் முழு விவரங்கள் முன் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

ஒரு நபர் நிறுவனம், ஒரு தனி நபர் என்ற நிலை அது நல்லெண் ணத்திலே நடப்பட்டு நன்மார்க்கத்தில் நடக்கும் வரையில்தான் நிலைக்கும். அதற்கு மாறாக அது, மோசடியில் முளைத்து முறை கேடான முறைகளில் முற்பட்டால், அதன் நிலை மாறி, துகில் கிழித்தெறியப்பட்டு அதன் உண்மை நிலை உள்ளங்கை நெல்லிக் கனியாக்கப்படும். இக்கூற்றை (Gilford Motor Co. v. Horne, 1933, 1 ch. 938) என்ற வழக்கு வெளிப்படுத்தியுள்ளது. இவ் வழக்கின் விவரங்களும் முன் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன.

VII. நிறுவனங்களில் உள்ள நலனைக் கொண்டு அவைகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :

(a) பொது இணையம் (Public Corporation).

(b) பொது நிறுவனம் (Public Company).

**பொது இணையம் :** பொது இணையம் என்பது நாடாளும் மன்றம் அல்லது மாநில சட்ட சபைகளால் குறிப்பிட்ட குறிக் கோள்களுக்காக இயற்றப்பட்ட இணையங்களாகும். அவைகளு டைய நலனில் (Welfare) நாட்டு மக்கள் அனைவரும் நலன் (Interest) கொண்டுள்ளனர். பொது மக்கள் எவரும் இதில் பங்கு நராக முடியாது. மூலதனம் முழுவதும் அரசினரால் வழங்கப்படு கிறது. இதில் இயக்குநர்கள் யாவரும் அரசினரால் நியமிக்கவும்

விலக்கவும் படுகின்றனர். இது நாட்டின் நலனுக்கே தொண்டு செய்கிறது.

இணையங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன: (a) இணையம் குழுமம் (Corporation Aggregate), (b) இணையம் தனிமம் (Corporation Sole). இணையம் குழுமம் என்பது பல நபர்கள் சேர்ந்ததாகும். ஆனால் இணையம் தனிமம் என்பது ஒரே ஒருவரைக் கொண்டதாகும். இது பொதுப் பதவியை (Public Office) குறிக்கிறது. அரசர், குடியரசுத் தலைவர், முதல் அமைச்சர், அமைச்சர், ஆளுநர், பல்கலைக் கழகத் துணைவேந்தர், சட்டக் கல்லூரி இயக்குநர், கல்லூரி முதல்வர் முதலான பதவிகள் இதற்கு உதாரணமாகும். (State Trading Corporation, Tamil Nadu Poultry Development Corporation, Tamil Nadu Finance Corporation) முதலியன இணையம் குழுமத்திற்கு உதாரணங்களாகும்.

ஒரு பொது இணையத்திற்கும் (Public Corporation) ஒரு பொது நிறுவனத்திற்கும் (Public Company) உள்ள வேறுபாடுகளை முன் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன.

VIII. நிறுவனங்கள் அவைகளின் தொழில்களைக் கொண்டு இருவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு:

(a) வியாபார நிறுவனங்கள் (Trading Companies).

(b) வியாபாரமில்லா நிறுவனங்கள் (Non-trading Companies).

**வியாபாரமில்லா நிறுவனம்:** கல்வி, அறிவியல் (Science), இலக்கியம், ஆராய்ச்சி, மதம், அறம் செய்தல், வாணிபத் தொடர்பு முதலானவைகளில் எதையேனும் பெருக்கும் நோக்கமுடன் செயலுறும் நிறுவனம் வியாபாரமில்லா நிறுவனமெனப் படும். இவைகள், வியாபார நிறுவனங்களைப் போல் 'வரம்புற்றது' என்ற வார்த்தையைப் பெயரின் இறுதியில் குறிப்பிடத் தேவையில்லை. முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது, இவைகள், அதன் உறுப்பினர்களுக்குப் பங்கு ஆதாயம் (Dividend) அளிப்பதில்லை.

42

# 2. அமைப்பு முறை ஏடு
## (Memorandum of Association)

**அமைப்பு முறை ஏடு என்றால் என்ன? :** நிறுவனச் சட்டத்தில் அமைப்பு முறை ஏட்டைக் குறித்துத் தெளிவான வரையறை (Definition) செய்யப்படவில்லை. அதைப்பற்றி நிறுவனச் சட்டத்தின் 2 (28) பிரிவில் கீழ்க்கண்டவாறு வரையறை செய்யப் பட்டுள்ளது. அமைப்பு முறை ஏடு என்றால் மூலமாய் வரையப் பட்டதும் (as originally framed) அவ்வப்போது செய்யப்பட்டுள்ள மாறுதலுடனும் விளங்கும் அமைப்பு முறை ஏடு. இந்த வரை யறை அமைப்பு முறை ஏட்டின் தன்மையையும் உபயோகத் தினையும் தெளிவுறுத்துவதாயில்லை. எனவே, நீதிமன்றங்கள் பல வழக்குகளில் வழங்கியுள்ள விளக்கங்களைக் கொண்டுதான் அதன் தன்மையையும் பயனையும் கடமையையும் ஒருவாறு உணர முடி கிறது. அவ்விளக்கங்களின்படி அமைப்புமுறை ஒரு நிறுவனத்தின் அமைப்பை (Constitution) அறிவிக்கிறது. அது நிறுவனத்தின் உயிர் நாடியும் அடிப்படையான ஆவணமுமாகும். அது, நிறுவனம் வெளி உலகோடு கொண்டுள்ள தொடர்பையும், செயல்படும் முறையினையும் வெட்ட வெளிச்சமாக்குகிறது. அதன் நோக்கம், பங்குதாரர்களும், கடன்காரர்களும் மற்றும் அதனுடன் தொடர்பு கொள்ளும் அனைவரும், நிறுவனம் எவ்வகையான செயல்களில் ஈடுபடலாம் என்பதைத் தெள்ளத்தெளிய மலை மேலிட்ட தீபம் போல் விளக்குவதாகும். மேலும், அது ஒரு பொது ஆவணமாகை யால் (Public Document) அதில் குறிப்பிடப்பட்ட யாவும் பொது மக்களுக்குக் கொள்நிலை அறிவிக்கையாகும் (Constructive Notice). சில காலம்வரை அது சற்றும் மாற்ற முடியாத பட்டயமாகக் (Unalterable Charter) கருதப்பட்டுவந்தது. ஆனால், இதனால் பல இன்னல்களும் இடஞ்சல்களும் ஏற்படவே அந்த நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறி, தற்காலத்தில், நிறுவனச் சட்டம் குறிப்பிட் டுள்ள அளவுக்கு மாறுதலைச் செய்யலாம் என்ற நிலை அடைந்

துள்ளது. இப்பவும் நிறுவனச் சட்டத்தின் 16ஆம் பிரிவு நிறுவனம் அமைப்பு முறை ஏட்டினைச் சட்டம் குறிப்பிட்ட முறைகளில் குறிப்பிட்ட அளவைத் தவிர, மாறுதல் செய்யக்கூடாது என்று கூறுவது அது மாற்றமுடியாத ஆவண மென்பதை வலியுறுத்துகிறது.

மேற்கூறிய இயல்புகளைத் தழுவி, அமைப்பு முறை ஏட்டை ஒருவாறு கீழ்க்கண்டவாறு வரையறை செய்யலாம். ''அமைப்பு முறை ஏடு என்பது நிறுவனத்தின் உயிர் நாடியும் அடிப்படையுமாகி, அதன் அமைப்பை அனைவருக்கும் அறிவித்து, பங்குதாரர்களுக்கும், கடன்காரர்களுக்கும் மற்றும் அதனுடன் தொடர்பு கொள்வோருக்கும், நிறுவனம் எல்லாச் செயல்களில் ஈடுபடலாம் என்பதை வெட்ட வெளிச்சமாக்கிப் பொதுமக்களுக்கு அதில் குறிப்பிட்டவைகளைக் கொள்நிலை அறிவிக்கையாக்கும் ஒரு பொது ஆவணமாகும்''.

அமைப்புமுறை ஏடு பற்றி நிறுவனச் சட்டத்தில் 13 to 19 பிரிவுகளில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளது.

நிறுவனச் சட்டத்தில் 13, 14, 15ஆம் பிரிவுகளில் அமைப்பு முறை ஏட்டின் வரையறையும் வகையும் தயாரிக்கும் முறையும் தெளிவாக்கப்பட்டுள்ளது. நிறுவனச் சட்டத்தின் முதல் பின் இணைவில் (First Schedule) B, C, D, E என்ற அட்டவணைகளில் (Tables) பல்வேறு நிறுவனங்களுக்கு உகந்த அமைப்பு முறை ஏடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. வரம்புற்ற (Limited), வரம்பற்ற (Unlimited) பொறுப்புறுதி (Guarantee) நிறுவனங்கள், தத்தமக்கு ஏற்றவாறு, அவைகளையே (அட்டவணைகள்) அல்லது அவைகளுக்கிணங்கிய வகையில் அமைப்புமுறை ஏட்டினை அமைத்துக் கொள்ளலாம், என்று 14ஆவது பிரிவு கூறுகிறது.

**அமைப்பு முறை ஏட்டின் பகுதிகள் (Requirements of the Memorandum)**

அமைப்பு முறை ஏடு கீழ்க்கண்ட ஆறு வகைப் பகுதிகள் (Clauses) கொண்டதாகும்.

(1) முதற்பகுதி, நிறுவனத்தின் பெயரையும், அதன் இறுதியில், வரம்புற்ற பொதுமக்கள் நிறுவனமாயின் (Public Limited Company), வரம்புற்றது (Limited) என்ற வார்த்தையையும், வரம்புற்ற தனியார் நிறுவனமாயின் (Private Limited Company), தனியார் வரம்புற்றது (Private Limited) என்ற வார்த்தைகளையும்

குறிப்பிடவேண்டும் என்று கூறுகிறது. இப் பகுதி 'பெயர்ப் பகுதி' (Name Clause) எனப்படுகிறது.

(2) இரண்டாம் பகுதி, நிறுவனக் காரியாலயத்தின் முகவரியும் (உறைவிடமும்), அது வீற்றிருக்கும மாநிலமும் (State) குறிப்பிட வேண்டும் என்று கூறுகிறது. இப்பகுதி 'பதிவு செய்யப் பட்ட அலுவலகப் பகுதி' (Registered Office Clause) எனப்படுகிறது.

(3) மூன்றுவது பகுதியில், நிறுவனத்தின் நோக்கங்களைக் குறிப்பிடவேண்டும். நோக்கங்களை இரண்டு வகையாகப் பிரித்து, முதற் பிரிவில் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களைக் குறிப்பிட வேண்டும். இரண்டாவது பிரிவில், இதர நோக்கங்களைக் குறிப்பிட வேண்டும். இந்த இதர நோக்கங்கள் முதற் பிரிவில் கூறிய நோக்கங்களுக்கு உட்படாதவையாய் இருக்க வேண்டும். இப் பகுதி நோக்கப் பகுதி (Objects Clause) எனப்படும். முக்கிய நோக்கங்களென்பது, அவைகளுக்கு உறுதுணையான நோக்கங்களும் (ancillary objects), அவைகளின் விளைவான நோக்கங்களையும் (incidental objects), அவைகளை ஊக்குவிக்கும் உற்ற நோக்கங்களையும் சேர்ந்ததாகும். மேலும், வியாபாரம் செய்யாத நிறுவனமாயின் (Non-Trading Company), அதன் நோக்கங்கள் எந்தெந்த மாநிலங்களுக்குப் பரவக் கூடியது (extend) என்று குறிப்பிடவேண்டும்.

(4) நான்காவது பகுதியில், வரம்புற்ற நிறுவனமும் (Limited Company), பொறுப்புறுதி நிறுவனமும் (Guarantee Company), அங்கத்தினர்களின் பொறுப்பு வரம்புற்றது என்று குறிப்பிடவேண்டும். மேலும், பொறுப்புறுதி நிறுவனமாயின், அது கலைக்கப்படும்போது நிறுவனத்தின் கடன்களுக்கு அங்கத்தினர் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட தொகைக்குப் பொறுப்புறுதி ஏற்கிறுர்கள் என்றும் குறிப்பிடவேண்டும்.

(5) ஐந்தாவது பகுதியில், நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற (authorised) அல்லது பதிவான (Registered) மூலதனத்தையும் (Capital) அது எவ்வளவு நிலையான, மதிப்புள்ள (Fixed Value) பங்குகளாக வகுக்கப்பட்டுள்ளது என்றும், அந்தப் பங்குகள் ஒவ்வொன்றின் மதிப்பையும் குறிப்பிட வேண்டும். இதுவே சொல்லக்கூடிய மூலதனம் (Nominal Capital) என்று குறிப்பிடப் படும்.

(6) ஆறுவது பகுதியில், கையெழுத்திட்ட ஆதரவாளர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு நிறுவனமாகப் பதிவாக்கப் படுவதற்குரிய

விருப்பத்தைத் தெரிவித்து, ஒவ்வொருவரும் தம் கையெழுத்துக்கு எதிராகத் தாம் ஏற்றுக்கொள்ளும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு ஆதரவாளரும் (Subscriber) குறைந்தது ஒரு பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

15ஆவது பிரிவில் கூறியபடி, அமைப்புமுறை ஏடு அச்சிடப் பட்டு, தொடர்ச்சியான எண்ணிக்கைகளைக் கொண்ட பத்திகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆதரவாளரும் கையெழுத் திட்டு, தம் முகவரி (Address), விவரம் (Description), தொழில் (Occupation) முதலியனவற்றைக் குறிப்பிட வேண்டும் ஒவ் வொரு கையெழுத்திற்கும் குறைந்தது ஒரு சாட்சி (Witness) சான்றுக் கையொப்பம் (attest) செய்து அவரும் தம் முகவரி, விவரம், தொழில் முதலியவற்றைக் குறிப்பிட வேண்டும்.

**அமைப்பு முறை ஏட்டிக்கும் செயல் முறை விதிகளுக்கும் உள்ள வேறுபாடுகள்** (Distinction between Memorandum and Articles of Association)

| அமைப்பு முறை ஏடு | செயல்முறை விதிகள் |
|---|---|
| 1. நிறுவனத்தின் அமைப்பை அறிவிக்கிறது (Constitution). | 1. நிறுவனம் செயல்படும் முறையைச் (Manner of functions) செப்புகிறது. |
| 2. நிறுவனத்தின் அடிப்படையும் உயிர் நாடியுமான முக்கிய ஆவணம் (Primary document). | 2. அமைப்பு முறை ஏட்டுக்கு உட்பட்ட துணை ஆவணம் (Subsidiary document). |
| 3. நிறுவனத்தின் நோக்கங்களை நவின்று வெளி வரம்பை வெளிப்படுத்துகிறது (Sets out outer limits). | 3. நிறுவனத்தின் விதிகளை விளம்பர உள் வரம்பை உணர்த்துகிறது (Inner limits). |
| 4. மாற்றுவதற்குக் கடின முறைகளைக் கையாள வேண்டும். மேலும் அதற்கு நீதிமன்றத்தின் உத்தரவு பெறவேண்டும். | 4. மாற்றுவது எளிது. சட்ட திட்டத்திற்குட்பட்ட மாறுதலைப் பங்குதாரர்கள் தனித் தீர்மானத்தால் (Special Resolution) செய்யலாம். |

| அமைப்பு முறை ஏடு | செயல் முறை விதிகள் |
|---|---|
| 5. நோக்கங்கள் நேர் பொருளாய் கனகச்சிதமாக மிகக் குறுகிய வகையில் விளக்கப்படுகின்றன (Literal and Strict very narrow interpretation). | 5. விதிகள் விரிவாகவும் தளர்வாகவும் விளக்கப்படுகின்றன (Wide and liberal interpretation). |
| 6. நோக்கங்களை மீறிய செய்கை அங்கத்தினர் அனைவரும் ஒரு முகமாக ஒப்புக்கொண்டாலும் அது சட்ட முறணனதாகும் (Ultra vires acts cannot be ratified). | 6 விதிகளை மீறினாலும் அங்கத்தினர்கள் ஆமோதித்தால் சட்டமுறையானதாகி விடும் (Ultra vires rules can be ratified). |

**அமைப்பு முறை ஏட்டை மாற்றும் வகை** (Alteration of Memorandum) :

அமைப்புமுறை ஏடு ஒரு மாற்றமுடியாத பட்டயம் (Unalterable Charter) என்று சிலகாலம் கருதப்பட்டது. ஆனால், நாளடைவில் அது பல இடைஞ்சல்களையும் இன்னல்களையும் விளைவித்ததால் அந்த நிலை பெரிதும் மாறிவிட்டது. இன்றைய நிறுவன வியலில், நிறுவனச் சட்டத்தின் 16ஆவது பிரிவின் முற்பகுதியில் அமைப்பு முறை ஏட்டினை, நிறுவனம் மாற்றமுடியாது என்று பழைய பல்லவியையே பாடினாலும், பிற்பகுதியில், அதற்கு உரிய மாறுதலை, சட்டதிட்டங்களில் குறிப்பிடப்பட்ட முறையில் குறிப்பிட்ட அளவிற்கு, நீதி மன்றத்தின் உத்தரவு பெற்றுச் செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப் பிரிவு, 13ஆவது பிரிவில் குறிப்பிடப் பட்டவை தான் அமைப்புமுறை ஏட்டின் பகுதிகளாகக் கருதப்படும் எனக் கூறுகிறது. அவைகளைத் தவிர, மற்றவை ஏதேனும் அதில் குறிப்பிடப் பட்டிருப்பின், அது அமைப்பு முறை ஏட்டினைச் சேர்ந்ததாகக் கருதப்பட மாட்டாது என்றும், மேலும் அதனைச் செயல்முறை விதியை மாற்றுவதுபோல் பங்குதாரர்கள் தங்கு தடங்கலின்றி தாராளமாய் மாற்றலாம் என்று கூறுகிறது

அமைப்பு முறை ஏட்டினை மாறுதல் செய்யும் முறையை 17, 18, 19, 21, 100, 101, 102 103, 104ஆம் பிரிவுகளில் தெளி

வாகத் தீட்டப்பட்டுள்ளது. அமைப்பு முறை ஏடு ஆறு பகுதிகள் கொண்டது. முதல் பகுதியான பெயரை மாற்றும் முறையை 21ஆம் பிரிவு கூறுகிறது. இரண்டாம் பகுதியான காரியாலய இருப்பிடத்தையும், மூன்றும் பகுதியான நோக்கங்களையும் (Objects) மாற்றும் முறைகளை 17, 18, 19ஆம் பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் பகுதியான மூலதனத்தை மாற்றும் முறையை 100, 101, 101, 103, 104ஆம் பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளது.

நான்காம் பகுதியான வரம்புற்ற பொறுப்பு, அங்கத்தினர் அனைவரும் ஆமோதித்தால்தான் மாற்ற முடியும் என்று 38ஆவது பிரிவு கூறுகிறது. எனவே, அங்கத்தினர் முதலில் ஏற்றுக் கொண்ட பங்குகளை அதிகப்படுத்தவோ, அல்லது அவர்கள் பொறுப்பை அதிகப்படுத்துவதோ ஒவ்வொருவரும் இசைவு தெரிவித்தாலன்றி, முடியாததாகும். இந்த அளவுக்கு இப் பகுதி மாற்ற முடியாத நிலையைப் பெற்றுள்ளது. ஆனால் வரம்பற்ற நிறுவனம் (Unlimited liability) தன் பொறுப்பை வரம்புற்றதாக மாற்றிக்கொள்ளலாம்.

ஆறும் பகுதியான சேர்க்கைப் பகுதி (Association Clause) ஒன்றுதான் இன்றும் மாற்றமுடியாத நிலையைப் பெற்றுள்ளது. மற்றப் பகுதிகளை மேற்கூறியபடி மாறுதல் செய்ய நிறுவனச் சட்டம் அனுமதித்துள்ளது.

இது தவிர, 404ஆம் பிரிவில், நீதிமன்றம். 397, 398ஆம் பிரிவுகளின்படி அமைப்பு முறை ஏட்டுக்கு மாறுதல் செய்தால், அம் மாறுதல் நிறுவனமே செய்ததைப் போன்றதாகும் என்று கூறுகிறது.

இப்போது அமைப்பு முறை ஏட்டின் ஒவ்வொரு பகுதியையும் மாறுதல் செய்யும் வகையை விரிவாகக் கவனிப்போம்.

**(1) நிறுவனத்தின் பெயரை மாற்றும் முறை :** இதைப் பற்றி 21ஆவது பிரிவில் தெளிவாக்கப்பட்டுள்ளது. அதில், ஒரு நிறுவனம் மத்திய அரசின் ஒப்புதலை எழுத்துமூலம் பெற்று, தனிமுறை தீர்மானத்தால் (Special resolution) செய்து தன் பெயரை மாற்றிக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**பெயரைப் பற்றிய இதர விதிகள் :** 20ஆவது பிரிவில், மத்திய அரசின் கருத்தில் ஒவ்வாதது (Undesirable) என்று கருதப்படும் பெயரால் எந்த நிறுவனமும் பதிவு செய்யப்படமாட்டாது

என்றும், ஒரு பெயர், வெறொரு உள்ள நிறுவனத்தின் (Existing Company) பெயரானாலும் அல்லது அதனை மிகவும் ஒத்து இருந்தாலும் (Nearly reservable) அது ஒவ்வாத பெயராகக் (Undesirable name) கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு நிறுவனம் தெரியாமலோ அல்லது வேறு விதமாகவோ, உள்ள நிறுவனத்தின் (Existing Company) பெயரையோ அல்லது அதனை ஒத்த பெயரையோ கொண்டு அல்லது புதிதாகக் கொண்டு பதிவு செய்யப்பட்டால், அது மத்திய அரசின் ஒப்புதலை முன்னதாகப்பெற்று, சாதாரணத் தீர்மானத்தால் (Ordinary resolution) அப்பெயரை மாற்றிக் கொள்ளலாம். ஆனால், அந்த நிறுவனத்தை மத்திய அரசே, அது பதிவு செய்யப்பட்ட, அல்லது நிறுவனச் சட்டம் செயல்படத் தொடங்கிய பன்னிரண்டு மாதங்களுக்குள் அவ்வாறு உத்தரவிட்டால், அது கட்டாயமாக, மத்திய அரசின் ஒப்புதலை முன்னதாகப் பெற்று, சாதாரணத் தீர்மானத்தால் (Ordinary resolution) அப்பெயரை மாற்ற வேண்டும். 23ஆவது பிரிவில், ஒரு நிறுவனம் தன் பெயரை 21, 22ஆம் பிரிவுகளில் கூறியபடி மாற்றினால், பதிவாளர் அப்புதிய பெயரைப் பதிவுப் புத்தகங்களில் பதிவு செய்து மறுபடியும் புதியதாகப் புதிய பெயரில் பதிவான சான்றுச்சீட்டு (Certificate of Incorporation) வழங்க வேண்டும். மேலும், அமைப்பு முறை ஏட்டிலும் (Memorandum) தகுந்த மாறுதலைக் குறிப்பிட வேண்டும் என்றும், மேலும், பெயர் மாற்றம், நிறுவனத்தின் உரிமைகளையும் கடமைகளையும் பாதிக்காது என்றும், நிறுவனத்தின் பெயரால் தொடர்ந்த அல்லது அதன் பேரில் தொடரப்பட்ட சட்டமுறையான நடவடிக்கைகளைச் (Legal Proceedings) குறைவுள்ளதாகச் செய்யாது (render defective) என்றும் கூறப்பட்டுள்ளது.

24ஆவது பிரிவில் ஒரு நிறுவனம், சட்டம் செயல்படும் முன்னால் தனியார் நிறுவனமாயின் (Private Limited Co.) பதிவாளர், அதன் பெயரில் தனியார் (Private) என்ற வார்த்தையை, வரம்புற்றது (Limited) என்ற வார்த்தை முன்னால் குறிப்பிட்டு, அதற்கான மாறுதலைப் பதிவான சான்றுச் சீட்டிலும், அமைப்பு முறை ஏட்டிலும் குறிப்பிட வேண்டுமென்றும், அத்தகைய பெயர் மாறுதல் அதன் உரிமைகளையும், கடமைகளையும், சட்டமுறையான நடவடிக்கைகளையும் பாதிக்காது என்றும் கூறப்பட்டுள்ளது.

25ஆவது பிரிவில் சிலவகையான நிறுவனங்கள் வரம்புற்றது (Limited) என்ற வார்த்தையைத் தம் பெயரோடு இணைக்கப்படாமல் பதிவாவதற்குரிய சூழ்நிலைகளைக் கூறுகின்றன. ஒரு நிறுவனம், வாணிபம் (Commerce), கலை (Art), அறிவியல் (Science),

சமயம், அறம் முதலான துறைகளை அல்லது அவை போன்ற வேறு உபயோகமுள்ள துறைகளைப் பெருக்குவதற்குத் தொடங்குவதாயும், அதன் வருமானம் முழுமையும் மேற்படி துறைகளைப் பெருக்கப் பயன்படுத்துவதாகவும் அதிலிருந்து பங்கு ஆதாயம் (Dividend) கொடுப்பதைத் தடை செய்வதையும் அரசினர் அறிந்து மனம் இசைவு பெற்றால், மேற்படி நிறுவனம் தன் பெயரோடு வரம்புற்றது (Limited) அல்லது தனியார் வரம்புற்றது (Private Limited) என்ற வார்த்தைகள் இணைக்கப்படாமல், ஒரு வரம்புற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படும். அவ்வாறு மேற்படி நிறுவனம் பதிவு செய்யப்படின், அது வரம்புற்ற நிறுவனத்தின் எல்லா உரிமைகளையும் பெறுவதோடு, 25ஆவது பிரிவில் குறிப்பிட்ட அளவிற்கு அதன் கடமைகளுக்கும் உட்பட்டதாகும்.

அவ்விதமே ஒரு நிறுவனம் மேற்படி துறைகளைப் பெருக்கும் நோக்கமுடையதாயும், அதன் வருமானம் மேற்படி முறையில் பயன்படுவதாயும் அறிந்து மன இசைவு பெற்றால், மேற்படி நிறுவனம் தன் பெயருடன் இணைந்துள்ள வரம்புற்றது, தனியார் வரம்புற்றது என்ற வார்த்தைகளைத் தனிமுறை தீர்மானத்தால் (Special Resolution) தம் பெயரிலிருந்து நீக்க அரசினர் அனுமதி அளிக்கப்படும். மேற்படி பெயர் மாறுதல், அதன் உரிமைகளையும் கடமைகளையும், சட்டமுறை நடவடிக்கைகளையும் பாதிக்காது.

ஒரு கூட்டாண்மை நிறுமம் (Partnership Firm) இந்த நிறுவனத்தில் அங்கத்தினராகலாம். ஆனால், கூட்டாண்மை கலைக்கப்படின் (Dissolution of Firms) அது அங்கத்தினராய் இருக்க முடியாது.

மத்திய அரசு குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்கும் (Conditions) விதிகளுக்கும் (Regulations) கட்டுப்படுத்தித் தம் அனுமதியை அளிக்கலாம் மேலும் அந்தக் கட்டுப்பாடுகளையும் விதிகளையும் அமைப்பு முறை ஏட்டிலும், செயல்முறை விதிகளிலும் குறிப்பிடும்படி கட்டளையிடலாம்.

மேற்கண்ட வகையில் அனுமதி பெற்ற நிறுவனம் தன் பெயருடன் வரம்புற்றது (Limited) அல்லது தனியார் வரம்புற்றது (Private Limited) என்ற வார்த்தை இணைத்துக் குறிப்பிடத் தேவையில்லை, செயல்முறை விதிகளும் அதனை வலிபுறுத்தாமலிருந்தால். மேலும் மத்திய அரசினரால் குறிப்பிடப்பட்ட நிறுவனச் சட்டத்தின் பிரிவுகள் அந்த நிறுவனத்தைப் பாதிக்காது.

மத்திய அரசினர் அனுமதியை எந்த நேரமும் ரத்து (revoke) செய்யலாம். அது அவ்வாறு செய்தவுடன், பதிவாளர் உடனே அதன் பெயருடன், வரம்புற்றது, தனியார் வரம்புற்றது என்ற வார்த்தைகளை இணைத்துக் குறிப்பிடவேண்டும். மேலும், மத்திய அரசினரால் வழங்கப்பட்ட உரிமைகளை அந்த நிறுவனம் இழக்கும். ஆனால், மத்திய அரசு அவ்வாறு அனுமதியை ரத்து செய்யுமுன், அவ்வெண்ணத்தை அந்த நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்து, அதற்கு நேரில் விண்ணப்பித்துக் கொள்ளத்தக்க தருணமும் தரவேண்டும். இத்தகைய நிறுவனம் அமைப்பு முறை ஏட்டில் குறிப்பிட்ட நோக்கங்களை மத்திய அரசினருடைய முன் ஒப்புதல் பெறாமல் மாற்றக்கூடாது. மீறி மாற்றினால் அனுமதி ரத்து செய்யப்படும்.

நிறுவனத்தின் அமைப்பு முறை ஏட்டினை 25ஆவது பிரிவில் கூறியுள்ள வேறு நோக்கங்களைப் பின்பற்ற, மாற்றுவதற்கு, 17ஆவது பிரிவில் கூறியுள்ள விதிகளோடு 25ஆவது பிரிவில் கூறியுள்ள முறைகளையும் பின்பற்ற வேண்டும்.

ஒரு வாணிபச் சங்கத்திற்கு (Commercial Association) இந்தப் பிரிவின்படி அளிக்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டால், அது, தன் பெயரை, மேற்கூறிய வார்த்தைகள் இல்லாத ஒரு பெயராக, மூன்று மாதத்திற்குள், மாற்றிக் கொள்ள வேண்டும். தவறினால் தண்டனைக்குள்ளாகும்.

2. காரியாலய இருப்பிடத்தை மாற்றுதல் (Change of place of Registered office) இதைப் பற்றி 17, 146ஆம் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளது.

146ஆவது பிரிவில் நிறுவனம் அதன் காரியாலயத்தின் இருப்பிடம் பெற்றிருப்பதோடு. அதனைப் பதிவாளருக்குப் பதிவான முப்பது நாட்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்றும், அதன் பிறகு அதை ஒவ்வொரு முறை மாற்றும் போதும் பதிவாளருக்கு 30 நாட்களுக்குள் அறிவிக்க வேண்டும். ஆனால், காரியாலயம் அது உள்ள நகர் (City) பட்டணம் (town), கிராம எல்லைக்கு அப்பால் மாற்றப்படுமாயின் அதைத் தனி முறைத் தீர்மானம் (Special resolution) கொண்டு தான் செய்ய முடியும்.

நிறுவனம் காரியாலயத்தை ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு மாற்றுவதைத் தனி முறைத் தீர்மானம் கொண்டு தான் செய்யவேண்டும் என்றும், அம் மாறுதல் நீதிமன்றம் உறுதிப்படுத்திய பின்னர்தான் முடிவானதாகும் என்றும் 17ஆவது

பிரிவில் கூறப்படுகிறது. மேலும், அம் மாறுதலுக்குரிய உத்தரவின் உண்மை யொப்பு நகலை (Certified copy) அது இருந்த மாநிலத்தின் பதிவாளருக்கும் அது போகும் மாநிலத்தின் பதிவாளருக்கும் தாக்கல் செய்யவேண்டும். இது தவிர, 17ஆவது பிரிவில் கூறிய இதர விதிகளையும் பின்பற்ற வேண்டும். அவ் விதிகளை, நோக்கங்களை (Objects) மாற்றும் முறையில் விரிவாக விளக்கப் பட்டுள்ளன.

3. **நோக்கங்கள் மாற்றும் முறை** (Change of objects)

நிறுவனத்தின் நோக்கங்களை, கீழ்க்கண்டவைகளை, செய்வதற்கு உகந்ததாக உள்ள அளவுக்கு மட்டுமே மாறுதல் செய்யலாம் என்று நிறுவனச் சட்டம் மிகத் திட்டவட்டமாகக் கூறுகிறது. அவை பின்வருமாறு :

(1) வியாபாரத்தை, அதிகச் சிக்கனமாகவும், அதிகத் திறமையாகவும் செய்வது.

(2) புதியனவும், அபிவிருத்தியான முறைகளில், முக்கிய நோக்கத்தை நிறைவேற்றுவது.

(3) வியாபாரம் பரவியுள்ள இடத்தை மேலும் பரப்புவது அல்லது அதனை மாற்றுவது.

(4) வியாபாரத்தை எளிதாகவும், இலாபகரமாகவும் நடத்துவதற்குரிய எந்த வியாபாரத்தையும் மேற்கொள்வது.

(5) அமைப்பு முறை ஏட்டினில் குறிப்பிட்ட நோக்கங்களில் எதையும் கட்டுப்படுத்துவது அல்லது விட்டுவிடுவது.

(6) மேற்கொண்ட பணிகளில் (undertakings) ஒரு பகுதியையோ அல்லது முழுவதையும் விற்பது அல்லது கழித்து விடுவது (dispose of).

(7) வேறொரு நிறுவனத்துடன் இணைவது (Amalgamate).

மாறுதல்கள், நீதிமன்றத்திற்கு மனு செய்யப்பட்டு அதன் மீது நீதி மன்றம் உறுதி செய்யும் அளவுக்குத்தான் முடிவானதாகும். மாறுதல்களை உறுதிப்படுத்துவதற்கு முன்பு, கடனீட்டுப் பத்திரம் பெற்றவர்களுக்கும் (Debenture holders) கடன்காரர்களுக்கும், நிறுவனத்தில் நலன் உள்ள (interested) இதர நபர்களுக்கும் மாறுதல்களைப் பற்றிய அறிக்கையை அளித்தாகி விட்டது என்றும், அம் மாறுதல்களை மறுப்பதற்கு உரிமையுடைய ஒவ்வொரு நபரும், அவைகளுக்கு இசைந்தார் என்றோ அல்லது அவர் கடனைக் கொடுத்தாயிற்று என்றோ அல்லது அவர் கடனுக்குப் போதிய பிணையம் (Security) வழங்கப்பட்டுள்ளது

என்றே நீதிமன்றம் மன நிறைவு பெற வேண்டும். ஆனால், தகுந்த தனிமுறைக் காரணங்கள் (Special reasons) இருப்பின், நீதி மன்றம் குறிப்பிட்ட நபர்களுக்கு, அறிக்கை அளிப்பதைத் தவிர்க்கலாம். நீதிமன்றம் மனுவைப் பற்றிய அறிக்கையைப், பதிவாளருக்கும் வழங்கச் செய்து அவருடைய மறுப்புகளையும், கருத்துகளையும் கூறுவதற்குத் தக்க தருணம் தரவேண்டும். உறுதி செய்வதற்கும் பங்குதாரர்கள், கடன்காரர்கள் இதர நபர்கள் ஆகிய அனைவருடைய நலன்களையும், உரிமைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நீதி மன்றம் மாறுதல்கள் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியை மட்டும் குறிப்பிட்ட கட்டு திட்டங்களின் (terms of conditions) பேரில் உறுதி செய்யலாம்.

நீதி மன்றம் உத்திரவு செய்த தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள், உத்திரவின் உண்மை யொப்பு நகலையும் மாற்றப்பட்ட அமைப்பு முறை ஏட்டின் அச்சுப் பிரதியையும் பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும். பதிவாளர் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குள் பதிவுச் சீட்டு வழங்கவேண்டும். பதிவுச் சீட்டு வழங்கப்பட்ட தேதியிலிருந்து தான் மாறுதல் நடைமுறையாகும் (takes effect). மேலும், அப் பதிவுச் சீட்டு, மாறுதல்களைச் செய்வதற்குரிய எல்லா முறைகளும் சட்ட முறைப்படி செய்யப்பட்டன என்பதற்கு ஒரு முடிவான சான்றாகும்.

உண்மை யொப்புநகலை மூன்று மாதத்திற்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்யாவிட்டால், நீதிமன்றம் மேலும் சரியெனத் தோன்றும் காலம் வரை தவணை வழங்கலாம். உண்மை யொப்பு நகலைக் குறிப்பிட்ட கலத்திற்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்யா விட்டால் மாறுதல்களுக்காக மேற்கொண்ட எல்லா நடவடிக்கைகளும் செல்லாததாகும். குறிப்பிட்ட காலம் கடந்தபிறகும், ஒரு மாதத்திற்குள் தகுந்த காரணம் காட்டினால், நீதி மன்றம் உத்திரவைப் புதுப்பிக்கலாம்.

மேற் குறிப்பிட்ட நோக்கங்களின் வரம்புகளைக் கீழ்க்கண்ட வழக்குகளின் வாயிலாக விளக்கம் காணலாம்.

1. [In re Scientific Poultry Breeding Association (1933, Ch. 277)].

மேற்படி வழக்கில், நிறுவனத்தின் அமைப்பு முறை ஏடு அங்கத்தினர்களுக்கு ஊதியம் தருவதையும், இலாபத்தை அவர்களுக்குப் பங்கிடுவதையும் தடைசெய்தது. ஆனால், வியாபாரமும் அங்கத்தினர் தொகையும் மிகவும் பெருகவே, ஆளுநர்

களுக்கு, ஊதியம் பெருமல் உழைப்பது கடினமாயிற்று. மேற்படி தடையை அமைப்புமுறை ஏட்டிலிருந்து விலகும்படி மாறுதல் கோரப்பட்ட மனுவை, நீதிமன்றம் ஆமோதித்து, மேற்படி மாறுதல் நிறுவனம் அதிகத் திறமையுடன் செயல்பட உகந்ததாக உள்ளது என்று கூறியது.

2. [In re Indian Mechanical Gold Extracting Co. (1891, 3 ch. 538)].

இவ்வழக்கில், இங்கிலாந்தில் பதிவான நிறுவனம் இந்தியாவில் தங்கத்தைப் பிரித்து எடுக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. அது வியாபாரத்தை வேறு இடங்களுக்குப் பரப்புவதற்காக அமைப்புமுறை ஏட்டை மாறுதல் செய்தது. நீதிமன்றம் அதை ஆமோதித்து உறுதி செய்தது.

3. [In re Patent Tyre Co. (1923, 2 ch.222)].

ஒரு டயர் (tyre) நிறுவனம், அந்தத் தொழிலோடு. வங்கித் தொழிலையும் (Banking Business) மேற்கொள்ளும் வகையில் அமைப்பு முறை ஏட்டினை மாறுதல் செய்தது. அந்தத் தொழில் நிறுவனம் எளிதாகவும், இலாபகரமாகவும் நிறுவனத்தின் தொழிலோடு இணைத்து நடத்தக்கூடியதாக இருந்தமையால், நீதிமன்றம் அதை ஆமோதித்து உறுதி செய்தது.

4 ஆனல், மேற்கொள்ளும் வியாபாரம், செய்து கொண்டிருக்கிற தொழிலுக்கு இடஞ்சலையோ அல்லது இன்னலையோ விளைவிக்குமாயின், நீதிமன்றம் அதனை அனுமதிக்காது. இதனைக் கீழ்க்கண்ட வழக்குத் தெளிவாக்குகிறது.

[In re Cyclists' Touring Club (1907, 1 ch. 269)].

இரு சக்கரவண்டி, முச்சக்கர வண்டிகளை உபயோகிப்பதைப் பெருக்கி, பேணிப் பாதுகாக்கும் நோக்கமுடன் தோன்றிய ஒரு சங்கம், விரைவுவண்டி (Motor cars) உபயோகிப்பதையும் பெருக்கும் நோக்கத்தையும் மேற் கொள்ளும் வகையில் அமைப்பு முறை ஏட்டினை மாற்றம் செய்ய முயன்றது. ஆனல், இரு நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாய் இருந்தமையால் நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்தது.

**நோக்கங்களின் பயன்** (Purpose of objects clause)

நோக்கங்கள் மூன்று விதமான பயன்களைத் தருகின்றன முதலாவதாக, நிறுவனம் பங்குத் தொகையைக் குறிப்பிட்ட வியாபாரங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதைத் தெளிவாக்குகிறது. அதாவது தங்கச் சுரங்க வேலை செய்வதற்குத்

தொடங்கிய நிறுவனம் மீன் வியாபாரத்தில் இறங்காது என்று உறுதிப்படுத்துகிறது. இரண்டாவதாக, நிறுவனம் குறிப்பிட்ட வியாபாரங்களைத் தவிர, நிலையற்ற வியாபாரங்களில் (Speculative business) ஈடுபட்டு மூலதனத்தை இழக்காத வகையில் கடன்காரர்களுக்கும், கடனீட்டுப் பத்திரக்காரர்களுக்கும் (Debentures holders) பாதுகாப்பு அளிக்கிறது. மூன்றாவதாக, நிறுவனம் குறிப்பிட்ட வியாபாரங்களைத் தவிர இதர வியாபாரங்களைச் செய்வதைத் தடைசெய்கிறது. எனவே, நோக்கங்கள் இருவகையான விளைவுகளைக் கொண்டன. ஒன்று நேர்முறையான விளைவு (Positive aspect); அதாவது நிறுவனம் செய்யத் தக்கவைகளைக் காட்டுவது. மற்றொன்று, எதிர்முறையான விளைவு (Negative aspect); அதாவது நிறுவனம் செய்யத் தகாதவைகளை நிர்ணயிப்பது.

**நோக்கங்களின் தன்மைகள்** (Nature of Objects)

ஆதரவாளர்கள் (Subscribers) விரும்புகின்ற எல்லா நோக்கங்களையும் அமைப்பு முறை ஏட்டில் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அவைகள் சட்ட விரோதமாகவோ (Illegal), சட்ட திட்டங்களுக்கு ஒவ்வாதவையாகவோ (unlawfull) நாட்டின் பொதுக் கொள்கைக்கு (Opposed to Public policy) முரணானதாகவோ, நிறுவனச் சட்டத்திற்கு மாறானதாகவோ இருக்கக் கூடாது. நிறுவனச் சட்டத்தின் 77ஆவது பிரிவு, ஒரு நிறுவனம் அதன் பங்குகளை வாங்குவதைத் தடைசெய்கிறது. எனவே, நிறுவனத்தின் அமைப்பு முறை ஏடு நிறுவனத்திற்கு அதன் பங்குகளை வாங்கும் உரிமை வழங்கினால் அது செல்லாததாகும். இந்த விதியை ட்ரிவோர் v. வொய்ட் வொர்த் [Trevor v. Whit worth (12, A. C. 409)] என்ற வழக்கு வலியுறுத்துகிறது. இவ்விதமே ஒரு நிறுவனம் திருவுளச் சீட்டுத் தேர்வு (Lottery) நடத்தக் கூடாது என்று ['Ex parte More' 1931 2. K.B. 1971)]. வழக்கில் கூறப்பட்டது.

நிறுவனம் அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவி செய்வது முறையா என்பது தெளிவாய் இல்லை. [In re Iron and Steel Co. (1957 A.I.R. 234)]. இது முறையானது என்று குறிப்பிட்டது. மேலும் நிறுவனச் சட்டத் திருத்தம் செய்யப்பட்டு, நிதி உதவுவதைக் குறிப்பிட்ட அளவுக்கு அனுமதித்தது நடைமுறையில் அது பல தீமைகளுக்கு ஏதுவாய் இருப்பதால் மறுபடியும் 1969-ல் நிறுவனச் சட்டம் திருத்தப்பட்டு, நிறுவனம் அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவி செய்யக்கூடாது என்று தடைசெய்துள்ளது.

ஆதரவாளர்கள், நோக்கங்களை வெகு விரிவாகவோ அல்லது குறுகலாகவோ அமைத்துக் கொள்ளலாம். மிக முக்கிய நோக்கங்

களைக் குறிப்பிட்டால் போதும் என்றும் அவைகளின் விளைவான (incidental) அல்லது உறுதுணையான (furtherence) அல்லது அவைகளை ஊக்குவிக்கும் (Conducive) நோக்கங்களை உட்கிடையாகக் கொள்ளலாம் என்றும் ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால், பாமர் (Palmer) என்ற ஆங்கிலச் சட்ட வல்லுநர், நிறுவனத்தை இயக்குபவர்கள் சாதாரண மக்களே, சட்ட நிபுணர்கள் அல்ல. ஆகையால் நோக்கங்கள் யாவும் எள்ளளவும் ஐயத்திற்கிடமின்றி வெட்ட வெளிச்சமாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்று கூறுகிறார்.

**நோக்கங்களை விளக்குதற்குரிய விதிகள்** (Rules of interpretation of the objects)

பத்திரங்களை (Written documents) விளக்குவதற்குரிய சாதாரண விதிகளே நிறுவனத்தின் நோக்கங்களை விளக்குவதற்கும் பயன்படுத்தப் படுகின்றன. முதலாவதாக, நபர்களால் (partys) வெளிப்படுத்தப்பட்ட எண்ணங்களைப் பத்திரத்தில் வாசகம் முழுவதையும் கொண்டுதான் நிர்ணயிக்கப்படும் இரண்டாவதாக, சாதாரண வார்த்தைகளுக்குச் (Ordinary words) சாதாரண பொருளும் (Ordinary meaning) தனித்துறைக்குரிய வார்த்தைகளுக்கு (Technical words) அத்துறைக்குரிய பொருளும் (Technical meaning) வழங்கப்படும். மூன்றாவதாக இதர நோக்கங்கள் (other objects) என்ற வார்த்தைகள், அதனை ஒத்த நோக்கங்கள் (ejusdem generis ie. of the same kind) என்று விளக்கப்படும். நோக்கங்களை நேர் பொருளாய் (literal) கனக்கச்சிதமாக (very strict) மிகவும் குறுகிய வகையில் (very narrow) விளக்கப்படுகின்றன.

கீழ்க்காணும் வழக்குகள் நிறுவனத்தின் நோக்கங்களை விளக்கப்படும் வகையினை வெட்ட வெளிச்சமாக்குகின்றன:

(1) ஸ்டீபன்ஸ் v. மைசூர் தங்கச் சுரங்கக் கம்பெனி [Stephens v. Mysore Reefs Mining Co. (1902) 1 Ch. 745].

மைசூரிலும் (Mysore), வேறிடத்திலும் (elsewhere) தங்கச் சுரங்க வேலை செய்வது என்று, ஒரு நிறுவனத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. அந்த நிறுவனம், வெளிநாட்டில் உள்ள கோல்டு கோஸ்ட் (Gold Coast) என்னும் இடத்தில் தங்கச் சுரங்க வேலை செய்ய முயற்சி செய்தது. ஆனால், நீதிமன்றம், நிறுவனத்தின் முக்கிய நோக்கம் (Main object) இந்தியாவிற்குள் சுரங்க வேலை செய்வதாகையால், 'வேறிடம்' (elswhere) என்பது இந்தியாவிற்குள் இருக்கின்ற இடத்தைக் குறிக்கின்றது என்றும், ஆகை

யால், நிறுவனம் வெளி நாட்டில் அந்தத் தொழிலைச் செய்ய முடியாது என்றும் மிகக் குறுகிய (narrow) விளக்கம் தந்தது.

ஆனால் மேற்கூறிய குறுகிய விளக்கத்தைத் தவிர்ப்பதற்கு ஒரு புதிய வழி கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வழியைக் கீழ்க்கண்ட வழக்குத் தெளிவாக்குகிறது.

காட்மேன் v ப்ரோஹாம் [Cotman v. Browgham (1918) A.C. 514.]

இவ் வழக்கில், அமைப்பு முறை ஏட்டில் கூறப்பட்ட நோக்கங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறானவை என்று குறிப்பிடப்பட்டன. இதன் விளைவை ஆராய்ந்த இங்கிலாந்து நாட்டின் சீமான்கள் சபை (House of Lords), அவ்வாறு நோக்கங்களை மேற்கொள்வது முற்றிலும் சட்ட முறையானது என்று கூறியது.

**வரம்பு மீறல் கோட்பாடு** (Doctrine of ultra vires)

நிறுவனங்கள் முதற்கண் தோன்றிய காலத்தில், அவைகள் மிகப் பெரிய கூட்டாண்மைகளைப் போல் (Large Partnerships) இயங்கின. அப்போது அங்கத்தினர்களின் பொறுப்பு வரம்பற்றதாய் இருந்தது (unlimited). அக்காலத்தில் பொறுப்பை அளவுபடுத்தக் கூடும் என்பதை மக்கள் உணரவில்லை. ஆனால், பின்னர் அங்கத்தினர்களின் பொறுப்பை அளவுபடுத்தி வரம்புற்ற நிறுவனங்கள் (Limited Companies) பெருவாரியாக தோன்ற முற்பட்டதும், இயக்குநரால் இயக்கப்படும் செயற்கை நபரான நிறுவனம், மனம் போன்றவாறு, பொறுப்பற்ற வகையில் இயக்கப்பட்டு, அங்கத்தினர்களுக்கும், பொது மக்களுக்கும் இன்னலை விளைவிக்காதிருக்கும் பொருட்டு, நிறுவனங்கள் அமைப்பு முறை ஏட்டில் குறிக்கப்பட்ட நோக்கங்களை மீறி எந்தச் செயலும் செய்யக் கூடாது என்றும், அவைகளை எவ்வளவு மீறினாலும் அச் செயல்கள் முற்றிலும் செல்லாதவையாகும் என்றும், அவைகள் நிறுவனத்தைக் கடுகளவும் கட்டுப்படுத்தாது என்றும் ஒரு மிகச் சீரிய கொள்கையை நீதிமன்றங்கள், வெகு ஆழ்ந்த அறிவுடன் உருவாக்கின. இந்தக் கொள்கைக்கு வரம்பு மீறல் கோட்பாடு (Doctrine of ultra vires) என்ற பெயர் வழங்கலாயிற்று.

நிறுவனங்கள் மூன்று வகைகளில் தோன்றுகின்றன. முதல் வகை. அரசினர் உரிமை பெற்றது (Chartered Companies). இரண்டாவது வகை, சட்டங்களால் உருவாக்கப்படுவன (Statutory Companies). மூன்றாவது வகை, நிறுவனச் சட்டப்படி பதிவாக்கப்படுவன (Registered Companies). இவைகளில் முதல் வகையை

நீக்கி, பின்னிரண்டு வகைகளுக்கும் வரம்புமீறுதல் கோட்பாட்டை (Doctrine of ultra vires) வெகு கடுமையாகப் பயன்படுத்தி அவைகளின் செயல்கள் சட்ட முறையானவையா என்பதை நீதி மன்றங்கள் முடிவு செய்தன. எனவே, முதல் வகையைச் சேர்ந்த நிறுவனம், அதாவது அரசினர் உரிமை பெற்றது, பட்டயத்தில் (Charter) குறிப்பிட்ட நோக்கங்களை மீறினாலும், அதன்செயல்கள் யாவும் முற்றிலும் செல்லும் (Perfectly valid). நிறுவனம் அச் செயல்களுக்குக் கட்டுப்பட்டதாகும். ஆனால் நோக்கங்களை மீறியதற்காக அதற்கு வழங்கப்பட்ட பட்டயத்தை (உரிமையை) (Charter) இழக்கும். இத்தகைய நிறுவனம் இங்கிலாந்து நாட்டில்தான் இயங்குகின்றன. இந்தியாவில் இத்தகைய நிறுவனங்கள் கிடையாது. எனவே, சட்டம் உருவாக்கிய நிறுவனமும் (Statutory Company), நிறுவனச் சட்டப்படி பதிவான நிறுவனமும் (Registered Company) வரம்பு மீறுதல் கோட்பாட்டிற்கு (Doctrine of ultra vires) உட்படுகின்றன.

**வரம்பு மீறுதல் கோட்பாடு செயல்படும் வகை** (Operation of the Doctrine of ultra vires)

இக் கோட்பாட்டை விளக்கிய வகையில் மிகவும் புகழ்பெற்ற வழக்கு ஆஸ்பரி ரயில்வே காரேஜ் அண்ட் ஐயர்ன் கம்பெனி லிமிடெட் *v.* ரிச்சி [Ashbury Railway Carriage and Iron Co. Ltd. *v.* Riche, (1875) L. R. 7. H. C. 653] என்பதாகும். இவ் வழக்கில், ஒரு நிறுவனம் புகைவண்டிக்குரிய பிரயாணிகள் வண்டிகள், சாமான் வண்டிகள் (Railway Carriages and Wagons), மற்றும் இதர புகை வண்டி பாகங்கள் (Plants and rolling stocks) உற்பத்தி செய்து விற்பது, வாடகைக்கு விடுவது, இயந்திரப் பொறியியலும், பொதுப்படை ஒப்பந்தங்கள் முதலான (Mechanical Engineer and General Contractors) வேலை செய்வது மான நோக்கம் கொண்டிருந்தது. இந்த நிறுவனம் ரிச்சி (Riche) என்பவருக்கு பெல்ஜியம் நாட்டில் இருப்புப்பாதை அமைக்கப் பொருள் உதவி செய்ய ஒப்பந்தம் செய்த பிறகு அதை நிறை வேற்ற மறுத்தது. இதனால் ரிச்சி ஒப்பந்தம் மீறியதாகக் கூறி வழக்குத் தொடுத்தார். ஆனால் நிறுவனம், அத்தகைய ஒப்பந்தம் அதன் வரம்பிற்கு அப்பாற்பட்டதாகையால் அது செல்லாதது என்றும், அதனைக் கட்டுப்படுத்தாது என்றும் முறையிட்டது. அதை மறுத்து நிறுவனம் எல்லாவித இயந்திரப் பொறியியல் பொதுப்படை ஒப்பந்தங்கள் செய்யலாமென எதிர்முறையீடு எழுந்தது. இரு தரப்பினர் முழக்கங்களை ஆழ்ந்து ஆராய்ந்து நிறுவனம் எல்லாவித ஒப்பந்தங்களையும் மேற்கொள்ள முடியாது என்றும், அது புகைவண்டி பாகங்கள் சம்பந்தப்பட்ட பொதுப்

படையான ஒப்பந்தங்கள் தான் செய்யலாம் என்றும் முடிவு செய்து, வழக்கிற்கு அடிப்படையான ஒப்பந்தம், நிறுவனத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டது என்று இங்கிலாந்து நாட்டின் தலையாய நீதி மன்றமான சீமான்கள் சபை (House of Lords) கூறியது.

(2) லண்டன் கௌண்டி கௌன்சில் v. அட்டர்னி ஜெனரல். [London County Council v. Attorney General (1902) AC 165.]

இவ்வழக்கில், டிராம்வண்டி (Tramways) விடும் உரிமை பெற்ற நகராண்மைக் கழகம், மோட்டார் பஸ் போக்குவரத்தை மேற்கொண்டது. ஆனால், நீதிமன்றம், பஸ் போக்குவரத்து டிராம் வண்டி விடுவதோடு தொடர்புடையதன்று அதனால் அது நிறுவனத்தின் வரம்பு மீறிய செய்கை என்று முடிவு செய்தது.

ஆனால், நிறுவனம் தனது முக்கிய நோக்கத்தின் விளைவான செயலையும் (incidental), அதன் காரணமாகச் செய்யும் செயலும் (Consequential) சட்ட முறையானதாகும். இதனைக் கீழ்க் காணும் வழக்கு விளக்குகிறது.

(3) ஃபாரஸ்ட் v. மான்செஸ்டர் ரயில்வே கம்பெனி [Forrest v. Manchester etc., Rly Co. (30 Beaw 40)].

இவ்வழக்கில் நிறுவனத்தின் நோக்கம், அதன் படகுகளை பயணத்திற்குப் பயன்படுத்துவதாகும். ஆனால் பயணம் இல்லாத நாள்களில், படகுகளைச் சுற்றுலா செய்வதற்கும் (exeursions) உபயோகப்படுத்தியது. நீதிமன்றம் அந்தச் செய்கை முக்கிய நோக்கத்தின் விளைவான செயலாகையால் (incidental), அது நிறுவனத்தின் வரம்பிற்குட்பட்டது என்று முடிவு செய்தது

இந்தியாவிலும் வரம்பு மீறுதல் கோட்பாடு (Doctrine of ultra vires) பல வழக்குகளில் பிரயோகிக்கப்பட்டுள்ளதைக் காண லாம். ஏ. லட்சுமணசாமி முதலியார் v. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் [A. Lakshmanaswami Mudaliar v. Life Insurance Corporation of India, A. I. R. (1963) S. C. 1185] இவ்வழக்கில், நிறுவனத்தின் இயக்குநர்கள் எந்த அறத்திற்கும் எந்த நல்ல நோக்கத்திற்கும் நிறுவனத்தின் பணத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப் பட்டிருந்தனர். அதன்படி அவர்கள், துறை அறிவும் (Technical knowledge) தொழில் அறிவும் (Business knowledge) வளர்ப்பதற்கு முற்பட்ட பொறுப்புரிமை அமைப்பிற்கு (Trust) இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கினர். ஆனால் நீதிமன்றம், இயக்குநர் எந்த அறத்திற்கும், எந்த நல்ல காரியத்திற்கும் நிறுவனத்தின் பணத்தைச் செலவிட முடியாது என்றும் நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு உபயோகமாயிருக்கும் அறங்களுக்கும்.

நல்ல காரியங்களுக்கும் தான், செலவழிக்கலாம் என்றும் முடிவு செய்தது.

இக் கோட்பாட்டின் தடைகளைத் தவிர்ப்பதற்கு, மேலே காட்மேன் v. ப்ரோஹாம் ['Cotman v. Browgham (1913), A C 514')] என்ற வழக்கில்விளக்கியபடி, அமைப்பு முறை ஏட்டில் பல் வேறு நோக்கங்களைக் குறிப்பிட்டு அவைகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று வேறு பட்டவை என்று விளம்பி நிறுவனங்களைத் தம் இச்சைப்படி இயக்குநர்கள் இயக்குகின்றனர்.

**வரம்பு மீறிய செயல்களின் வகைகளும் அவைகளின் விளைவுகளும்** (Different kinds of acts of ultra vires)

வரம்பு மீறிய செயல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன :

(1) நிறுவனத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்ட செயல்கள் (Acts ultra vires of the Company).

(2) இயக்குநர் குழுவின் வரம்பிற்கு அப்பாற்பட்ட செயல்கள் (Acts ultra vires of the Directors).

(3) செயல்முறை விதிகளை மீறிய செயல்கள் (Acts ultra vires of the articles).

மேற் கூறிய வகைகளில் பின் இரண்டும் அங்கத்தினர்கள் ஆமோதித்தால் சட்டமுறையானதாகிவிடும். ஆனால் முதல் வகையான, நிறுவனத்தின் வரம்பு மீறிய செயல், அனைத்து அங்கத்தினர்கள் ஒரு மனதாக ஆமோதித்தாலும், அது முற்றிலும் செல்லாததாகும் (Absolutely void). அச்செயலுக்கு நிறுவனம் எவ்வகையிலும் கட்டுப்பட்டதன்று.

**வரம்பு மீறிய செயலின் விளைவுகள் :** (Consequences of ultra vires Acts.)

(1) **உறுத்துக்கட்டளை** (Injunction) : நிறுவனம் நோக்கங்களை மீறிச் செயல்பட முற்படின், அங்கத்தினர்கள் நீதிமன்றத்திடமிருந்து உறுத்துக்கட்டளை பெற்று, நிறுவனம் அவ்வாறு செயல்படுவதைத் தடை செய்யலாம்.

(2) **நர்புறுதி மீளலுக்குப் பொறுப்பாதல்** (Breach of warranty of authority) : நிறுவனத்தின் இயக்குநர்களும், அதனை நடத்தும் அனைவரும், நிறுவனத்தின் முகவர் ஆவர். அதனால் வரம்பு மீறிய செய்கையால் நிறுவனத்திற்கு உண்டான இழப்பிற்கு அவர்கள் பொறுப்பாகிறார்கள். மேலும் அவர்கள் வரம்பு மீறியதை அறியாத மூன்றாமவருக்கும் (third party) அவர்கள் பொறுப்பாகிறார்கள்.

**(3) வரம்பு மீறி கடன் வழங்குதல் அல்லது நிறுவனத்தின் பணத்தைச் செலவழித்தல்** (ultra vires lending and expenditure) : வரம்பை மீறி நிறுவனத்தின் பணத்திலிருந்து கடன் வழங்கினால், அவ்வாறு செய்தவர், நிறுவனம் இழந்த பணத்தை ஈடு செய்யும் படி பொறுப்பாகிறார். [In Re Sharpe (1892) 1 Ch. 154], இவ் வழக்கில் ஒரு இயக்குநர், வரம்பை மீறி நிறுவனத்தின் மூலதனத் திலிருந்து வட்டி (interest) கொடுத்தார். இதனால் அவரும், அவரது சந்ததியார்களும் அப்பணத்தை நிறுவனத்திற்கு ஈடு செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

ஆனால் வரம்பு மீறிய இயக்குநர் தமக்கு ஏற்பட்ட நஷ்டத்தை (இழப்பை) பணம் பெற்றுக்கொண்டவர் அவ்வாறு செய்வது வரம்புமீறிய செய்கை என்பதை அறிந்திருந்தால் நிறுவனத்தின் பணத்தைப் பெற்றவரிடமிருந்து ஈட்டுறுதி (Indemnify) செய்து கொள்ளலாம்.

**(4) வரம்பை மீறிப் பெற்ற சொத்துகள்** (ultra vires acquired property) : நிறுவனம் வரம்பை மீறிப் பெற்ற சொத்துகள் அதன் பணத்தைக் குறிப்பிடுவதால், அந்தச் சொத்துகளில், நிறுனவத் தின் உரிமை பாதுகாக்கப்படுகிறது. இதனை அத் செய்த் *v*. பேங்ஸ் ஆல்ப் மைசூர் (Ad Sait *v*. Bank of Mysore, 59, MLJ, R 28, 1930). என்ற வழக்கின் மூலம் அறிய லாம. இவ் வழக்கில் ஒரு நிறு வனம் வரம்பை மீறி சொத்தின் பேரில் வழங்கிய அடமானக் கடனை (mortgage loan) மீண்டும் பெறும்படி சென்னை உயர் நீதி மன்றம் அனுமதித்தது.

**(5) வரம்பு மீறிப் பெற்ற கடன்கள்** (ultra vires borrowing): நிறுவனம் வாங்கிய கடனைச் செலவழிக்காமல் இருப்பின், அப் பணத்தைச் செலவழிக்காமல் தடை உத்தரவு (injunction) பெற்று அதை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

வாங்கிய கடனை நிறுவனம் சட்டமுறையான கடன்களைத் தீர்ப்பதற்குச் செலவழித்திருந்தால், பணம் கொடுத்தவர், கடனைப் பெற்றுக் கொண்ட கடன்காரர்களின் உரிமையின் வாயி லாக நிறுவனத்தின் கடன்காரர்களாகிறார்கள். கடன் பணத்தில் நிறுவனம் சொத்து வாங்கியிருந்தால், அந்தச் சொத்தைப் பணம் கொடுத்தவர் எடுத்துக்கொள்ளலாம்.

வங்கிய கடன் நிறுவனத்தின் இதர பணங்களுடன் கலந்து விட்டாலும், அந்த மொத்தப் பணத்திலிருந்து, விகிதவாரியாகப் பணம் வழங்கியவர் மீண்டும் பெறலாம் இதை சிமிலாய்ர் *v*. ப்ரோஹாம் [Similair *v*. Browgham (1914), A C 393] என்ற வழக்கு விளக்குகிறது. அதன் விவரம் பின்வருமாறு : கட்டிட

வேலை செய்த நிறுவனம், அதன் வரம்பை மீறி வங்கித்தொழிலை மேற்கொண்டு (Banking business) பொது மக்களிடமிருந்து இருப்புத் தொகைகளைப் (Deposits) பெற்றது. அந்த நிறுவனம் கலைக்கப்பட்டபோது, அதன் எஞ்யசி சொத்துகள், பங்குத் தொகையும் இருப்பத் தொகையும் சேர்ந்த மொத்தத் தொகையாகும். அந்தத் தொகை இருதரப்பினருக்கும் உரிய தொகையிலும் குறைந்ததால், அந்தப் பணத்தை அவர்களுக்குரிய தொகையின் விகிதத்தில் பிரிக்கும்படி நீதிமன்றம் முடிவு செய்தது.

(6) வரம்பு மீறிய ஒப்பந்தங்கள் (Ultra vires Contracts): வரம்பு மீறிய ஒப்பந்தங்கள் முற்றிலும் செல்லாதவையாகும் (Absolutely void), நிறுவனத்தை அந்த ஒப்பந்தங்கள் கட்டுப் படுத்தாது. அவைகளால் எவ்வித உரிமையும் ஒப்பந்தம் செய் தவர் பெற முடியாது. இதனால் சில சமயங்களில் அநீதிகள் உண்டாகின்றன. இதனைக் கீழ்க்காணும் வழக்குகள் தெளிவு படுத்துகின்றன.

In re Jon Beauforte (London) Ltd. (1953) ch. 131, 69 L.Q.R. 166.

இவ் வழக்கில் உடைகள் உற்பத்தியும் அங்கி (Gown) உற்பத்தியும் செய்த நிறுவனம் பகட்டான மரச்சாமான் உற்பத்தியை (Veneer manufacturing) அதன் வரம்பை மீறி மேற்கொண்டது. அத்தொழிலுக்காக அந்த நிறுவனத்திற்குக் கட்டிட வேலை செய்தவரும், மரங்கள் கொடுத்தவரும், கரி கொடுத்தவரும், தங்களுக்குச் சேர வேண்டிய தொகைகளை, ஒப்பந்தங்கள் செல்லாதபடியால், நிறுவனத்திடமிருந்து பெற முடியாது என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

In re Port Canning and Land Investment Co. (1871) 7 B.L.R. 533.

தன் வரம்பை மீறி ஒரு நிறுவனம் நெல் அரவைத் தொழிலை மேற்கொண்டது. நிறுவனத்திடமிருந்து அரிசி வாங்கியவர்கள் அதன் தரக் குறைவால் நஷ்டத்திற்கு விற்க வேண்டியதாயிற்று. நிறுவனம் அந்த நஷ்டத்திற்கு ஈடாக அவர்களுக்குக் காசோலைகள் (Drafts) வழங்கியது. நிறுவனம் கலைக்கப்பட்டபோது அக் காசோலைகள் செல்லாதவை என்றும், அவைகள் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது.

வரம்பு மீறுதல் கோட்பாட்டினை நிறுவனத்திற்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்பது இன்னும் தெளிவாக முடிவு செய்யப் படவில்லை. அங்கத்தினர்கள், கடன்காரர்கள் ஆகியோர் நலனைக்

காக்க முற்பட்ட கோட்பாட்டை நிறுவனத்திற்கு எதிராகப் பிரயோகிப்பது முறையல்ல என்ற கருத்தும் முளைத்துள்ளது ஒரு பகுதியினரிடம்.

(7) வரம்பு மீறிய குற்றங்களும் தீங்குகளும் (ultra vires crimes and Torts): இதைப் பற்றி மூன்று வகையான கருத்துகள் முளைத்துள்ளன. முதலாவது, நிறுவனம் வரம்பு மீறிய செயலைச்செய்ய முடியாதெனின், அது குற்றமும் தீங்கும் ஒருக்காலும் செய்ய முடியாது என்பதாகும். இரண்டாவது, வரம்பு மீறுதல் கோட்பாடு, ஒப்பந்தங்களை மட்டும் தான் பாதிக்கும். ஆகையால், நிறுவனம் குற்றங்களுக்கும், தீங்குகளுக்கும் முழுப் பொறுப்பாகும் என்பதாகும். மூன்றாவதாக, நிறுவனம் வரம்பிற்குட்பட்ட செயலால் விளையும் குற்றம் தீங்குகளுக்கு மட்டுமே பொறுப்பாகும். வரம்பு மீறிய செயலால் விளைந்த குற்றங்களுக்கும், தீங்குகளுக்கு நிறுவனம் எள்ளளவும் பொறுப்பாகாது என்பதாகும். மேற்கூறியவைகளில் மூன்றாவதாகக் குறிப்பிட்ட கருத்தே சட்டவல்லுநர் பெரும்பாலோர் கருத்தாகும் (Consensus of Judicial opinion).

### தற்கால நிறுவனவியலில் வரம்பு மீறுதல் கோட்பாட்டின் நிலை (Place of the Doctrine of ultra vires in modern law)

அங்கத்தினர்கள், கடன்காரர்கள், நிறுவனம் ஆகியோர் நலனைக் காக்க முற்பட்ட இக்கோட்பாடு, அதற்கு மாறாக அவர்களுக்குப் பலவித இடைஞ்சல்களையும் இன்னல்களையும் இழைப்பதாகக் கருத்தூன்றி வருகிறது. இன்றைய நிறுவனவியலில். இக்கோட்பாட்டினை மீறுவதற்குப் பல எளிய முறைகள் வெற்றிகரமாக கையாளப் படுகின்றன. நோக்கங்களை விரிவாக வரைந்து கொள்வதும், சட்ட முறைப்படி நோக்கங்களை மாற்றிக் கொள்வதும், கோட்பாட்டினை (Doctrine) உயிரற்றதாக்குவதல்லாமல், கவலையைப் போக்குவதற்கு பதிலாக, வலை விரித்து யாவருக்கும் தீங்கைத் தருகிறது என்ற எண்ணம் மேலோங்கி வருகிறது. இந்த நிலையில் இக்கோட்பாடு தேவையானதா அல்லது தேவையற்றதா என்ற கருத்து வேறுபாடு வெகுவாய் வளர்ந்து புல்லென எழும்பி, கோட்பாட்டினை வேரோடு தரைமட்டமாக்க இரு பேரிடிகள் முழங்கின. முதல் இடி தோன்றியது கோகன் குழு (Cohen Committee) வாயிலாக. இக் குழு இக் கோட்பாட்டினைக் குழி தோண்டிப் புதைத்து விடவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. ஜென்கின்ஸ் குழு (Jenkins Committee) வாயிலாக இரண்டாவது இடி தோன்றியது. இக் குழு இக்கோட்பாட்டிற்குச் சாவு மணி அடிக்கவில்லை என்றாலும் அதன் விளைவுகள் பலவற்றைக் களையும்

படி கூறியுள்ளது. வரம்பு மீறுதல் கோட்பாடு நிறுவனவியலில் ஆணித்தரமாய் வேரூன்றியுள்ளதை யாவரும் மறுக்க முடியாது. மேலும் சட்டசபையும் இக்கோட்பாட்டை அழிக்கவோ மாற்றவோ இதுவரை துணியவில்லை.

**பங்குத் தொகைகளில் மாறுதல் அல்லது அவைகளின் தொகையை அதிகப்படுத்தல் அல்லது குறைத்தல்** (Alteration or increase or decrease of share capital).

பங்குத் தொகையை அதிகப்படுத்துவதும், அவைகளில் மாறுதல்கள் செய்யும் முறைகளைப் பற்றியும் நிறுவனச் சட்டத்தில் 94 to 97ஆவது பிரிவுகளில் தெளிவாக்கப் பட்டுள்ளன. அவை பின்வருமாறு: பங்குத் தொகைகள் கொண்ட ஒரு நிறுவனம் அதன் செயல்முறை விதிகள் அனுமதித்தால் கீழ்க்கண்ட வகையில் அப் பங்குகளில் மாறுதல் செய்யலாம். செயல்முறை விதிகள் அவைகளை அனுமதிக்காவிடில் அவைகளை அதற்குத் தகுந்தபடி நிறுவனம் தனித் தீர்மானத்தால் (Special resolution) மாற்றிக் கொள்ளலாம். நிறுவனம் (a) புதிய பங்குகளை வழங்கிப் பங்குத் தொகையை அதிகப்படுத்திக் கொள்ளலாம். (b) பங்குகளை மொத்தமாக்கி அதை உள்ள பங்குகளைவிட (existing shares) அதிக மதிப்புள்ள பெரிய பங்குகளாகப் பிரிக்கலாம். (c) முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகள் அனைத்தையும் அல்லது அவைகளில் எதையும் பண்டமாக (stock) மாற்றி அப் பண்டத்தை மீண்டும் பங்காக மாற்றலாம். (d) உள்ள பங்குகளைச் (existing shares) சம மதிப்புடைய சிறு பங்குகளாகப் பிரிக்கலாம். (e) ஏற்றுக் கொள்ளப்படாத பங்குகளை ரத்து (cancel) செய்து பங்குத் தொகையைக் குறைக்கலாம்.

மேற்கூறிய காரியங்களை நிறுவனம் பொதுக்கூட்டங்களில் தான் செய்யலாம். மேலும் ஏற்காத பங்குகள் ரத்து செய்யப் பட்டுப் பங்குத் தொகை குறைந்தால் அது நிறுவனச் சட்டப்படி பங்குத் தொகையைக் குறைத்ததாகக் கருதப்படமாட்டாது.

ஒரு நிறுவனம் மேற்கூறியவைகளில் எதைச் செய்தாலும், அல்லது முன்னுரிமைப் பங்குகளை மீட்டாலும் (redumption of Preference shares), அவைகளைப் பற்றிய முழு விவரங்களைக் கொண்ட அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்யத் தவறினால் தண்டனைக்குள்ளாகும் என்று 95ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 97ஆவது பிரிவின்படி, ஒரு நிறுவனம் புதிய பங்குகளை வழங்கிப் பங்குத் தொகையை அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைவிட (authorised

capital) அதிகமாக்கினுல் அவ்வாறு செய்த பதினைந்து நாட்களுக்குள் அவைகளைப் பற்றிய முழு விவரங்களைக் கொண்ட அறிக்கையைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யத் தவறினுல் தண்டனைக்குள்ளாகும்.

**பங்குத் தொகையைக் குறைக்கும் முறை** (Reduction of share capital).

நிறுவனத்தின் கடன்காரர்களும் மற்றும் அதனுடன் தொடர்பு கொள்வோர் அனைவரும் அதன் மூலதனத்தையே பெரிதும் நம்பியுள்ளனர். இதனுல் ஒரு நிறுவனம் அதன் மூலதனத்தை எளிதில் குறைக்க முடியாதபடி முட்டுக்கட்டைகளை அமைத்துள்ளது நிறுவனச் சட்டம். அவைகள் 100 to 105ஆவது பிரிவுகளில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

நீதிமன்றம் உறுதியளிப்பதாயிருப்பின், ஒரு நிறுவனம் தன் மூலதனத்தைத் தனித் தீர்மானத்தால் கீழ்க்கண்ட வகைகளில் குறைக்கலாம் : (a) அதன் பங்குகளில் கட்ட வேண்டிய தொகையைத் தள்ளியோ அல்லது குறைத்தோ மூலதனத்தைக் குறைக்கலாம் (b) அவ்வாறு தள்ளியும் தள்ளாமலும் அல்லது குறைத்தும் குறைக்காமலும், இழந்த மூலதனத்தையும் (lost capital) சொத்து ஈடில்லாத மூலதனத்தையும் (capital unrepresented by assets) ரத்து செய்யலாம் (cancel). (c) அவ்வாறு தள்ளியும் தள்ளாமலும், குறைத்தும் குறைக்காமலும், நிறுவனம் தன் தேவைக்கு அதிகமாய் உள்ள பங்குத் தொகையைத் திருப்பி அளித்துவிடலாம். நிறுவனம் மேற்கூறியவைகளைச் செய்யும்போது அதற்கு ஏற்றவாறு அமைப்பு முறை ஏட்டினுக்கு மாறுதல்கள் செய்யலாம்.

மேற்கூறிய வகைகளில் மூலதனத்தைக் குறைப்பதற்குத் தனி முறைத் தீர்மானம் (Special resolution) செய்தவுடன், மூலதனம் குறைந்திருப்பதை உறுதிசெய்யும்படி நீதிமன்றத்திற்கு மனு செய்ய வேண்டும். கடனே அல்லது வேறு உரிமைபெற்ற கடன்காரர்கள் மூலதனம் குறைக்கப்படுவதை எதிர்க்கலாம். இதற்காக நீதிமன்றம் கடன்காரர்கள் பெயர், அவர்களுக்குச் சேர வேண்டிய தொகை முதலான விவரங்களைத் தீர்மானித்து அந்தப் பட்டியலை நீதி மன்றத்தின் அறிக்கைப் பலகையில் (Notice Board) வெளியிடவேண்டும். கடன் அடைபடாத அல்லது உரிமை நிறைவேறப்பெருத கடன்காரர்கள் மூலதனத்தைக் குறைப்பதற்கு இசையாவிட்டால், நிறுவனம் அவர்கள் கடனை அடைக்கவும் உரிமைகளை நிறைவேற்றவும் போதிய பிணையம் வழங்கினுல், நீதி

மன்றம் அவர்கள் இசைவு தேவையில்லை என்று முடிவு செய்ய லாம். மேலும் நீதிமன்றம் தனிமுறைச் சூழ்நிலைகளில் குறிப் பிட்ட வகையைச் சேர்ந்த கடன்காரர்களின் இசைவு தேவை யில்லை என்று குறிப்பிடலாம்.

நீதி மன்றம் எதிர்க்கக்கூடிய கடன்காரர்களின் இசைவைப் பெற்றுகி விட்டது என்றோ அல்லது அவர்கள் கடன் அடைபட்டு விட்டது என்றோ அல்லது அவர்கள் கடன் அடையப் போதிய பிணையம் வழங்கப்பட்டுள்ளது என்றோ மன நிறைவு பெற்றால், நிறுவனம் மூலதனத்தைக் குறைப்பதை அது குறிப்பிட்ட கட்டு திட்டங்களின் (terms and conditions) பேரில் உறுதி செய்யலாம். மேலும் நீதிமன்றம் குறிப்பிடும் காலம் வரை 'குறைக்கப்பட்டது' (reduced) என்ற வார்த்தைகளை நிறுவனம் தன் பெயரின் இறுதி யில் குறிப்பிட வேண்டும் என்றும், மூலதனம் குறைக்கப்பட்ட காரணங்களையும் இதர விவரங்களையும் நிறுவனம் பொது மக்களுக்கு அறிக்கை மூலம் வெளியிடவேண்டும் என்றும் விதிக்க லாம்.

நீதிமன்றம் மூலதனம் குறைத்ததை உறுதி செய்த உத்திர வின் உண்மையொப்பு நகலையும் (certified copy) மாற்றப்பட்ட மூலதனம், அது எத்தனை பங்குகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது, ஒவ் வொரு பங்கிலும் செலுத்தப்பட்டதாகக் கருதப்படும் தொகை முதலான விவரங்களைக் கொண்ட நடவடிக்கைக் குறிப்புகளையும் (Minutes) பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். பதிவாளர் மேற்படி விவரங்களைப் பதிவுப் புத்தகத்தில் குறிப்பிட்டு, பதிவு செய்ததற்கான சான்றிதழ் தம் கைப்பட வழங்கவேண்டும். அந்தச் சான்றிதழ், சட்டப்படி மூலதனம் குறைக்கப்பட்டுள்ள தற்கு முடிவான சான்றாகும். மேற்படி மாறுதல் பதிவு செய்யப் பட்டுள்ளதை நீதி மன்றம் தீர்மானித்தபடி வெளியிட வேண்டும். மாறுதல் பதிவான தேதியிலிருந்து தான் செயல்படும். மேற்படி மாறுதலைப் பதிவான தேதிக்குப்பின் வழங்கப்படும், அமைப்பு முறை ஏட்டின் ஒவ்வொரு பிரதியிலும் குறிப்பிட வேண்டும்.

மூலதனம் குறைக்கப்பட்ட பிறகு பழைய பங்குதாரரும் தற் காலப் பங்குதாரரும் பங்குத் தொகையில் குறைக்கப்பட்ட தொகைக்கு மேல் பொறுப்பாக மாட்டார்கள். ஆனால் மூலதனம் குறைக்கப்படுவதின் விளைவை அறியாமையால், உணராத கடன் காரரின் கடன் அடைபடாதிருப்பின், மூலதனம் குறைக்கப்பட்ட தைப் பதிவான நாள்வரை, அங்கத்தினராய் இருந்த ஒவ்வொரு வரும் அந்தக் கடனை அடைக்க, மூலதனம் குறைக்கப்படுவதற்கு முன்பிருந்த தம் பங்களவிற்குப் பொறுப்பாகிறார்கள். நிறுவனம்

கலக்கப்பட்டாலும். இந்தப் பொறுப்பிலிருந்து அவர்கள் தப்ப முடியாது. நீதிமன்றம் அந்தக் கடனுக்குப் பொறுப்பானவர்கள் பெயர்ப்பட்டியலைத் தயாரித்து அவர்களைப் பொறுப்பாக்கும்.

நிறுவனத்தின் அதிகாரிகள் கடன்காரர்களின் பெயர்களை அறிந்திருந்தும் அவைகளை மறைத்தாலும், அவர்களுக்குரிய கடன்களைப் பற்றிய விவரங்களைத் தவறாகக் கூறினாலும் (misrepresent), அல்லது அவைகளை மறைக்க உதவி செய்தாலும் தண்டனைக்குள்ளாவர் என்று குறிப்பிடுகிறது.

கீழ்க்கண்ட முறைகளில் மூலதனம் குறைக்கப்படுவதற்கு நீதிமன்றத்தின் உத்திரவும் உறுதியும் தேவையில்லை :

(a) பங்குகளைச் சட்ட முறையாகப் பறிமுதல் செய்வது (Forfeiture).

(b) பங்குகளைச் சட்ட முறைப்படி கைவிடுதல் (Surrender of shares).

(c) மீட்கக் கூடிய முன்னுரிமைப் பங்குகளை (Redeemable preference shares) மீட்பது (பி. 94).

(d) ஏற்றுக்கொள்ளாத பங்குகளை ரத்து செய்வது (பி.94).

(e) 402ஆவது பிரிவின்படி நீதி மன்றத்தின் ஆணைப்படி அங்கத்தினர் பங்குகளை நிறுவனம் கொள்வினை செய்வது (Purchase).

# 3. செயல் முறை விதிகள்
## (Articles of Association)

**செயல் முறை விதிகள் என்றால் என்ன?**

செயல் முறை விதிகள் என்பன நிறுவனம் நடத்தப்படும் முறைகளை நன்றாக விளங்கச் செய்து, பொதுமக்களுக்கு அதில் குறிப்பிட்டவைகளைக் கொள்நிலை அறிவிக்கையாக்கும் (Constructive notice) ஒரு பொது ஆவணமாகும் (Public document). நிறுவனச் சட்டம் செயல்முறை விதிகளை 2(உ)ஆம் பிரிவில் பின் வருமாறு வரையறை (Defines) செய்துள்ளது. 'செயல் முறை விதிகள் என்றால் மூலமாய் வரையப்பட்டதும் (originally framed) அவ்வப்போது செய்யப்பட்ட மாறுதல்களுடன் விளங்கும் செயல் முறை விதிகள் ஆகும்.

ஆதரவாளர்களுக்கு (Subscribers) உதவியாக நிறுவனச் சட்டத்தின் முதல் பின் இணைவில் (First schedule), A,B,C,D,E, என்ற அட்டவணைகளில் (Tables) எல்லா வகையான நிறுவனங் களுக்குரிய செயல்முறை விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பொது (வரம்புற்ற) நிறுவனம் தவிர (Public limited Companies), மற்ற எல்லா நிறுவனங்களும் தத்தமக்குரிய செயல்முறை விதிகளை அட்டவணைகளில் உள்ளபடியே அல்லது அவைகளைத் தழுவி அமைத்துக்கொண்டு, அமைப்புமுறை ஏட்டுடன் (Memorandam) கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ளவேண்டும். பொது (வரம் புற்ற) நிறுவனம், செயல்முறை விதிகளைப் பதிவு செய்யாவிடில், அதற்கு அட்டவணை 'A'-யில் உள்ள விதிகளைப் பிரயோகிக்கப் படும். எனவே, வரம்பற்ற நிறுவனங்கள் (unlimited Companies) தனியார் வரம்புற்ற நிறுவனங்கள் (Private Limited Companies) பொறுப்புறுதி நிறுவனங்கள் (Guarantee Companies) தவறாமல் செயல்முறை விதிகளைப் பதிவு செய்யவேண்டும்.

**செயல் முறை விதிகளின் எழுத்து முறை வடிவம்** (Form of Articles)

செயல் முறை விதிகள் பதிவு செய்யப்படுவதாயின், அவைகள் அச்சிடப்பட்டு, தொடர்ச்சியான எண்ணிக்கைகள் கொண்ட பத்திகளாக (Paras) பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆதரவாளரும் கையெழுத்திட்டு, ஒவ்வொரு கையெழுத்திற்கும் குறைந்தது ஒரு சாட்சி சான்றுக் கையொப்பம் (attest) செய்து, ஆதரவாளரும் (Subscriber) சாட்சியும் ஆகிய இருவரும் தத்தம் முகவரி, விவரம், தொழில் முதலியன அவரவர் கையொப்பத்திற்கெதிரே குறிப்பிடவேண்டும்.

**செயல் முறை விதிகளில் குறிப்பிடத்தக்கவை** (Contents of the Articles) : நிறுவனத்தை நடத்துவதற்குத் தேவையான எல்லா விதிகளையும் அதில் குறிப்பிடலாம். அதில் குறிப்பிடப்படாத விவரங்களில், அட்டவணை 'A' யில் உள்ள விதிகள் பின்பற்றப் படும். வரம்பற்ற நிறுவனமும் (unlimited Company), பொறுப் புறுதி நிறுவனமும் (Guarantee Company) எவ்வளவு உறுப்பினர் களைக் கொண்டு பதிவு செய்யப்படும் என்று குறிப்பிடவேண்டும். தனியார் வரம்புற்ற நிறுவனமாயின் (Private Limited Company) 3ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள விவரங்களைத் தவறாமல் குறிப்பிட வேண்டும். அதாவது பங்குகளைக் கைமாற்றம் செய் வதைக் கட்டுப்பாடு செய்யவேண்டும். உறுப்பினர்கள் எண் ணிக்கை 50-க்கு மேற்படாமல் அளவு படுத்தவேண்டும். பொது மக்களுக்குப் பங்குகள் வழங்குவதைத் தடை செய்யவேண்டும். பொதுவாக, செயல் முறை விதிகள் நிறுவனச் சட்டத்திற்கும், அதன் விதிகளுக்கும், அமைப்பு முறை ஏட்டிற்கும் (memorandum) உட்பட்டிருக்க வேண்டும். அவைகளை மீறினால் அவை செல்லாதவையாகும் (Invalid).

**செயல்முறை விதிகளை மாற்றும் முறை** (Alteration of Articles): 31ஆவது பிரிவு செயல் முறை விதிகளுக்கு மாறுதல் செய்யும் முறையும் அதற்குள்ள தடைகளையும் மிகத் தெளிவாகக் குறிப்பிடு கிறது. ஒரு நிறுவனம் தன் செயல் முறை விதிகளை மாற்றுவ தற்கு மிக அதிகமான உரிமை பெற்றுள்ளது. அந்த உரிமையை இழப்பதற்கு நிறுவனத்திற்கே உரிமை கிடையாது என்று சட்டம் செப்புகிறது. அதனால் ஒரு நிறுவனம் இந்த உரிமையை உபயோ கிப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்தால் அந்த ஒப்பந்தம் செல்லாத தாகும். அது நிறுவனத்தைச் சற்றும் பாதிக்காது. ஆனால், இத்தகைய உரிமைக்குச் சட்டதிட்டங்களும் நீதிமன்றங்களும் மிகச் சில தடைகளே விதித்துள்ளன. அவை பின்வருமாறு :

(1) செயல் முறை விதிகளுக்கு மாறுதல்கள் தனித் தீர்மானத்தால்தான் (Special resolution) செய்ய வேண்டும். செயல் முறை விதிகள், அவைகளுக்கு மாறுதல் செய்யத் தனித் தீர்மானம் தேவையில்லை (Restricting the alteration of articles) என்று குறிப்பிட்டால், அந்த விதிகள் செல்லாதவையாகும்.

(2) செய்யப்படும் மாறுதல், நிறுவனச் சட்டத்திற்கும் மற்றும் இதர செயலுறு சட்டங்களுக்கும் (Acts in force) முரணாக இருக்கக்கூடாது.

(3) செய்யப்படும் மாறுதல் நிறுவனத்தின் அமைப்பு முறை ஏட்டிற்கு முரணாயிருக்கக்கூடாது.

(4) பொது நிறுவனம் (Public company) ஒரு தனியார் நிறுவனமாக (private company) மாற்றப்படுவதற்குச் செயல் முறை விதிகளில் மாறுதல் செய்ய மத்திய அரசினரின் ஒப்புதல் (approval) பெற வேண்டும்.

(5) மாறுதல் உறுப்பினர்களின் பொறுப்பை அதிகமாக்கினாலும் அல்லது அவர்கள் ஏற்றுக்கொண்ட பங்குகளுக்கு அதிகமான பங்குகளை ஏற்கச் செய்தாலும், அதற்கு ஒவ்வொரு உறுப்பினரின் ஒப்புதல் பெறவேண்டும். ஆனால் இந்தத் தடை விளையாட்டு, பொழுதுபோக்கு, சமூகத்தொண்டு முதலியவைகளுக்கான சங்கங்களுக்கும் (Clubs), வாணிபம் செய்யாத சேர்க்கைளுக்கும் (Non-trading Associations) கிடையாது.

(6) 397, 398ஆவது பிரிவுகளின்படி நீதி மன்றம் நிறுவனத்தின் செயல் முறை விதிகளுக்கு மாறுதல் செய்ய உத்தரவு செய்திருந்தால், மேற்படி விதிகளை மறுபடியும் மாற்றுவதற்கு நீதி மன்றத்தின் உத்தரவு பெறவேண்டும் (பி. 402).

(7) மேலாண்மை இயக்குநர் (Managing Director), முழு நேர இயக்குநர் (Full time Director), விலகல் பொறுப்பில்லா இயக்குநர் (not liable to retire) முதலானோரை அமர்த்தவும் அல்லது மறுமுறை அமர்த்தவும் (பி. 268), அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும் (பி. 310), இயக்குநர்கள் எண்ணிக்கை அதிகப்படுத்துவதற்கும் (பி. 259), மத்திய அரசினரின் ஒப்புதல் பெறாவிட்டால் செல்லாது.

**நீதிமன்றங்களின் தடைகள்** (Judicial restrictions)

(1) மாறுதல் சிறுபான்மையினரை (minority) ஒடுக்குவதாகவோ (oppress) அல்லது மோசடி (Fraud) செய்வதாகவோ இருக்கக்கூடாது.

மினியர் v. ஹூப்பர்ஸ் டெலிகிராஃப் கம்பெனி [Menier v. Hoopers' Telegraph Co. (1874) L. R. 9 Ch. App. 350].

இவ்வழக்கில் A என்ற நிறுவனத்தின் பெரும்பான்மையான பங்குதாரர்கள், B என்ற நிறுவனத்திலும் அங்கத்தினர்களாய் இருந்தனர். A நிறுவனம் B நிறுவனத்தின் மீது தொடர்ந்த நடவடிக்கையை A நிறுவனத்தின் கூட்டத்தில் A-க்குப் பாதகமாகச் சமரசம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது, A நிறுவனத்தின் சிறுபான்மையினரை மோசடி செய்வதாகவுள்ள அந்தத் தீர்மானத்தை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது (set aside).

பிரௌன் v. பிரிட்டிஸ் அப்ராசிவ் வீல் கம்பெனி [Brown v. British Abrasive Wheel Co. (1919) 1 Ch. 290].

இவ் வழக்கில் நிறுவனத்திற்கு மூலதனம் அதிகமாகத் தேவைப் பட்டது. பெரும்பான்மையாளர், இரண்டு சதவீதம் இருந்த சிறுபான்மையினர், தங்கள் பங்குகளை விற்பதாய் இருந்தால், தேவையான அதிகப்படி பங்குகளை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தனர். ஆனால், சிறுபான்மையினர் அதற்கு ஒப்பவில்லை. இதனால் நிறுவனம் சிறுபான்மையினர் பங்குகளைக் கொள்வினை செய்வதற்குச் செயல் முறை விதிகளில் மாறுதல் செய்தது. ஆனால், நீதிமன்றம் அது மோசடியானது என்று முடிவு செய்தது.

(2) மாறுதல் நல்லெண்ணத்துடன் (Bonafide) நிறுவனத்தின் நன்மைக்காகச் செய்யப்பட வேண்டும்.

சைட்பாட்டம் v. கெர்ஸா, லீஸ் அண்ட் கம்பெனி[Sidebottam v. Kershaw, Leese and Co. (1920) 1 Ch. 154].

இவ்வழக்கில், ஒரு தனியார் நிறுவனத்தில் (Private Co.), இயக்குநர்கள் பெரும்பான்மையான பங்குகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் நிறுவனத்திற்குப் போட்டியாக வியாபாரம் செய்யும் அங்கத்தினர் பங்குகளைக் கொள்வினை செய்யச் செயல் முறை விதிகளில் மாறுதல் செய்தனர். நிறுவனத்திற்குப் போட்டியாக வியாபாரம் செய்த வாதி (Plaintiff) அந்த மாறுதலை எதிர்த்தது மன்றி, பின்னர் அதை எதிர்த்து வழக்கும் தொடுத்தார். ஆனால் நீதி மன்றம், மாறுதல், நல்லெண்ணத்துடனும், நிறுவனத்தின் நன்மைக்காகவும், செய்யப்பட்டுள்ளது என்று முடிவு செய்து வழக்கைத் தள்ளிவிட்டது.

ஒரு சமயம் நிறுவனம், தான் செய்த ஒப்பந்தத்திற்கு மாறாகச் செயல்முறை விதிகளை மாற்றமுடியாது என்று கருதப்பட்டது. ஆனால், இது மிகவும் தவறான கருத்து என்பதை இங்கிலாந்து

நாட்டின் சீமான்கள் சபை, ஷிர்லா v. சதர்ன் பௌண்டரீஸ் லிமிடெட் ['Shirlaw v. Southern Foundaries Ltd. (1940) AC. 701'] என்ற வழக்கில் தெளிவாக்கியது. ஒப்பந்தத்தை மீறியதற்கு நிறுவனம் இழப்பீடு (Damages) தர வேண்டுமே தவிர. அந்த ஒப்பந்தம் செயல்முறை விதிகளை மாற்றுவதற்கு எவ்விதத் தடையும் செய்யமுடியாது என்று குறிப்பிட்டது. அவ் வழக்கில், ஒரு நிறுவனத்தின் இயக்குநர், அந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராகப் (Managing Director) பத்து ஆண்டுக்காலம் வரை அமர்த்தப்பட்டார். அந்த நிறுவனம் வேறொரு நிறுவனத்துடன் இணைந்து (Amalgamated), புதிய செயல் முறை விதிகளை மேற்கொண்டது. புது விதிகளின்படி நிறுவனம், இயக்குநர்களைப் பதவியிலிருந்து நீக்கும் உரிமை பெற்றது. மேலும், அவ் விதிகளின் படி இயக்குநர் பதவி இழந்தவர், மேலாண்மை இயக்குநர் பதவியும் இழக்க வேண்டும். புதிய விதிகளின்படி வாதி இயக்குநர் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். அதன் விளைவாக அவர் மேலாண்மை இயக்குநர் பதவியையும், பத்து ஆண்டுகள் கழிவதற்கு முன்பாகவே இழந்தார். நீதி மன்றம் புதிய விதிகள் முறையானவை என்றும், ஆனால் நிறுவனம் ஒப்பந்தம் மீறியதற்கு வாதிக்கு இழப்பீடு செய்யவேண்டும் என்று முடிவு செய்தது.

ஒரு சமயம், நிறுவனம், பங்குதாரர்களின் உரிமைகளில், வேறுபாடுகள் ஏற்படும் வகையில் செயல் முறை விதிகளுக்கு மாறுதல் செய்யமுடியாது என்று கருதப்பட்டது. ஆனால், இக் கருத்தும் தவறானது என்று விரைவில் தெளிவாக்கப்பட்டது.

ஆண்ட்ரூஸ் v. காஸ் மீட்டர் கம்பெனி [Andrews v. Gas Meter Co. (1897) 1 Ch. 361].

இவ் வழக்கில் நிறுவனத்தின் அமைப்பு முறை ஏடு நிறுவனம் வேண்டும்போது மூலதனத்தை அதிகப்படுத்துவதற்கு உரிமை வழங்கியது. ஆனால், அதில் முன்னுரிமைப் பங்குகளைப் (Preference Shares) பற்றிக் குறிப்பிடப்படவில்லை. நிறுவனம் செயல் முறை விதிகளை மாற்றி, முன்னுரிமைப் பங்குகளை வழங்குவதற்கு உரிமை பெற்றது. அமைப்பு முறை ஏடு அவ்விதப் பங்குகளைத் தடை செய்யாததால், அந்த மாறுதல் முற்றிலும் முறையானதென முடிவு செய்தது நீதிமன்றம்.

**மாறுதல் பின் செயலாக்கமுடையது** (Alteration has retrospective effect)

ஆலன் v. மேற்கு ஆஃப்ரிக்கத் தங்கச் சுரங்கம் [Allen v. Gold Reefs of West Africa (1900) 1 Ch. 656.]

இவ் வழக்கில், நிறுவனம் கோரிக்கை பாக்கிக்காக (calls due) முழுவதும் செலுத்தப்படாத பங்குகளின் பேரில் பற்றுரிமை (lien) பெற்றிருந்தது. அந்த நிறுவனத்தில் 'A' என்ற ஒரே நபர்தான் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குத் தொகைகளைப் பெற்றிருந்தார். ஆனால், அவர் நிறுவனத்திற்கு இதர பங்குகளில் கோரிக்கை பாக்கி (calls due) தரவேண்டியிருந்தது. நிறுவனம், செயல் முறை விதியில் உள்ள, முழுவதும் செலுத்தப்படாத (Not fully paid), என்ற வார்த்தைகளை விலக்கியது. அதன் விளைவாக நிறுவனம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளின் பேரிலும் பற்றுரிமை பெற்றது. அவ்வாறு மாற்றம் செய்தது முற்றிலும் முறையானதென முடிவு கூறியது நீதிமன்றம். இதனால் செய்யப்படும் மாறுதல் பின் செயலாக்க முடையது (Retrospective effect) என்பது தெளிவாகிறது.

**அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதிகளின் விளைவுகள் (Effect of Memorandum and Articles of Association)**

36ஆம் பிரிவில், அமைப்பு முறை ஏடும், செயல் முறை விதிகளும் பதிவாளர் பதிவு செய்தவுடன், அவைகளை நிறுவனமும் ஒவ்வொரு அங்கத்தினரும் கையொப்பம் செய்தது போலவும், நிறுவனமும் ஒவ்வொரு அங்கத்தினரும் அவைகளில் குறிப்பிட்டுள்ள எல்லா விதிகளின்படி நடந்துக் கொள்வதாக ஒப்புக் கொண்டதைப்போலவும், நிறுவனத்தையும் அங்கத்தினர்களையும் கட்டுப்படுத்துகிறது என்று குறிப்பிடுகிறது.

ஆகவே, அமைப்பு முறை ஏடும், செயல் முறை விதிகளும், நிறுவனத்திற்கும் அங்கத்தினர்களுக்கும் மற்றும் வேறு நபர்களுக்கும் (outsiders) எவ்விதத்தில் தொடர்பு உண்டாக்குகிறது என்பதைக் கீழ்க்காணும் தலைப்புகளில் ஆராயலாம்.

**(1) அங்கத்தினர்கள் எவ்வகையில் நிறுவனத்திற்குக் கட்டுப்பட்டுள்ளனர் :** ஒவ்வொரு அங்கத்தினரும், அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதிகள் இவைகளில் குறிப்பிட்டுள்ளபடி நடந்து கொள்வதாகச் சட்டம் சூட்டிய ஒப்பந்தத்தால் (Statutory covenant) நிறுவனத்திற்குக் கட்டுப்பட்டுள்ளனர். இதைக் கீழ்க்காணும் வழக்குகள் தெளிவாக்குகின்றன.

பிரெட்ஃபோர்டு வங்கிக் கம்பெனி *v.* ப்ரிக்ஸ் [Bradford Banking Co *v.* Briggs, 12 AC 29]

இவ் வழக்கில் நிறுவனம் அதன் அங்கத்தினரிடமிருந்து வர வேண்டிய கடனுக்கு அவர்கள் பங்குகளின் பற்றுரிமை (lien)

பெற்றிருந்தது. நிறுவனத்திடம் கடன்பட்டிருந்த ஓர் அங்கத்தினர் வங்கியிடம் (Bank) இருப்புக்குமேல் கடன்பெற (over draft) தன் பங்குச் சான்றிதழ்களை (share certificates) அடகுவைத்தார் (pledged). வங்கியும் மேற்படி தன் உரிமையை நிறுவனத்திற்கு அறிக்கை செய்தது. செயல்முறை விதிகளின்படி அங்கத்தினர் நிறுவனத்திற்கு உடன்பட்டிருப்பதால், நிறுவனத்தின் பற்றுரிமை வங்கியின் உரிமையை விட முதன்மை பெற்றது என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

ஆனால், அறிக்கைக்கு முன் பட்ட கடன்களுக்குத்தான் நிறுவனத்திற்கு அவ்வித முதலுரிமை உண்டு என்றும், அறிக்கைக்குப் பின் பட்ட கடன்களுக்கு அத்தகைய முதலுரிமை கிடையாது என்றும் மேதரன் ஸ்டீம் டிராம்வே கம்பெனி v. லாங் [Matheran Steam Tramway Co.v. Lang, 33 Bom.L.R. 184] என்ற வழக்கில் தெளிவாக்கப்பட்டுள்ளது. அத்தகைய அறிக்கை வெளிப்படையாகவும் (express) அல்லது உட்கிடையாகவும் (implied) இருக்கலாம். உதாரணமாக, மேலாண்மை இயக்குநர் (Managing Director) தன் பங்குகளை அடகு வைத்ததைத் தெரிவிக்காவிட்டாலும் அது நிறுவனத்திற்கு, உட்கிடை அறிக்கையாகும் (Implied notice).

போர்லண்ட்ஸ் டிரஸ்டி v. ஸ்டீல் பிரதர்ஸ் [Borland's Trustee v. Steel Bros. and Co. (1901) 1 ch. 279.]

இவ்வழக்கில், நிறுவனத்தின் செயல் முறை விதிகள் ஓர் அங்கத்தினர் நொடிப்பு நிலையுற்றால் (Insolvent) அவர் பங்குகள் குறிப்பிட்ட நபருக்குக் குறிப்பிட்ட விலைக்கு விற்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. ஓர் அங்கத்தினர் நொடிப்பு நிலையுற்றார். ஆனால், நொடிப்பு நிலையர் சொத்தாட்சி அதிகாரி (Official Assignee), தான் அந்த செயல் முறை விதிகளுக்குக் கட்டுப்பட்டவரல்ல என்று வாதித்தார். நீதிமன்றம், நொடிப்பு நிலையர் உரிமையளவேதான் அவர் உரிமையும்; அதனால், அவரும் செயல் முறை விதிகளுக்குக் கட்டுப்பட்டவர் என்று கூறியது. இவ் வழக்கு அங்கத்தினருடன் அவர் சந்ததியாரும் (வார்சுதாரரும்) செயல் முறை விதிகளுக்குக் கட்டுப்பட்டுள்ளனர் என்பதை விளக்குகிறது.

**(2) ஓர் நிறுவனம் அங்கத்தினர்களுக்கு எவ்வகையில் கட்டுப்பட்டுள்ளது?** அங்கத்தினர்களைப் போலவே நிறுவனமும், அமைப்பு முறை, ஏட்டுச் செயல் முறை விதிகளின்படி நடப்பதற்கு அங்கத்தினர்களுக்குக் கட்டுப்பட்டுள்ளது. எனவே, மேற்படி விதிகளை நிறுவனம் தவறினாலும், மீறினாலும், எந்த அங்கத்தினரும் நிறுவனத்தின் மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

உட் v. ஒடஸ்ஸா வாட்டர் ஒர்க்ஸ் கம்பெனி [Wood v. Odessa Water Works Co. (1889) 42 ch. D. 636.]

இவ் வழக்கில் நிறுவனத்தின் செயல் முறை விதிகள், இயக்குநர்கள் பங்கு ஆதாயத்தைப் (Dividend) பொதுக் கூட்டங்களில் அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டது, அதன்படி அவர்கள் பங்கு ஆதாயம் கடனீட்டுப் பத்திரங்களாக (debenture bonds) வழங்கப்படும் என்று அறிவித்தனர். ஆனால், ஓர் அங்கத்தினர் அது செயல் முறை விதிகளுக்கு மாறானது என்றும், பங்கு ஆதாயம் பணமாகத் தான் வழங்க வேண்டும் என்றும் வாதித்தார். நீதிமன்றம் அவர் வாதம் முறையானது என்று முடிவு செய்து அவ்வாறே உத்திரவிட்டது.

குறிப்பு : நிறுவனச் சட்டத்தில் 205 (3)ஆவது பிரிவில் பங்கு ஆதாயம் பணமாகத்தான் தரவேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி நிறுவனம், எல்லாச் செயல் முறை விதிகளினுலும் அங்கத்தினர்களுக்குக் கட்டுப்பட்டதல்ல. அவர் அங்கத்தினர் என்ற முறையில் உள்ள உரிமைகளை பாதித்தால்தான் நிறுவனம் கட்டுப்படும். வாக்குரிமை, பங்கு ஆதாயம் பெறல், கூட்டத்தில் கலந்து கொள்வது முதலான அங்கத்தினரின் உரிமைகளை பாதித்தால், அங்கத்தினர்கள் நிறுவனம் அவ்வாறு செய்வதைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், இந்தியச் சட்டத்தில் நிறுவனம், எந்த விதியை மீறினுலும் தவறினுலும் அங்கத்தினர் அதைக் கட்டுப்படுத்தலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

**(3) நிறுவனம் வேறு நபர்களுக்கு (Out siders) எவ்வகையில் கட்டுப்பட்டுள்ளது? :** நிறுவனம் அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதிகளின்படி செயல்படவில்லை என்று கூற வேறு நபர்களுக்கு (Out siders) எவ்வித உரிமையும் இல்லை. ஆகையால், நிறுவனம் அவர்களுக்கு எவ்வகையிலும் கட்டுப்பட்டதல்ல என்ற கருத்து முதலில் நிலவியது. அதன்படி கீழ்க்கண்ட வழக்குகள் முடிவு செய்யப்பட்டன.

ஈலி v. பாசிட்டிவ் லைஃப் அஷ்யூரன்ஸ் கம்பெனி [Eley v. Positive Life Assurance Co. (1876) 1 Ex. Div. 88.]

இவ் வழக்கில், நிறுவனத்தின் செயல் முறை விதிகள் ஈலி (Eley) என்பவரை நிறுவனத்தின் வழக்கறிஞராக நியமித்ததன்றி, அவரைத் தகாத நடத்தையன்றி வேறெதற்கும் அப்பதவியிலிருந்து விலக்கக்கூடாது என்று குறிப்பிட்டது அதற்கு மாறாக,

சிறிது காலத்திற்குப் பிறகு, அவர் அப் பதவியில் நீடிக்கப்படவில்லை. அதனுல் அவர் நிறுவனம், ஒப்பந்தத்தை மீறியதாக வழக்காடினுர். ஆனுல், நீதிமன்றம், செயல்முறை விதிகள் நிறுவனத்திற்கும் அங்கத்தினருக்கும் உள்ள ஒப்பந்தமாகும். ஈலி அந்த ஒப்பந்தத்தில் சேராதவர் (Stranger to Contract), ஆகையால் அவர் மேற்படி செயல்முறை விதிகளை நிறைவேற்ற முடியாது என்று முடிவு செய்தது.

குறிப்பு : உண்மையில் ஈலி என்பவர் அந்த நிறுவனத்தில் அங்கத்தினராய் இருந்தார். ஆனுல், அவர் ஒரு சாதாரண அங்கத்தினர் உரிமையைக் கேட்கவில்லை. தனக்கென உரிய தனி உரிமையைக் கேட்டார். இவ்வகையில் அவர் ஒரு வேற்று நபர் (Outsider) எனக் கருதப்பட்டார். ஆனுல், இந்தியச் சட்டத்தில் 36ஆவது பிரிவின்படி, ஓர் அங்கத்தினர் மேற்படி விதிகளை நிறைவேற்றலாம்.

பிரௌன் v. லா ட்ரினிடாட் [Browne v. La Trinidad (1887) 37 ch. D. 1.]

இவ் வழக்கில், நிறுவனத்தின் செயல் முறை விதிகள் 'B' என்பவரைக் குறிப்பிட்ட காலம்வரை நிறுவனத்தின் இயக்குநராக நியமித்தது. ஆனுல், அவர் அக்காலம் முடிவதற்கு முன்பாகப் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அவர் நிறுவனத்தின்மேல் தொடர்ந்த வழக்கில், நீதிமன்றம் அவருக்கும் நிறுவனத்திற்கும் எவ்வித ஒப்பந்தமும் கிடையாது. ஆகையால், அவர் மேற்கூறிய செயல் முறை விதிகளை நிறைவேற்ற முடியாது என்று கூறியது.

இங்கிலாந்து நாட்டில் மேற்கூறிய வழக்குகளின் முடிவுகள் மிகவும் கடுமையானதாகக் கருதப்பட்டது. ஆகவே, நிலைமையைச் சமாளிக்க நீதிமன்றங்கள் தகுந்த வழியைக் கண்டுபிடித்தன.

In Re New British Iron Co. (1898) 1 ch. 324

இவ் வழக்கில் நிறுவனத்தின் செயல் முறை விதிகளின்படி 'A' என்பவர் வருடத்திற்கு £ 1000 சம்பளத்தில் நிறுவனத்தின் இயக்குநராய் நியமிக்கப்பட்டார். அப் பதவியில் அவர் பணியாற்றுகையில் விலக்கப்பட்டார். அவர் நிறுவனத்தின் மேல் தொடர்ந்த வழக்கில், அவர் நிறுவனத்துடன் செய்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்குச் சான்ருக உள்ளது செயல் முறை விதிகள். அவர் நிறைவேற்றக் கோருவது செயல் முறை விதிகளை அல்ல, அவர் நிறுவனத்துடன் செய்த ஒப்பந்தத்தைதான் என்று விளக்கம் தந்து, அதன்படி முடிவு செய்தது.

பொதுவாக வேற்று நபர் செயல் முறை விதிகளை நிறைவேற்ற முடியாது. ஆனால், அவர் நிறுவனத்துடன் செய்த ஒப்பந்தம், செயல் முறை விதிகளில் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வாயிலாக மேற்படி செயல் முறை விதிகளை நிறைவேற்றலாம்.

**(4) நிறுவனத்தின் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் எவ்வகையில் கட்டுப்பட்டுள்ளனர்** (Members inter se): அமைப்பு முறை ஏடும், செயல் முறை விதிகளும் அங்கத்தினர்களை, ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் செய்து கொண்டபடி கட்டுப்படுத்தவில்லை. ஆகையால், ஓர் அங்கத்தினர் மற்றொரு அங்கத்தினர் மீது நடவடிக்கை எடுக்கமுடியாது. ஓர் அங்கத்தினர் விதிகளை மீறினால் நிறுவனம்தான் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, இதர அங்கத்தினரல்லர். இதை வலியுறுத்தி பர்லாண்ட் v. எர்லி ['Burland v. Earle, (1920) A C 83'] என்ற வழக்கில், நிறுவனத்திற்குத் தவறு செய்யப்பட்டாலும், அல்லது பணம் வரவேண்டியிருந்தாலும், அதற்கு நிறுவனம்தான் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அது ஓர் அங்கத்தினரின் கடமை அல்ல என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், ஓர் அங்கத்தினர் தன் பொதுவான அங்கத்தினர் என்ற உரிமைகளையோ (ordinary membership rights)) அல்லது தனி உரிமைகளையோ (Special rights) பாதிக்கும்படி ஓர் அங்கத்தினர் நடந்து கொண்டால், அவர் மீது நடவடிக்கை எடுத்து அவரைக் கட்டுப் படுத்தலாம்.

புல்புருக் v. ரிச்மண்ட் கன்சோலிடேட்டட் சுரங்கக் கம்பெனி [Pulbrook v. Richmond Consolidated Mining Co. 9 Ch. D 610.]

இவ் வழக்கில் ஓர் இயக்குநர், தன்னை இயக்குநர் கூட்டத்தில் கலந்து கொள்வதை இதர இயக்குநர்கள் தடை செய்யாதிருப்பதற்கு நீதிமன்றத்திடம் உத்தரவு பெற்றார்.

ரேஃபீல்ட் v. ஹாண்ட்ஸும் மற்றவர்களும் [Rayfield v. Hands and others (1958) 2 WLR 851; (1960) ch. 1.]

இவ்வழக்கில் நிறுவனத்தின் செயல் முறை விதிகள் ஓர் அங்கத்தினர் தன் பங்குகளை மாற்றும் எண்ணத்தை இயக்குநர்களுக்கு அறிவிக்கவேண்டும் என்றும், அவ்வாறு அறிவித்தவுடன், இயக்குநர்கள் அதை நியாயமான விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டது. ஓர் அங்கத்தினர், பங்குகளை மாற்றும்

நோக்கத்தை அறிவித்தபோது, இயக்குநர்கள் அவைகளை வாங்க மறுத்தனர். நீதிமன்றம் இயக்குநர்களை அப் பங்குகளை வாங்கும் படி உத்தரவிட்டது.

மேலும், நிறுவனம் ஒரு சாதாரண அங்கத்தினர்கள் உரிமை களைத் தான் கட்டுப்படுத்தலாம். அவர்கள் சொந்த விவகாரங் களில் தலையிட முடியாது. இதைக் கீழ்க்கண்ட வழக்கு விளக்கு கிறது.

குசிராம் v. ஹனுத்மல் [Khusiram v. Hanutmal (1948) 53 EWN 505.]

ஒரு சாக்கு வியாபாரச் சங்கத்தின் செயல்முறை விதிகள் அங்கத்தினர்கள் தமக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை இசைவு தீர்ப்புமுறையில் (Arbitration) தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டது. இரண்டு அங்கத்தினர்களுக்குத் தங்கள் சொந்த வியாபாரங்களில் கருத்து வேறுபாடு தோன் றியது. அதை இசைவுதீர்ப்பு முறையில் தீர்த்துக் கொள்ளும்படி அவர்களை பலவந்தப் படுத்த முடியாது என்று நீதிமன்றம் கூறியது.

தவறு செய்யும் அங்கத்தினர்கள், நிறுவனம் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்காதபடி தடுத்தால், வேறு எந்த அங்கத்தினரும் தன் பெயரிலேயே அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கலாம், ஆனால், அத் தவறுகள் மிகச் சாதாரணத் தவறுகளாகவோ (ordinary irregularities), சாதாரண நடைமுறைகளாகவோ (ordinary Formalities) இருந்தால் போதாது. ஏனெனில், அவை களைப் பெரும்பான்மையான பங்குதாரர்கள் ஆமோதித்து மேற்படி தவறுகளைச் சரி செய்து விடலாம். இதைக் கீழ்க்கண்ட வழக்குத் தெளிவாக்குகிறது.

ஃபாஸ் v. ஹார்போட்டில் [Foss v. Harbottle 67 ER 189; (1843) 2 Hare 461.]

இரண்டு அங்கத்தினர்கள், இயக்குநர்கள் மோசடி செய்து, நிறுவனத்திற்கு உண்டாக்கிய நஷ்டத்தை, ஈடுசெய்யும்படி வழக்குத் தொடுத்தனர். ஆனால், நீதிமன்றம் மேற்படி தவறுகள் வாதி அங்கத்தினர்களைக் குறிப்பாக பாதிக்கவில்லை என்றும், நிறுவனத்திற்குப் பொதுவாக ஏற்படும் நஷ்டத்தை அங்கத்தினர் அனைவரும் ஆராய்ந்து செய்யும் முடிவின்படி நிறுவனந்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்தது.

மேலே குறிப்பிட்ட விதிகளுக்கு நிறுவனவியல் கீழ்க்காணும் விலக்குகளை அனுமதித்துள்ளது.

(1) நிறுவனம் சட்ட விரோதமான (illegal) செயலைச் செய்வதை எந்த அங்கத்தினருக்கும் தடுக்கும் உரிமை உண்டு.

(2) நிறுவனம் வரம்பு மீறிய (ultra vires) செயலைச் செய்வதை எந்த அங்கத்தினரும் தடை செய்யலாம்.

(3) நிறுவனம் தனித் தீர்மானம் கொண்டு (Special Resolution) செய்ய வேண்டியதை அவ்வாறு செய்யாவிடில், ஒரு அங்கத்தினர் அது அவ்விதம் செய்வதைத் தடைசெய்யலாம்.

(4) சிறுபான்மையினரை (minority) மோசம் செய்யும் வகையில் நிறுவனம் நடத்தப்பட்டால், பாதிக்கப் பட்டவர்கள் அதைத் தடை செய்யலாம். உதாரணமாக, முற்பகுதியில் குறிப்பிட்டபடி 'மினியர் v. ஹீப்பர்ஸ்' டெலிகிராஃப் ஓர்க்ஸ் ['Menier v. Hoopers' Telegraph Workes, (1874) 9 Ch. App. 350)]. என்ற இவ் வழக்கில் 'A' என்ற நிறுவனத்தின் பெரும்பான்மையான அங்கத்தினர் 'B' என்ற நிறுவனத்திலும் அங்கத்தினராய் இருந்தனர். 'B'-க்கு எதிராக 'A' செய்த வழக்கில், 'B'-க்குச் சாதகமாகச் சமரசம் செய்து 'A' நிறுவனத்தின் பொதுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதனால், பாதிக்கப்பட்ட A' நிறுவனத்தின், சிறு பான்மையினர், அதைத் தடை செய்யலாம் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

(5) நிறுவனம் செயல்முறை விதிகளை மீறினால் அங்கத்தினர் அதைத் தடை செய்யலாம்.

சாலமன் v. குயின் ஆஸ்டென்ஸ் லிமிடெட் [Salmon v. Quin Astens Ltd. (1909) Ac 442.]

நிறுவனத்தின் இயக்குநர்கள் குறிப்பிட்ட சொத்தை 'A' 'B' எவர் மறுத்தாலும் அதை விற்கக்கூடாது என்று செயல்முறை விதிகள் குறிப்பிட்டன. 'B' மறுத்தும், அந்தச் சொத்தை விற்பதற்கு நிறுவனத்தின் பொதுக்கூட்டத்தில் பெரும்பான்மையினர் அதை ஆமோதித்தனர். சிறுபான்மையினருக்கு நிறுவனம் அவ்வாறு செயல்முறை விதிகளை மீறிச் செய்வதைத் தடை செய்வதற்கு உரிமை உண்டு என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

(6) **அங்கத்தினர் தன் உரிமைகளுக்காக வழக்காடலாம்:** நாகப்பச் செட்டியார் v. மதராஸ் ரேஸ் கிளப் [Nagappa Chettiar v. Madras Race Club (1949) 1 M.L J. 662]. இவ் வழக்

கில் ஓர் அங்கத்தினர் தன் வாக்குரிமையை (Right to vote), நிறுவனம் பறிக்காத வகையில், அதைத் தடை செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டது.

**(7) சிறுபான்மையினரை ஒடுக்குதலும் நிறுவனத்தைத் தவறான முறையில் நடத்துதலும் :** நிறுவனச் சட்டத்தில் 397, 398ஆவது பிரிவுகளில், பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை ஒடுக்கினாலும் அல்லது நிறுவனத்தைத் தவறான முறையில் நடத்தினாலும், சிறுபான்மையினர் அப் பிரிவுகளில் கூறியுள்ள முறையில் நீதிமன்றத்தின் உதவி பெறலாம். இவைகளைப் பற்றிப் பிற்பகுதிகளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

அமைப்பு முறை ஏடும், செயல்முறை விதிகளும் பதிவாளரால் பதிவு செய்யப் பட்டவுடன் அவைகளில் குறிப்பிட்டவைகள் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் பொதுமக்களுக்குக் கொள்நிலை அறிவிக்கையாகும். ஆகவே, அவர்கள் அவைகளை அறிந்துள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

கொட்லா வெங்கடசாமி *v.* ராமமூர்த்தி [Kotla Venkatasamy *v.* Ramamurthi, A I.R. Madras 579] இவ் வழக்கில் நிறுவனத்தின் எல்லா ஒப்பாவணங்களிலும் (Deeds) மேலாண்மை இயக்குநரும், செயலாளரும் கையெழுத்துப்போட வேண்டும் என்று செயல் முறை விதிகள் குறிப்பிட்டன. ஒருவர், செயலாளர் மட்டும் கையெழுத்துச் செய்த ஒப்பாவணத்தை ஏற்றுக் கொண்டார். அதை மேலாண்மை இயக்குநரும் கையெழுத்திட வேண்டும் என்பது அவருக்குக் கொள்நிலை அறிவிக்கையாகும், ஆகையால் ஒருவர் மட்டும் கையெழுத்துச் செய்த அந்த ஒப்பாவணம், நிறுவனத்தைப் பாதிக்காது என்று நீதிமன்றம் கூறியது.

மேற்கூறிய கொள்நிலை அறிவிக்கைக் கோட்பாடு (Doctrine of constructive notice) பொது மக்களுக்குத் தீங்கு செய்யாத வகையில், உட்புற நடைமுறைக் கோட்பாடாக (Doctrine of Indoor management) உருவாக்கப்பட்டது. இக் கோட்பாட்டின் படி, பொதுமக்கள் ஒரு நிறுவனம், உட்புற நடைமுறைகளைப் (internal formalities) பின்பற்றியதா அல்லவா என்பதை ஆராய வேண்டியதில்லை. நிறுவனம் அவைகள் யாவையும் பின்பற்றியதாக அவர்கள் துணிவு கொள்ளலாம். உண்மையில் நிறுவனம் அவைகளைப் பின்பற்றாவிட்டாலும், நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் பொதுமக்கள் அத்தவற்றினால் பாதிக்கப்பட மாட்டார்கள்.

உட்புற நடைமுறைக் கோட்பாட்டின் (Doctrine of indoor management) விளைவை விளக்கிய வகையில் மிகவும் புகழ்பெற்ற வழக்கு ராயல் பிரிட்டீஸ் வங்கி v. டுர்க்குவான்ட் [Royal British Bank v. Turquand, (1856) 119 ER 886].

இவ் வழக்கில் நிறுவனத்தின் இயக்குநர்கள், பொதுக் கூட்டத்தில் அவ்வப்போது தீர்மானம் செய்தபடி கடன் பத்திரம் (Bond) எழுதி கொடுத்துக் கடன் பெறலாம் என்று செயல் முறை விதிகள் குறிப்பிட்டன. ஆனால், அவர்கள், நிறுவனத்தின் தீர்மானமின்றி 'T' என்பவருக்குக் கடன்பத்திரம் எழுதிக்கொடுத்துக் கடன் பெற்றனர். 'T' என்பவர் உண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என ஆராய வேண்டியதில்லை. அவ்வகைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவே அவர் எண்ணலாம். ஆகையால், அவருக்கு வழங்கப்பட்ட கடன்பத்திரம், நிறுவனத்தின் தீர்மானம் இல்லாவிட்டாலும், அதைக்கட்டுப் படுத்தும் என்று நீதி மன்றம் முடிவு கூறியது.

ஆனால், உட்புற நடைமுறைக் கேட்பாட்டிற்குப் பல விலக்குகள் (exceptions) உள்ளன. அவை பின் வருமாறு:

(1) தவறானவை என்பதை உணர்ந்தவர் உட்புற நடைமுறைக் கோட்பாட்டின் பயனைப் பெறமுடியாது. ஹாவார்ட் v. பேடண்ட் ஐவரி மானுபாக்சரீஸ் கம்பெனி [Howard v. Patent Ivory Manufacturing Co. (1888) 38 Ch. D. 156] இவ் வழக்கில் நிறுவனத்திற்காகக் கடன் பெறுவதற்கு இயக்குநர்களுக்கு அதிகாரம் இருந்தது. ஆனால், ஆயிரம் பவுன்களுக்கு மேல் கடன் வாங்க, நிறுவனத்தின் அனுமதி பெறவேண்டும். அவ்வாறு அனுமதி இல்லாமல் அந் நிறுவனத்தின் இயக்குநர்களே, நிறுவனத்திற்கு 3,500 பவுன் கடன் வழங்கி, கடனீட்டுப்பத்திரங்கள் பெற்றுக் கொண்டனர். அந்தக் கடனீட்டுப் பத்திரங்கள் 1000 பவுன் வரைதான் செல்லும் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

(2) **நிறுவனத்தின் நடத்தை ஐயுறும் வண்ணம் இருத்தல்**
ஆனந்த் பிகாரி லால் v. தின்ஷா அண்ட் கம்பெனி [Anand Bihari Lal v. Dinshaw & Co (A. I., R. 1942) Owdh 417 ]

ஒரு நிறுவனத்தின் கணக்காளர் (Accountant) நிறுவனத்தின் சொத்தை உரிமை மாற்றம் செய்தார். சாதாரணமாக ஒரு கணக்கருக்கு நிறுவனத்தின் சொத்தை உரிமை மாற்ற செய்யும் அதிகாரம் கிடையாது. ஐயுறத்தக்க சூழ்நிலையில் அவரிடம் சொத்தை வாங்கியது செல்லாது என்று நீதி மன்றம் முடிவு செய்தது.

(3) **பொய்யாவணம் புனைதல்** (Forgery)

கிரடிட் வங்கி v. ஷெங்கர்ஸ் [Kredit Bank v. Schenkers (1927) I.K B 826.]

செயல் முறை விதிகளின்படி வங்கியின் (Bank) இயக்குநர்கள் தங்கள் அதிகாரங்களை அளிப்படைவு செய்யும் (delegate) உரிமை பெற்றிருந்தனர். ஆனால், இயக்குநர்கள் அவ்வாறு அளிப்படைவு செய்யாமல், ஒரு கிளை அதிகாரி (Branch Manager) மாற்றுச் சீட்டு (Bill of exchange) வழங்கினர். அந்த மாற்றுச் சீட்டு ஒரு முறைப் படி கொண்டவர் (Holder in due course) கைவசம் சேர்ந்தது. இருப்பினும் அது பொய்யாவணம், ஆகையால், வங்கி அதற்குக் கட்டுப்பட்டதல்ல என்று நீதி மன்றம் முடிவு செய்தது.

இவ்விதமே ரூபன் v. கிரேட் ஃபின்கால் கன்சாலிடேட்டட் லிமிடெட் [Ruben v. Great Fingall Consolidated Ltd (1906) A.C 439.] என்ற வழக்கில் பொய்யாவணம் (Forged document) நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது என்று குறிப்பிடப்பட்டது. இவ் வழக்கின் விவரங்கள் பின்வருமாறு :

இவ் வழக்கில் நிறுவனத்தின் செயலாளர், பங்குச் சான்றிதழில் (Share certificate) மோசடியான முறையில் நிறுவனத்தின் முத்திரையிட்டு, இரண்டு இயக்குநர்களின் கள்ளக் கையெழுத்திட்டு வழங்கினர். சான்றிதழ் பொய் ஆவணமாகையால் (Forged document), அது நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது என்று முடிவு செய்யப்பட்டது.

(4) வழக்கமான அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட செய்கைகள் (Acts outside apparent authority) :

நிறுவனத்தின் செய்கை, வழக்கமான அதிகாரத்திற்கப்பாற்பட்டதாயின், அது நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது. ஏ. எல். அண்டர்வுட் லிமிடெட் v. லிவர்பூல் வங்கி (A.L. Underwood Ltd. v. Bank of Liverpool), என்ற இவ் வழக்கில் இயக்குநர் நிறுவனத்திற்குரிய காசோலைகள் (Cheques), தன் கணக்கில் (Account) சேர்த்துக் கொள்ளும்படி கூறினர். அவர் அதிகாரம் வழக்கத்தை மீறியதாகையால், அது நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாதென்று குறிப்பிடப்பட்டது.

(5) நிறுவனத்தின் செய்கைக்குத் தனித் தீர்மானம் தேவைப்படுதல் (Transaction requiring authority of a special

resolution) : நிறுவனத்தின் செய்கைக்குத் தனித் தீர்மானம் தேவையாயின், அது முறையே செய்யப்பட்டுள்ளதா வென்பதை, நிறுவனத்துடன் தொடர்பு கொள்வோர், பதிவாளர் அலுவலகத் தில் மேற்படி விவரங்களைக் கண்டறியலாம். ஆகையால், மேற்படிச் செய்கைகள் தனித் தீர்மானமின்றிச் செய்யப்படின், அவைகள் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது.

**(6) அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதிகளுள்ளவற்றை அறியாதிருத்தல்** (No knowledge of the contents of the Memorandam and Articles of Association).

நிறுவனத்தின் அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதிகளில் உள்ளவற்றை அறியாதவர், அவைகள் தனக்குக் கொள்நிலை அறிவிக்கையாகும் (constructive notice) என்று கூறி, அவைகளை நிறுவனத்திற்' கெதிராகப் பயன்படுத்த முடியுமா என்பதில் மிகவும் ஆழ்ந்த கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஒரு சில வழக்கு களில் அவைகளை அறிந்தவர் தான் நிறுவனத்தைக் கட்டுப்படுத் தலாமென்றும், மற்றும் சில வழக்குகளில், அவை அறவே தேவை யில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளன. இம் முடிவுகளைக் கொண்டு கீழ்க்கண்டவாறு தெளிவு காணலாம் :

(1) அதிகாரியின் செய்கை வழக்கமான அதிகாரத்திற்கு (Ostensible authority) உட்பட்டதாயின், அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதிகளுள்ளவற்றை அறிந்திருக்கத் தேவையில்லை. ஏனென்றால், நிறுவனம் அதற்குக் கட்டுப்பட்டது (Principal bound for ostensible authority).

(2) ஆனால், அதிகாரியின் செய்கை அதிகார வரம்பிற்கு அப் பாற்பட்டதாயின், அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதி களுள்ளவற்றை அறிந்தவர்தான் நிறுவனத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

மேற்கூறிய துணிபுகளைக் கீழ்க்காணும் வழக்குகளில் காண லாம்.

(1) லட்சுமி ரத்தன்லால் பருத்தி ஆலை லிமிடெட் v. ஜே. கே. சணல் ஆலைக் கம்பெனி [Lakshmi Rattan Lal Cotton Mills Ltd. v. J. K. Jute Mills Co. A.I.R. (1957) All. 311].

இவ் வழக்கில் 'A' என்பவர் நிறுவனத்தின் இயக்குநர். நிறுவனத்தின் செயல்முறை விதிகள், இயக்குநர்களுக்குக் கடன்

வாங்கவும் அவ்வதிகாரத்தை இதர இயக்குநருக்கு அளிப்படைவு செய்யவும் (Delegate) அதிகாரம் வழங்கியது. 'A' என்பவர் நிறுவனத்திற்காகச் செயலுறுவதாக நடித்து, மேற்படி செயல் முறை விதியை அறியாத வாதியிடம் கடன் வாங்கினுர். ஆனுல், நிறுவனம் 'A' என்பவருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும், ஆகையால், கடனுக்குக் கட்டுப்பட முடியாதெனவும் மறுத்தது. நீதிமன்றம் 'A'யின் செய்கை அவரது வழக்கமான அதிகார வரம்பிற்குட்பட்டதாகையால், நிறுவனம் அதற்குக் கட்டுப்பட்டதென்றும், வாதி செயல் முறை விதியை அறிந்திருக்கத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டது.

இதே மாதிரி முகமது *v*. ரவத் பாம்பே ஹவுஸ் ['Mohamed *v*. Ravat Bombay House (1958) 4 S. A. 704'.] என்ற இவ் வழக்கில் வாதி, இயக்குநர் எழுதிக் கொடுத்த இரு கடனுறுதிச் சீட்டுகளின் பேரில் (On promissory notes) ஒரு நிறுவனத்தின்மீது வழக்குப்போட்டார். பிரதிவாதி நிறுவனத்தின் செயல் முறை விதிப்படி, அதனின் ஆவணங்கள் குறிப்பிடப்பட்டாலன்றி, இரு இயக்குநர்களால் கையெழுத்திடப்பட வேண்டும். இதனுல் பிரதிவாதி நிறுவனம் தன் பொறுப்பை மறுத்தது. ஆனுல், பிரதிவாதி கடன்களுக்குக் கட்டுபட்டதென்று முடிவு செய்யப் பட்டது.

ஆனுல், ராமா கார்பரேஷன் *v*. புருவ்டு டின் அண்ட் ஜெனரல் இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனி [Rama Corporation *v*. Proved Tin and General Investment Co, (1952) 2. Q.B. 147] என்ற இவ் வழக்கில் ஒரு நிறுவனத்தின் செயல் முறை விதிகள் இயக்குநர்கள் தங்கள் அதிகாரத்தை அளிப்படைவு செய்யலாம் (delegate) என்று கூறியது. நிறுவனத்தின் இயக்குநர் வாதி நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து, அதற்காக ஒரு காசோலையும் பெற்றுக்கொண்டார். பிரதிவாதி நிறுவனம் தன் பொறுப்பை மறுத்தது, இயக்குநருக்கு அவ்வதிகாரம் வழங்கப் படாத காரணத்தால் நீதிமன்றம், இயக்குநரின் செய்கை அவர் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்றும், செயல் முறை விதிகள் அவ் வதிகாரத்தை அளிப்படைவு செய்ய அதிகாரம் வழங்கினுலும், அவ்விதிகளையே அறியாத வாதி அவைகளை நிறுவனத்திற்கு விரோதமாகப் பயன்படுத்த முடியாது என்றும் முடிவு செய்தது.

அதேபோல் ஹவுட்டன் அண்ட் கம்பெனி *v*. நாதர் டுலோ அண்ட் வில்ஸ் கம்பெனி [Houghton and Co. *v*. Nothard, Lowe and Wills Ltd. (1927) I. K.B. 246].

பழ வியாபாரத்திலீடுபட்ட இரு நிறுவனங்களிலும் இயக்குநரான ஒருவர் பழத்தரகரிடம் ஒரு நிறுவனத்திற்காகக் கடன் வாங்கினுர். அதற்காகத் தரகருக்கு, இரு நிறுவனங்களின் பழங்களை விற்கும் உரிமை வழங்கி, அதற்குரிய தரகைக் கடனுக்கு ஈடுசெய்து கொள்ளும்படி வாதியுமான ஒப்பந்தம் செய்தார். பிரதிவாதி நிறுவனத்தின் செயலாளரும் மேற்படி ஒப்பந்தத்தை உறுதி செய்தார். ஆனுல், நிறுவனம் இயக்குநருக்குக் கடன் வாங்க அதிகாரம் வழங்கப்படவில்லை என்று பொறுப்பை மறுத்தது. நீதி மன்றம் இயக்குநர் செய்கை அவர் வழக்கமான அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதென்றும், ஆகையால், செயல் முறை விதிகளை அறியாத வாதி, அவைகளை நிறுவனத்திற்கு விரோதமாகப் பயன்படுத்த முடியாதென்றும் கூறியது.

# 4. திட்ட அறிவிப்பு

## (Prospectus)

ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்குத் திட்ட அறிவிப்பைத் தயாரிப்பது மிகவும் முக்கியமானவைகளில் ஒன்றாகும். பொது மக்கள் பெருவாரியாகத் தங்கள் பணத்தை நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்ய, தேர்ச்சி பெற்றவர்களால் தக்க முறையில் திட்டவட்டமாகத் தீட்டப்பட்ட திட்ட அறிவிப்பு மிகவும் இன்றியமையாததாகும். மேலும், திட்ட அறிவிப்புத் தீட்டுவதில் தெரிந்தோ தெரியாமலோ சட்ட நெறி முறைகளைச் சற்றுத் தவறினும், துவக்குநர்கள் (Promoters), இயக்குநர்கள் (Directors) மற்றும் அந்நிலையில் உள்ள அனைவரும் இடுக்கண்களுக்கு இலக்காகின்றனர். ஆகவே, நிறுவப்பட்ட நிறுவனம் நீடித்து நிற்பதும் நிலைகுலைந்து விடுவதும் திட்ட அறிவிப்பைப் பொறுத்தது என்று கூறுவது மிகையாகாது.

**வரையறை** (Definition) : இந்திய நிறுவனச் சட்டத்தில் 2 (36)ஆவது பிரிவில் 'திட்ட அறிவிப்பு' வரையறை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, திட்ட அறிவிப்பு என்பது, திட்ட அறிவிப்பென வழங்கப்பட்ட அல்லது அவ்வாறு வர்ணிக்கப்பட்டு வழங்கப்பட்ட, எவ்வகையான ஆவணத்தையும் குறிப்பதோடு, அது எவ்வகையான அறிக்கை, சுற்றறிக்கை, விளம்பரம், அல்லது வேறு வகையான ஆவணம் முதலானவை அடங்கியதாகி, நிறுவனத்தின் பங்குகளை அல்லது கடனீட்டுப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும்படி பொது மக்களை அழைப்பதாகும். இவ் வரையறை, திட்ட அறிவிப்பின் இயல்பை ஒருவாறு இயம்பினும், நீதிமன்றங்கள் இவ்வரையறைக்கு வழங்கிய விளக்கங்களும், வழக்குகளில் வழங்கிய முடிவுகளும், திட்ட அறிவிப்பின் முழு இயல்பை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளன. அவைகளைக்

கொண்டு திட்ட அறிவிப்பின் இயல்பைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம் :

அழைப்பு, பொதுமக்களுக்கு அனுப்பப்பட்டதாயிருக்க வேண்டுமேயன்றி ஒரு சில நண்பர்கள் அல்லது சுற்றத்தினர் அல்லது பழக்கமுடையவர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பு, பொது மக்களை விளித்ததாகாது என்று ஷெர்வெல் v. கம்பைண்ட் இன்கண்டிசண்ட் மேன்டில்ஸ் சிண்டிகேட் [Sherwell v. Combine Incandescent Mantles Syndicate (1907) 23 T.L.R. 482] தெளிவாக்கியுள்ளது.

இன் ரி சவுத் ஆஃப் இங்கிலாண்டு நேச்சுரல் காஸ் கம்பெனி லிமிடெட் [In Re South of England Natural Gas Co. Ltd. (1911) 1 Ch 573] என்ற வழக்கில், பொதுமக்கள் என்பது அவர்களின் ஒரு பகுதியையும் சார்ந்ததாகும் என்று குறிப்பிடப்பட்டது. இவ் வழக்கில் திட்ட அறிவிப்பின் 3000 நகல்கள் ஆவி உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றுதான் உறுப்பினர்களுக்கு வழங்கியது பொதுமக்களுக்கு வழங்கியதாகுமென முடிவு செய்யப்பட்டது.

பிரமாதநாத் சன்யால் v. காளிகுமார் தத் [Pramatha Nath Sanyal v. Kali Kumar Dutt, (1925) A.I.R. Cal. 714]. இவ் வழக்கில் ஒரு செய்தித்தாளில், ஒரு சில பங்குகளே உள்ளன என்றும் அவை திட்ட அறிவிப்பின் கட்டுதிட்டங்களுக்குட் பட்டு வழங்கப்படும் என்ற செய்தி விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி அறிவிப்புத்திண்ணமாகத் திட்ட அறிவிப்பெனத் தயங்காமல் தெரிவித்தது நீதிமன்றம்.

ஆனால், நாஸ் v. லிண்டி [Nash v. Lynde (1929) A.C 158], என்ற வழக்கில், மந்தனமானதும் மறைவானதுமான செய்தி அறிவிப்பு (Confidential and Private Communication) திண்ணமாக திட்ட அறிவிப்பு அல்ல என்று தெளிவாக்கப்பட்டது. இவ் வழக்கில் திட்ட அறிவிப்பின் வடிவம் கொண்ட ஓர் ஆவணம் முற்றிலும் மறைவானதும் மந்தனமானதும் (Strictly private and confidential) என்று குறிப்பிடப்பட்டது. நீதிமன்றம் அது திட்ட அறிவிப்பு அல்லவென அறிவித்தது. அவ்விதமே, ஒரு நிறுவனம் தன் பங்குகளை வேறொரு நிறுவனத்தின் பங்குகளுடன் மாற்றிக் கொள்வதற்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை, பி. 2(36) வரையறை செய்யப்பட்டுள்ளபடி, திட்ட அறிவிப்பு அன்று, என்று நன்றாகக் காரணங்களுடன் விளக்கப்பட்டது. [Govt. Stock Rly Co. v. Manila Rly. Co. (1897) A 4.81] என்ற வழக்கில் முதற் காரணம், "சந்தா" (Subscription) என்றால் பணம் கொடுத்து வாங்குவதே தவிர,

பங்குகளாகவோ அல்லது வேறு பண்டங்களோ பெறுவது அல்ல என்றும். இரண்டாவது காரணம், அழைப்பு, பொதுமக்களுக்கு விளிக்கப்பட்டது அல்ல வென்றும் குறிப்பிடப்பட்டது.

திட்ட அறிவிப்பு, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டதா, அல்லவா என்பதை, அவ் வழக்குகளில் அவற்றின் விவரங்களைக் கொண்டு முடிவு செய்யப்பட வேண்டிய உண்மையாகும். உண்மையான சோதனை (Real Test) அழைப்பு யாருக்கு வழங்கப் பட்டது என்பதல்ல, யார் அதை ஏற்றுக் கொள்ளக்கூடும் என்பது தான் என்று சுருங்கச் சொல்லி விளங்கவைக்கப்பட்டுள்ளது.

கவர்மெண்ட் ஸ்டாக் அண்ட் அதர் ஸெக்யூரிடீஸ் இன்வேஸ்ட் மெண்ட் v. மணிலா ரயில்வே (Government Stock and other Securities Investment Co. v. Manila Rly. Co. (1897) A. C. 81 என்ற வழக்கில் அதாவது ஒருவருக்கு அனுப்பப்பட்ட அழைப்பு பொது மக்களில் யார் வேண்டுமென்றாலும் ஏற்றுக்கொள்ளும் உரிமை உடையவராய் இருக்கவேண்டும்.

**திட்ட அறிவிப்பாகக் கருதப்படும் ஆவணம்** (Document deemed to be Prospectus) : ஒரு நிறுவனம் தன் பங்குகளையோ அல்ல கடனீட்டுப் பத்திரங்களையோ மறுபடியும் பொது மக்களுக்கு விற்கப்படும் நோக்கத்துடன் வழங்கினால், அப் பங்குகளும் கடனீட்டுப் பத்திரங்களும் பொதுமக்களுக்கு வழங்க, விடுக்கும் அறிவிப்பும், திட்ட அறிவிப்பாகக் கருதப்படும் என்று மிகவும் தெளிவாக 64ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனம் வழங்கிய பங்குகள் ஆறு மாதங்களுக்குள் மறுபடியும் பொது மக்களுக்கு விற்கப்பட்டாலும் அல்லது பங்குகளை வழங்கியபோது நிறுவனம் அதற்குரிய முழு மறுபயனை (Full Consideration) பெறு விட்டாலும், மேற்படி பங்குகள் பொது மக்களுக்கு விற்கப்படும் நோக்கத்துடன் வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

திட்ட அறிவிப்புத் தீட்டப்பட வேண்டிய முறைகளும், அதில் தவறாமல் தெரிவிக்கவேண்டிய தகவல்களும், தவறினால் தரப்படும் தண்டனைகளும் நிறுவனச் சட்டத்தில் 55-லிருந்து 63 பிரிவுகளில் தெள்ளத் தெளிய தெரிவிக்கப்பட்டுள்ளது.

55ஆவது பிரிவு, நிறுவனம் வெளியிடும் திட்ட அமைப்பில் தேதியைக் குறிப்பிடவேண்டும் என்றும், அந்தத் தேதியே, அதற்கு மாறாகக் குறிப்பிட்டா லொழிய, திட்ட அறிவிப்பு வெளி யான தேதியாகக் கொள்ளப்படுமெனக் கூறுகிறது.

56ஆவது பிரிவில் திட்ட அறிவிப்பு வெளியிட வேண்டிய முறைகளும், தெரிவிக்கவேண்டிய தகவல்களையும், தவறினால் தரப்படும் தண்டனைகளும், தண்டனைகளிலிருந்து தப்புவதற்குரிய விவரங்களையும் விவரமாக விளக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிறுவனத்தால் அல்லது நிறுவனத்திற்காகவோ அல்லது நிறுவனத்தை நிறுவும் முயற்சியிலீடு பட்டவரால், அல்லது அவருக்காக வெளியிடப்பட்ட ஒவ்வொரு திட்ட அறி விப்பும், நிறுவனச் சட்டத்தின் இரண்டாவது பின் இணைவில் (Second Schedule) முதல் பாகத்தில் கண்ட விவரங்களையும் இரண்டாவது பாகத்தில் கண்ட அறிக்கைகளையும் குறிப்பிட வேண்டும் என்றும், மேற்படி முதலிரண்டு பாகங்களும் மூன்றும் பாகத்தில் குறிப்பிடப் பட்டவைகளுக்குட்பட்டது என்றும் குறிப்பிடுகிறது.

மேலும், அப் பிரிவில் கண்ட விதிகளைத் தட்டிக் கழிக்கச் செய்யப்படும் கட்டுதிட்டங்களும், திட்ட அறிவிப்பில் அறிவிக்கப் படாதவைகளும், கொள்நிலை அறிவிக்கை (Constructive notice) யாகுமெனவும் செய்யப்படும் உடன்பாடுகளும் முற்றிலும் செல்லாதவை என்றும் பிரிவு கூறுகிறது.

பங்குகளுக்காக அல்லது கடனீட்டுப் பத்திரங்களுக்காக எவ் வகையான விண்ணப்ப வடிவமும் (Application Form) மேலே குறிப்பிட்டபடி தயாரிக்கப்பட்ட திட்ட அறிவிப்பின்றி ஒருவரும் தரக்கூடாதென்றும், மீறியவர்கள் ஐயாயிரம் ரூபாய்கள் வரை தண்டவரி விதிக்கப்படுவர் என்றும் அப் பிரிவு குறிப்பிடுகிறது. ஆனால், காப்பீடு கொடுத்தவர்களுக்கு (underwriter) வழங்கப் படும் பங்குகளும் பொது மக்களுக்கு வழங்கப்படாத பங்குகளும் இவ்விதிக்கு விலக்காகும்.

திட்ட அறிவிப்புக்குப் பொறுப்புள்ள இயக்குநரும் அல்லது வேறு எவரும், திட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்படாத தகவல்கள் தனக்குத் தெரியாதென்றும், அல்லது பிரிவின்படி நடவாததும் அல்லது, அதை மீறியதும் உண்மையில் தம்முடைய ஒரு பொருண்மை தவற்றினால் உண்டானதென்றும், அல்லது அவ்வாறு நடவாததும் மீறியதும் சிறு பிழைகள் அல்லது எளிதில் மன்னிக்கக் கூடியவை என்றும் நிரூபித்தால் அவர் அதற்காக தண்டிக்கப்பட மாட்டார். ஆனால், எந்த இயக்குநரும் அல்லது வேறு எவரும், இரண்டாவது பின் இணைவில் 18ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் திட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்படாவிட்டால், அவை

களை அவர் அறிந்தவர் என்று நிரூபிக்கப்பட்டாலன்றி அவர் அதற்குப் பொறுப்பாக மாட்டார்.

உள்ள உறுப்பினர்களுக்கும் (existing members) கடனீட்டுப் பத்திரக்காரர்களுக்கும் வழங்கப்படும் திட்ட அறிவிப்பும், விண்ணப்ப வடிவங்களும், நிறுவனத்தால் முன்னதாகவே வழங்கப்பட்டு, பங்கு மாற்றக் களத்தினரால் (Share dealt with by stock exchange) கையாளப்படும் பங்குகளுக்கு வழங்கப்படும் திட்ட அறிவிப்பும், விண்ணப்ப வடிவங்களும் இப் பிரிவுக்கு விலக்காகின்றன.

மேலே குறிப்பிட்டவைகளுக்குட்பட்டு ஒரு திட்ட அறிவிப்பும், விண்ணப்ப வடிவமும் இப்பிரிவில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்குட்பட்டதாகும். மேலும், பொது சட்டநெறியிலும் (general law), இதர சட்டங்களிலும், யாதொருவருக்குமுள்ள பொறுப்பை இப்பிரிவு எவ்வகையிலும் மட்டுப்படுத்தவும், கட்டுப்படுத்தவுமில்லை என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

57ஆவது பிரிவின்படி ஒரு வல்லுநர் நிறுவனத்தை நிறுவுவதிலும் அல்லது நடத்துவதிலும் சற்றுப் பற்றுதலற்றவராய் இருந்தாலொழிய, அவ் வல்லுநர் (Expert) கருத்தையோ அல்லது வாக்கு மூலத்தையோ திட்ட அறிவிப்பில் குறிப்பிடலாகாது.

58ஆவது பிரிவின்படி திட்ட அறிவிப்பு வல்லுநரின் வாக்குமூலம் (statement) கொண்டதாயின், வாக்குமூலத்தின் மாதிரிக்கும் (form), அது திட்ட அறிவிப்பில் சேர்க்கப்பட்ட இடத்திற்கும் அவர் இசைவு அளித்தாரென்றும், அவர் அதை திட்ட அறிவிப்புப் பதிவு செய்ய அளிக்கப்படும் வரை மறுத்தழிக்கவில்லை (withdraew his consent) என்றும் அவரிடம் எழுத்துமூலம் ஒப்புதல் பெறுவதோடு, மேற்படி விவரங்களை திட்ட அறிவிப்பிலும் தெளிவுபடுத்த வேண்டும்.

57, 58ஆவது பிரிவுகளுக்கு மாறாகத் திட்ட அறிவிப்பு வெளியிட்டால் அத் தவறை உணர்ந்து, அத் திட்ட அறிவிப்பை வெளியிட்ட ஒவ்வொருவரும், ஐயாயிரம் ரூபாய் வரையில் தண்டவரி விதிக்கப்படுவர். மேலும், இப் பிரிவுகளில் வழங்கப்பட்ட 'வல்லுநர்' என்னும் வார்த்தை, பொறியியல் வல்லுநரையும், (Engineer), மதிப்பிடும் வல்லுநரையும் (Valuer), கணக்கியல் வல்லுநரையும் (Accountant) மற்றும் தம் வாக்குமூலத்துக்கு அதிகாரம் வழங்கத்தக்க தொழிலுடைய வரையும் குறிப்பிடுவதாகும்.

**திட்ட அறிவிப்பைப் பதிவு செய்தல்** (Registration of the Prospectus: திட்ட அறிவிப்புப் பதிவு செய்யப்பட வேண்டிய தைப்பற்றி 60ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி திட்ட அறிவிப்பு வெளியிடும் அன்று அல்லது அதற்கு முன் தேதியில், அதில் குறிப்பிடப்பட்ட இயக்குநர்கள் யாவரும் கையெழுத்திட்ட அதன் நகலை, நிறுவனம் மேற்கொண்ட ஒப்பந்தங்கள், வல்லுநரின் இசைவு (Expert's Consent), இரண்டாவது பின் இணைவில் (Second schedule) குறிப்பிடப்பட்ட சரிக்கட்டல்களின் (Adjustments) விவரங்களையும் இணைத்து, பதிவு செய்வதற்குப் பதிவாளரிடம் தருவதுடன் அது அவ்வாறு தரப்பட்டதைத் திட்ட அறிவிப்பின் ஒவ்வொரு நகலிலும் குறிப்பிடவேண்டும்.

திட்ட அறிவிப்பு, 55, 56, 57, 58ஆவது பிரிவுகளுக்கிணங்க இருந்தாலன்றிப் பதிவாளர் அதைப் பதிவு செய்யக்கூடாது. திட்ட அறிவிப்பினைப் பதிவாளரிடம் பதிவு செய்யாமல் வெளியிடுபவர், அந்தத் தவறை உணர்ந்து செய்தவராயின் ஐயாயிரம் ரூபாய் வரையில் தண்டவரி விதிக்கப்படுவார்.

**திட்ட அறிவிப்பின் பொருளடக்கம்** (Contents of a Prospectus): நிறுவனம் நிறுவுபவர்களின் பொறுப்பை எளிதாக்கும் முறையில், நிறுவனச் சட்டத்தின் இரண்டாவது பின் இணைவின் முதற் பகுதியில், திட்ட அறிவிப்பில் தரப்படவேண்டிய தகவல்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன. அவை பின் வருமாறு :

(1) நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களும், அமைப்பு முறை ஏட்டில் (Memorandum of Association), கையெழுத்திட்டவர்களும், அவர்களின் பெயர், முகவரி, தொழில், ஏற்றுக்கொண்ட பங்குகளின் எண்ணிக்கை முதலான விவரங்கள்.

(2) பங்குகளின் எண்ணிக்கையும், அவைகளின் வகைகளும், நிறுவனத்தின் சொத்துக்களிலும், ஆதாயங்களிலும், பங்குதாரர்களுக்குரிய நலனின் (Interest) தன்மையும் அளவும்.

(3) மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகளின் (Redeemable Preference shares) எண்ணிக்கை, அவைகள் மீட்கப்படும் தேதி, தேதி குறிப்பிடாவிடில், மீட்பதற்குத் தேவையான அறிக்கை, மீட்கப்படும் முறைகள் முதலானவைகள்.

(4) இயக்குநரின் தகுதிக்குரிய பங்குகளின் எண்ணிக்கை.

(5) இயக்குநர் என்ற முறையிலும் வேறு வகையிலும் ஆற்றும் பணிகளுக்கு இயக்குநர்கள் பெறும் ஊதியம்.

*(6)* இயக்குநர், மேலாண்மை இயக்குநர் (Managing Director) மேலாண்மை முகவர் (Managing Agent) செயலாளரும் பொருளாளரும் (Secretary and Treasurer) முதலானோர் பெயர்களும், முகவரிகளும், தொழில்களும், அவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியமும் அவர்களைப் பதவியிலிருந்து விளக்குவதற்கு வழங்கப்படும் இழப்பீடு முதலான விவரங்கள்.

*(7)* ஒரு நிறுவனம் இயக்கும் முகவராக அல்லது, பொருளாளரும் செயலாளருமாகப் பணியாற்றினால், அது ஏற்றுக் கொண்ட பங்குத்தொகை (Subscribed capital)

*(8)* குறைந்த அளவு தேவையான பங்குத்தொகை (minimum amount of Subscription).

*(9)* பங்குக் கட்டணப் பட்டியல் ஆரம்பிக்கும் காலம் (Time of Opening of the Subscription list).

*(10)* விண்ணப்பத்துடனும், பங்கு ஒதுக்கப்படும்போதும் செலுத்த வேண்டிய தொகைகள். இரண்டு வருடங்களுக்குள் ஒவ்வொரு முறையும் வழங்கப்பட்ட தொகையும், அதில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, செலுத்தப்பட்ட தொகைகளும்.

*(11)* நிறுவனம் பங்குகள் கடனீட்டுப் பத்திரங்கள் வழங்குவதற்குப் பிறருடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் முழு விவரங்கள்.

*(12)* நிறுவனம் இரண்டு வருடங்களுக்குள் பணமின்றி வழங்கிய, முழுவதும் அல்லது ஒரு பகுதிமட்டும் செலுத்தப்பட்டதாக வழங்கிய பங்குகளின் எண்ணிக்கையும், தொகையும், அவைகளின் முழு விவரங்களும்.

*(13)* திட்ட அறிவிப்பு வெளியிடுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன் ஒவ்வொரு பங்கிலும் வாங்கிய அல்லது கொடுத்த மிகை ஊதியம் (Premium), தள்ளுபடி செய்து வழங்கப்பட்ட பங்குகள் முதலானவைகளைப்பற்றிய முழு விவரங்கள்.

*(14)* பங்குகளுக்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் காப்பீடு செய்பவர்களின் (underwriters) பெயர், அவர்கள் செல்வாக்கு, செல்வநிலை முதலிய விவரங்கள்.

*(15)* நிறுவனத்திற்குச் சொத்துகள். விற்றவர்களின் பெயர், முகவரி, தொழில், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்க வேண்டிய மறு பயனின் முழு விவரங்கள்.

(16) கடந்த இரு வருடங்களுக்குள் காப்பீடு செய்தவர் களுக்குத் தரப்பட்ட அல்லது தரப்பட வேண்டிய தரகுத் தொகை (commission) தரப்பட்ட தரகு விகிதம், அவர்களுடைய பெயர், முகவரி முதலான விவரங்கள்.

(17) செய்த அல்லது செய்யப்படும் முன் செலவினங்கள் (Preliminary expenses).

(18) கடந்த இரு ஆண்டுகளுக்குள் துவக்குநர்களுக்குத் (Promotors) தந்த அல்லது தரப்பட வேண்டிய தொகைகளைப் பற்றிய தகவல்கள்.

(19) மேலாண்மை இயக்குநர், (Managing Director) மேலாண்மை முகவர் (Managing Agent), செயலாளரும் பொரு ளாளரும் (Secretary and Treasurer) அமர்த்தப்படுவதற்குச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களும், மற்றும் இதர முக்கியமான ஒப்பந்தங்களின் முழு விவரங்களும்.

(20) தணிக்கையாளர்கள் (Auditors) இருப்பின், அவர்கள் பெயர், முகவரி முதலிய விவரங்கள்.

(21) துவக்குநர்கள் (Promotors), இயக்குநர்கள் (Directors) இவர்களுக்கு நிறுவனத்தில் உள்ள பற்றுதலின் தன்மை அளவு, நிறுவனம் ;கொள்முதல் செய்த சொத்துகளில் அவர்களுக்குள்ள நலன் (Interest), அவர்கள் அதற்குப் பெற்ற மறுபயனின் முழு விவரங்கள்.

(22) பங்குகள் பலவகையாகப் பிரிக்கப்பட்டிருப்பின் பல வகையான பங்குதாரர்களின் ஓட்டு உரிமைகள், முதலிலும் (Capial) ஆதாயத்திலும் (Projects) அவர்கள் பெற்றுள்ள உரிமைகள் முதலியன.

(23) நிறுவனத்தின் கூட்டங்களுக்கு வருதல், பேசுதல், பங்குதாரர் இயக்குநர் ஆகியோரின் உரிமைகள், அதிகாரங்கள் இவைகளுக்குச் செயல் முறை விதிகள் விதித்துள்ள கட்டுபாடுகள்.

(24) நிறுவனம் தொழிலைத் தொடங்கியிருந்தால், அத் தொழில் நடத்தப்பட்ட காலம்.

(25) நிறுவனம் மூன்று வருடங்களுக்குக் குறைவாக நடத்தப் பட்ட தொழிலை வாங்குவதாய் இருந்தால், மேற்படி தொழில் டத்தப்பட்ட காலம்.

(26) இருப்புத் தொகைகளையும் (நெருக்கடி நிதிகளையும்) (Reserve Funds), ஆதாயங்களையும் (profits) முதலாக மாற்றியி ருந்தால் (capitalised), அவைகளின் விவரங்கள்.

(27) நிறுவனத்தின் சொத்துளிகன் விலை மதிப்பேற்றங்களைப் பற்றிய விவரங்கள்.

(28) நிறுவனத்தின் ஐந்தொகைக் குறிப்பும் (Balance sheet), ஆதாயம் இழப்புகள் கணக்கும் (profit and loss account) காணத் தக்க முறையான நேரமும் இடமும்.

நிறுவனச் சட்டத்தின் இரண்டாவது பின் இணைவில் இரண் டாம் பாகத்தில் குறிப்பிட்டுள்ள அறிக்கைகளும் (Reports) திட்ட அறிவிப்பில் தரப்பட வேண்டும். அவை பின் வருமாறு :

(a) **தணிக்கையாளர் அறிக்கை** (Auditors Report)

திட்ட அறிவிப்புக்கு முன் கடந்த ஐந்தாண்டுகளுக்கு நிறுவ னம் அடைந்த ஆதாய இழப்புக் கணக்கு, ஐந்தொகைக் குறிப்பு கள், ஐந்தாண்டுகளாக வழங்கப்பட்ட பங்கு ஆதாய விகிதங்கள் (rates of dividend) முதலியன பற்றிச் சட்டமுறைப்படி தணிக்கை செய்யப்பட்ட தணிக்கையாளர் அறிக்கை.

(b) **கணக்கர் அறிக்கை** (Report of the Accountant)

நிறுவனம் வழங்கப்போகும் பங்குத் தொகையிலிருந்து கொள் முதல் செய்யப் போகும் வியாபாரத்தின் கடந்த ஐந்தாண்டு ஆதாய இழப்புக் கணக்குகள், ஐந் தொகைக் குறிப்புகள் முதலான விவரங்களைப்பற்றித் திட்ட அறிவிப்பிலே குறிப்பிடப்பட்ட கணக் கரின் அறிக்கை.

(c) **கணக்கரின் அறிக்கை** (Report of the Accountant)

நிறுவனம் வழங்கப் போகும் பங்குத் தொகையிலிருந்து வேறு நிறுவனங்களின் பங்குகளை வாங்குவதாய் இருப்பின், அவைகளின், கடந்த ஐந்தாண்டுகளுக்கு ஆதாய இழப்புக் கணக்குகள், ஐந் தொகைக் குறிப்புகள் முதலான விவரங்களைப் பற்றித் திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கணக்கரின் அறிக்கை.

மேற்கூறிய விவரங்கள் திட்ட அறிவிப்புத் தயாரிப்போரின் பெரும் பொறுப்பைப் புலனுக்குகின்றன. **இப் பெரும் பொறுப்புக் கடலிலிருந்து திசை தப்பாமல் கரை மீள கலங்கரை விளக்குப்போல** (Light House) **கருத்தில் கவனமாய்க் கொண்டு பின்பற்ற வேண்டிய தங்கக் கம்பியானதொரு தலையாய விதி தெளிவாகத் தரப்பட்டுள்ளது.**

கிண்டர்ஸ்லே, வி. சி. (Kindersely, V. C.) என்னும் பிரபு வால், நியுபர்ன்ஸ்விக் முதலானவர்கள் v. மக்கரீட்ஜ் [New Brunswick etc. v. Muggeridge, (1860) 3 LT. 651], என்ற வழக்கில், அவ்விதியின் விவரம் பின்வருமாறு :

**திட்ட அறிவிப்புத் தயாரிக்க தங்கக் கம்பியெனத் தக்கதொரு தலையாய விதி** (The golden rule as to the framing of a Prospectus): பொது மக்களை அறை கூவி அழைத்து, திட்ட அறிவிப்பைத் தந்து, நிறுவனம், நல்கிடும் நன்மைகளை நயம்பட நவின்று, அக்கூற்றை நம்பிப் பங்குகளை ஏற்றுக் கொள்ளுமாறு தூண்டும், எவராயினும் உள்ள உண்மைகளை உள்ளபடியே உரைப்பதோடு, மெய்யற்றவைகளை மறந்தும், மறைக்காமலும், மறுக்காமலும் இருப்பதோடு, கூறப்பட்ட நன்மைகளின் தன்மையையும், தரத்தையும், தராதரத்தையும் பாதிக்கும் சிறு குற்றம் குறைகளையும் குறைக்கவும் கூறுமலிருக்கவும் கூடாது.

பொன்னெழுத்துகளிலே பொறிக்கப்படவேண்டிய இந்த விதி (Golden Legacy) கடல் அளவு இருந்த பொறுப்பைக் கடுகு அளவு ஆக்கியுள்ளது என்று கூறுவது மிகையாகாது. இவ் விதியை மதியாது திட்ட அறிவிப்பில் பொய்யுரைகளுக்கு உறைவிடம் தந்தால், அவைகளுக்குப் பொறுப்பானவர்கள், தீங்கியல், உரிமையியல், குற்றவியல் முதலானவைகள் விதிக்கும் தண்டனைக்குள்ளாகின்றனர் (Punished under Torts, civil and criminal laws) திட்ட அறிவிப்பில் திகழும் பொய்யுரைகளின் விளைவுகளும், அவைகளுக்குப் பொறுப்பானவர்கள் பெறும் பலவித தண்டனைகளும், அவைகளிலிருந்து அவர்கள் மீளக்கூடிய முறைகளும் பின்வருமாறு :

**திட்டம் அறிவிப்பில் திகழும் திரித்துக் காட்டல்களும்** (Misrepresentations) **அவைகளாலுண்டாகும் உரிமையியல், குற்றவியல் பொறுப்புகளும்** (Civil and Criminal liabilities for misrepresentations).

(a) **உரிமையியலில் உண்டாகும் பொறுப்புகள்** (Civil liabilities)

*(1)* **தீங்கியல் தரும் தண்டனை** (Liability under Torts) ஒருவன் பொய்புனைந்து அப்பொய்யினுல் பிறரை மோசம் செய்யின், அவ்வாறு செய்த மோசடிக்கு (Fraud), தீங்கியலில், ஏமாற்றல் என்னும் தீங்கிற்குப் (Tort of Deceit) பொறுப்பாகி, மோசம் செய்யப்பட்டவருக்கு இழப்பீடு செய்யும்படி (Payment of Damages) தண்டிக்கப் படுகிறுர்.

மேற்படி மோசடியின் மிக முக்கிய இயல்புகள் பின் வருமாறு :

(a) ஒன்றை உண்மையற்றதென உணர்ந்து உரைப்பது (Making a statement knowing its false hood).

(b) ஒன்றின் உண்மையில் உறுதியின்றி உரைப்பது (Making a statement without believing it to be true).

(c) ஒன்றை மெய்யா பொய்யா என்பதை அறியும் அக்கறை யல்லாமல் அசட்டையாக அறிவித்தல் (Making a statement Carelessly and Rechlessly without caring to know whether it is true).

மோசடியை நிரூபிக்க மேற்கூறிய ஏதேனும் ஒன்றை நிரூபித் தாலும் போதுமானது. மோசடிசெய்யப்பட்டவருக்குக் கீழ் காணும் சட்டத் தீர்வுகள் (Legal Remedies) உள்ளன :

(1) இழப்பீடு பெறுவது (claim damages).

(2) ஒப்பந்தத்தைத் தள்ளிவிடுவது (Rescind the Contract).

திட்ட அறிவிப்பால் பொய் புனைந்து மோசடி செய்வதால் ஏற்படும் விளைவுகளை விளக்குகின்றன பின்வரும் வழக்குகள்.

(a) டெர்ரி *v*. பீக் [Derry *v*. Peek (1889) 14 A. C. 337].

நீராவியில் (steam) ஓடும் டிராம் வண்டிகள் (Tram cars) ஓட்டுவதற்கு வியாபாரக் குழுவின் (Board of Trade) இசைவு பெற வேண்டும். அதைப் பெறுவது மிகவும் எளிது என்று எண்ணி, திட்ட அறிவிப்பில், நிறுவனத்திற்கு நீராவியில் ஓடும் டிராம் வண்டிகள் விடுவதற்கு உரிமையுண்டு என்று இயக்குநர்கள் இயம்பி னார்கள். இந்த அறிக்கையால் தூண்டப்பட்டு வாதி பங்குதார ரானார். ஆனால், நிறுவனம் மேற்படி வியாபாரக்குழுவின் இசைவு பெற முடியாமையால், நீராவியில் ஓடும் டிராம் வண்டிகள் விட முடியவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த வாதி மோசடி செய்த தற்காக இயக்குநர்கள் மேல் வழக்குப்போட்டார். வழக்கை விசாரணை செய்த நீதிபதி, உண்மையென்று நம்பியதை உரைத்தது மோசடி அல்ல என்று கூறி வழக்கைத் தள்ளிவிட்டார்.

(b) **எடிங்டன்** *v*. **பிட்ஸ்மாரைஸ்** [Edington *v*. Fitzmaurice (1885) 29 Ch. D 459].

இவ்வழக்கில் இயக்குநர்கள் கடனீட்டுப் பத்திரங்கள் வழங்கு வதற்கு வெளியிட்ட திட்ட அறிவிப்பில் கடன் தொகை வியாபார

அபிவிருத்திக்கும், கட்டிடங்களில் மாற்றம் செய்வதற்கும் பயன் படுத்தப்படும் என்று அறிவித்தனர். உண்மையில் அவர்கள் பழைய கடனை அடைப்பதற்காகவே கடனீட்டுப் பத்திரங்கள் வழங்கினர். ஏமாற்றப்பட்ட வாதி மோசடி செய்ததாக வழக்குப் போட்டார். நீதிமன்றம் இது ஒரு முழு மோசடி என்று முடிவு செய்து, வாதிக்கு இயக்குநர்கள் இழப்பீடு அளிக்கும்படி ஆணை யிட்டது.

**(2) ஒப்பந்தவியலில் உண்டாகும் விளைவுகள்**

திரித்துக் காட்டலில் தூண்டப்பட்டு செய்துகொண்ட ஒப்பந்தம் தவிர்தகு நிலையதாகும் (voidable). மேற்படி திரித்துக் காட்டல் தெரிந்து செய்ததாயின் அது மோசடியின் பாற்பட்ட தாகும் (Fraud). ஒப்பந்தம் மோசடியில் விளைந்தது என்றால் பங்குதாரர் ஒப்பந்தத்தைத் தள்ளுபடி செய்வதோடு இழப்பீடும் பெறலாம். ஆனால், திரித்துக்காட்டல் தெரியாமல் நேர்ந்த தென்றால் (innocent misrepresentation), ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்ளலாம் (Resuision of the contact.) இழப்பீடு பெற முடியாவிட்டாலும் பங்குதாரர் தான் செலுத்திய பங்குத் தொகையை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

திட்ட அறிவிப்பில் திரித்துக் காட்டல் செய்யப்பட்டுள்ளது என்பதற்குக் கீழ்க்கண்டவைகளை நிரூபிக்கவேண்டும்.

(1) திட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது பொய்யான தகவலாய் இருக்கவேண்டும். முக்கியமானவற்றைக் கூறவிட்டா லும் அதுவும் பொய்யான தகவலாகும். கூறாமலிருந்தால் மட்டும் திரித்துக் காட்டலாகாது. கூறாமலிருந்தவைகள், கூறப்பட்ட வைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளும்படியா இல்லை என்றாலும் அது திரித்துக் காட்டலாகும். இதை அரசர் v. கில்சன்ட் (பிரபு) [The King v. Kylsant (Lord) (1932) K.B. 442'] என்ற வழக்கு விளக்குகிறது.

இவ் வழக்கில் திட்ட அறிவிப்பில் 1911-லிருந்து 1927ஆம் ஆண்டுகள் வரை, நிறுவனம் 5 சதவீதம் பங்கு ஆதாயம்(Dividend) வழங்கிய தென்றும், 1914ஆம் ஆண்டு மட்டும் பங்கு ஆதாயம் வழங்கவில்லை என்றும், 1926ஆம் ஆண்டு 4 சதவீதம் பங்கு ஆதாயம் வழங்கப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால், உண்மையில் நிறுவனம் பல வருடங்களாக இழப்புகள் (Losses) அடைந்து, சேமிப்பு நிதிகளில் இருந்து பங்கு ஆதாயம் வழங்கு கிறது. ஆகவே, திட்ட அறிவிப்பில் கூறியது உண்மை என்றாலும், அது முழு உண்மையல்ல என்றும் திட்ட அறிவிப்பு ஒரு திரித்து காட்டல் என்றும் முடிவு செய்யப்பட்டது.

திட்ட அறிவிப்பில் கூறப்பட்டது ஒவ்வொன்றும் தனித் தனியே நோக்கும்போது உண்மையாக இருக்கலாம். ஆனால், அவைகள் முழுவதையும் கொண்டு காணும்போது தவறான கருத்தை உணர்த்துவதாயின் அது திரித்துக் காட்டலேயாகும்.

ஈகிள்ஸ் பீள்டு v. மார்குஸ் ஆஃப் லாண்டன்வி [Eagles Field v. Marquis of Londenvy (1877, 4 ch. D. 702].

இவ் வழக்கில், ஒரு துவக்குநர் (Promotor), நிறுவனத்தில் பாதி பங்குகளுக்குமேல் எடுத்துக் கொள்வதற்கு விண்ணப்பம் செய்து, இறுதியில் 200 பங்குகளே ஏற்றுக்கொண்டார். ஆனால், திட்ட அறிவிப்பில் பாதிப் பங்குகளுக்கு மேல் கொடுத்தாகி விட்டது என்று அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பு ஒரு திரித்துக் காட்டல் என்று முடிவு செய்யப்பட்டது.

[In re Metropolitan Coal Consumers Association (1895) 2 Q.B. 604.] இவ் வழக்கில், இரு பெரும் தொழிலதிபர்கள் ஒரு நிறுவனத்திற்கு உதவி செய்வதாகக் கூறினர். ஆனால், திட்ட அறிவிப்பில், இரு பெரும் தொழிலதிபர்கள் இயக்குநர்களால் இசைந்துள்ளனர் என்று அறிவித்தது திரித்துக்காட்டலென குறிப் பிடப்பட்டது.

ஹென்டர்சன் v. லெகான் [Henderson v. Lacon (1867) 5 Eq. 249]

இவ் வழக்கில் இயக்குநர்களும், அவர்களது நண்பர்களும் தலைக்குப் பத்து பங்குகள் ஏற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண் டனர். திட்ட அறிவிப்பில் இயக்குநர்களும் அவர்கள் நண்பர் களும், பங்குகளின் பெரும் பகுதியை ஏற்றுக் கொண்டனர் என்று அறிவித்தது திரித்துக்காட்டலென முடிவு செய்யப்பட்டது.

ஆனால், பங்குகள் ஏற்றுக் கொள்வதாகக் கூறி, பின்னர் அவ் விதம் செய்யாவிடில் அது திரித்துக்காட்டல் அல்ல இதை ஸிரோமணி சுகர் மில்ஸ் v. டேபி பிரசாத் [Shiromany Sugar Mills Ltd. v. Debi Prasad A I R (1950) All. 503] என்ற வழக்கு விளக்குகிறது, இவ்வழக்கில் திட்ட அறிவிப்பின் முதல் பக்கத்தில், சிவப்பு மையில், மேலாண்மை முகவரும் (Managing Agent) அவர் நண்பர்களும் ஆறு இலட்சம் ரூபாய்க்குப் பங்குகள் எடுத்துக் கொள்வதாக வாக்குறுதி வழங்கியுள்ளனர் என்று அறி விக்கப்பட்டது. ஆனால், பின்னர் அவர்கள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மிகக் குறைவாகப் பங்குகளை ஏற்றுக்கொண்டார்கள். இருந்தபோதிலும் திட்ட அறிவிப்பில் தெரிவித்தது, திரித்துக் காட்டலல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

திட்ட அறிவிப்பில் இருபொருள் படும்படியான தகவலைத் தந்தால், ஒரு பொருளில் அது உண்மையாகவும், மற்றொரு பொருளில் பொய்யாகவும் இருப்பின், பொய்யானப் பொருளைக் கொண்டு பங்குதாரர் ஒப்பந்தம் செய்தால், அவர் மேற்படி ஒப் பந்தத்தை, திரித்துக் கூட்டப்பட்டது என்று விலக்கிவிடலாம் இதை சிமித் v. சாட்விக் [Smith v. Chadwick (1884) 9 Ac. 187] என்ற வழக்குத் தெளிவாக்குகிறது. இவ் வழக்கில், திட்ட அறி விப்பில், நிறுவனத்தின் வியாபாரம் பத்து இலட்சம் என்று அறி விக்கப்பட்டது. நிறுவனத்தின் வியாபாரம் வருடத்திற்குப் பத்து இலட்சம் என்று பொருள் கொண்டால் அது உண்மையல்ல. ஆனால், நிறுவனம் பத்து இலட்சம் ரூபாய் வியாபாரம் செய்யவல் லது என்று பொருள் கொண்டால் அது உண்மையாகும். பொய் யான பொருளைக் கொண்டு ஏமாந்த பங்குதாரர், ஒப்பந்தத்தை விலக்கி விடலாமெனக் குறிப்பிடப்பட்டது.

திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டபோது அதில் குறிப்பிடப் பட்டவை உண்மையாக இருக்கலாம். ஆனால், பங்குகளை வழங் கும் போது அவை உண்மையில்லை என்றால், ஒப்பந்தத்தை விலக்கி விடலாம். இதை ராஜகோபால ஐயர் v. சவுத் இண்டியன் ரப்பர் ஒர்க்ஸ் [Rajagopala Iyer v. South Indian Rubber Works, (1942) 2 M.L.J. 228] என்ற வழக்கு விளக்குகிறது. இந்த வழக்கில் திட்ட அறிவிப்பில் இயக்குநர்களின் பெயர்கள் குறிப்பி டப்பட்டன. ஆனால், பங்குகள் வழங்குவதற்கு முன்பு, இயக்குநர் குழுவில் மாறுதல் ஏற்பட்டு, பலர் பதவியிலிருந்து விலகினர். இத னால் பாதிக்கப்பட்ட பங்குதாரர் ஒப்பந்தத்தை விலக்கி விடலாம் என்று தெளிவாக்கப்பட்டது.

*(2)* **திரித்துக் காட்டப்பட்டது பொருண்மைப் பற்றியதாக இருக்க வேண்டுமே தவிர, சட்ட நெறியைப் பற்றியல்ல** (Representation must be one of fact and not of Law). அறிவிப்பு, கருத்தைப் பற்றியதோ (Opinion) அல்லது எதிர்பார்க்கப்பட்டதைப் பற்றிய தாயின் (Expectation) தவறாக இருந்தபோதிலும், அவைகள் திரித்துக் காட்டலாகாது. ஆனால், Karberg (1892) 3 ch. 1 என்ற வழக்கில் ஒன்றை உண்மையிலேயே எதிர்பார்க்காமல், அதை எதிர்பார்ப்பதாக அறிவிப்பது திரித்துக் காட்டலெனக் குறிப்பிடப்பட்டது.

*(3)* அறிவிப்பு முக்கியமானதாகவும் செயலில் ஈடுபடத் தூண்டும்படியாகவும் இருக்கவேண்டும். நிறுவனத்தின் பங்கு களில் பாதிக்கு மேல் வழங்கப்பட்டு விட்டது என்பதும், சுரங்கத்

தொழில் முழு வேகத்துடன் நடக்கின்றது என்பதும், நிறுவனம் ஒன்றுதான். ஒரு பொருளை உற்பத்தி செய்து, அப்பொருளின் வியாபாரத்தைக் கட்டுபடுத்துகிறது என்பதும், நிறுவனத்தின் பதனப்படுத்தும் முறைகள் வெற்றிகரமானவை என்பதும் மிகவும் முக்கியமான அறிவிப்புகளாகும்.

(4) அறிவிப்பை நம்பிச் செயல்பட வேண்டும். பீக் v. கர்னி [Peek v. Gurney (1874) 43 LJ Ch. 19]. இவ் வழக்கில் நிறுவனம் வெளியிட்ட திட்ட அறிவிப்பில் திரித்துக் காட்டல் இருந்தது. பங்குகள் யாவும் வழங்கப்பட்ட பிறகு, வாதி மேற்படி பங்குகளைப் பங்கு மாற்றக் களத்தில் (Stock Exchange) வாங்கினார். பின்னர், திட்ட அறிவிப்பிலிருந்த பொய்யுரைகளுக்காக இயக்குநர்கள்மீது வழக்குப் போட்டார். ஆனால், நீதிமன்றம் வாதி திட்ட அறிவிப்பை நம்பி பங்குகள் வாங்கவில்லையாதலால், இயக்குநர்கள் அவருக்குப் பொறுப்பாக மாட்டார்களென்று முடிவு செய்து வழக்கைத் தள்ளுபடி செய்தது.

(5) திட்ட அறிவிப்பு நிறுவனம் வெளியிட்டதாக இருக்க வேண்டும் அல்லது நிறுவனத்திற்காக அதன் அனுமதி பெற்றவரால் வெளியிடப்படவேண்டும் இல்லாவிடில் நிறுவனம் அதற்குப் பொறுப்பாகாது. பங்குதாரரும் ஒப்பந்தத்தை விலக்க முடியாது. திட்ட அறிவிப்பு, துவக்குநர்களால் வெளியிடப்பட்டு பின்னர் இயக்குநர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டால், நிறுவனம் அதற்கும் பொறுப்பாகிறது

(6) ஏமாற்றப்பட்ட பங்குதாரர் உடனே காலதாமதம் செய்யாமல், முறையான காலத்திற்குள் (Reasonable Time) ஒப்பந்தத்தை விலக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தவறினால் தன் உரிமையை இழப்பார். மேலும், ஏமாற்றப்பட்டதை அறிந்த பிறகு ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் வகையில் அவர் நடந்துக்கொள்ளக் கூடாது.

**ஒப்பந்தத்தை விலக்குவதற்குள்ள வரம்புகள் (Limits of Rescission)**

(a) ஒப்பந்தத்தை உறுதிசெய்யும் முறையில் நடந்து கொள்ளக்கூடாது. பங்குதாரர் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த பிறகு, பங்கை விற்றாலும், நிறுவனத்தின் கூட்டத்திற்குச் சென்றாலும், பங்கு ஆதாயம் பெற்றாலும், அவர் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தியதாகக் கருதப்பட்டு ஒப்பந்தத்தை விலக்கும் உரிமையை இழக்கிறார்.

(b) பங்குதாரர் தன் உரிமையை நிலைநாட்டக் காலதாமதம் செய்தால், அவ்வுரிமையை இழக்கிறார். சினிஸ்டினிவில்லி ரப்பர் எஸ்டேட் [Chinistiniville Rubber Estates Ltd., (1911) 81 LJ Ch. 63]. இவ் வழக்கில், பங்குதாரர் ஜூலை மாதமே தான் ஏமாற்றப் பட்டதை உணர்ந்தார். ஆனால், டிசம்பர் மாதம் தன் பெயரை உறுப்பினர் பதிவேட்டிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார். ஐந்து மாதங்கள் காலதாமதம் செய்ததால் அவர் உரிமையை இழந்தார் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

(c) நிறுவனம் கலைக்கப்படுவதற்கு முன் ஒப்பந்தத்தை விலக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பங்குதாரர் தாமதிக்காமல் உடனே நடவடிக்கை எடுத்தாலும், அதற்குள் நிறுவனம் கலைக்கப்பட்டால் (Wound up). அவர் உரிமை இழக்கிறார், ஏனென்றால் நிறுவனம் கலைக்கப்படும்போது நிறுவனத்துடன் தொடர்புடைய அனைவரின் உரிமைகளும் குறுக்கிடுகின்றன.

**(3) நிறுவனச் சட்டத்தின் 62ஆவது பிரிவின்படி வழங்க வேண்டிய இழப்பு ஈடு**

இங்கிலாந்து நாட்டில் பிரபுக்கள் சபை (House of Lords), டெர்ரி v. பீக் [Derre v. Peek] என்ற வழக்கில் வழங்கிய முடிவு, ஏமாற்றப்படும் பங்குதாரர்களுக்குச் சட்டநெறியில் (in Law) போதுமான பாதுகாப்புகள் இல்லை என்பது தெளிவாயிற்று. இந்த நிலைமையை மாற்ற, இயக்குநர்கள் பொறுப்புச் சட்டம் (Directors' Liability Act) என்ற சட்டம் இங்கிலாந்தில் இயற்றப் பட்டது. அதன்படி திட்ட அறிவிப்பில் திரித்துக்காட்டல் அல்லது தெரியாமல் செய்ததாயினும் இயக்குநர்கள் அதற்குப் பொறுப்புள்ளவராவர். அதைத் தொடர்ந்து இயற்றிய நிறுவனச் சட்டத்திலும் இயக்குநர்களின் இந்த பொறுப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தியாவிலும் மேற்கூறிய சட்டங்களைப் பின்பற்றி, நிறுவனச் சட்டத்தில் 62ஆவது பிரிவில், திட்ட அறிவிப்பில் திகழும் திரித்துக்காட்டலுக்கு, ஒவ்வொரு இயக்குநரும், இயக்குநராக அறிவிக்கப்படுவதற்கு இசைந்த ஒவ்வொருவரும், ஒவ்வொரு துவக்குநரும், திட்ட அறிவிப்பை வெளியிடுவதற்கு அதிகாரம் வழங்கிய ஒவ்வொருவரும், பங்குதாரர்களுக்கு இழப்பீடு செய்யப் பொறுப்புள்ளவராவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்ட அறிவிப்பில் தரப்பட்டுள்ள தகவலின் வடிவமும் அது தரப்பட்டுள்ள இடமும் பொய்யை உணர்த்தினால் அது திரித்துக் காட்டலாகும். இப் பிரிவின்படி, பங்குதாரர் திரித்துக் காட்டல் மோசடியின் பாற்பட்டதென்று நிரூபிக்க வேண்டியதில்லை.

மேற் கூறிய பொறுப்பிலிருந்து தப்ப வேண்டுமென்றால் கீழ்க் குறிப்பிட்டவைகளை நிரூபிக்க வேண்டும்.

(1) முதலில் இயக்குநராக இசைவு தந்தாலும், திட்ட அறிப்பு வெளியிடுவதற்கு முன்பு தன் இசைவை ரத்து செய்து விட்டதை நிரூபிக்கவேண்டும்.

(2) திட்ட அறிவிப்பு, தனக்குத் தெரியாமலும், தன் இசைவு இல்லாமல் வெளியிடப்பட்டதென்றும், அதை வெளியிட்டதை அறிந்தவுடன், தன் இசைவில்லாததைப் பொதுமக்களுக்கு அறிக்கை செய்ததையும் நிரூபிக்க வேண்டும்.

(3) திட்ட அறிவிப்பு வெளியான பிறகும், பங்குகள் வழங்கப் படுவதற்கு முன்பு, திரித்துக்காட்டல் உள்ளதை அறிந்தவுடன், தன் இசைவை ரத்து செய்து பொதுமக்களுக்கு அறிக்கை செய்ததை நிரூபிக்க வேண்டும்.

(4) திட்ட அறிவிப்பில் வெளியிடப்பட்ட பொய்யான தகவலை நம்புவதற்குப் போதிய காரணங்கள் இருந்தன என்பதை நிரூபிக்க வேண்டும்.

(5) திட்ட அறிவிப்பில் தரப்பட்ட பொய்யான தகவல், தொழில் வல்லுநரின் வாய்மொழியாயிருப்பின், அது அவர் கூறிய முறையிலேயே வெளியிடப்பட்டது என்றும், அவர் அதைக் கூறு வதற்குத் தகுதியுள்ளவரென்றும், அதை உண்மை என்று நம்பு வதற்குத் தகுந்த காரணமிருந்தது என்றும் நிரூபிக்க வேண்டும்.

(6) திட்ட அறிவிப்பில் ஏற்பட்ட பொய், ஒரு அதிகாரியின் வாய்மொழியாகவோ அல்லது பொது ஆவணத்தின் (Public Document) வாசகமாயின், அது அவர் கூறிய முறையிலேயே உள்ளது அல்லது அப்பொது ஆவணத்தின் உண்மையான நகல் என்றும் நிரூபிக்க வேண்டும்.

தொழில் வல்லுநர் கூறியவற்றில் பொய் இருந்தால், அவர் என்றும் தப்புவதற்குக் கீழ்க்கண்டவைகளை நிரூபிக்க வேண்டும் :

(a) திட்ட அறிவிப்பு, பதிவுசெய்ய தரப்படுவதற்கு முன் தான் இசைவை ரத்து செய்து விட்டதை நிரூபிக்க வேண்டும்.

(b) திட்ட அறிவிப்பு, பதிவு செய்யத் தரப்பட்ட பிறகு, பங்குகள் வழங்குவதற்கு முன்பு, தான் கூறியது உண்மை அல்ல

என்று உணர்ந்த உடன், தன் இசைவை ரத்து செய்து பொது மக்களுக்கு அறிக்கை தந்ததை நிரூபிக்க வேண்டும்.

(c) தான் கூறியதைச் சொல்லும் தகுதியுடையவரென்றும் பங்குகள் வழங்கப்படும் வரை, தான் கூறியது உண்மை என்று நம்ப போதுமான காரணங்கள் இருந்தன என்றும் நிரூபிக்க வேண்டும்.

இப் பிரிவின்படி பங்குதாரர் மோசடியை நிரூபிக்கவேண்டியதில்லை. டெர்ரி *v*. பீக் (Derry *v*. Peek) என்ற வழக்கின்படி இயக்குநர் உண்மை என்று நம்பினுர் என்றுல் போதுமானது. ஆனுல், இப் பிரிவின்படி, நம்பிக்கை இருந்தால் மட்டும் போதாது. அந்த நம்பிக்கைக்குத் தகுந்த காரணங்களும் காட்டவேண்டும். இல்லை என்றுல் பொறுப்பிலிருந்து தப்ப முடியாது, இதை ஆடம்ஸ் *v*. திரிஃப்ட் [Adams *v*. Thrift (1915) 2 Ch. 21] என்ற வழக்கு விளக்குகிறது.

திட்ட அறிவிப்பில் திரித்துக் காட்டலுக்காக இயக்குநர் பேரில் வழக்குப் போடப்பட்டது. இயக்குநர் திட்ட அறிவிப்பு துவக்குநரால் தயாரிக்கப்பட்டது என்றும், அவர் அது சரியாக இருக்கிறது என்று கூறியதைத் தான் நம்பியதாகவும் வாதாடினுர். ஆனுல், நீதிமன்றம் அவர் நம்பிக்கைக்குப் போதுமான காரணம் இல்லை என்றும், ஆகையால், அவர் வாதிக்கு இழப்பீடு செய்ய வேண்டுமென்றும் முடிவு செய்தது.

**நிறுவனச் சட்டத்தின் 56ஆவது பிரிவின் விளைவுகள் :**

56ஆவது பிரிவில் திட்ட அறிவிப்பில் தீட்டப்பட வேண்டிய தகவல்களும் தவறினுல் தரப்படும் தண்டனைகளும், தப்புவதற்குரிய வழிகளும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனுல், மேற்படி தகவல்கள் தரப்படாததால் பாதிக்கப்பட்ட பங்குதாரருடைய உரிமையைப் பற்றிப் பிரிவு வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. இருந்த போதிலும், பாதிக்கப்பட்ட பங்குதாரர், தம் இழப்பீட்டை நிரூபித்தால், அதை இயக்குநர்களிடமிருந்து பெறுவதற்கு உரிமை உண்டு என்று கருதப்படுகிறது.

**இழப்பீட்டின் அளவு** (Quantum of Damages)

மேற்கூறிய முறைகளில் பாதிக்கப்பட்ட பங்குதாரர் பெறக்கூடிய இழப்பீடு, அவர் பங்குகளுக்காகச் செலுத்திய தொகையாகும். ஆனுல், ஒப்பந்த முறிவுக்காக (Breach of Contract) அவர் நடவடிக்கை எடுத்தால், செலுத்திய பங்குத்தொகை

யோடு எதிர்பார்த்த ஆதாயமும் (Expected profits) பெறலாம். ஆனால், அந்த வாய்ப்பு வாய்ப்பது மிகவும் அறிதாகும்.

**குற்றவியலின் விளைவு**

63ஆவது பிரிவின்படி திட்ட அறிவிப்பில் திரித்துக்காட்ட விருப்பின், அதை வெளியிடச்செய்த ஒவ்வொருவரும் இரண்டு வருடம் வரை சிறை தண்டனையும், ஐயாயிரம் ரூபாய் வரை தண்டவரியும் விதிக்கப்படுவர். மேற்படி தண்டனைகளிலிருந்து தப்பிக்க அவர் திரித்துக் காட்டப்பட்டது முக்கியமில்லாதது என்றும், அல்லது அவர் அதை உண்மை என்று நம்பியதாகவும், மேலும் திட்ட அறிவிப்பு வெளியிடும் வரையிலும் அவ்வாறு நம்பியதாகவும் நிரூபிக்கவேண்டும்.

# 5. பங்குகளை வழங்குதல்

## (Allotment of shares)

ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான முதலை, பொதுமக்களுக்குப், பங்குகளை வழங்கிப் பெறுகிறது. அதற்காக நிறுவனம் திட்ட அறிவிப்பை (Prospectus) வெளியிட வேண்டும். மேலும், ஒவ்வொரு பங்கு விண்ணப்பப் படிவத்துடன் (Share Application Form), அதன் திட்ட அறிவிப்பையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். பங்குகளைப் பெற விரும்புபவர் மேற்படி விண்ணப்பப் படிவத்தை நிரப்பி குறிப்பிட்ட விண்ணப்பத் தொகையுடன் (Application money) நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும். திட்ட அறிவிப்பின் வாயிலாகப் பொதுமக்களிடமிருந்து பெற்ற பங்கு விண்ணப்பங்களின்படி பங்குகளை வழங்குவதற்கு நிறுவனச் சட்டத்தில் சில தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

**பங்குகள் வழங்குவதற்குரிய தடைகள்** (Restrictions on allotment of Shares)

நிறுவனச் சட்டத்தில் 69 to 75 பிரிவுகள், நிறுவனம் பங்குகளை வழங்குவதற்கு முன்பாக கடைப்பிடிக்க வேண்டிய விதிகளையும், தடைகளையும், அவைகளை மீறுவதால் ஏற்படும் விளைவுகளையும், விரிவாகவும் தெளிவாகவும் குறிப்பிடுகின்றன. அவை பின் வருமாறு :

69ஆம் பிரிவின்படி திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நிறுவனத்திற்குத் தேவையான பங்குத்தொகைக் குறையாமல் பங்குகள் கோரி, அந்தப் பங்குத் தொகைக்குரிய விண்ணப்பத் தொகையை நிறுவனம் பணமாகவோ அல்லது காசோலையாகவோ (Cheque) பெற்றாலொழிய, நிறுவனம் யாதொரு பங்கையும் வழங்கலாகாது. இரண்டாவது பின் இணைவில்(Second Schedule)

நிறுவனத்தின் ஆரம்பச் செலவினங்களுக்கும் (Preliminary Expenses) கொள்முதல் செய்த அல்லது செய்யப் போகும் சொத்துகளுக்கும், நடப்பு முதலுக்கும் (Working Capital) குறைந்த அளவுக்குத் தேவையான தொகை எவ்வளவு என்று இயக்குநர்களால் முடிவு செய்யப்பட்டு, மேற்படி தொகையை திட்ட அறிவிப்பில் வெளியிட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி குறைந்த அளவுத் தேவையான பங்குத் தொகையை, பண்டமாகவோ அல்லது வேறு வகையில் பெற்ற தொகை நீங்கலாக கணக்கிடப்பட வேண்டுமெனப் பிரிவு தெளிவாக்குகிறது. அதாவது திட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த அளவு பங்குத் தொகை முழுவதையும் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வேறுவித நாணயமாற்றாகவோ நிறுவனம் பெறவேண்டும்.

விண்ணப்பத்துடன் செலுத்தப்பட வேண்டிய தொகை பங்குத் தொகையில் ஐந்து சதவீதத்திற்குக் குறையக்கூடாது

விண்ணப்பதாரர்களிடமிருந்து பெற்ற பணம் முழுவதையும் அட்டவணையில் சேர்க்கப்பட்ட வங்கியில் (Scheduled Bank) செலுத்தி, நிறுவனம் தொழில் ஆரம்பித்தலுக்குரிய சான்றிதழ் (Certificate of Commencement of Business) பெறும் வரையில் அல்லது அந்தத் தொகையை விண்ணப்பதாரர்களுக்குத் திருப்பிச் செலுத்தும் வரையில் மேற்படி தொகையை அந்த வங்கியில் வைத்திருக்க வேண்டும்.

திட்ட அறிவிப்பு வெளியான 120 நாட்களுக்குள் குறைந்த அளவு பங்குத் தொகை சேராவிடில், விண்ணப்பதாரர்கள் செலுத்திய பணத்தை உடனே அவர்களுக்குத் திட்ட அறிவிப்பு வெளியான 130 நாட்களுக்குள் வட்டி இல்லாமல் திருப்பிச் செலுத்த வேண்டும். தவறினால், அதற்குப் பிறகு ஏற்படும் காலதாமதத்திற்கு இயக்குநர்கள் தாமதிக்கப்பட்ட தொகையை ஆறு சதவீதம் வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் பொறுப்புள்ளவராகின்றனர். ஆனால், காலதாமதம் இயக்குநர்களின் தவறுதலாலும் கவனப் பிசகினாலும் ஏற்படவில்லை என்றால் அவர்கள் அதற்கு பொறுப்பாக மாட்டார்கள். மேற்படி விதிகளையும் தடைகளையும் தட்டிக் கழிக்கும் வகையில் செய்யப்படும் எவ்வகையான கட்டுப்பாடும் முற்றிலும் செல்லாததாகும்.

மேற்கூரிய விதிகளும் தடைகளும் பங்குகளை முதல் முதலாக வழங்குவதைத் தான் கட்டுப்படுத்துகின்றன. பின்னர் வழங்கப்படும் பங்குகளை அவைகள் கட்டுப்பாடு செய்யவில்லை. ஆனால்,

பின்னர் வழங்கப்படும் பங்குத் தொகைகளுக்கும் விண்ணப்பத் தொகை பங்குத்தொகையில் ஐந்து சதவீதத்திற்குக் குறையக் கூடாது.

70ஆவது பிரிவின்படி பங்குத் தொகை பெற்ற நிறுவனம், திட்ட அறிவிப்பு வெளியிடவில்லை என்றாலும் அல்லது அதை வெளியிட்ட பிறகு அதன்படி பங்குகள் வழங்கவில்லை என்றாலும், மேற்படி நிறுவனம் பங்குகளை வழங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக, குறிப்பிட்ட வடிவத்தில் மூன்றாவது பின் இணைவின் (Third Schedule) மூன்று பகுதிகளுக்கிணங்க தகவல்கள் குறிப்பிடப்பட்டு, இயக்குநர் ஒவ்வொருவரும் கையெழுத்திட்ட வாக்கு மூலம் ஒன்றினைத் திட்ட அறிவிப்புக்கு பதிலாக பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். (Statement in lieu of Prospectus).

ஆனால், தனியார் நிறுவனம் (Private Company) மேற்கூறிய விதிக்கு விலக்காகும்.

72ஆம் பிரிவின்படி, நிறுவனம் திட்ட அறிவிப்பை வெளியிட்டதிலிருந்து, ஐந்தாவது நாள் தொடக்கம் வரை யாதொரு பங்கும் வழங்கலாகாது. மேலும் திட்ட அறிவிப்பிற்குப் பொறுப்புள்ளவர் எவரேனும் பொதுமக்களுக்கு 62ஆம் பிரிவின்படி அறிக்கை விட்டால், மேற்படி அறிக்கை விட்ட தேதியிலிருந்து ஐந்து நாள் தொடக்கம்வரை நிறுவனம் யாதொரு பங்கும் வழங்கலாகாது. மேற்படி ஐந்தாவது நாள் தொடக்கம், பங்குக் கட்டணப்பட்டியல் ஆரம்பகாலம் (Time of opening of the Subscription List) என்று குறிப்பிடப்படுகிறது. திட்ட அறிவிப்பு, தினத்தாள்களில் வெளியான தேதியே, திட்ட அறிவிப்பு வெளியிட்ட தேதியாகக் கருதப்படும். தினத்தாள்கள் அல்லாமல் வேறுவகையில் திட்ட அறிவிப்பை வெளியிட்டால், அவ்வாறு வெளியிட்ட தேதியே திட்ட அறிவிப்பு வெளியான தேதியாகும்.

பங்கு விண்ணப்பங்களைப் பங்குக் கட்டணப் பட்டியல் ஆரம்ப காலம்வரை விண்ணப்பம் செய்தவர்கள் ரத்து செய்ய (Revoke) முடியாது என்று இப்பிரிவு தெளிவாக்குகின்றது.

73ஆம் பிரிவின்படி, நிறுவனத்தின் பங்குகள் ஒப்புதல் பெற்ற பங்கு மாற்றக் களத்தினரால் (Recognised Stock Exchange) மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதி வேண்டி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது அல்லது செய்யப்படுமென திட்ட அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தால், திட்ட அறிவிப்பு வெளியான பத்து நாட்

களுக்குள் மேற்படி விண்ணப்பம் செய்யப்படாவிடினும் அல்லது பங்குப்பட்டியல் முடிந்த (Closing of the Subscription List) நான்கு வாரங்களுக்குள்ளாகவோ அல்லது பங்குமாற்றுக் களத்தினரால் வழங்கப்பட்ட கெடுவுக்குள் மேற்படி அனுமதி பெறுவிடில், நிறுவனத்தால் பங்கு வழங்கப்பட்டது முற்றிலும் செல்லா நிலையதாகும் (Absolutely void).

மேலும், நிறுவனம் திட்ட அறிவிப்பில் குறிப்பிட்ட அனுமதி பெறும் வரையில் விண்ணப்பத் தொகைகளை அட்டவணையில் சேர்க்கப்பட்ட வங்கியில் (Scheduled Bank) செலுத்தி வைக்க வேண்டும். நிறுவனம் திட்ட அறிவிப்பில் குறிப்பிட்ட அனுமதி குறிப்பிட்ட காலத்திற்குள் பெறுவிடில், உடனே நிறுவனம் விண்ணப்பத் தொகைகளைத் திருப்பித் தரவேண்டிய தேதியிலிருந்து எட்டு நாட்களுக்குள் அவரவர்களுக்கு வட்டியில்லாமல் திருப்பிச் செலுத்த வேண்டும். அதற்கு மேல் காலதாமதம் செய்யப்பட்ட தொகைக்கு இயக்குநர்கள் ஐந்து சதவீத வட்டி சேர்த்துச் செலுத்த வேண்டும். ஆனால், காலதாமதம் இயக்குநர்கள் தவறுதலால் அல்லது கவனப்பிசகால் அல்ல எனின், அவர்கள் அதற்குப் பொறுப்பாக மாட்டார்கள்.

மேற்படி விதிகளையும் தடைகளையும் தட்டிக்கழிக்கும் வகையில் செய்யப்படும். எவ்விதக் கட்டுப்பாடும் முற்றிலும் செல்லாததாகும் என்று பிரிவு புலப்படுத்துகின்றது.

74ஆம் பிரிவு, 72, 73ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட ஐந்தாவது, எட்டாவது, பத்தாவது நாளைக் கணக்கிடுவதில், இடைக்காலத்து விடுமுறை நாட்கள் (Intervening Public Holidays) விலக்கப்பட வேண்டும் என்றும், மேற்படி ஐந்தாவது, எட்டாவது, பத்தாவது நாள் விடுமுறை நாளென்றால், அதற்கடுத்த பணி நாளென்றும் (Next working day) கூறுகிறது.

75ஆம் பிரிவுவின்படி நிறுவனம் பங்குகளை வழங்கிய ஒரு மாத காலத்திற்குள், பங்குத் தொகையின் மதிப்பும், வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையும், வழங்கப்பட்டவர்களின் பெயர், முகவரி, தொழில், பங்குத் தொகை செலுத்தப்பட்டது, செலுத்தப்படவேண்டியது முதலான விவரங்களைப் பதிவாளருக்கு அனுப்பவேண்டும்.

பணமில்லாமல் வழங்கப்பட்ட பங்குகளுக்குப் பெற்ற மறு பயனை (Consideration) விளக்கக்கூடிய விவரங்களும், அவை சம்பந்தப்பட்ட விற்பனை ஒப்பந்தங்கள், பணி ஒப்பந்தங்கள்

(Service Agreements) பதிவாளரின் மேற்பார்வைக்கு அனுப்ப வேண்டும்.

மேலும், இனும் பங்குகள் (Bonus Shares) வழங்கப்பட்டால், அவைகளின் தொகை, எண்ணிக்கை, வழங்கப்பட்டவரின் பெயர், முகவரி, தொழில், அதற்கென நிறுவனம் செய்த தீர்மானம் முதலானவைகளும், பங்குகள் தள்ளுபடி செய்து வழங்கப்பட்டால், அதை ஆமோதித்த நிறுவனத்தின் தீர்மானம், அதை அனுமதித்த நீதிமன்றத்தின் உத்தரவு, தள்ளுபடி 10 சதவீதத்திற்கு மேற்பட்டதாயின், அதற்கு ஒப்புதல் தந்த மத்திய அரசின் உத்திரவு முதலானவைகளும் பதிவாளருக்கு அனுப்பவேண்டும். மேற்கூறிய விவரங்களை வழங்குவதற்குச் சூழ்நிலை சந்தர்ப்பங்களின் காரணங்களால் ஒரு நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் போதாதெனப் பதிவாளர் கருதினுல், அந்த நிறுவனத்திற்கு அவர் மேலும் தம் கருத்துப்படி போதிய தவணை தரலாம். நிறுவனம் மேற்கூறிய விவரங்களைத் தாமதித்தால், தாமதமான ஒவ்வொரு நாளைக்கும் நிறுவனத்தின் ஒவ்வொரு உயர்பணியாளரும் (Officer) ஐந்நூறு ரூபாய் வரை தண்டனை வரி (Fine) விதிக்கப்படுவர்.

பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் மீண்டும் வழங்கப்பட்டால் அவைகளைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிடவேண்டியதில்லை என்று இப்பிரிவு கூறுகிறது.

**முரணான முறைகளில் வழங்குதலும் அவைகளின் விளைவுகளும் (Irregular allotments and their effects)**

முறையற்ற முறைகளில் வழங்கப்பட்ட பங்குகள் மூன்றுவித விளைவுகளை உண்டாக்குகின்றன. அவை பின்வருமாறு :

(1) முதற்கண், 70,71ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட விதிகளையும் தடைகளையும் மீறி வழங்கப்பட்ட பங்குகள், பங்குதாரரின் இச்சைப்படி தவிர்தகு நிலையது (Voidable) ஆகின்றன. அவர் தம் உரிமையை நிறுவனச் சட்டம் குறிப்பிட்ட கூட்டம் (Statutory meeting) நடந்த இரண்டு மாதத்திற்குள், அல்லது நிறுவனத்திற்கு அக்கூட்டம் தேவையில்லை என்றுல், பங்கு வழங்கப்பட்ட இரண்டு மாதத்திற்குள், ஆகிய இவை இரண்டில் எது பிந்தியதோ அந்தக் காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பிறகு அவர் அந்த உரிமையை இழந்து விடுவார். ஆனுல், மேற்கூறிய காலத்திற்குள் நிறுவனம் கலைக்கப்பட்டாலும் (Wound up) அவர் தான் உரிமையை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

(2) இரண்டாவதாக, 72ஆவது பிரிவில் உள்ள விதிகளை மீறி வழங்கப்பட்ட பங்குகளின் செல்லுபடி (Validity) எவ்விதத்திலும் பாதிக்கப்படா. ஆனால், அவ் விதிகளை மீறிய குற்றத்திற்கு நிறுவனமும், ஒவ்வொரு உயர் பணியாளரும் (Offieer) ஐயாயிரம் ரூபாய் வரையில் தண்டனைவரி (Fine) விதிக்கப்படுவர்.

(3) மூன்றாவதாக, 75ஆவது பிரிவில் உள்ள விதிகளை மீறி வழங்கப்பட்ட பங்குகள் முற்றிலும் செல்லா நிலையதாகும் (Absolutely Void). விண்ணப்பதாரர் தாம் செலுத்திய பங்குத் தொகையைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளலாம்.

## பங்கு வழங்குவதற்குரிய பொது விதிகள்-
(General principles of allotment of Shares)

நிறுவனம் பங்குகளை வழங்குவதில் கீழ்க்கண்ட பொது விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் :

(1) முதற்கண் குறிப்பிடத்தக்கது, பங்குகளை வழங்கும் அதிகாரம் பெற்றவரால்தான் பங்குகள் வழங்கப்பட வேண்டும். சாதாரணமாக, பங்குகளை வழங்கும் அதிகாரம் படைத்தவர்கள் நிறுவனத்தின் இயக்குநர்களாவர். இயக்குநர்கள் தம் அதிகாரத்தை வேறொருவருக்கு வழங்க வேண்டுமென்றால் செயல் முறை விதிகளில் (Articles of Association) குறிப்பிட்டபடித் தான் செய்ய முடியும். இல்லாவிடில் அது செல்லாததாகும். அவ்விதமே பாங்க் ஆஃப் பெஷாவர் லிமிடெட் v. மதோ ராம் [Bank of Peshawar Ltd. v. Madho Ram (A.I.R. 1919 Lah. 351)] என்ற வழக்கில் முறையற்ற முறையில் அதிகாரம் வழங்கப்பெற்ற மேலாளர் (General Manager), பங்கு வழங்கியது செல்லாது என்று தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆனால், பூசராலா சன்யாசி v. குண்டூர் பருத்தி, சணல், பேப்பர் ஆலைகள் கம்பெனி [Pusarala Sanyasi and others v. Guntur Cotton, Jute and Paper Mills Co. (A.I.R. 1915 Mad. 325] என்ற வழக்கில், செயல்முறை விதிகளின்படி அதிகாரம் வழங்கப்பெற்ற செயலாளரும் பொருளாளருமானவர் (Secretary and Treasurer) பங்கு வழங்கியது, முறையானது என்று முடிவு செய்யப்பட்டது.

(2) தக்க காலத்திற்குள் வழங்கப் படவேண்டும் (Allotment to be made in reasonable time) : நிறுவனம் பங்கு வழங்குவது தக்க காலத்திற்குள் வழங்கப்பட வேண்டும். தக்க காலம் என்ன என்பது அவ்வப்போது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முடிவு செய்யப்படும். விண்ணப்பம் செய்த தேதியிலிருந்து ஆறு மாத

காலத்தில் பங்கு வழங்கியது தக்க நேரத்தில் செய்யப்பட்டதல்ல என ஒரு வழக்கில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ராம்ஸ்கேட் விக்டோரியா ஹோட்டல் கம்பெனி v. மொன்டேபொய்ர்க் [Ramsgate Victoria Hotel Co. v. Montefoirc (1866 1 Ex. 109)] என்ற வழக்கில், ஜூன் மாதம் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு, நவம்பர் மாதம் பங்கு வழங்கியது தக்க காலத்தில் செய்யப் பட்டதல்ல என்று குறிப்பிடப்பட்டது.

(3) பங்கு வழங்கப்பட்டதை தெரிவிக்க வேண்டும் (Allotment must be Communicated) : நிறுவனம் பங்கு வழங்கியதை வழங்கப்பட்டவருக்குக் கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும். மேற்படி அறிவிப்பை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பலாம். தபால் மூலம் அனுப்பிய அறிவிப்பு, வழங்கப் பட்டவருக்குச் (Allottee) சேர்ப்பிக்கப்படாவிட்டாலும், பங்கு அவருக்கு முறைப்படி வழங்கப்பட்டதாகக் கருதப்படும் இதனைத் தெளிவாக ஹவுஸ் வோல்டு ஃபயர் இன்சூரன்ஸ் v. கிரான்ட் [House Hold Fire Insurance v. Grant (1879) 4 Ex. Div, 216] விளக்குகின்றது. இவ் வழக்கில் எதிர் வாதி (Defendant) வாதி நிறுவனத்தின் (Plaintiff Company) பங்குகளைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தார். அவர் தன் விண்ணப்பத்தைத் தபால் மூலம் அனுப்பி வைத்தார். அவ்விதமே, பங்கு வழங்கப்பட்ட செய்தியும் தபால் மூலமாக வாதி நிறுவனம் அவருக்கு அனுப்பி யது. ஆனால் எதிர்வாதியிடம் அந்தத் தபால் சேரவில்லை. இருந்த போதிலும் அவர் நிறுவனத்தின் பங்குதாரர் என்று முடிவு செய்யப்பட்டது.

(4) வழங்குதல் முழுமையானதாகவும் நிபந்தனையற்றதாக வும் இருத்தற்பாலது (Absolute and Unconditional) : வழங் குதல் முழுமையானதாகவும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின்படி இருக்க வேண்டும்.

ரமணபாய் v. காசிராம் [Ramana Bhai v. Ghasiram (1918) 42 Bomb. L.R. 595]. இவ் வழக்கில், ஒரு வங்கியின் (Bank) மேலா ளர், விண்ணப்பம் செய்தவருக்கு 400 முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares) எடுத்துக்கொண்டால் வங்கியில் காசுக் கணக்கர் (Cashier) வேலை தருவதாக வாக்களித்தார். அந்த நிபந்தனையில் விண்ணப்பம் செய்தவர், முதலில் 100 முன் னுரிமைப் பங்குகளை எடுத்துக்கொண்டார். ஆனால், மீதிப்பங்கு களை எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால், அவருக்கு வேலை தரப்படவில்லை. விண்ணப்பம் அவருக்குக் காசுக்கணக்கர் வேலை தரப்படவேண்டும் என்ற முன் நிபந்தனைக்குட்பட்டதாகையால்

(Condition Precedent), அவருக்குப் பங்கு வழங்கியது செல்லாது என்றும், அவர் செலுத்திய பணம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமென நீதிமன்றம் முடிவு செய்தது.

ஆனால், விண்ணப்பம் பின் நிபந்தனைக்குட்பட்டதாயின் (Condition subsequent), அந்த நிபந்தனையின் பேரில் வழங்கப் பட்ட பங்கு, நிபந்தனை நிறைவேறாவிட்டாலும் பாதிக்கப்படுவ தில்லை. இதை மோதிலால் சுனிலால் *v*. தக்கர்லால் சிமன்லால் [Motilal Chunilal *v*. ThakorlalChimanlal (1912)14 Bom. L.R. 648] என்ற வழக்கு விளக்குகிறது.

இவ்வழக்கில் எதிர்வாதி நிறுவனம் ஊதியப்பங்கு (Dividend) வழங்கினால்தான் தான் எடுத்துக்கொண்ட பங்குத் தொகைக்குப் பொறுப்புள்ளவராவார் என்னும் நிபந்தனையில் பங்குகளை எடுத் தார். ஆனால், ஊதியப்பங்கு வழங்குவதற்கு முன்னால் நிறுவ னம் கலைக்கப்பட்டது அவர் முதலில் பங்குதாரராய்ச் சேர்ந்து விட்டபடியால், விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பின்நிபந்தனை நிறை வேறாவிட்டாலும், அவருக்கு வழங்கப்பட்ட பங்குகள் எவ்வகை யிலும் பாதிக்கப்படவில்லை என்றும், ஆகையால் அவர் மேற் கொண்ட பங்குத் தொகையைச் செலுத்த வேண்டும் என்று நீதி மன்றம் முடிவு செய்தது.

## தரகும் தள்ளுபடியும்

### (Commissions and Discounts)

**தரகு தருதல்** (Payments of Commissions)

நிறுவனம், 76ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் தரகு தருவதற்கு அதிகாரமுடையதாகும் :

(1) முதற்கண் நிறுவனம் தரகு தருவதைச் செயல்முறை விதிகள் அனுமதிக்க வேண்டும். அவ்வாறில்லா விட்டால் நிறு வனம் சிறப்புத் தீர்மானம் (Special resolution) செய்து, செயல் முறை விதிகள் தரகு தருவதை அனுமதிக்கும்படி செய்யவேண் டும்.

(2) தரப்படும் தரகு, பங்குத்தொகையில் ஐந்து சதவீதம், அல்லது செயல் முறை விதிகள் அனுமதிக்கும் வீதம் ஆகியவை களில் எது குறைவோ அதற்கு மிகையாகாமலிருக்க வேண்டும். கடன் ஈட்டுப் பத்திரத்திற்கு $2\frac{1}{2}$ சதவீதம், செயல்முறை விதிகள் அனுமதிக்கும் விதம் ஆகியவைகளில் எது குறைவோ அதற்கு மிகையாகலாகாது.

(3) மேற்படி தரகு தரப்படும் தொகை அல்லது சதவீதம், பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாயின், நிறுவனத்தின் திட்ட அறிவிப்பிலும், அவ்வாறு பொதுமக்களுக்கு வழங்கப்படாததாயின், திட்ட அறிவிப்பிற்குப் பதிலாகப் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்படும் வாக்கு மூலத்திலும் (Statement in lieu of Prospectus) திட்ட வட்டமாகத் தெளிவுறுத்த வேண்டும்.

(4) தரகுக்காகப் பொது மக்கள் முழுமையாக (absolutely) அல்லது நிபந்தனையின் பேரில் (Conditionally) ஏற்றுக்கொண்ட பங்குகள் அல்லது கடன் ஈட்டுப் பத்திரங்களின் எண்ணிக்கை மேற்கண்டவாறு திட்ட அறிவிப்பில் அல்லது பதிவாளரிடம் தாக்கல் செய்த வாக்கு மூலத்தில் தெளிவுறுத்த வேண்டும்.

மேற்கூறிய வகையேயன்றி வேறு எவ்வித வகையிலும் ஒரு நிறுவனத்திற்குத் தரகு தருவதற்கு வேறு எவ்வித அதிகாரமும் கிடையாது என்று அப்பிரிவு திட்ட வட்டமாகக் கூறுகிறது. ஆனால் காலந்தொட்டு நடைமுறையில் கடைப்பிடித்துச் சட்டப்படி ஒரு நிறுவனம் தரகு தருவது இப்பிரிவு பாதிக்கவில்லை என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், நிறுவனத்திற்கு விற்பனை செய்தவரும் (Vendors) நிறுவனத்தின் துவக்குநர்களும் (Company promotors), ஏனையோரும், பணத்திற்குப் பதிலாக நிறுவனத்தின் பங்குகளை ஏற்றுக்கொண்டால், மேற்படி பங்குகளுக்கும் தரகு தருவது சட்ட முறையானதென பிரிவு புலப்படுத்துகிறது.

**தள்ளுபடி செய்தல்**

நிறுவனம், 79ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் தள்ளுபடி செய்து பங்குகளை வழங்குவதற்கு அதிகாரமுடையதாகும். நிறுவனம் ஏற்கெனவே வழங்கப்பட்ட வகையைச் சேர்ந்த பங்குகளைத் தள்ளுபடி செய்து வழங்கலாம். ஆனால், கீழ்க்குறிப்பிட்ட வகையில் அதைச் செய்ய வேண்டும்.

(1) நிறுவனம் அதன் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் செய்து பங்குகளைத் தள்ளுபடி செய்து வழங்குவதற்கு நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்க வேண்டும். மேலும், மேற்படி தீர்மானம் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட வேண்டும்.

(2) நிறுவனத்தில் தீர்மானத்தில் தள்ளுபடி சதவீதம் எவ்வளவு என்பது குறிப்பிடப்பட வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட தள்ளுபடி, பத்து சதவீதத்திற்கு மிகையாகமலும்,

மத்திய அரசு அதற்கும் அதிகமான சதவீதம் அனுமதித்தால், அதற்கு மிகையாகாமலும் இருக்க வேண்டும்.

(3) தள்ளுபடி வழங்கப்படும்போது நிறுவனம் தொழில் தொடங்குவதற்குரிய உரிமைபெற்று ஒரு வருடத்திற்குக் குறையாமலிருக்க வேண்டும்.

(4) தள்ளுபடி, நீதிமன்றம் அனுமதி தந்த இரண்டு மாத காலத்திற்குள் அல்லது நீதிமன்றம் அதற்குமேல் அனுமதித்த காலத்திற்குள் வழங்கப்படவேண்டும்.

நிறுவனம் பங்குகளைத் தள்ளுபடி செய்து வழங்கும்படி தீர்மானம் செய்தபிறகு, நீதிமன்றத்துக்கு அதை அனுமதிக்கும்படி மனுச் செய்ய வேண்டும். நீதிமன்றம், நிறுவனத்தின் சூழ்நிலைகளைக் கொண்டு, மனு அனுமதிக்கப்பட வேண்டுமெனக் கருதினால், அதை நீதிமன்றம் கருதுகின்ற கட்டுத்திட்டங்களுக்குட்பட்டு அனுமதிக்கலாம். அதன் பிறகு நிறுவனம் வெளியிடும் ஒவ்வொரு திட்ட அறிவிப்பிலும், தள்ளுபடி செய்யப்பட்ட முழு விவரங்களையும், தள்ளுபடி செய்யப்பட்ட தொகையையும் குறிப்பிட வேண்டும். தவறினால் நிறுவனமும் ஒவ்வொரு அதிகாரியும் ஐம்பது ரூபாய் வரையில் தண்டனைவரி விதிக்கப்படுவர்.

**மிகை ஊதியப் பங்குகள்** (Shares at a premium)

நிறுவனம் செம்மையாகச் செயலுற்று மிக அதிகமான ஆதாயம் (Profit) அடைந்து அதிகமான பங்கு ஆதாயம் (Dividend) வழங்கினால், பொதுமக்கள் போட்டிப் போட்டுக்கொண்டு அதன் பங்குகளைப் பெறுவதற்கு முற்படுவர். அத்தகைய நிறுவனம் பங்குகளை, அவைகளின் மதிப்புக்குமேல் அதிகத் தொகைக்கு வழங்க முற்படுகிறது. இவ்வாறு அதிக மதிப்பில் வழங்கப்படும் பங்குகள் மிகை ஊதியப் பங்குகள் (Shares at a premium) என்று வழங்கப்படுகின்றன.

ஒரு நிறுவனம் மிகை ஊதியப்பங்குகளை வழங்குவதற்கும் சட்டத்தில் சில தடைகள் உள்ளன. அவைகள் 78ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தப் பிரிவின்படி, ஒரு நிறுவனம் மிகையூதியப் பங்குகளைப் பணத்திற்காகவோ அல்லது வேறெதற்காகிலும் வழங்கினால், அவ்வாறு அதிகமாக வழங்கப்பட்ட தொகைக்குச் சமமான தொகையை மிகையூதியப் பங்கு நிதிக்கு (Share premium Fund) ஒதுக்க வேண்டும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியைக் குறைக்கவோ, செலவு செய்யவோ வேண்டுமென்றால், நிறுவனத்தின் மூலதனத்தைக் குறைப்பதற்குக்

கையாளப்படும் முறைகளையே கடைப்பிடிக்கவேண்டும். ஆனால், கீழ்க்கண்ட செலவினங்களுக்கு அம்முறைகள் தேவையில்லை :

(1) வழங்கப்படாத பங்குகளை உறுப்பினர்களுக்கு முழுவதும் செலுத்தப்பட்ட மேலூதியப் பங்குகளாக (Fully paid Bonus Shares) வழங்குவது.

(2) துவக்கச் செலவுகளை (Preliminary expenses) தள்ளுபடி செய்வது.

(3) பங்குகளுக்கு வழங்கிய தரகும் தள்ளுபடியும் ஈடு செய்வது.

(4) முன்னுரிமைப் பங்குகளை மீட்பதற்கு அவைகளுக்குத் தரப்படவேண்டிய மிகை ஊதியம் (Premium) ஈடு செய்வது.

மேற் கூறியவைகளுக்கு மிகையூதியப் பங்கு நிதியை (Share premium Fund) நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் உபயோகித்துக் கொள்ளலாம்.

**பங்குச் சான்றிதழ்கள்** (Share certificates)

பங்குகளை, விண்ணப்பம் செய்தவர்களுக்கு வழங்கிய பிறகு, அடுத்தபடியாக நிறுவனம் செய்ய வேண்டியது, அவ்வப் பங்குதாரர்களுக்குரிய பங்குச் சான்றிதழ்களை வழங்க வேண்டியதாகும். இதை 113ஆவது பிரிவில் கீழ்க்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு நிறுவனம் பங்குகள் வழங்கிய மூன்று மாதத்திற்குள்ளும், பங்குகள் கைமாறியதைப் (Share transfers) பதிவு செய்வதற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற்ற இரண்டு மாதத்திற்குள்ளும் அவரவர்களுக்குரிய பங்குச் சான்றிதழ்களைத் தயாரித்து அனுப்பி வைக்க வேண்டும். தவறினால் அவ்வாறு தவறிய நிறுவனமும் அதன் ஒவ்வொரு அதிகாரியும் தவறு செய்த ஒவ்வொரு நாளைக்கும் 500 ரூபாய் வரையில் தண்டனைவரி (Fine) விதிக்கப்படுவர்.

மேலும், அவ்வாறு தவறிய நிறுவனம், அத்தவறைச் சரி செய்ய வேண்டுமெனவும் அறிக்கை பெற்ற 10 நாட்களுக்குள், அவ்வாறு செய்யாவிடில், பங்குச் சான்றிதழுக்குரியவர் செய்த மனுவில், நீதிமன்றம் மேற்படி தவறைச் சரி செய்வதோடல்லாமல் அதற்கான செலவுகளை நிறுவனமோ அல்லது அதன் அதிகாரிகளோ ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் உத்திரவிடும்.

**பங்குச் சான்றிதழின் தன்மையும் அதன் விளைவும்** (Nature and Effect of a share certificate)

பங்குச் சான்றிதழென்பது அதில் குறிப்பிடப்பட்டவரும், அது வழங்கப்பட்டவரும், நிறுவனத்தின் பங்குதாரர் என்றும், வழங்கப்பட்டவர்; அதை அவ்வாறு உபயோகப்படுத்தி அதை விற்பதற்கும், கைமாற்றம் செய்வதற்கும் முற்படலாம் என்ற எண்ணத்துடன் நிறுவனத்தால் அது வழங்கப்பட்டதாகவும் உலகத்தினர் அனைவருக்கு பறைசாற்றி உறுதிமொழியளிப்பதாகும். இதை 84வது பிரிவில் கீழ்க்கண்டவாறு வலியுறுத்தப் பட்டுள்ளது. அதன்படி ஓர் உறுப்பினரின் பங்குகளைக் குறிப்பிட்டு நிறுவனத்தின் முத்திரையிடப்பட்ட பங்குச் சான்றிதழ், அவ்வுறுப்பினர் அவ்விதம் குறிப்பிடப்பட்ட பங்குகளுக்குரியவர் என்பதற்கு மேலோட்டச் சான்றாகும் (Prima facie evidence).

மேலும், அப்பிரிவு, ஒரு பங்குச் சான்றிதழ் புதுப்பிக்கப் படலாமென்றும், அது இழக்கப்பட்டாலும், அல்லது அழிக்கப்பட்டாலும் அல்லது கிழிக்கப்பட்டாலும், அல்லது கரைபட்டாலும், அதற்கு நகல் வழங்கப்படலாமென்றும், அசல் நகல் பங்குச் சான்றிதழ்கள் வழங்கும் அல்லது புதுப்பிக்கும், முறைகளும், அவைகளின் வடிவங்களும், உறுப்பினர் பதிவேடுகளில் பதிவு செய்யப் படவேண்டிய விவரங்களும், செலுத்த வேண்டிய கட்டணங்களும் (fees) தேவையான சான்றுகளும், ஈட்டுறுதியும் (Indemnity) செயல் முறை விதிகளில் எவ்வாறு செப்பியிருந்தாலும், மத்திய அரசு குறிப்பிட்டுள்ள விதிகளின்படி இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது.

இவ்வாறு உலகினரை விளித்து, யாவரையும் அதை நம்பிச் செயலுறும்படி சொல்வதால், பங்குச் சான்றிதழ் நிறுவனத்திற்கு இருவகையில் முரண்தடையாகிறது (Estoppel against the company).

முதற்கண் குறிப்பிடத்தக்கது, பங்கு உரிமையைப் பற்றிய, முரண்தடை (Estoppel as to Title).

ஒருவர் குறுப்பிட்ட பங்குகளுக்குரியவர் என்று பங்குச் சான்றிதழ் கவனமில்லாமல் அல்லது அசட்டையாக வழங்கியபிறகு, அவர், அதற்குரியவரல்லர் என்று மறுப்பதற்கு நிறுவனம் முரண்தடையுறுகிறது. இதை டிக்ஸன் v. கென்னவே *(1900)* 1 ch. 8331 [Dixon v. Kennaway (1900) 1 ch. 8331]. என்ற வழக்கு விளக்குகிறது. அவ் வழக்கில் திருமதி X ஒரு நிறுவனத்தின் 500 பங்குகளைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்து அதற்குரிய தொகையையும் செலுத்தினர். L என்பவர் நிறுவனத்தின் செய

லாளர். P என்பவர் அவருடைய எழுத்தர் (clerk). P என்பவர் 300 பங்குகளை அவைகளுக்கு உரிமையாளர் போல் நடித்து, திருமதி X-க்குக் கைமாற்றம் செய்தார் (Tramsferred) நிறுவனம் அசல் சான்றிதழ்களைப் பெருமல், பங்குகள் கை மாற்றத்தைப் பதிவு செய்து, திருமதி X-க்குப் புதிய சான்றிதழ் வழங்கிற்று. அதன்பிறகு அந்த நிறுவனம் திருமதி X-க்கு அளித்த பங்குச் சான்றிதழ் செல்லாதென மறுப்பதற்கு முரண் தடைக்குள்ளாகி, அவருக்கு விளைந்த இழப்பிற்கு ஈடு செய்யும் பொறுப்புக்கு ஆளாயிற்று.

பங்குச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டவர், அதில் குறிப்பிடப் பட்ட பங்குகளுக்குரியவரென்பதற்கு மேலோட்டமான சான்றே தவிர. அவர் அப்பங்குகளுக்குரியவர் என்பதற்கான உரிமை மூலம் (Title) அன்று என்று நன்ருகக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதை நன்ருக வலியுறுத்துகிறது. [In re Ottos Kapje Diamond Mines, (1893) 1 ch. (618)] என்ற வழக்கு. இவ் வழக்கில் பொய் யான பங்குச் சான்றிதழின் உரிமை மாற்றம் பெற்றவர் (Transferred) அவரைப் பங்குதாரராய்ப் பதிவு செய்யும்படி நிறுவனத் தைக் கட்டாயப்படுத்த முடியாது என்றும், அவருக்குள்ள உரிமை நிறுவனத்திடமிருந்து தமக்கேற்பட்ட இழப்பீட்டைப் (Damages) பெறுவதுதான் என்றும், மேற்படி இழப்பீட்டின் அளவு (Quantum) பங்குதாரராய்ப் பதிவு செய்ய மறுக்கப்பட்ட தேதியில் அப் பங்குகளின் அன்றைய நிலவர விலைக்குச் (Market price) சமமானதாகும் என்றும் தெளிவு படுத்தப்பட்டது.

**பொய்யான பங்குச் சான்றிதழ்** (Forged Share certificate)

பங்குச் சான்றிதழ் பொய்யானதாக இருப்பின் அது நிறு வனத்திற்கு எவ்வகையிலும் முரண்தடையாகாது. இதை ரூபன் *v.* கிரேட் ஃபிங்கல் கன்சோலிடேட் [Ruben *v.* Great fingal Consolidated (1906) A. C. 439] என்ற வழக்கு விளக்குகிறது. இவ் வழக்கில் நிறுவனத்தின் செயலாளர், நிறுவனத்தின் முத்திரை யிட்டு, இரண்டு இயக்குநர்களுடைய கள்ளக் கையெழுத்திட்டு, பங்குச் சான்றிதழ் வழங்கினர். அது நிறுவனத்திற்கு எவ்வகை யிலும் முரண் தடையாகாதென முடிவு செய்யப்பட்டது.

இதை வலியுறுத்தி மேலும் அக் கருத்து விரிவாக்கப்பட்டது. இன் ரி சவுத் ஆஃப் லண்டன் கிரேஹவுண்ட் ரேஸ் கோர்சஸ் லிமிடெட் *v.* வேக். [In re South of London Greyhound Race Courses Ltd. *v.* Wake (1931) 1 Ch. 496] என்ற இவ் வழக்கில், பங்குச் சான்றிதழ் உண்மையிலேயே, செயலாளரும் இயக்குநர் களும் கையெழுத்திட்டாலும், அதற்கு, முறையான அதிகார

மின்றி நிறுவனத்தின் முத்திரையிடப்பட்டதால், அது பொய்யான தென்றும், அது நிறுவனத்திற்கு முரண்தடையாகாது என்றும் ஐயம் திரிபற முடிவு செய்யப்பட்டது.

ஆனல், முத்திரையிடும் அதிகாரத்தை மோசடி (Fraud) செய்து பெற்று, வழங்கப்பட்ட சான்றிதழ், நிறுவனத்திற்கு முரண்தடையாகும் என்று மேலே குறிப்பிடப்பட்ட டிக்ஸன் v. கன்னவே டிக்ஸன் v. கென்னவே [Dixon v. Kennaway (1909) 1 Ch. 933 ] என்ற வழக்குத் தெளிவாக்குகிறது.

**பங்கில் செலுத்தப்பட்ட தொகைக்கு முரண்தடை** (Estoppel as to Payment.)

இரண்டாவதாக, பங்குச் சான்றிதழ் பங்கில் செலுத்தப் பட்ட தொகைக்கு முரண் தடையாகிறது. உதாரணமாக, ஒரு நிறுவனம் முழுவதும் செலுத்தப்படாத பங்குத் தொகைகளுக்கு, முழுவதும் செலுத்தப்பட்டதாகப் பங்குச் சான்றிதழ் வழங்கினுல், பின்னர், நிறுவனம் அவைகள் முழுவதும் செலுத்தப்பட்டவை அல்ல என்று மறுக்கமுடியாது. இந் நிலையை மிகவும் நன்ருக நவில்கிறது புளுமாண்தல் v. ஃபோர்ட் [Bloomanthal v. Ford (1897) A. C. 156.] இவ் வழக்கில் 'A' என்பவர் ஒரு நிறுவனத் திற்குக் கடன் கொடுத்தார். கடனுக்குப் பிணையமாக (Security) நிறுவனம் முழுவதும் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட பங்குச் சான்றிதழ்களை அளித்தது. உண்மையில் அப் பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டவை அல்ல. நிறுவனம் கலைக்கப்பட்ட போது, நிறுவனமோ அல்லது கலைப்பு அதிகாரியோ (Liquidator), அப் பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டவை அல்ல என்பதை மறுக்க முடியவில்லை. அதனுல், அவர் பங்குகொடுப்பவர் பட்டி யலில் (Contributory list) சேர்க்கப்படவில்லை.

நிறுவனத்தின் பங்குச் சான்றிதழ் நெறி நோக்கில் உரிய நலனுக்குச் (Equitable interest) சான்று அன்று என்று ரெயின் ஃபோர்ட் v. ஜேம்ஸ் கீத் பிளாக்மேன் அண்டு கம்பெனி [Rain Ford v. James Keith Blackman and Co.] என்ற வழக்கில் தெளிவாக்கப் பட்டுள்ளது அதில் 'A' என்பவர் 120 பங்குகள் பெற்றிருந்தார். அவைகளை அவர் 'B' என்பவருக்கு அடைமானம் வைத்தார். பின்னர், அவர் பங்குச் சான்றிதழ்கள் தன் நண்பரிடமுள்ளதாக நிறுவனத்திடம் பொய் சொல்லி, அப் பங்குகளை 'C' என்பவருக்கு விற்ருர். நிறுவனம் அவர் வாக்கை நம்பி, 'C' என்பவருக்குப் பங்குச்சான்றிதழ்கள் வழங்கியது. 'A' என்பவருக்கு வழங்கப் பட்ட சான்றிதழ்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளாமல் 'C' என்

பவருக்குப் பங்குச் சான்றிதழ்கள் வழங்கியது நிறுவனத்தின் கவனமின்மையாயிருந்தாலும், நிறுவனம் 'B' என்பவருக்கு எவ்வகையிலும் கடமைப்பட்டதல்ல என்றும், பங்குச் சான்றிதழ் நெறி நோக்கிலுற்ற நலனுக்குச் (Equitable interest) சான்று அன்று என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேலும், பங்குச் சான்றிதழின் விளைவு [in re Barrow (1880) 14 Ch. D. 432(CA)] வழக்கில் வெகு விரிவாக விளக்கப்பட்டது. முழுவதும் செலுத்தப்படாத பங்குகள், நிறுவனம் முரண் தடையுற்று அவைகள் முழுவதும் செலுத்தப்பட்டவை என்ற உரிமையை ஒருவர் பெற்றால், அவரிடமிருந்து அப் பங்குகளை உரிமை மாற்றம் பெற்ற அனைவரும், அவைகள் உண்மையில் முழுவதும் செலுத்தப்படாத பங்குகள் என்ற உண்மையை அறிந்திருந்தும், அவைகள் முழுவதும் செலுத்தப்பட்டவை என்ற உரிமையைப் பெறுவர் என்று இவ் வழக்கில் தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை மிகவும் ஆதரித்து (Gower) என்னும் ஆங்கிலச் சட்ட வல்லுநர், அவ் வாறில்லாவிடில் பங்கு வாணிபத்தில் (Share Market) பங்குகள் விலை போகாது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய வழக்குகளின் முடிவைக்கொண்டு, பங்குச் சான்றிதழின் விளைவைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்: பங்குச் சான்றிதழ், அதனை நம்பி யாவரும் செயலுறும்படி, உலகினருக்கு விளக்கப்பட்டதாகும். எனவே, முதலாவதாக, நிறுவனம் கவனப் பிசகினாலோ அல்லது அசட்டையாலோ தவறாக உரியவரல்லாதவருக்குப் பங்குச்சான்றிதழ் வழங்கலுற்றால், நிறுவனம் பின்னர் அதனால் முரண்தடையுற்று அவர் பங்குதாரரல்ல என்பதை மறுக்கவும் முடியாது. அதன் காரணமாக அது உண்மையான பங்குதாரரைத் தன் பதிவேட்டிலிருந்து விலக்கவும் முடியாது. ஏனெனில், பங்குச் சான்றிதழ் உரிமைக்குரிய மேலோட்டமான சான்றே அன்றி, உரிமை மூலம் (Title) அன்று. இவ்வாறு இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்பு போன்று, நிறுவனம் அதிலிருந்து மீளவேண்டுமாயின், தவறாகச் சான்றிதழ் வழங்கப்பட்டவருக்குரிய இழப்பீட்டைச் (Damages) செலுத்த வேண்டியதாகிறது. ஆனால், வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ் பொய்யானதாயின் (Forged), அது நிறுவனத்திற்கு எவ்வகையிலும் முரண்தடையாகாது. ஏனெனில், அது முற்றிலும் செல்லா நிலையதாகும் (absolutely void).

இரண்டாவதாக, முழுவதும் செலுத்தப்படாத பங்குகளை முழுவதும் செலுத்தப்பட்டதாக அவைகளுக்குப் பங்குச் சான்

றிதழ் வழங்கினால், அது நிறுவனத்திற்கு முரண்தடையாகி, நிறுவனம் அதை மறுக்க முடியாமல் முழுவதும் செலுத்தப்பட்டவையாகக் கருதப்படுகிறது. பங்குச் சான்றிதழில் உரைக்கப் பட்டுள்ளவை உண்மையல்ல என்று உணர்ந்திருந்தவர், அவ்வித உரிமையைப் பெறமுடியாது. ஆனால், அவ்வித வுரிமையைப் பெற்றவரிடமிருந்து, உரிமை மாற்றம் பெற்றவர் பங்குச் சான் றிதழில் உரைக்கப்பட்டவை உண்மையல்லவென்று உணர்ந்திருந் தாலும் அவர் அவ்வித உரிமையைப் பெறலாம்.

மேலும், ஒரு நிறுவனத்தின் பங்குச் சான்றிதழ், அதில் குறிப்பிடப்பட்டவர், அது வழங்கப்பட்ட தேதியில் அதில் குறிப் பிடப்பட்ட பங்குகளுக்குரியவர் என்பதற்குரிய சான்றே அன்றி, அதற்குப் பிறகு அவர் அப்பங்குகளுக்குத் தொடர்ந்து உரியவர் என்பதற்கோ, அல்லது அதில் நெறி நோக்கிலுற்ற நலனுக்கோ (Equitable interest) எவ்விதச் சான்றும் அன்று.

**பங்குத் தொகை கோரிக்கைகள்** (Calls on Shares)

ஒரு நிறுவனம் தன் மூலதனத்தைப் பொதுமக்கள் எளிதில் ஏற்கும்படி சிறுமதிப்புடைய பங்குகளாகப் பிரித்து வழங்குகிறது. மேலும், அப் பங்குகளை வழங்கும்போது, அவைகளின் முழுத் தொகையையும் நிறுவனம் தண்டல் செய்வதில்லை. அது பங்குத் தொகையைப் பங்குதாரர்களுக்குக் கடினமில்லாமல் சிறுகச்சிறுக தேவைப்படும்போது பெறுகிறது. முதலில் பங்குத் தொகை விண்ணப்பத்துடன் திட்ட அறிவிப்பில் குறிப்பிட்ட தொகையைப் பெறுகிறது. இத்தொகை விண்ணப்பத் தொகை (Application money) என்று குறிப்பிடப்படுகிறது. விண்ணப்பத் தொகை பங்குத் தொகையில் 5 சதவீதத்திற்குக் குறைவாயிருக்கக் கூடாது (பி. 69). பின்னர், பங்குகள் வழங்கப்படும்போது ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெறுகிறது. இதை ஒதுக்கப்படுவதற் கான தொகை (Allotment money) என்று குறிப்பிடப்படுகிறது. மேலும், திட்ட அறிவிப்பில் அல்லது செயல் முறை விதிகளில், பங்கு வழங்கப்பட்ட குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, குறிப் பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டால், அத்தொகையை நிறுவனம் கோராமலேயே பங்குதாரர்கள் குறிப் பிட்ட காலத்தில் செலுத்த வேண்டும். ஆகவே, பங்குத் தொகை யில், விண்ணப்பத் தொகை, ஒதுக்கப்படுவதற்கான தொகை, பங்கு வழங்கிய பிறகு குறிப்பிட்ட காலத்தில் செலுத்த வேண்டிய தொகை இவைகள் நீங்கலாக மீதியுள்ள தொயைப் பங்குதாரர் களிடமிருந்து தேவைப்படும்போது, அவ்வப்போது, அவர்களுக்கு விடுக்கும் கோரிக்கைகள் வாயிலாக, நிறுவனம் பெறுகிறது.

இத்தொகை கோரிக்கைத் தொகை (Call money) என்று குறிப்பிடப்படுகிறது.

உதாரணமாக, நிறுவனத்தின் பங்குத் தொகையின் மதிப்பு ரூ. 1000 என்று வைத்துக் கொள்வோம். இதில் விண்ணப்பத் தொகை 100 ரூபாய் என்றும், ஒதுக்கப்படுவதற்கான தொகை. 100 ரூபாய் என்றும், பங்கு வழங்கி இரண்டாவது மாதத்தில் செலுத்துந் தொகை 200 ரூபாய் என்றும் கொண்டால், மீதியுள்ள 600 ரூபாய் கோரிக்கைத் தொகையாகும். இத்தொகையை நிறுவனம் அவ்வப்போது வேண்டும் போது கோரிக்கை வாயிலாகப் பெறலாம்.

ஆகவே, சுருங்கச் சொல்லின், கோரிக்கை என்பது நிறுவனம் பங்குதாரர்களை அவர்கள் ஏற்றுக்கொண்ட பங்குகளில், செலுத்தப்பட வேண்டிய கோரிக்கைத் தொகையில் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தும்படி முறையாகக் கோரி அனுப்பப்படும் அறிக்கையாகும்.

மேற்படி கோரிக்கை, நிறுவனம் நினைத்தபடி, தங்கு தடங்கலின்றித் தான்தோன்றித் தனமாய், பங்குதாரர்களுக்கு விடுக்கும் அறிக்கையல்ல. முறையான கோரிக்கை (Valid Call), முறையான முறைகளை, முறையே முற்றிலும் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியமானதாகும். இல்லாவிடில் கோரிக்கை செல்லாமல் போகும்.

ஆகையால், முறையான கோரிக்கை கீழே குறிப்பிட்ட விதிகளின்படி இருக்கவேண்டும் :

(1) முறையாக அமர்த்தப்பட்ட முழுவதும் தகுதிபெற்ற இயக்குநர்கள், முறையாகக் கூறிய கூட்டத்தில், கோரிக்கை விடுவதற்குரிய தீர்மானம் செய்யவேண்டும். கூட்டத்திற்குத் தேவையான குறைந்த எண்ணிக்கை (Quorum) இல்லாவிடினும், கூட்டம் முறைப்படி கூட்டப்படாவிட்டாலும், இயக்குநர்கள் தகுதியற்றவராயினும், கோரிக்கை செல்லாததாகும். மிகச் சிறு குறைகள் கோரிக்கையை பாதிப்பதில்லை. மேலும் மேற்கூறிய குறைகளைத் தவிர்க்க இயக்குநர்கள் தகுதியற்றவரானாலும் அல்லது முறைப்படி அமர்த்தப்படாவிட்டாலும், அவர்தம் செய்கைகள் செல்லத்தக்கதாகுமெனச் செயல் முறை விதிகளை அமைத்துக் கொள்கின்றன சில நிறுவனங்கள். அவ்வாறாயின், கூட்டத்திலோ அல்லது இயக்குநர்களிடையோ, குறைகளிருப்பினும், அவர்தம் செய்கைகள் முற்றிலும் முறையானவை யெனக் கொள்ளப்படும். கீழ்க்கண்ட வழக்குகள் இதை விளக்குகின்றன.

டாசன் v. ஆஃப்ரிகன் கன்சாலிடேட்டட் லாண்ட் அண்டு டிரேடிங் கம்பெனி [Dawson v. African Consolidated Land and Trading Co. (1898) 1 Ch. 6] என்ற இவ்வழக்கில், நிறுவனத்தின் இயக்குநர் மூவர் கூடி கோரிக்கை செய்யத் தீர்மானம் செய்தனர். அதில் ஒருவர் தகுதியற்றவராய் இருந்தார். இருப்பினும் நிறுவனத்தின் செயல் முறை விதிகள் மேற்படி குறை இயக்குநர்கள் செய்கைகளை பாதிக்காது என்று குறிப்பிட்டபடியால், நிறுவனத்தின் கோரிக்கை சரியானது (Valid call) என்று முடிவு செய்யப்பட்டது. சிரோமணி சர்க்கரை ஆலை லிமிடெட் v. டேபி பிரசாத் [Shiromany Sugar Mills Ltd. v. Debi Prasad, A.I.R. (1950) All. 508] என்ற இவ் வழக்கில் நிறுவனத்தின் இயக்குநர்கள் ஒதுக்கப்படுவதற்கான தொகையையும் (Allotment money), கோரிக்கை தொகைகளையும் (Call moneys) செலுத்தாதபடியால் இயக்குநருக்குரிய தகுதியை இழந்தனர். இருப்பினும், செயல்முறை விதிகள் மேற்படி குறைகள் இயக்குநர்கள் செயலைப் பாதிக்காது என்று இருந்ததால், அவர்கள் செய்த கோரிக்கை செல்லத்தக்கது என்று முடிவு செய்யப்பட்டது.

இரண்டாவதாக, இயக்குநர்கள் தீர்மானம், கோரிக்கைத் தொகையையும், அது செலுத்தப்படவேண்டிய தேதியையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். தவறினால் தீர்மானம் தவறானதாகும். இவைகளைக் கீழ்க்கண்ட வழக்குகள் விளக்குகின்றன. இ. அண்ட் டபிள்யு. இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் v. திருமதி கமலாமேத்தா [E. and W. Insurance Co. Ltd. v. Mrs. Kamala Mehta A.I.R. (1956) Bom. 537], என்ற இவ் வழக்கில் இயக்குநர்கள் செய்த இரண்டு தீர்மானங்களிலும், கோரிக்கைத் தொகையும், அது செலுத்தப்பட வேண்டிய தேதியும் குறிப்பிடவில்லை. நிறுவனத்தின் செயலாளர் மேற்படி விவரங்களைத் தம் இச்சைப்படி நிச்சயித்துக் கொண்டார். கோரிக்கை செல்லாது என்று முடிவு செய்யப்பட்டது.

கோரிக்கை தவறானதாயின் வேறு சரியான தீர்மானம் செய்து அதை ஒட்டி மறுமுறை அறிக்கை அனுப்ப வேண்டும்.

*(3)* மூன்றாவதாக, கோரிக்கை விடுகின்ற அதிகாரம் மிகவும் நம்பிக்கைக்குகந்த அதிகாரமாகும் (in the nature of trust). ஆகையால், அவ் வதிகாரத்தை நம்பிக்கைக்குகந்த வகையில் நிறுவனத்தின் நன்மைக்காகவே நல்லெண்ணத்துடன் (Good faith) பயன்படுத்த வேண்டும். ஆகையால், கோரிக்கை அவ்வாறில்லா விட்டால் செல்லாததாகும். இவைகளைக் கீழ்க்கண்ட வழக்குகளில் காணலாம்:

அலெக்ஸாண்டர் *v.* ஆட்டோமோடிவ் டெலிபோன் கம்பெனி [Alexandar *v.* Automotive Telephone Co. (1900) 2 Ch. 56] என்ற இவ் வழக்கில், இயக்குநர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தாமல் மற்றெல்லா பங்குதாரர்களையும் குறிப்பிட்ட கோரிக்கைத் தொகை செலுத்தும்படி செய்தனர். நீதிமன்றம் மேற்படி கோரிக்கை நல்லெண்ணத்துடன் செய்யப் பட்டதல்ல, அதற்கு மாருக நம்பிக்கை துரோகமானது (Breach of Trust) என்று குறிப்பிட்டு, இயக்குநர்களும் மேற்படி கோரிக் கைத் தொகைகளைச் செலுத்த வேண்டுமென முடிவு செய்தது.

[In re European Central Rail Co. (1872) 13 Eq. 255] என்ற இவ் வழக்கில், நிறுவனத்திற்கு இயக்குநர்களுக்கு அமர்வுக் கட் டணம் (Directors sitting fees) செலுத்துவதற்குப் பணம் தேவைப்பட்டது. உடனே இயக்குநர் தங்கள் பங்குகளில் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தி அப் பணத்தை மீண்டும் தங்கள் அமர்வுக் கட்டணமாகப் பெற்றுக் கொண்டனர். ஆனல், நீதிமன்றம், மேற்படி கோரிக்கை நிறுவனத்தின் நன்மை கல்லவென்றும் இயக்குநர்கள் சுயநலத்திற்காகச் செய்யப்பட்ட தென்றும், அவர்கள் தங்கள் பங்குத் தொகையில் செலுத்த வேண்டிய தொகையை மீண்டும் செலுத்தவேண்டுமென்றும் முடிவு செய்தது.

நான்காவதாக, 91ஆவது பிரிவில் குறிப்பிட்டபடி ஒரே வகுப்பினைச் சார்ந்த பங்குகளில் கோரப்படும் தொகை சமமாக இருக்க வேண்டும் (Uniform basis). ஆகையால், ஒருசில குறிப் பிட்ட பங்குதாரர்களுக்கு மட்டும் கோரிக்கை விடுவது முறை யானதன்று. கல்லோவே *v.* ஹால்ஸ் கன்சர்ட்ஸ் சொசைட்டி [Galloway *v.* Halls Concerts Society (1915) 2 Ch. 233] என்ற இவ் வழக்கில் ஒரு பங்குதாரர் முதலிரண்டு கோரிக்கை களைக் காலங் கடத்திச் செலுத்தினர். மூன்ருவது கோரிக்கைத் தொகையைச் செலுத்தாமல் அசட்டையாக இருந்தார். இதனல் கடுங் கோபங் கொண்ட இயக்குநர்கள், அவர் தம் பங்கில் செலுத்த வேண்டிய கோரிக்கைத் தொகை முழுவதையும் உடனடி யாகச் செலுத்த வேண்டுமென முடிவு செய்தனர். மேற்படி கோரிக்கை செல்லாதென முடிவு செய்யப்பட்டது.

ஐந்தாவதாக, கோரிக்கைத் தொகையைப் பணமாகவோ, பண்டமாகவோ பெற்றுக் கொள்ளலாம். லாரோக்யூ *v.* பீச்சிமின் [Laroeque *v.* Beauchemin, (1897) A.C. 358] என்ற இவ்வழக்கில் நிறுவனம் காகித ஆலை வாங்கியது. விற்ற தொகையில் ஒரு பகுதியை நிறுவனத்தின் பங்குகளாக ஆலையை விற்றவர் பெற்றுக்

கொண்டார். அது முறையானது என்று முடிவு செய்யப் பட்டது. அதே முறையில், நிறுவனம் பங்குதாரருக்குத் தர வேண்டிய கடனுக்கு, அவர் பங்குத் தொகையில் செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடு செய்து கொள்ளலாம்.

பங்குத் தொகையைப் பணமின்றி வேறு வகையில் பெற்றுக் கொள்வதில் மோசடிகளும் விளைவதுண்டு. மறுபயன் பங்குத் தொகையைவிட மிகக் குறைவாக இருப்பின் அது மோசடியாகும் (Fraud). நிறுவனத்தின் இயக்குநர் தமக்குச் சேரவேண்டிய நூறு ரூபாய்க்கு இருநூறு ரூபாய் மதிப்புள்ள பங்குகளைப் பெற்றுக் கொண்டால் அது எளிதில் மோசடியெனக் கருதப்படும். மோசடி சிறிதும் இல்லை என்றால், பங்குகளை குறைந்த மறுபயனுக்கு வழங் கப்பட்டாலும் அவை செல்லும். ஆனால், நிறுவனம் பங்குகளைக் கடனுறுதிச் சீட்டுகளின் பேரில் (Promissory notes) வழங்க லாகாது.

கோரிக்கைகளைப் பற்றிய இதர விதிகள் நிறுவனச் சட்டத்தில் மாதிரி அட்டவணை 'A' ல் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை சுருக்க மாகப் பின்வருமாறு :

நிறுவனம் கோரிக்கைத் தொகையைக் கோரிக்கைகள் வாயி லாகப் பெறலாம். கோரிக்கை, பங்குத் தொகையில் கால்பாகத் திற்கு மிகையாகலாகாது. கோரிக்கைத் தொகை செலுத்திய ஒரு மாதத்திற்குள், மறுமுறை கோரிக்கைவிடலாகாது. கோரிக்கைத் தொகையைச் செலுத்த 14 நாட்கள் கெடு வழங்கவேண்டும். கோரிக்கையை மறுத்தழிக்கலாம் (Revoked) அல்லது தள்ளி வைக்கலாம் (Postponed). நிறுவனம் தீர்மானம் செய்த பிறகு தான் கோரிக்கைவிடவேண்டும். கோரிக்கைத் தொகையைத் தீர்மானப் செய்த தேதியிலிருந்து, 3 வருடத்திற்குள் நிறுவனம் தண்டல் செய்யவேண்டும். தவறினால் அது காலாவதியாகிவிடும் (Time barred). கூட்டுப் பங்குதாரர்கள் கூட்டாகவும், வெவ்வே ருகவும் (Jointly and severally) கோரிக்கைத் தொகையைச் செலுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளனர். கோரிக்கைத் தொகை குறிப்பிட்ட தேதியில் செலுத்தப்படாவிட்டால், தாமதம் செய் தவர்கள் குறிப்பிடப்பட்ட வட்டியுடன் செலுத்தவேண்டும். இயக்குநர்கள் விருப்பப்பட்டால் வட்டியை விட்டுக் கொடுக்க லாம். செயல்முறை விதிகள் அனுமதித்தால் கோரிக்கைத் தொகையை முன்னதாகவோ (in advance) பெற்றுக்கொள்வ தோடு, அதற்கு இயக்குநர்கள் விருப்பப்பட்டால் வட்டியும் வழங் கலாம். மேலும், பங்கு ஆதாயமும் (Dividend), பங்கில் செலுத் தப்பட்ட தொகையின் விகித வாரியாக வழங்கலாம்.

## கோரிக்கைத்தொகை தண்டல் செய்யும் வகை :

நிறுவனம் முறையாக விடுத்த கோரிக்கைகளின்படி பங்கு தாரர்கள் அத்தொகையைச் செலுத்தத் தவறினுல், நிறுவனம் மேற்படி தொகையைத் தண்டல் செய்யக் கீழ்க்கண்ட முறைகளைக் கையாள வேண்டும்:

(1) செலுத்தத் தவறிய பங்குதாரரின் பங்கைப் பறிமுதல் செய்யலாம் (Forfeiture of Share).

(2) செலுத்தத் தவறிய பங்குதாரர் தம் பங்கைப் பறி கொடுக்க (Surrender of Share) விரும்பினுல் அதை ஏற்றுக் கொள்ளலாம்.

(3) செலுத்தத் தவறிய கோரிக்கைத் தொகையை நிறுவனம் தனக்குரிய கடனைத் தண்டல் செய்வது போல் சட்ட முறைப்படி தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம்.

தற்போது மேலே குறிப்பிட்ட முன்னிரண்டு வழிகளை விரி வாகக் காணலாம்.

**பங்குகள் பறிபோதலும், பறிகொடுத்தலும்:** (Forfeiture and surrender of Shares)

நிறுவனம் இவ்விரு முறைகளைக் கையாளுவதற்கு, மிகவும் கவனமாகச் சட்டமுறைப்படியுள்ள விதிகள் யாவையும் கடைப் பிடிக்கவேண்டும். தவறினுல் நிறுவனத்தின் நடவடிக்கைகள் விழலுக்கிறைத்த தண்ணீரைப் போல் வீணுகிவிடும்.

**பங்குகளைப் பறிமுதல் செய்தல்** (Forfeiture of Shares)

நிறுவனம் பங்குகளைப் பறிமுதல் செய்தால், நிறுவனத்தின் மூலதனம் குறைகிறது. எனவே, பறிமுதல் செய்வது, பங்கை யிழந்த பங்குதாரரை மட்டும் பாதிக்கவில்லை. அதோடு நிறு வனத்தை நம்பியுள்ள, அனைவரின் நலத்தையும் பாதிக்கலாம். ஆகையால், நிறுவனம் பங்கைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தை, மிகவும் கவனமாகச் சட்ட முறைப்படி விதிகளைக் கடைப் பிடித்துப் பயன்படுத்த வேண்டும். மேற்படி விதிகளைச் சற்றுத் தவறினு லும் மீறினுலும், பறிமுதல் செய்தது முற்றிலும் செல்லாததாகும். ஆகவே, நிறுவனம் பங்குகளைக் கீழ்க்கண்ட முறைகளின்படி பறி முதல் செய்யவேண்டும்.

(1) முதற்கண் குறிப்பிடத்தக்கது, பறிமுதல் செய்யும் அதி காரம் நம்பிக்கைக்குகந்ததாகும் (in the nature of trust).

ஆகவே, அவ்வதிகாரத்தை நம்பிக்கைக்குகந்த முறையில், நல்லெண்ணத்துடன் நிறுவனத்தின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

(2) இரண்டாவதாக, பறிமுதல் செய்யும் அதிகாரத்தைச் செயல் முறைகளின்படி நிறுவனம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால், செயல்முறை விதிகளைத் தக்கபடி மாற்றி, மேற்படி அதிகாரத்தை நிறுவனம் பெறவேண்டும். மாத்வா ராம் சந்திரா காமத் *v.* கனரா வங்கிக் கார்ப்பொரேஷன். [Madhwa Ram Chandra Kamath *v.* Canara Banking Corporation (1941) A.I.R. Mad. 354], என்ற இவ் வழக்கில் செயல் முறை விதிகள் நிறுவனத்திற்கு உறுப்பினரை விலக்குவதற்கு (Expel) அதிகாரம் வழங்கியது. மேற்படி அதிகாரத்தை உபயோகித்து நிறுவனம் ஒரு பங்குதாரரின் பங்கை பறிமுதல் செய்தது. ஆனால், நிறுவனத்திற்குப் பறிமுதல் செய்யும் அதிகாரம் செயல் முறை விதிகள் தெளிவாக வழங்கவில்லை என்றும், பறிமுதல் செய்தது செல்லாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

(3) மூன்றாவதாக, அதிகாரமுடையவரால் பறிமுதல் செய்யப்படவேண்டும். சட்டப்படி தகுதிப்பெற்ற முறையாக, அமர்த்தப்பட்ட இயக்குநர்கள் முறைப்படி கூடித் தீர்மானம் செய்து மேற்படி அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும்.

(4) நிறுவனம் செய்த கோரிக்கை முறையானதாக இருக்க வேண்டும்.

(5) கோரப்பட்ட தொகை செலுத்தப்பட வேண்டிய காலம் கடந்ததாய் இருக்க வேண்டும். [In re Bengal Electric Lamps Ltd., (1942) A.I.R. Cal. 516] என்ற இவ் வழக்கில் இயக்குநர்கள் கோரிக்கைத் தொகை செலுத்தப்பட வேண்டிய தேதியைக் குறிப்பிடவில்லை. ஆகையால், கோரிக்கையும், அதன் காரணமாய் செய்த பறிமுதலும் செல்லாதென முடிவு செய்யப்பட்டது.

(6) பறிமுதல் செய்வதற்கு முன்பாகப் பங்குதாரருக்குப் பதினான்கு நாட்கள் தவணை தந்து ஒரு தேதியைக் குறிப்பிட்டு, அதற்குள் செலுத்த தவறினால் பங்கு பறிமுதல் செய்யப்படும் என்று திட்டவட்டமாக அறிக்கை மூலம் தெரியப்படுத்த வேண்டும். அனுப்பப்பட்ட அறிக்கையில் செலுத்தப்பட வேண்டிய தொகையை ஐயம் திரிபறக் குறிப்பிட வேண்டும். ஜான்சன் *v.* லிட்டில்'ஸ் இரும்பு ஏஜன்ஸீஸ் [Johnson *v.* Lyttle's Iron Agencies (1877) 5 Ch. D. 687] என்ற இவ் வழக்கில் பறிமுதல் செய்வதற்கு அனுப்பிய அறிக்கையில், கோரிக்கைத் தொகை செலுத்தப்பட

வேண்டிய தேதியிலிருந்து வட்டி கேட்பதற்கு பதிலாக, கோரிக்கை விடுத்த தேதியிலிருந்து வட்டி கோரப்பட்டது. அறிக்கை முறை யற்றது என்றும், பறிமுதல் செல்லாது என்றும் முடிவு செய்யப் பட்டது. சிறு பிழையும், பெரும் பிழையின் விளைவையே உண்டாக்க வல்லது.

(7) பறிமுதல் செய்வதற்கு அறிக்கை அனுப்பினுல் மட்டும் போதாது. அதைத் தொடர்ந்து, பறிமுதல் செய்வதற்கான தீர் மானம் செய்ய வேண்டும். பிரயம் பிரசாத் v. கயா வங்கிக் அண்டு டிரேட்ஸ் அசோஸியேஷன் லிமிடெட் [Prayam Prasad v. Gaya Bank and Trades Association Ltd. (1931) A.I.R. Pat 44] என்ற இவ் வழக்கில் பங்குதாரர் முன்ருவது கோரிக்கைத் தொகையைச் செலுத்தவில்லை. அதை ஆறு வாரங்களுக்குள் வட்டியுடன் செலுத்தப்பட வேண்டுமென்றும், தவறிஞல் பங்கு பறிமுதல் செய்யப்படுமென அறிக்கை விடப்பட்டது. அவ்வாறு அவர் செலுத்தத் தவறியதைத் தொடர்ந்து, தீர்மானம் செய் யாமல் பறிமுதல் செய்யப்பட்டது செல்லாது என்று முடிவு செய்யப்பட்டது.

(8) கோரிக்கைத் தொகையைத் தவிர, நிறுவனத்திற்குரிய வேறு கடனுக்காகப் பங்கை பறிமுதல் செய்ய முடியாது. ஹாப் கின்ஸன் v. மார்ட்டிமர் ஹார்லே அண்டு கம்பெனி லிமிடெட் [Hopkinson v. Mortimer Harley & Co. Ltd (1917) 1 Ch. 646] என்ற இவ் வழக்கில், நிறுவனம் தன் பற்றுரிமையை நிறைவேற்று வதற்குப் (Enforcement of lien) பங்கை பறிமுதல் செய்வது செல் லாது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனுல், செயல்முறை விதிகள் அனுமதித்தால், அவ்வாறு அனுமதிக்கப்பட்ட காரணங்களுக்கும் நிறுவனம் பங்குகளைப் பறிமுதல் செய்யலாம்.

**பறிமுதலின் விளைவு** (Effect of Forfeiture.)

பங்குதாரர், பங்கு பறிமுதலான பிறகு, பங்குதாரரில்லை. அதற்குப் பிறகு, செயல்முறை விதிகள் அனுமதித்தால் தவிர, கோரிக்கைத் தொகையைத் தண்டல் செய்ய நிறுவனம் அவர் மீது வழக்குப் போடமுடியாது. ஆனுல், பறிமுதலான ஒரு வருடத் திற்குள் நிறுவனம் கலைக்கப்பட்டால் அவர் பழைய உறுப்பினர் என்பதற்காகப் பங்குக்கடன்பாட்டாளர் (Contributory) என்ற முறையில் பொறுப்புள்ளவராகிருர். இவைகளை பெண்கள் ஆடைக் கழகம் v. புல் புருக் [Ladies Dress Association v. Pulburook, 1900) 2 Q.B.376] என்ற வழக்கு விளக்குகிறது. இதில்,

நிறுவனத்தின் செயல்முறை விதிகள் பங்குதாரர் பங்கு பறிமுதலான பிறகு, பாக்கியுள்ள கோரிக்கைத் தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவர் என்று குறிப்பிட்டிருந்தது. பங்கு பறிமுதல் செய்த ஒரு வருடத்திற்குப் பிறகு, நிறுவனம் கலைக்கப்பட்டது. இருப்பினும், பறிமுதல் செய்யப்பட்டவர் கோரிக்கைத் தொகையைச் செலுத்தக்கடமைப்பட்டவர் என்று முடிவு செய்யப்பட்டது.

பறிமுதல் செய்த பங்கை நிறுவனம், மீண்டும் வேருெரு வருக்கு, அதை அதே விலைக்கோ அல்லது குறைந்த விலைக்கோ விற்கலாம். 75 (5)ஆவது பிரிவில் குறிப்பிட்டபடி, பறிமுதல் செய்த பங்குகள் மீண்டு நிறுவனம் விற்ருல் அவைகளைப்பற்றிய விவரங்களைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யத் தேவையில்லை என்று குறிப்பிடுகிறது. பறிமுதல் செய்யப்பட்ட பங்கை வாங்கியவர் அப் பங்கில் செலுத்தப்பட வேண்டிய கோரிக்கைத் தொகையைச் செலுத்துவதற்குக் கடமைப்பட்டவராகிருர்.

பறிமுதல் செய்தது தவறு என்ருல், பங்குதாரர் நிறுவனத்தின் மீது வழக்குப்போட்டு இழப்பீட்டைப் (Damages) பெறுவதோடு, தான் பங்குதாரர் என்பதை நிலைநாட்டிக் கொள்ளலாம். நிறுவனம் கலைக்கப்பட்டாலும் தம் உரிமையை நிறைவேற்றிக் கொள்ளலாம். அவர் தம் உரிமை நிலைநாட்டுவதைத் தாமதித்தாலும், அல்லது நடவடிக்கையே எடுக்கவில்லை யென்ருலும் அவர் அந்த உரிமையை இழந்து விடுவதில்லை.

**பங்குகளைப் பறிகொடுத்தல் (Surrender of Shares)**

பங்கைப் பறிகொடுத்தல் என்பது கோரிக்கைத் தொகையைக் கட்டமுடியாத பங்குதாரர் தம் பங்கை, நிறுவனம் பறிமுதல் செய்வதற்கு பதிலாக, தானே நிறுவனத்திற்குத் திருப்பிக் கொடுத்து விடுவது. ஆகையால், பறிமுதலைப்போல், பறி கொடுத்தலிலும் நிறுவனத்தின் மூலதனம் குறைகிறது. ஆகையால், நிறுவனம் எளிதில் பறிகொடுத்தலை ஏற்றுக் கொள்ள முடியாது பறிமுதல் செய்ய வேண்டிய பங்குகள் பறிகொடுக்கப்படுவதைத் தான் நிறுவனம் ஏற்றுக் கொள்ளமுடியும். மேலும் பறிகொடுத்தலை ஏற்றுக் கொள்வதற்கு, நிறுவனம், நீதிமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும். பங்குதாரரை, அவரது பொறுப்பிலிருந்து விலக்கு அளிப்பதற்காகப் பறிகொடுத்தலை ஏற்றுக் கொள்ள முடியாது. பறிமுதலைப்போல் பறிகொடுத்தலை ஏற்றுக் கொள்வதும், நல்லெண்ணத்துடன் நிறுவனத்தின் நன்மைக்காகவே செய்யப்பட வேண்டும்.

நிறுவனச் சட்டத்திலோ, அல்லது மாதிரிச் செயல்முறை விதிகளிலோ, பறிமுதலைப்பற்றி எவ்விதக் குறிப்பும் கிடையாது.

ஆனால், பறிகொடுத்தல் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு, நீதிமன்றத்தால் தகுந்த காரணங்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. ஏனெனில், பறிகொடுத்தலை ஏற்றுக் கொள்வது, நிறுவனம் அதைப் பறிமுதல் செய்ய வேண்டிய நிலையைத் தவிர்க்கிறது.

**பறிமுதல், பறிகொடுத்தல் இவைகளுக்குள்ள வேறுபாடுகள்**

(1) பறிமுதல் நிறுவனத்தால் செய்யப்படுகிறது. ஆனால் பறிகொடுத்தல் பங்குதாரரால் செய்யப்படுகிறது. (2) பறிமுதலை நிறுவனச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால், பறி கொடுத்தல் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு நீதி மன்றத்தால் அனு மதிக்கப்படுகிறது. (3) பறிமுதல் செய்ய நிறுவனம் விதிமுறை களைச் சற்றும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், பறி கொடுத்தலை ஏற்பதற்கு அவ்விதக் கடின விதிமுறைகள் கிடை யாது. (4) பறிமுதலுக்கு நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை. ஆனால், பறிகொடுத்தலுக்கு நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவை.

**பங்குகள் கை மாறுதல்** (Transfer of Shares)

பங்கு கை மாறுதல் என்பது பங்கில் ஒருவருக்குள்ள உரிமை வேறொருவருக்கு மாற்றப்படுவதைக் குறிக்கிறது நிறுவனத்தின் மிக முக்கிய நன்மைகளில் ஒன்று, அதன் பங்குகள் எளிதில் கை மாறுவது. பங்குதாரர் நிறுவனத்துடன் கொண்ட தொடர்பை அவர் விரும்பினால் உடனே விட்டுவிடலாம். பங்குகளைக் கை மாற்றுவது மிகவும் எளிதாயினும், பங்குதாரர்கள், நிறுவனம், அதனுடன் தொடர்பு கொள்ளும் பொதுமக்கள் ஆகிய அனைவரின் நன்மையைக் கருதி, மேற்படி பங்குகளைக் கை மாற்றுவதில் சிற்சில தடைகளை நிறுவனச் சட்டம் அனுமதிக்கிறது. ஆகவே, 82ஆவது பிரிவு, உறுப்பினருக்கு நிறுவனத்தில் உள்ள பங்குகள் அல்லது வேறு உரிமைகள் அசையும் பொருள் (Moveable property) அதனை நிறுவனத்தின் செயல்முறை விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி கை மாற்றம் செய்யலாம் என்றும் குறிப்பிடுகிறது.

நிறுவனத்தின் பங்குகளைக் கைமாற்றும் முறைகளைப்பற்றி நிறுவனச் சட்டத்தில் 108, 109, 110, 111, 112ஆவது பிரிவு களில் மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. அவை பின்வரு மாறு :

108ஆவது பிரிவின்படி, பங்கை மாற்றுவதற்குரிய முறை யான விண்ணப்பத்தை எழுதி, மாற்றிக்கொள்பவரின் (Transferee) பெயர், முகவரி, தொழில் முதலிய விவரங்களைப் குறிப்பிட்டு, மாற்றுபவரும் (Transferor) மாற்றிக்கொள்ப

வரும் கையெழுத்திட்டு, குறிப்பிட்ட முத்திரைவில்லை (Stamp) ஒட்டி, பங்குச் சான்றிதழ் அல்லது பங்கு வழங்கப்பட்டதற்கான அறிவிக்கப்பட்ட கடிதத்துடன் நிறுவனத்திற்குக் கொடுத்தால் இயக்குநர்கள், செயல்முறை விதிகள் அனுமதித்த தம் உளத் தேர்வுக்குட்பட்டு (Discretion) மேற்படி பங்கு மாறுவதைப் பதிவு செய்யலாம். ஆனுல், மாற்றுபவரும், மாற்றிக்கொள் பவரும் முத்திரைவில்லை ஒட்டிக் கையெழுத்திட்ட பங்கு மாற்ற விண்ணப்பம் காணுமல் போயிற்று என்பது உண்மை என்று நிறுவனம் மன நிறைவு பெற்ருல், இயக்குநர் விருப்பப்படி போதிய ஈட்டுறுதி வழங்கப்பட்டால், நிறுவனம் மேற்படி, பங்கு மாற் றத்தை பதிவு செய்யலாம். இதைத் தவிர சட்ட நெறியின் விளை வால் (Operation of Law) கை மாறிய பங்குகளைப் பதிவு செய்வ தற்கு, நிறுவனத்திற்கு அதிகாரம் உண்டு.

109ஆவது பிரிவின்படி, பங்கு அல்லது வேறுவகையான உரிமை சட்டச் சார்பாளரால் (Legal Representative) கைமாற் றம் செய்யப்பட்டதாயின், அவர் நிறுவனத்தின் உறுப்பினரல்ல வென்ருலும், அது நிறுவனத்தின் உறுப்பினர் செய்ததைப் போலவே செல்லத்தக்கதாகும்.

110ஆவது பிரிவின்படி, பங்கை மாற்றுவதற்கு, மாற்று பவர் அல்லது மாற்றிக் கொள்பவர் ஆகிய இவர்களில் யார் வேண்டுமானுலும் விண்ணப்பம் செய்யலாம். மாற்றுபவர் விண்ணப்பம் செய்தால், பங்குகள் முழுவதும் செலுத்தப் பட்டவையல்லவென்ருல், மாற்றிக் கொள்பவருக்கு நிறுவனம் அறிக்கை அனுப்பவேண்டும். அறிக்கைவிட்ட இரண்டு வாரங் களுக்குள் அவர் மறுப்பு ஒன்றும் தெரிவிக்கவில்லை என்ருல், நிறு வனம், பேற்படி கைமாற்றத்தைப் பதிவு செய்யலாம். மேற்படி அறிக்கையை நிறுவனம் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் (Registeted post) அவரது முகவரிக்கு அனுப்பிவைத்ததால் போதுமானது.

111வது பிரிவின்படி, செயல்முறை விதிகள் வழங்கிய அதிகாரத்தைக் கொண்டு நிறுவனம், பங்குதாரர் பங்கைக் கைமாற்றம் செய்வதையோ, அல்லது சட்டநெறி முறையின்படி (Operation of Law) ஏற்பட்ட கைமாற்றத்தையோ அனுமதிப் பதை மறுக்கலாம். அவ்வாறு நிறுவனம் பங்குக் கைமாற்றத்தை அனுமதிக்க மறுப்பதாயிருந்தால், அந்த மாற்றத்தைக் கோரி

விண்ணப்பம் செய்த இரண்டு மாதங்களுக்குள் நிறுவனம் தன் மறுப்பை விண்ணப்பம் செய்தவருக்கு அறிவிக்க வேண்டும். தவறினால், நிறுவனமும் அதன் ஒவ்வொரு அதிகாரியும் குற்றம் நீடிக்கும் நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் வரையில் தண்டனைவரி விதிக்கப்படுவர்.

முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, பங்குக் கைமாற்றம் செய்வதற்குரிய விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன்பு, அதைக் குறிப்பிட்ட அதிகாரியிடம் தரவேண்டும். அவர் அந்த விண்ணப் பப் படிவத்தில் (Application Form) தேதியைக் குறிப்பிட்டுத் தன் முத்திரையையோ அல்லது கையெழுத்தையோ செய்த பிறகு, மாற்றுபவரும், மாற்றிக் கொள்பவரும் அதை நிரப்பிக் கையெழுத் திட்டு, கைமாறும் பங்குகள் பங்கு மாற்றக் களத்தினரால் கையாளப்படுவதாயின், நிறுவனம் பங்குதாரர் பட்டியலை மூடுவ தற்கு முன்பு அல்லது குறிப்பிட்ட அதிகாரியிடம் கொடுத்த இரண்டு மாதம், இவற்றுள் எது பிந்தியதோ அந்தக் காலத் திற்கு நிறுவனத்திடம் பதிவு செய்வதற்குக் கொடுக்க வேண்டும். இதரப் பங்குகளாயின், மாறுதல் கோரும் விண்ணப்பத்தைக் குறிப்பிட்ட அதிகாரியிடம் கொடுத்த இரண்டு மாதத்திற்குள் நிறுவனத்திடம் கொடுக்க வேண்டும்.

செயல் முறை விதிகள் தடை செய்யவில்லை என்றால், பங்கு தாரர் தன் பங்கை யாருக்கு வேண்டுமானாலும் தன் இச்சைப்படி கைமாற்றம் செய்யலாம். பங்குத் தொகை செலுத்த வேண்டிய பொறுப்பிலிருந்து விலகும் ஒரே எண்ணத்துடன் அவர் பங்கைக் கைமாற்றம் செய்தாலும் அது செல்லத் தக்கதாகும். இதை [In re Discoverers Finance Corporation Ltd., (1910) 1 Ch. 207] என்ற வழக்கு விளக்குகிறது. இவ் வழக்கில், ஒரு பங்குதாரர் நிறுவனம் நிலைகுலைந்து விட்டதென விதிர்ப்புற்று, பொறுப்பி லிருந்து விடுபடத் தன் பங்குகளைப் பெயரளவில் மிகக் குறைந்த விலைக்கு விற்றதுமில்லாமல், அந்தப் பணத்தையும் அவர் பெற வில்லை. இருந்த போதிலும் அவர் பங்கைக் கைமாற்றம் செய்தது முற்றிலும் செல்லத் தக்கது என்று முடிவு செய்யப்பட்டது.

[In re The Indian Specie Bank Ltd., (1915) 17 Bom. L.R. 342] என்ற இவ் வழக்கில் 'A' என்பவர் தன் பங்குகளைப் பலருக்குக் கைமாற்றம் செய்தார். ஆனால், மேற்படி மாற்றங்கள் பதிவு செய்யப்படுமுன் நிறுவனம் கலைக்கப்பட்டது. அதனால் 'A' தான் நிறுவனத்தின் பங்குதாரர் என்றும், ஆகையால், அவர்

தான் பங்குக் கடப்பாட்டாளரென (Contributory) முடிவு செய்யப்பட்டது.

ஆனால், [In re Sussex Brick Co. (1904) 1 Ch. 598] என்ற வழக்கில் பங்குக் கைமாறியதைத் தவறுதலாகவோ, அல்லது கவனக் குறைவாலோ பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும், நிறுவனம் கலைக்கப்பட்டபோது, உறுப்பினர் பதிவேடு (Members' Register) திருத்தப்பட்டது.

பங்கு கைமாறியதை, அனுமதிப்பதற்கு இயக்குநர்களுக்குள் கருத்து வேறுபட்டு முட்டு நிலை (Dead lock), ஏற்பட்டால், பங்கு கைமாறியதாகப் பதிவு செய்யப்பட வேண்டும். மோடி v. டபுள்யு அண்டு எஃப் ஷெப்பர்ட் லிமிடெட் [Moodie v. W. and F. Shepherd Ltd., (1949) 2 All E. R. 1044] என்ற வழக்கு இதற்கு உதாரணமாகும். இவ்வழக்கில் நிறுவனத்தின் இரு இயக்குநர்கள் பங்கு கை மாறியதை ஒருவர் ஆதரித்தார்; மற்றவர் மறுத்தார்? நீதிமன்றம் இதனால் பங்கு மாறியது மறுக்கப்படவில்லை என்றும், ஆகையால் அது பதிவு செய்யப்பட வேண்டுமென்றும் முடிவு செய்தது.

**பங்கு கைமாற்றம் பதிவாகும்வரையில், மாற்றுபவர், பெற்றுக்கொள்பவர்களுக்குள்ள உரிமைகளும் கடமைகளும்.** (Rights and duties inter se.)

பங்கு கைமாற்றம் செய்யப்படுவதில், மாற்றம் செய்யப்படும் என்பதற்கு உட்கிடையான நம்புறுதி கிடையாது (Implied Warranty for Registration). ஆனால், வெளிப்படையான உடன்பாடு இருப்பின், மாற்றுபவர் மாறுதல் பதிவு செய்யப்பட வேண்டியதற்குப் பொறுப்பாகிறார். மாற்றியவர் மாற்றம் பெற்றவருக்கு நம்பகர் நிலையில் (Trustee) உள்ளதால், பங்கைச் சார்ந்த எல்லா உரிமைகளையும் அவர் சொல்லுகிறபடி பயன்படுத்த வேண்டும். ஆனால், பங்கில் உள்ள பொறுப்பை அதிகமாக்குவதற்கு அவர் உடன்பட கடமைப்பட்டவர் அல்ல. ஏனெனில், மாறுதல் பதிவாகும்வரை பொறுப்பு அவருடையதாகும். இதை ஆர். மதலன் v. பாம்பே லைஃப் அஷ்யூரன்ஸ் கம்பெனி [R. Matholone v. Bombay Life Assurance Co. A. I. R. (1953) S.C 385] என்ற வழக்கு நன்றாக விளக்குகிறது. இவ்வழக்கில் ஒரு பங்குதாரர் தம் பங்குகளில் சிலவற்றை விற்றார். நிறுவனம் கைமாறியதைப் பதிவு செய்யவில்லை. அந்தச் சமயத்தில் நிறுவனம் மூலதனத்தை அதிகப்படுத்த பங்குதாரர்களுக்குப் புதிய பங்குகளை வழங்கியது. மாற்றம் பெற்றவர் மாற்றப்பட்ட

பங்குகளுக்குரிய புதிய பங்குகளை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் மாற்றியவர் அதை மறுத்துவிட்டு, மாற்றப்படாத தம் பங்குகளுக்குரிய புதிய பங்குகளை மட்டும் ஏற்றுக் கொண்டார். நீதி மன்றம் அவர் அவ்வாறு மறுத்தது மிகவும் முறையானது என்றும், மாற்றப்பட்ட பங்குகளில் பொறுப்பை அதிகப்படுத்திக் கொள்ள அவர் எவ்வகையிலும் கடமைப்பட்டவரல்ல என்றும், மாற்றம் பெற்றவர் அவரை அதற்குக் கட்டாயப் படுத்த முடியாது என்றும் முடிவு செய்தது.

பற்கு மாற்றம் பெற்றவரும் அப் பங்கில் எழும் பொறுப்புகளை அவ்வப்போது பூர்த்தி செய்யவேண்டும். பங்கில் கோரிக்கைத் தொகை கோரப்பட்டால், அதை உடனே அவர் செலுத்த வேண்டும். தவறினால், அதனால் மாற்றியவருக்கு உண்டான இழப்பினை ஈடு செய்ய வேண்டும். மேலும் அவ்வாறு ஈடு செய்வதற்கு உட்கிடையாக ஈட்டுறுதி செய்தவராகிறார் (implied indemnity).

**கைமாற்றம் பதிவு செய்ய மறுக்கப்பட்டால், பாதிக்கப்பட்டவரின் சட்டப்படி தீர்வுகள்** (Legal remedies for refusal of registration of Transfer)

நிறுவனம் பங்கு கைமாற்றத்தைப் பதிவு செய்ய மறுத்தால், அதனால், பாதிக்கப்பட்டவர் கீழ்க்கண்ட முறைகளில் தம் உரிமையை நிலை நாட்டிக் கொள்ளலாம்.

(1) **111ஆவது பிரிவில் குறிப்பிட்டபடி மத்திய அரசுக்கு மேல் முறையீடு செய்தல்** (Appeal to Central Government) : பாதிக்கப்பட்ட மாற்றம் செய்தவர் அல்லது மாற்றம் பெற்றவர். மத்திய அரசுக்கு நிறுவனம் பதிவு செய்ய மறுத்ததை எதிர்த்து மேல் முறையீடு (appeal) செய்ய வேண்டும். மேற்படி மேல் முறையீடு குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி நிறுவனம் பதிவு செய்ய மறுத்த இரண்டு மாதத்திற்குள் எழுத்து மூலம் மனு செய்யவேண்டும்.

மத்திய அரசு நிறுவனத்திற்கும் பாதிக்கப்பட்டவருக்கும் முறையே அறிக்கை செய்து, அவர்கள் எழுத்து மூலம் முறையிடுவதற்குரிய தகுந்த வாய்ப்பை வழங்கி, மாற்றம் பதிவு செய்யப் படவேண்டும் அல்லது செய்யவேண்டியதில்லை என்று ஆணையிடலாம். பதிவு செய்யப்பட வேண்டுமென ஆணையிட்டால் நிறுவனம் பத்து நாட்களுக்குள் அதை நிறைவேற்ற வேண்டும். மனுவை முடிவு செய்வதற்கு முன்பு மத்திய அரசு நிறுவனத்தை மறுத்ததற்குக் காரணங்களைக் கேட்கலாம். மேற்படி காரணங்

களைக் கூறுவிட்டால், அவைகள் நிறுவனத்திற்கு விரோதமானவை யாக, மத்திய அரசு கருதலாம். மனுவில் இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட செலவு தொகைகளைப்பற்றியும் மத்திய அரசு தக்கபடி உத்தரவிடலாம்.

(2) இரண்டாவதாக, பாதிக்கப்பட்டவர், 151ஆவது பிரி வின்படி நீதிமன்றத்துக்கு மனு செய்து உறுப்பினர் பதிவேட் டினைத் திருத்தும்படி கேட்டுக்கொள்ளலாம் (Rectification of the members register). இப் பிரிவின்படி, ஒருவர் பெயரைக் காரண மின்றி உறுப்பினர் பதிவேட்டில் பதிவு செய்தாலும் அல்லது அதில் பதிவு செய்யப்பட்ட பெயரைக் காரணமின்றி விலக்கினு லும் அல்லது அவர் பெயரைப் பதிவு செய்ய மறுத்தாலும் அல்லது காலதாமதம் செய்தாலும், அவர் நீதிமன்றத்துக்கு மனுச் செய்யலாம்.

(3) மூன்றாவதாக, பாதிக்கப்பட்டவர் சட்டமுறைப்படி நிறுவனத்தின் மீது வழக்குப் போடலாம்.

(4) நான்காவதாக, நிறுவனம் கலைக்கப்படும் போதும் உறுப் பினர் பதிவேட்டினைத் திருத்தும்படி நீதிமன்றத்திற்கு மனுச் செய்யலாம்.

**பங்குகளும் பங்கு மூலமும் (Share and Stocks)**

2(46)ஆவது பிரிவில் பங்கு என்பது ஒரு நிறுவனத்தின் மூல தனத்தில் பங்கு என்றும், அப்படி அன்று என்று குறிப்பிடப்பட்டா லன்றி, அது பங்கு மூலத்தையும் (Stock) குறிக்கும் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. 94 (c) பிரிவு ஒரு நிறுவனம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளைப் பங்கு மூலமாக மாற்றலாமென்றும், அவைகளை மீண்டும் பங்குகளாக மாற்றலாம் என்றும் குறிப்பிடு கிறது. 96ஆவது பிரிவு, ஒரு நிறுவனம் பங்குகளை, பங்கு மூலமாக மாற்றி, அதைப் பதிவாளருக்கு அறிக்கை செய்தவுடன், பங்கு களுக்குரிய பிரிவுகள் யாவும் பங்கு மூலமாக மாற்றப்பட்டுள்ள தொகையைப் பாதிக்காது என்று குறிப்பிடுகிறது.

## பங்குகளுக்கும் பங்கு மூலங்களுக்கும் உள்ள வேறுபாடுகள்

(Distinction between Shares and Stock)

| பங்குகள் | பங்குமூலம் |
|---|---|
| (1) பங்குகள் சம மதிப்புள்ளவைகளாக இருக்க வேண்டும். | (1) பங்கு மூலம் வெவ்வேறு மதிப்புள்ளவைகளாக பிரிக்கப் படலாம். |
| (2) பங்குகளை முழுமையாகத் தான் உரிமை மாற்றம் செய்யலாம். | (2) பங்கு மூலம் பின்னங்களாகவும் (Fractions) உரிமை மாற்றம் செய்யலாம். |
| (3) பங்குகள் உரிமை மாற்றம் பதிவு செய்யப்படவேண்டும். | (3) பங்கு மூலங்களின் உரிமை மாற்றம் பதிவு செய்யப்பட வேண்டியதில்லை. |
| (4) பங்குகள், முழுவதும் செலுத்தப்படாத பங்குகளையும் குறிக்கின்றன. | (4) பங்கு மூலம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளைத்தான் குறிக்கின்றன. |
| (5) பங்குகள் தொடர்ச்சியாக எண்ணிக்கையிடப் படுகிறது. | (5) பங்கு மூலத்தின் பிரிவுகளுக்கு எண்ணிக்கையிடுவதில்லை. |
| (6) நிறுவனச் சட்டத்தில் பங்குகளுக்கெனப் பிரிவுகள் உள்ளன. | (6) பங்குகளுக்குரிய பிரிவுகள் பங்கு மூலத்தைப் பாதிப்பது இல்லை. |

**பங்குப் பணப் பற்றுணை** (Share Warrant).

114ஆவது பிரிவின்படி வரம்புற்ற பொதுமக்கள் நிறுவனம் (Public Limited Company), அதன் செயல்முறை விதிகள் அனுமதித்தால், மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, அதன் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளுக்கு, நிறுவனத்தின் முத்திரையிட்டு, பங்குப் பணப் பற்றுணை (Share Warrant) வழங்கலாம். அந்தப் பற்றுணையில் அதைக் கொணர்பவர் (hearer) அதில் குறிப்பிடப் பட்ட பங்குகளுக்குரியவர் என்று குறிப்பிட்டு, அப் பங்குகளுக்கு வருங்காலத்தில் பங்காதாயக் கூப்பன் (Coupon) மூலமாகவாவது அல்லது வேறுவழியிலாவது வழங்குவதற்கு வகை செய்யலாம். பற்றுணையில் குறிப்பிடப்பட்ட பங்குகளை உரிமை மாற்றம் செய்ய அந்தப் பற்றுணையை வழங்கினுல் (delivery) போதும்.

115ஆவது பிரிவில் குறிப்பிட்டபடி, பற்றுணை வழங்கியதும், நிறுவனம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளுக்குரிய, அங்கத்தினர் பெயரை அங்கத்தினர் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கி, அதற்குப் பதிலாக, பற்றுணை வழங்கப்பட்டதையும், அது வழங்கப்பட்ட தேதியும், அதில் குறிப்பிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை விவரங்களையும் குறிக்க வேண்டும். அந்தப் பற்றுணையைக் கொணர்பவர், அதை எப்போது வேண்டுமானாலும் நிறுவனத்திற்குத் திருப்பி அளித்து அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி அங்கத்தினராகப் பதிவு செய்து கொள்ளலாம். பங்குப் பணப் பற்றுணையைக் கொணர்பவர், செயல் முறை விதிகள் அனுமதித்தால், நிறுவனத்தின் அங்கத்தினராகக் கருதப்படுவார்.

**பங்குச் சான்றிதழுக்கும் பங்காணைக்கும் உள்ள வேறுபாடுகள்**
**(Distinction between share certificate and Share Warrant)**

(1) பங்குச் சான்றிதழுடையவர், நிறுவனத்தின் உறுப்பினர். ஆனால், பங்காணை (Share Warrant) பெற்றிருப்பவர் உறுப்பினராக இருக்கத் தேவையில்லை. [vide 2 (27)]. ஆனால், நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதித்தால் குறிப்பிட்டவற்றிற்கு உறுப்பினராகக் கருதப்படலாம். பங்காணையைச் சரண் செய்து தன்னை உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

(2) முழுவதும் செலுத்தப்பட்ட பங்குத் தொகைகளுக்குப், பகுதி அளவே செலுத்தப்பட்ட பங்குத் தொகைகளுக்கும் பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், பங்காணை முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளுக்குத்தான் வழங்கப்படும்.

(3) எல்லா நிறுவனங்களும் பங்குகள் வழங்கிய மூன்று மாத காலத்திற்குள் பங்குச் சான்றிதழ்கள் வழங்க வேண்டும். ஆனால், பங்குப் பற்றுணை எல்லா நிறுவனங்களும் வழங்க முடியாது. செயல்முறை அனுமதிக்கும், நிறுவனங்கள் மட்டும் மத்திய அரசு ஒப்புதல் பெற்ற பிறகு, பங்குப் பற்றுணை வழங்கலாம். மேலும், பங்குப் பற்றுணை வழங்க வேண்டுமென்ற கட்டாயம் எல்லா நிறுவனங்களுக்கும் கிடையாது.

(4) பங்குச் சான்றிதழை, பொதுநிறுவனம் (Public Company) தனியார் நிறுவனம் ஆகிய இரண்டும் வழங்கலாம். ஆனால், பங்குப் பற்றுணை பொது நிறுவனங்கள் மட்டுமே வழங்கலாம். தனியார் நிறுவனம் (Private Company) வழங்க முடியாது.

(5) பங்குச் சான்றிதழ் மாற்றுமுறையாவணம் அல்ல (Not a Negotiable Instrument). ஆனால், பங்குப் பற்றுணை ஓர் மாற்றுமுறை யாவணமாகும்.

# 6. மூலதனம்

## (Capital)

ஒரு நிறுவனம் செம்மையாகச் செயல்பட மூலதனம் மிகவும் முக்கியமாகும். நிறுவனத்தின் மூலதனத்தைக் கீழ்க்கண்ட வகைகளில் பிரிக்கலாம் :

(1) அதிகாரம் பெற்ற மூலதனம் (Authorised Capital)

இதுவே சொல்லத்தக்க மூலதனம் (Nominal Capital) என்றும் குறிப்பிடப்படுகிறது. அதிகாரம் பெற்ற மூலதனம் என்பது அமைப்பு முறை ஏட்டில் (Memorandum) குறிப்பிடப்பட்ட மூலதனமாகும். இது நிறுவனத்தின் மூலதனத்தின் உச்ச வரம்பைக் குறிப்பிடுகிறது. நிறுவனம் இதற்கு மேலும் மூலதனத்தை அதிகரிக்க வேண்டுமென்றால் உற்ற அதிகாரிகளிடம் அதற்குரிய அனுமதி பெறவேண்டும்.

(2) அளிக்கப்பட்ட மூலதனம் (Issued Capital)

பொது மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்ட பங்குகள் அளிக்கப்பட்ட மூலதனம் எனக் குறிப்பிடப்படுகிறது.

(3) ஏற்றுக்கொண்ட மூலதனம் (Subscribed Capital)

பொது மக்கள் செலுத்துவதாக ஒப்புக்கொண்ட மூலதனம் ஏற்றுக் கொண்ட மூலதனம் என்று குறிப்பிடப்படுகிறது.

(4) செலுத்தப்பட்ட மூலதனம் (Paid up Capital)

பங்குநர்கள் ஏற்றுக் கொண்ட பங்குகளில் செலுத்தப்பட்ட தொகை செலுத்தப்பட்ட மூலதனம் என்று குறிப்பிடப்படுகிறது.

### (5) கோரிய மூலதனம் (Called up Capital)

நிறுவனம் திட்ட அறிக்கையில் அறிவித்துள்ளபடி பங்குநர்கள் ஏற்றுக் கொண்ட பங்குகளில் அவ்வப்போது குறிப்பிட்ட தொகைகளைச் செலுத்த வேண்டும் என்று அறிக்கை விடலாம். இவ்வாறு கேட்கப்பட்ட மூலதனம் கோரிய மூலதனம் என்று குறிப்பிடப்படுகிறது. இந்தத் தொகையை அறிக்கையில் குறிப்பிட்ட தவணைக்குள் பங்குநர்கள் செலுத்தாவிட்டால், செயல் முறை விதிகளில் குறிப்பிடப்பட்ட தண்டணைக்குள்ளாவார்கள்.

### (6) ஒதுக்கப்பட்ட மூலதனம் (Reserve Capital)

ஒரு நிறுவனம் அதன் பங்குகளில் குறிப்பிட்ட பகுதியை நிறுவனம் கலைக்கப்படும்போதுதான் பங்குநர்களிடமிருந்து பெற வேண்டும் என்று முடிவு செய்யலாம். இம் முடிவை ஒரு நிறுவனம் 99ஆவது பிரிவின்படி தனித் தீர்மானம் கொண்டு செய்ய வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட மூலதனம் ஒதுக்கப்பட்ட மூலதனம் என்று குறிப்பிடப்படுகிறது. ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் நிறுவனம் எவ்விதப் பற்றுரிமையும் (Lien or charge) வழங்க முடியாது என்று பார்ட்லெட் *v*. மேபேர் ப்ராபர்டி கம்பெனி [Bartlett *v*. Mayfair Property Co. (1898) 2 Ch. 28] என்ற வழக்கில் தெளிவாக்கப்பட்டது.

### (7) நடைப்பு முதலீடு (Working Capital)

நிறுவனத்தின் மூலதனமும் மற்றும் அது தன் பங்குநர்களிடமும் பொது மக்களிடமும் கடன் வாங்கிய தொகைகளும் சேர்ந்தது நடப்பு மூலதனமாகும். இந்த மூலதனத்தை நிறுவனம் தன் தொழிலையோ, வியாபாரத்தையோ செய்யவும், ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவும் நிறுவனத்திற்கு அவ்வப்போது ஏற்படும் செலவினங்களுக்கும் பயன்படுத்தப் படுகின்றது.

### பங்குகளின் வகைகள் (Kinds of Shares)

1956ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நிறுவனத்தின் பங்குகள் கீழ்க்கண்டவாறு வகுக்கப்பட்டன :

(1) சம உரிமைப் பங்குகள் அல்லது பொது நிலைப் பங்குகள் (Equity Shares or Ordinary Shares).

(2) முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares).

(3) பின்னுரிமைப் பங்குகள் (Deferred Shares).

(4) மிகை ஊதியப் பங்குகள் (Bonus Shares).

(1) சம உரிமைப் பங்குகள் (Equity Shares or Ordinary Shares)

ஒரு நிறுவனத்தின் மூலதனத்தில் பெரும்பகுதி இவ்வகையான பங்குகளாகும். இவைகளின் பெயரே இவைகளின் தன்மையைத் தெளிவாக்குகிறது. அதாவது, இவைகள் ஒன்றுக்கொன்று சம உரிமைகள் படைத்தவை. மேலும், இப் பங்குகள், முதலில் முன்னுரிமைப் பங்குநர்களுக்குப் பங்காதாயம் (Dividend) குறிப் பிட்ட விகிதப்படி வழங்கிய பிறகு, மீகுதி உள்ள ஆதாயத்தைப் (Profit) பெறுகின்றன. ஆகவே நிறுவனம், அதிக ஆதாயம் அடையும்போது அதிகமான பங்கு ஆதாயம் (Dividend) பெற அதிக வாய்ப்பு உண்டு. இப் பங்குகளுக்கு அதுமட்டுமன்றி, நிறுவனம் கலைக்கப்படும்போது, நிறுவனத்தின் கடன்களும் பொறுப்புகளும் அடைபட்டபிறகு, எஞ்சியுள்ள சொத்துகளின் இப் பங்குகளுக்குப் பிரித்து வழங்கப்படுகின்றன. முன்னுரிமைப் பங்குகளுக்குக் குறிப்பாக வழங்கப்பட்டாலொழிய, இவ்வித உரிமைகள் கிடையாது. மேலும் நிறுவனத்தின் எல்லாப் பொதுக் கூட்டங்களிலும் பங்கெடுத்துக் கொள்ளவும், அவைகளில் நிறை வேறும் தீர்மானங்களில் ஓட்டுப் போடவும் இப் பங்குகளுக்கு உரிமை உண்டு. மொத்தத்தில் சுருங்கச் சொன்னால், நிறு வனத்தில் அதிகமான உரிமைகளும் அதே மாதிரி அதிகமான கடமைகளும் இப் பங்குகளுக்கு உண்டு.

(2) முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares)

85ஆவது பிரிவில் இவ் வகையான பங்குகளைப்பற்றி விளக்கப் பட்டுள்ளது. இப் பங்குகளுக்குப் பொதுவாக இருவகையான உரிமைகள் உண்டு. முதலாவதாக, பங்கு ஆதாயம் பெறுவதில் முதல் உரிமை. அதாவது நிறுவனம் ஆதாயம் அடையும்போது, முதலில் அதிலிருந்து இப் பங்குகளுக்குக் குறிப்பிட்ட விகிதப்படி ஆதாயம் வழங்கிய பின்னர் தான், மற்றப் பங்குகளுக்குப் பங்கு ஆதாயம் வழங்கப்படும். இரண்டாவதாக, நிறுவனம் கலைக்கப் படும்போது, அதன் கடன்களும், பொறுப்புகளும் அடைபட்ட பிறகு, மீதியுள்ள தொகையிலிருந்து, செலுத்தப்பட்ட மூலதனம் முதலில் இப் பங்குகளுக்குச் செலுத்தியபிறகுதான் மற்றப் பங்கு களுக்குச் செலுத்தப்படும். மேற்கூறிய காரணங்களால், இப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் என்று குறிப்பிடப்படுகின்றன.

முன்னுரிமைப் பங்குகளை மேலும் மூன்று வகைகளாகப் பிரிக்க லாம். அதாவது,

(a) திரட்டப்படும் முன்னுரிமைப் பங்குகள் அல்லது திரட்டப் படாத முன்னுரிமைப் பங்குகள் (Cumulative Preference Shares and Non-Cumulative Preference Shares).

(b) பங்குகொள்ளும் முன்னுரிமைப் பங்குகள் அல்லது பங்கு கொள்ளாத முன்னுரிமைப் பங்குகள் (Participating Preference Shares and Non-Participating Preference Shares).

(c) மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள் அல்லது மீட்கப் படாத முன்னுரிமைப் பங்குகள் (Redeemable Preference Shares and Non-Redeemable Preference Shares).

(a) **திரட்டப்படும் அல்லது திரட்டப்படாத முன்னுரிமைப் பங்குகள்** (Cumulative or Non-Cumulative Preference Shares) : முன்னுரிமைப் பங்கு சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட பங்கு ஆதாயம் பெறும் உரிமை உடையது. ஒரு வருடத்தில் ஆதாயம் இல்லாததாலும் அல்லது போதிய ஆதாயம் இல்லாததாலும், பங்கு ஆதாயம் வழங்கப்படாவிட்டால், அதை வரும் வருடங்களில் பெறும் ஆதாயத்திலிருந்து தரும்படியான உரிமை உடையவை திரட்டப்படும் முன்னுரிமைப் பங்குகள் என்று குறிப்பிடப்படு கின்றன. அவ்வித உரிமை இல்லாதவை திரட்டப்படாத முன்னுரிமைப் பங்குகளாகும்.

முன்னுரிமைப் பங்குகள் திரட்டப்படுபவையா அல்லது திரட்டப்படாதவையா என்பதை அவைகள் வழங்கப்பட்ட உடன்படிக்கைகளிலும், செயல் முறை விதிகளில் உள்ள குறிப்புகள் கொண்டும் தெளிவு காணலாம். மேற்கூறியவை களில் எவ்விதக் குறிப்புகள் இல்லையெனினும், அவைகள் திரட்டப் படும் முன்னுரிமைப் பங்குகளாக எண்ணப்படும் (Presumed). அதாவது செயல்முறை விதிகளில் அவைகள் திரட்டப்படாத முன்னுரிமைப் பங்குகள் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டா லொழிய, எல்லா முன்னுரிமைப் பங்குகளும் திரட்டப்படும் முன்னுரிமைப் பங்குகளாக எண்ணப்படும் என்று பாஸ்டர் *v.* கோல்ஸ், பாஸ்டர் அண்டு சன்ஸ் லிமிடெட் [Foster *v.* Coles, Foster and Sons Ltd., (1906) 22 T.L.R. 555]' என்ற வழக்கில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவ்வழக்கில் நிறுவனத்தின் செயல் முறை விதிகள், திரட்டப்படும் முன்னுரிமைப் பங்குகள் என்று குறிப்பிட்டன. ஆனால், நிறுவனத்தை மீண்டும் சீரமைத்த போது (Re-constructtion), செயல் முறை விதிகளில் 'திரட்டப் படும்' என்னும் வார்த்தை விட்டு விடப்பட்டது. இருந்தபோதி லும் நீதிமன்றம், செயல்முறை விதிகளில் தெளிவாக அவைகள் 'திரட்டப்படாதவை' என்று இல்லாத வரையில், அவைகள் திரட்டப்படும் முன்னுரிமைப் பங்குகளாக எண்ணப்படுமென்று முடிவு செய்தது.

(b) பங்கு கொள்ளும் அல்லது பங்கு கொள்ளாத முன்னுரிமைப் பங்குகள் (Participating and Non-Participating Preference Shares] : வருடாந்திர ஆதாயங்களிலிருந்து எல்லாப் பங்குகளுக்கும் பங்கு ஆதாயம் வழங்கிய பிறகும், மீதியிருக்கும் ஆதாயத்தில், முன்னுரிமை பங்குகளுக்கும் உரிமை வழங்கப்பட்டாலும், அல்லது நிறுவனம் கலைக்கப்படும்போது, கடன்கள் அடைபட்டபிறகு, எஞ்சியுள்ள சொத்துகளில் முன்னுரிமைப் பங்குகளுக்கு உரிமை வழங்கப்பட்டாலும், அவைகள் பங்கு கொள்ளும் முன்னுரிமைப் பங்குகள் என்று குறிப்பிடப்படுகின்றன. சில சமயங்களில் செயல் முறை விதிகள் மேற்கூரிய இரு உரிமைகளையும் அவைகளுக்கு வழங்கலாம். மேற்கூறிய உரிமைகள் எவையும் செயல் முறை விதிகள் வழங்காவிட்டால், அவைகள் பங்கு கொள்ளாத முன்னுரிமைப் பங்குகள் என்று குறிப்பிடப்படுகின்றன.

மேலும், முன்னுரிமைப் பங்குகள் பங்கு கொள்ளுபவையா அல்லது பங்கு கொள்ளாதவையா என்பது செயல் முறை விதிகளைக் கொண்டு தெளிவுற வேண்டும். செயல் முறை விதிகள் தெளிவாக அவைகள் பங்கு கொள்பவை என்று தெளிவுறுத்தினலன்றி, அவைகள் பங்குக் கொள்ளாதவையாகக் கருதப்படும்.

மேற்கூறியவைகளைக் கீழ்க்காணும் வழக்குகளும் தெளிவுறுத்துகின்றன:

Will *v.* United Lanket Plantation Co. Ltd., (1912) 2 Ch. 571]

இவ் வழக்கில் நிறுவனத்தின் செயல் முறை விதிகள் திரட்டப்படும் முன்னுரிமைப் பங்குகளுக்கு 10 சதவீதம் பங்கு ஆதாயம் வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டது. எஞ்சிய ஆதாயத்தில் பங்கு கொள்வதைப் பற்றிச் செயல் முறை விதிகளில், எவ்விதக் குறிப்பும் இல்லாமையால், அப் பங்குகள் 'பங்கு கொள்ளாத' முன்னுரிமைப் பங்குகள் என்று முடிவு செய்யப்பட்டது.

[Re Isle of Thanet Electric Supply Co. (1949) 2 All E-R. 1060]

இவ் வழக்கில் நிறுவனத்தின் செயல் முறை விதிகள் முன்னுரிமைப் பங்குகள், வருடாந்திர ஆதாயங்களில் 6 சதவீதம் பங்கு ஆதாயமும், மீதப்படும் அதிக ஆதாயத்திலும் பங்கு கொள்ளும் என்று குறிப்பிட்டது. ஆனல், நிறுவனம் கலைக்கப்படும்போது, மீதப்படும் சொத்துகளில் பங்குகொள்ளும் உரிமையைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஆகையால், நீதிமன்றம்

அந்த முன்னுரிமைப் பங்குகள், நிறுவனம் கலேக்கப்படும்போது, மீதப்படும் சொத்துகளில் பங்கு கொள்ளும் உரிமை கிடையாது என்று முடிவு செய்தது.

(c) **மீட்கப்படாத அல்லது மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள்** (Irredeemable or Redeemable Preference Shares) : மீட்கப் படாத முன்னுரிமைப் பங்குகளாயின், சம உரிமைப் பங்குகளைப் போல் நிறுவனம் அவைகளை மீட்கவோ வாங்கவோ முடியாது. செயல்முறை விதிகள் மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகளை அனுமதிக்காதபோது, நிறுவனம் மீட்கப்படாத முன்னுரிமைப் பங்குகளைத்தான் வழங்க முடியும். மீட்கப்படாத முன்னுரிமைப் பங்குகள், திரட்டப்படுபவையா அல்லது திரட்டப்படாதவையா, அல்லது பங்குகொள்ளுவதா அல்லது பங்கு கொள்ளாததா முதலானவைகளை மேலே விவரிக்கப்பட்ட விதிகளின்படி தெளிவுற வேண்டும். மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள் (Redeemable Preference Shares) : செயல் முறை விதிகள் அனுமதித்தால் நிறுவனம் இவ் வகையான பங்குகளை வேண்டும்போது மீட்டுக் கொள்ளலாம். நிறுவனம் தன்னுடைய லாபத்திலிருந்தாவது அல்லது அதற்கெனப் புதிதாக வழங்கிய பங்குத் தொகையிலிருந் தாவது முன்னுரிமைப் பங்குகளை மீட்கலாம். 80ஆம் பிரிவில் இப் பங்குகளை வழங்குவதைப் பற்றியும் அவைகளை மீட்கும் முறை களும் தெளிவாக்கப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு :

(a) நிறுவனம் தன் லாபத்திலிருந்து அல்லது புதிய பங்குகள் வழங்கிப் பெற்ற தொகையிலிருந்து தான் முன்னுரிமைப் பங்குகளை மீட்கலாம்.

(b) மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக இருக்க வேண்டும்.

(c) பங்குகளை மீட்பதற்கு வழங்கப்படும் முனைமம் (Premium) லாபத்திலிருந்தாவது அல்லது நிறுவனத்தின் பங்கு முனைமம் தொகையிலிருந்தாவது (Company's Share premium account) வழங்கப்பட வேண்டும்.

(d) லாபத் தொகையிலிருந்து மீட்பதாய் இருந்தால், மீட்கப் படும் தொகைக்குச் சமமான தொகையை நிறுவனத்தின் மூலதனம் மீட்புத் தொகையென (Capital redemption fund) என ஒதுக்கப்படவேண்டும். இத்தொகை நிறுவனத்தின் மூலதனத் தைப் போல் கருதப்படும்.

(e) பங்குகளை மீட்பதால் மூலதனம் குறைந்த போதிலும், அது மூலதனம் குறைந்ததாகக் கருதப்படமாட்டாது.

(f) மீட்கப்பட்ட தொகைக்குச் சமமாக நிறுவனம் புதிய பங்குகள் வழங்கலாம். அவ்வாறு செய்வது மூலதனத்தை அதிகரித்ததாகக் கருதப்படமாட்டாது. மேலும், அத் தொகைக்கு நிறுவனம் கட்டணம் (Fees) செலுத்த வேண்டியதில்லே.

(g) மூலதனம் மீட்புத் தொகையிலிருந்து அங்கத்தினர்களுக்கு மிகை ஊதியப் பங்குகள் (Bonus Shares) வழங்கலாம்.

நிறுவனம் மேற்கூறிய விதிகளே மீறினல் ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படும்.

தற்போதய நிறுவனச் சட்டம் 86ஆவது பிரிவில், இரண்டு வகையான பங்குகளேத்தான் ஏற்றுக்கொள்கிறது. அவை முறையே முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares), சம உரிமைப் பங்குகளாகும் (Equity Shares). இந்த இரண்டு வகை யான பங்குகளேத் தவிர, ஒரு நிறுவனம் மாறுபட்ட உரிமைகளேக் கொண்ட வேறுவகையான பங்குகளே வழங்கக்கூடாது என்று 88ஆவது பிரிவு தடை செய்வதுடன், 89ஆவது பிரிவு 1956ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்திற்கு முற்பட்ட நிறுவனங்கள் 86ஆம் பிரிவில் குறிப்பிட்ட இரு வகைப் பங்குகளேத் தவிர வேறு வகை யான பங்குகளே வழங்கியிருந்தால், அவைகளே நிறுவனச் சட்டம் செயல்பட்ட ஒரு வருடத்திற்குள் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள இரு வகையான பங்குகளே ஒத்திருக்குமாறு மாற்றிக் கொள்ள வேண் டும் என்று கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது.

வாக்குரிமைகள் (Voting rights) : பங்குநர்களின் வாக்குரிமை களேப் பற்றி 87ஆவது பிரிவில் தெளிவாக்கப்பட்டுள்ளது. சம உரிமைப்பங்குகளுக்கு நிறுவனம் செய்யும் ஒவ்வொரு தீர்மானத் திலும் வாக்களிக்கும் உரிமை உண்டு. ஆனல், முன்னுரிமைப் பங்குகளுக்கு அவைகளின் உரிமைகளே பாதிக்கும்படியான தீர் மானங்களில்தான் வாக்களிக்கும் உரிமை உண்டு. இவ்வகையில் நிறுவனத்தைக் கலேப்பதற்கும், மூலதனத்தைக் குறைப்பதற்கும், திருப்பி அளிப்பதற்கும் செய்யப்படும் தீர்மானங்கள் முன்னுரி மைப் பங்குகளே பாதிப்பதாகக் கருதப்படும். ஆனல், நிறுவனம் முன்னுரிமைப் பங்குகளுக்குரிய பங்காதாயத்தை இரண்டு ஆண்டு களாகச் செலுத்தப்படாவிடில், அப் பங்குகளுக்கும் நிறுவனத்தின் எல்லாத் தீர்மானங்களிலும் வாக்களிக்கும் உரிமை உண்டு முன் னுரிமைப் பங்குகளும் சம உரிமைப் பங்குகளும் எந்த விகிதத்தில் உள்ளதோ அதே விகிதத்தில்தான் பங்குகளுக்கு வாக்களிக்கும் உரிமையும் வழங்கப்படும்.

(3) பின்னுரிமைப் பங்குகள் (Deferred Shares)

இப் பங்குகளின் பெயரே பறைசாற்றுவது போல் இவைகளின் உரிமைகள் மற்ற எல்லாப் பங்குகளின் உரிமைகளுக்குப் பிற்பட்டதாகும். அதாவது, எல்லாப் பங்குகளுக்கும் பங்கு ஆதாயம் வழங்கியபிறகு, எஞ்சியுள்ள ஆதாயத்தில் இப் பங்குகளுக்கு பங்காதாயம் வழங்கப்படும். ஆதாயம் குறைந்த வருடங்களில் இப் பங்குகளுக்குப் பங்கு ஆதாயம் கிடைக்காமலிருப்பதுமுண்டு. ஆனுல், அதிக ஆதாயம் அடையும் ஆண்டுகளில் அதிகப் பங்கு ஆதாயம் அடையும் அரிய வாய்ப்பும் இப் பங்குகளுக்கு உண்டு.

இப் பங்குகளை நிறுவியவர்களின் பங்குகள் (Founder's Shares), இப் பங்குகள் பெரும்பாலும் துவக்குநர்களுக்கும் (Promoters), காப்பீடு தொழில் புரிபவர்களுக்கும் (Under Writers) வழங்கப்படுவன. இப் பங்குகள் தற்போதைய நிறுவனச் சட்டம் இயற்றப்படும் முன்பு வழங்கப்பட்டன. தற்போது, இந்திய நிறுவனச் சட்டப்படி, இத்தகைய பங்குகளை நிறுவனங்கள் வழங்கமுடியாது.

(4) மிகை ஊதியப் பங்குகள் (Bonus Shares)

நிறுவனத்தின் செயல் முறை விதிகள் அனுமதித்தால் நிறுவனம் ஆதாயத்தை, முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாகப் பங்குநர்களுக்கு வழங்கலாம். இவைகள் மிகை ஊதியப் பங்குகள் என்று குறிப்பிடப்படுகின்றன. மேலும், 78 (2) பிரிவில் குறிப்பிட்டபடி பங்கு முனைமம் தொகையிலிருந்தும் (Share Premium Account), 80 (5) பிரிவின்படி, மூலதன மீட்கும் தொகையிலிருந்தும் (Capital Redemption Fund), முழுவதும் செலுத்தப்பட்ட மிகை ஊதியப் பங்குகள் வழங்கலாம். இந்த முறையில் நிறுவனம் மூலதனத்தை அதிகப்படுத்திக் கொள்வதோடு, பங்குநர்களுக்குப் பங்கு ஆதாயத்தை முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக வழங்குகிறது.

# 7. பங்குநர்கள்
## (Shareholders)

**பங்குநராகும் முறைகள்**

ஒரு நிறுவனத்தில் கீழ்க்கண்ட முறைகளில் ஒருவர் பங்குநராக லாம்:

*(1)* அமைப்பு முறை ஏட்டில் ஆதரவாளர்களாகக் (Subscribers) கையெழுத்திடுபவர்கள், நிறுவனச் சட்டத்தில் 41ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி, நிறுவனம் பதிவானவுடன் உறுப்பினர் களாக, உறுப்பினர்கள் பதிவேட்டில் (Register of members) பதிவு செய்யப்படுகிறுர்கள். இவர்கள் விண்ணப்பம் போடவோ, அல்லது இவர்களுக்குப் பங்குகள் வழங்கப்படுவதோ தேவையில்லை. ஆதரவாளர் தவறுதலாக உறுப்பினர் பதிவேட்டில் பதிவு செய்யப்படாவிட்டாலும் அவர் நிலைமை மாறுவதில்லை. நிறுவனம் பதிவானவுடன், ஆதரவாளர் தாஞக முழு உறுப்பினராகிறுர். இந்நிலையை, அபிஸியல் லிக்யுடேடர் *v.* சுலேமான்பாய் [Official Liquidator *v.* Suleman Bhai A I R (1955) M B 166] என்னும் வழக்கு, நன்ருக நவில்கின்றது.

ஒரு ஆதரவாளர் அமைப்பு முறை ஏட்டினில் கையெழுத் திட்டு 200 பங்குகளை ஏற்றுக் கொண்டார். நிறுவனம் பதிவா யிற்று. ஆனுல், அவர் இருபது பங்குகளே உண்மையில் எடுத்துக் கொண்டார். பின்னர் நிறுவனம் கலைக்கப்பட்டபோது அவர் 200 பங்குகளுக்குரிய தொகையை, அப் பங்குகள் அவருக்கு வழங் கப்படா விட்டாலும், செலுத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆதரவாளர் அமைப்பு முறை ஏட்டினில் கையெழுத்திட்ட பிறகு, அதைத் தவிர்க்கவோ ரத்து செய்யவோ முடியாது.

(2) **விண்ணப்பம் செய்தல் :** நிறுவனம் திட்ட அறிவிப்புடன் இணைத்து அனுப்பிய, குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தை, நிரப்பி, குறிப்பிட்ட விண்ணப்பத் தொகையைச் செலுத்தி, அதன்படி பங்குகள் வழங்கப்படின், ஒதுக்கப்பட்ட பங்குத் தொகையைச் செலுத்திப் பங்குநராகலாம். இம் முறை ஓர் ஒப்பந்தமாகையால், ஒப்பந்தச் சட்டத்தின் எல்லா விதிகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

(3) **நிறுவனச் சட்டத்தின் 266ஆவது பிரிவின் விளைவு :** இப் பிரிவில் கண்டபடி இயக்குநராயிருக்க இசைவு தெரிவித்து, அப் பதவியின் தகுதிக்குரிய பங்குகளை ஏற்றுக் கொள்வதாக எழுத்து மூலம் பதிவாளரிடம் தாக்கல் செய்பவர், அமைப்பு முறை ஏட்டினில் கையெழுத்திட்டவர்போல், நிறுவனம் பதிவான வுடன், தானாகப் பங்குதாரராகிறார். அத்தகையவர் அத் தகுதிக் குரிய பங்குகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் எடுத்துக் கொள்ளத் தவறினால், அக்காலம் கடந்த பிறகு தானாகவே அவர் பதவி காலி யாகிறது. அதன் பிறகு அந் நிறுவனம் கலைக்கப்படுமானால், அவர் பங்குக் கடப்பாட்டாளர் (contributory), பட்டியலிலும் சேர்க்கப்படமாட்டார் என்று பம்பாய் உயர்நீதி மன்றம் ஜமீர் அகமத் v. D.R. பானுஜி [Zamir Ahmed v. D.R. Banaji A.I.R. (1958), Bom. 198] என்ற வழக்கில் தெளிவுறுத்தியுள்ளது.

(4) **பங்கு கைமாறுதல்** (Transfer of shares): நிறுவனத்தில் பங்குநராய் இருப்பவரிடமிருந்து பங்குகளை உரிமை மாற்றம் பெற்று அந் நிறுவனத்தின் பங்குதாரராகிவிடலாம். பங்கு உரிமை மாறுவதற்குக் குறிப்பிட்ட முறைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது, 108ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தை (application form) குறிப் பிட்ட முத்திரைவில்லை ஒட்டி, எழுதி முடித்து, மாற்றுபவர், மாற்றிக் கொள்பவர் ஆகிய இருவரும் கையெழுத்திட்டு நிறுவனத் திடம் பதிவு செய்து கொள்ளவேண்டும். நிறுவனம் மாற்றத்தைப் பதிவு செய்தபிறகுதான் உரிமை மாற்றம் ஏற்படுகிறது. அது வரையில் மாற்றுபவர்தான் பங்குநராக இருப்பார்.

(5) **சட்டநெறிகளின் விளைவால் விளையும் பங்குரிமை மாற்றங்கள்:** நிறுவனத்தின் பங்குநர் இறந்துவிட்டால் அவருடைய சட்டச் சார்பாளர் (Legal representative) அவ்வுரிமையை உடனே பெறு கிறார். அவ்விதமே, நிறுவனத்தின் பங்குநர் நொடிப்புநிலை யுற்றால், அவருடைய சட்டச்சார்பாளரான நொடித்தவர் சொத் தாட்சியர் (Official Assignee or Official Receiver) உடனே அவ்

வுரிமையைப் பெறுகின்றார். பங்குரிமை மாறியது குறித்து, சட்டச் சார்பாளர், நிறுவனத்திற்கு விண்ணப்பம் செய்து, பங்குரிமை மாற்றத்தைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவான பிறகுதான் உரிமை மாற்றம் செயல்படுகிறது.

(6) **பங்குப் பற்றுணை பெற்றிருப்பவர்** (Holder of a Share warrant) : பங்குப் பற்றுணை பெற்றிருப்பவருக்குப் பங்குநர் உரிமைகள் யாவும் உண்டு. வேண்டும்போது அவர் அப் பற்றுணைகளை நிறுவனத்திற் நப் பறிகொடுத்துப் (surrender) பங்குநராகப் பதிவு செய்துகொள்ளலாம்.

(7) **முரண்தடையால் பங்குநராதல்** (Share holder by estoppel) : ஒருவர் தன் பெயரை நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிந்தும், அதை மாற்ற முயலாமல் வாளாவிருந்தாரெனின், அவரும் பங்குநராகக் கருதப்பட்டு, அப் பொறுப்புகளுக்காளாகி நிறுவனம் கலைக்கப்படுங்கால் பங்குக் கடப்பாட்டாளர் பட்டியலிலும் (List of Contributories) சேர்க்கப்படுவார்.

(8) **உறுப்பினர் பதிவேட்டைத் திருத்துவது** (By rectification of the members register) : நிறுவனச் சட்டத்தின் 155ஆவது பிரிவில் உள்ளபடி பங்குநர் தன் பெயர் உறுப்பினர் பதிவேட்டில் பதிவு செய்யப்படாவிட்டால், அதைத் திருத்தம் செய்யும்படி. நீதிமன்றத்திற்கு மனுச்செய்து தன் உரிமையை நிலை நாட்டிக் கொள்ளலாம்.

(9) **நிறுவனம், தரவேண்டிய பணத்திற்குப் பதிலாகப் பங்குகளாக வழங்குதல்** : துவக்குநர்களுக்கும் மற்றும் இதரப் பணி செய்தவர்களுக்கும் நிறுவனம், பணத்திற்குப் பதிலாகப் பங்குகளாக வழங்கினால், அவர்களும் பங்குநர்களாகின்றனர்.

**பங்குநர் விலகும் வகைகள்** (Termination of membership)

ஒரு பங்குநர் கீழ்க்கண்ட வகைகளில் பங்குநராயிருந்து விலகிவிடலாம் :

(1) **பங்குரிமை மாற்றுதல்** : தன் பங்குரிமையை வேறொருவருக்கு மாற்றம் செய்து விலகிவிடலாம்.

(2) **பறிபோதல்** (Forfeiture) : பங்குநர் கோரிக்கைத்தொகைகளைச் செலுத்தாததால், நிறுவனம் தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு அவர் பங்குகளை முறைப்படிப் பறிமுதல் செய்தால், அவர் பங்குநராயிருந்து விலகிவிடுகிறார்.

(3) **பறிகொடுத்தல்** (Surrender) : கோரிக்கைத் தொகைகளைச் செலுத்த முடியாத பங்குநர், தன் பங்குகள் பறிமுதல் செய்யப்படுவதற்கு முன்பாகத் தானாகவே பங்குகளை நிறுவனத்திற்கே பறிகொடுத்து விடலாம். நிறுவனம் அதை முறைப்படி ஒப்புக்கொண்டால், அவர் பங்குநராயிருந்து விலகி விடுகிறார்.

(4) **பங்குநர் மரணம்** : பங்குநர் இறந்தால், அவர் பங்குநராயிருந்து விலகி அவருக்கு பதிலாக அவரின் சட்டச் சார்பாளர், பங்குநராகிறார்.

(5) **பங்குநர் நொடிப்பு நிலை** (Insolvency) : பங்குநர் நொடிப்பு நிலையுற்றால் அவர் பங்குநராயிருந்து விலகி அவருக்குப் பதிலாக அவர் சட்டச் சார்பாளரான நொடித்தவர் சொத்தாட்சியர் (Official Assignee) பங்குநராகிறார்.

(6) **ஒப்பந்தம் தள்ளுபடி செய்வது** (Rescission of the contract) : பங்குநரின் ஒப்பந்தம் தவிர்தகு நிலையதாயின் (voidable), அவர் அதை முறைப்படி உரிய காலத்திற்குள் தள்ளுபடி செய்தால், அவர் பங்குநராயிருந்து விலகிவிடுகிறார்.

(7) **நிறைவேற்று நடவடிக்கைகள்** (Execution sales) : நீதிமன்றத்தின் நிறைவேற்று நடவடிக்கைகளால் பங்குநரின் கடனுக்காக அவர் பங்குகள் விற்கப்படுமாயின், அவர் பங்குநராயிருந்து விலகுகிறார்.

(8) **உறுப்பினர் பதிவேடு திருத்தல்** (Rectification of the members register) : நிறுவனச் சட்டத்தின் 155ஆவது பிரிவின்படி, தன் பெயர் காரணமில்லாமல் உறுப்பினர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அவர் முறைப்படி நீதிமன்றத்திற்கு மனுச் செய்து, தன் பெயரை அப் பதிவேட்டிலிருந்து விலக்கும்படி ஆணை பெற்று, பங்குநராயிருந்து விலகலாம்.

(9) **நிறுவனம் பங்குகளை விற்றல்** : நிறுவனம் தன் பற்றுரிமையை (right of lien) நிறைவேற்றுவதற்கு, அதற்குட்பட்ட பங்குகளை விற்றால், அப் பங்குகளுக்குரியவர் பங்குநர்களாயிருந்து விலகுகிறார்கள்.

(10) **நிறுவனம் பங்குகளை வாங்குதல்** : பொதுவாக, நிறுவனம் தன் பங்குகளை தானே வாங்குவதை நிறுவனச் சட்டத்தின் 77ஆவது பிரிவு கடுமையாகத் தடைசெய்கிறது. இருந்தபோதிலும், நீதிமன்றங்களின் ஆணைகளின்படி நிறுவனம் ஆணையிடப்பட்ட பங்குகளை வாங்கினால், அப் பங்குகளுக்குரியவர், பங்குநராயிருந்து விலகுகிறார்கள்.

**(11) நிறுவனம் கலைக்கப்படுதல்** (Winding up of the company): நிறுவனம் கலைக்கப்பட்டால், பங்குநர்கள் யாவரும் பங்குக் கடப்பாட்டாளர்களெனக் குறிப்பிடப்பட்டு (contributories) அவர்கள் பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள்.

**பங்குநரின் உரிமைகள்**

நிறுவனத்தின் பங்குநர்கள் பற்பல உரிமைகளுக்கு உரியவர்கள். அவைகளின் விவரங்கள் பின்வருமாறு :

(1) **பங்குச் சான்றிதழ்கள்** (Share certificates) : *113*ஆவது பிரிவின்படி, பங்குகளைப்பெற்ற மூன்று மாத காலங்களுக்குள் அவைகளுக்குரிய பங்குச் சான்றிதழ்கள் முறைப்படி எழுதப்பட்டுப் பெறுவதற்கு உரிமையுள்ளவர்கள் பங்குநர்கள். நிறுவனம் இதைச் செய்யத் தவறினாலும் தாமதித்தாலும், உரிய நடவடிக்கை எடுத்து உரிமையை நிலைநாட்டலாம். மேற்கூறிய சான்றிதழ்களை இழந்துவிட்டாலும், பங்குநர்கள் அவைகளுக்குரிய நகல்களை, நிறுவனம் கோரிய ஈட்டுறுதி தந்து பெற்றுக்கொள்ளலாம். பங்குச் சான்றிதழ்கள் பங்குநர்களுக்குரிய பங்குகளின் எண்ணிக்கைக்கும் அவைகளில் செலுத்தப்பட்டுள்ள தொகைக்கும், அவர்களுடைய உரிமைகளுக்கும் ஒரு சான்றாகும்.

(2) **பங்கு ஆதாயம் பெறுதல்** (To receive dividend) : நிறுவனம் ஆதாயத்திலிருந்து பங்கு ஆதாயம் வழங்க முடிவு செய்ததும் ஒவ்வொரு பங்குநரும் அதைப் பெறுவதற்கு உரிமையுள்ளவர். ஆனால், அதிக ஆதாயம் அடைந்த போதிலும் இயக்குநர்கள் மோசடி செய்யும் கருத்துடன் இருந்தாலொழிய நிறுவனத்தை பங்கு ஆதாயம் வழங்கும்படி பங்குநர் கட்டாயப்படுத்த முடியாது என்று பாண்ட் *v.* பாரோ ஹெமேடிட் கம்பெனி [Bond *v.* Barrow Haematite Co. (1902) 1 Ch. 353] என்ற வழக்கில் விளக்கப்பட்டுள்ளது.

(3) **பங்குரிமை மாற்றுதல் :** நிறுவனத்தின் சாலச் சிறந்த தன்மைகளில் ஒன்று பங்குநர்கள் பங்குகளை விரும்பும்போது தாங்கள் விருப்பப் படுபவர்களுக்கு வெகு எளிதில் மாற்றி விடலாம். இவ்வுரிமைக்கு வெகு சில தடைகளே, செயல்முறை விதிகள் விதிக்கலாம். அவைகளும் நிறுவனத்தின் நன்மைக்காகவே விதிக்கப்பட்டவையாய் இருக்க வேண்டும்.

(4) **வாங்கு முன்னுரிமை** (Pre-emption) : நிறுவனம், மேலும் புதிய பங்குகளை வழங்கினால் அப் பங்குகளை முதலில் பங்குநர்களுக்கே அவரவர் பங்குகளின் விகித வாரியாக வழங்க

வேண்டும். இதனால் நிறுவனத்தின் இயக்குநர்கள் தம் இச்சைப்படி தமக்கு வேண்டியவர்களுக்குப் பங்குகளை வழங்கி நிறுவனத்தில் தங்கள் ஆதிக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ளாதபடி தடை செய்யப்படுகிறது.

(5) **கூட்டங்களில் அமருவதும் ஓட்டு உரிமையும்:** நிறுவனத்தின் எல்லாப் பொதுக்கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ளவும், அவைகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு ஓட்டுப் போடவும் ஒவ்வொரு பங்குநருக்கும் ஆணித்தரமான உரிமையுண்டு. அதை எக்காரணங் கொண்டு மறுக்கவும், உடன்படிக்கை வாயிலாகப் பறிக்கவும் முடியாது.

(6) **அறிக்கைகளும் கணக்குகளும் பெறுதல்:** ஒவ்வொரு பங்குநருக்கும் எல்லாப் பொதுக் கூட்டங்களைப் பற்றிய அறிக்கைகளும், வருடாந்திரக் கணக்குகளும், தணிக்கையாளர் அறிக்கைகளும் அவ்வப்போது உரிய காலத்திற்குள் அனுப்பப்பட வேண்டும்.

(7) **தேர்தல்கள்:** நிறுவனத்தின் பொதுக் கூட்டங்களில் இயக்குநர்களையும் தணிக்கையாளர்களையும், தேர்ந்தெடுக்கவும் பதவியிலிருந்து விலக்கவும் ஒவ்வொரு பங்குநருக்கும் உரிமையுண்டு.

(8) **கணக்குகளைப் பார்வையிடல்:** பங்குநர்களுக்கு நிறுவனத்தின் கணக்குகளைப் பார்வையிடவும், அவைகளின் நகல்களை எடுத்துக் கொள்ளவும் உரிமையுண்டு.

(9) **நிறுவனத்தைத் தடை செய்தல்:** நிறுவனம் அதிகாரத்தை மீறிய செயலைச் செய்தாலும், தன் உரிமைகளைப் பறிக்க முயன்றாலும் அதைத் தடை செய்ய, அதன் மீது வழக்குப் போடலாம்.

(10) **ஒப்பந்தங்கள்:** நிறுவனம் தனி நபராகையால், பங்குநர், அதனுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதுடன் அவைகளை நிறுவனத்திற்கெதிராக நிறைவேற்றலாம்.

(10) **நிறுவனத்தின் சொத்துகள்:** நிறுவனம் செயலுறுங்கால் பங்குநர்களுக்கு அதன் சொத்துகளில் எவ்வித உரிமையும் கிடையாது. ஆனால், அது கலைக்கப்பட்டவுடன், அதன் பொறுப்புகளும் கடன்களும் செலுத்தப்பட்ட பிறகு, எஞ்சியுள்ள சொத்துகளில் எல்லாப் பங்குநர்களுக்கும் அவரவர் பங்குகளின் விகிதவாரியாக உரிமையுண்டு. அவைகளின் மதிப்புத் தொகையைக் கலைப்பு அதிகாரிடமிருந்து (Official Liquidator) பெற்றுக் கொள்ளலாம்.

**பங்குநரின் பொறுப்புகள்** (Liabilities)

*(1)* **நிறுவனத்தின் கடன்கள்** (Debts of the Company) : நிறுவனம் செயலுறுங்கால், பங்குநர்கள் அதன் கடன்களுக்குப் பொறுப்பல்லர். ஆனால், அது கலைக்கப்படும்போது நிறுவனத்தின் கடன்களுக்குப் பொறுப்புள்ளவராகின்றனர். வரம்புப் பொறுப்பு நிறுவனமாயின் (limited liability) அதன் பங்குநர்கள் அவரவர் ஏற்றுக்கொண்ட பங்குகளில் செலுத்தப்படாத தொகையின் அளவுக்கே பொறுப்பாகிறார்கள். பொறுப்புறுதி நிறுவனமாயின் (Guarantee Company), அவரவர் ஏற்றுக்கொண்ட பொறுப்புத் தொகையினளவே பொறுப்பாகிறார்கள். வரம்பில்லா பொறுப்பு நிறுவனமாயின் (Unlimited Company), அதன் பங்குநர்கள் கடன் முழுவதற்கும் பொறுப்பாகிறார்கள். இப் பொறுப்பு சட்டம் சாற்றியதே தவிர ஒப்பந்தத்தாலன்று (Liability arises ex. lege and no ex. contractee).

*(2)* **நிறுவனம் கலைக்கப்படுதல் :** நிறுவனம் கலைக்கப்பட்டால் பங்குநர்கள் தங்கள் பங்குகளில் செலுத்தப்பட வேண்டிய தொகையைக் கலைப்பு அதிகாரி (Official Assignee) கோரும்போது செலுத்த வேண்டும்.

*(3)* **கோரிக்கைத் தொகை செலுத்துதல் :** நிறுவனம் செயலுறுங்கால், தேவைப்படும்போது அவ்வப்போது முறையாகக் கோரும் கோரிக்கைத் தொகைகளை (Call money), தவறாமல் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டும். தவறினால், செயல்முறை விதிகள் அனுமதித்தால், பங்குகள் பறிமுதலாகி விடும்.

*(4)* **செயல்முறை விதிகளுக்குக் கட்டுப்படுதல் :** பங்குநர்கள் செயல்முறை விதிகளை மீறினால், நிறுவனத்திற்கு அவர்களைத் தடை செய்வதற்கு உரிமையுண்டு.

**பங்குநராவதற்குரிய தகுதிகள்** (Qualifications for membership) : ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகத்தான் ஒருவர் ஒரு நிறுவனத்தில் ஒரு பங்குநராகலாம். ஆகையால், ஒப்பந்தச் சட்டப்படி ஒப்பந்தம் செய்வதற்குத் தகுதியுடைய அனைவரும் ஒரு நிறுவனத்தில் பங்குநராகத் தகுதியுடையவர்களாவர். ஒப்பந்தம் செய்யத் தகுதியில்லாதவர்கள் ஒரு நிறுவனத்தில் பங்குநர்களாக முடியாது. கீழே கண்டவர்கள் பங்குநராவதற்குரிய தகுதிகளைக் காணலாம் :

*(1)* **இளவர்** (Minor) : ஆங்கிலச் சட்டப்படி ஓர் இளவர் நிறுவனத்தில் பங்குநராகலாம். ஆனால், இந்தியச் சட்டத்தில் நிலைமை முற்றிலும் மாறானது. மோஹிரி பீபீ v. தர்மதாஸ் கோஷ்

[Mohiri Bibi v. Dharmadas Ghose (1903) 30 Cal. 539 (P.C.)] என்ற புகழ்பெற்ற வழக்கில் வழங்கியுள்ள முடிவின்படி இளவரின் ஒப்பந்தம் முற்றிலும் செல்லாததாகும். ஆகையால், இளவர் ஒரு நிறுவனத்தில் பங்குநராக முடியாது. மத்திய அரசு நிறுவனத்துறையும் (Company Law Department), இளவர், நிறுவனத்தில் பங்குநர் ஆக முடியாது என்று விளக்கம் தந்துள்ளது (Vide Company News and Notes, dated 16th November 1963, Page 1).

(2) **கூட்டாண்மை நிறுமம்** (Partnership firm) : கூட்டாண்மை நிறுமம் ஒரு தனி நபர் அன்று. ஆகையால், அது நிறுவனத்தில் பங்குநராக முடியாது. நிறுமம் நிறுவனத்தில் பங்குநராக விரும்பினுல், கூட்டாளிகளின் பெயரில் பங்கு வழங்கப் படும். கூட்டாளிகள் அனைவரும் கூட்டுப் பங்குநர்களாவர் (Joint-shareholders). கூட்டாண்மை நிறுமம், வியாபாரம் செய்யாத நிறுவனத்தில் (non-trading company) உறுப்பினராக லாம் என்று நிறுவனச் சட்டத்தில் 25ஆவது பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனுல், நிறுமம் கலைக்கப்பட்ட பிறகு அது உறுப்பின ராக இருக்க முடியாது.

(3) **நிறுவனம்** ; ஒரு நிறுவனம் தன் பங்கை வாங்கக் கூடாது என்று 77ஆவது பிரிவில் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனுல், ஒரு நிறுவனம், அதன் அமைப்பு முறை ஏடும், செயல் முறை விதிகளும் அனுமதித்தால், பிற நிறுவனங்களில் பங்குநரா கலாம். ஆனுல், ஆதிக்கம் செய்யப்படும் நிறுவனம் (Subsidiary Company), ஆதிக்கம் செய்யும் நிறுவனத்தில் (Holding Company) பங்குநராக முடியாது என்று 42ஆவது பிரிவு குறிப்பிடு கிறது. ஆதிக்கம் செய்யப்படும் நிறுவனம், நிறுவனச் சட்டம் வருவதற்கு முன்பே, ஆதிக்கம் செய்யும் நிறுவனத்தில் பங்குகளைப் பெற்றிருந்தால், அதற்கு ஓட்டு உரிமை கிடையாது.

(4) **நொடிப்பு நிலையினர்** (Bankrupt) : நொடிப்பு நிலையினர் ஒரு நிறுவனத்தில் பங்குநராவதற்குத் தடை எதுவும் கிடையாது. அவர் பெயர் உறுப்பினர் பதிவேட்டில் இருக்கும் வரையில் அவர் உறுப்பினருக்கு உள்ள உரிமைகளை உடையவராவர்.

(5) **கூட்டுப் பங்குநர்கள்** (Joint holders of share) : பலர் கூட்டுச் சேர்ந்து ஒரு நிறுவனத்தின் பங்குகளைப் பெற்றுல், அவர்கள் கூட்டுப் பங்குநர்களாவர். அவர்கள் ஒவ்வொருவரும் பங்குநர்களாக இருந்தபோதிலும், அவைகளுக்குள்ள உரிமைகளை அவர்களுக்குள் ஒருவர்தான் பயன்படுத்த முடியும். அப் பங்கு களுக்குள்ள பொறுப்புகளுக்கு அவர்கள் கூட்டாகவும் வெவ்வேரு கவும் (jointly and severally) பொறுப்பாகிருர்கள்.

**(6) கற்பனை நபர்** (Fictitious Person) : ஒரு கற்பனை நபர் நிறுவனத்தில் பங்குநராக முடியாது. கற்பனை நபரின் பெயரில் விண்ணப்பம் செய்தவரே பங்குநராகக் கருதப்பட்டு, அந்தப் பொறுப்பினுக்குள்ளாக்கப்படுவார்.

**(7) தன்னிலையுரிமை இல்லாதவர்** (Person not Sui Juris) : வயதுவராதோர், சித்த சுவாதீனம் இல்லாதோர் போன்று சட்ட இயலாமையுள்ளவர் (person with legal disability) எவரும் நிறுவனத்தில் பங்குநராக முடியாது. அவர்கள் பெயரில் பங்கு விண்ணப்பம் செய்தவரே பங்குநராகக் கருதப்பட்டு அப் பொறுப்புக்காளாக்கப்படுவார்.

**(8) நம்பகர்** (Trustee) : நம்பகர் என்ற முறையில் ஒருவரும் ஒரு நிறுவனத்தில் பங்குநராக முடியாது. 153ஆவது பிரிவின்படி, நம்பகர் நிலையை அறிவிக்கும் எவ்வித, வெளிப்படை, உட்கிடை அல்லது கொள்நிலை அறிக்கையும் நிறுவனத்தில் பதிவேடுகளில் பதிவு செய்யப்படமாட்டாது என்று குறிப்பிடுகிறது. நம்பகரே பங்குநராகக் கருதப்படுவார். அவர் பங்கை, உரிமையை மாற்றம் செய்தாலும், பயனுனரி (benificiary) அதைத் தடை செய்யவோ மறுக்கவோ முடியாது. 153-A பிரிவில் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, நம்பகர் முறையில் பங்குகளை வைத்திருப்பவர், அவைகளின் விவரங்களைப்பற்றிப் பொது நம்பகருக்கு (Public Trustee) உறுதி மொழி வழங்கவேண்டும்.

**(9) நிறைவேற்றுளர்** (Executor) : நிறைவேற்றுளர் என்ற முறையில் நிறுவனத்தில் ஒருவர் பங்குநராக முடியாது. அவரே பங்குநராகக் கருதப்பட்டு அப் பொறுப்புக்களாக்கப்படுவார்.

**உறுப்பினர்கள் பதிவேடு** (Members Register)

150ஆவது பிரிவின்படி ஒவ்வொரு நிறுவனமும் உறுப்பினர்கள் பதிவேடு முறைப்படி தயாரித்து வைக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறது. அதன்படி அந்தப் பதிவேட்டில் உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள், தொழில்கள், அவர்களுக்குரிய பங்குகளின் எண்ணிக்கை, அப் பங்குகளுக்கிடப்பட்ட தனித்தனி எண், அவைகளில் செலுத்தப்பட்ட தொகை, ஒவ்வொருவரும் உறுப்பினரான தேதி, உறுப்பினரிலிருந்து விலகிய தேதி முதலான விவரங்கள் விவரமாக விவரிக்கப் படவேண்டும். தவறினால், தவறு தொடரும் ஒவ்வொரு நாளைக்கும் நிறுவனமும் அதன் ஒவ்வொரு அதிகாரியும் ஐம்பது ரூபாய் வரை தண்டனை வரி விதிக்கப்படுவர்.

## வெளிநாட்டுப் பதிவேடுகள் (Foreign Registers)

ஒரு நிறுவனத்தின், வெளிநாடுகளில் உள்ள கிளை அலுவலகங்களில், அங்கு வசிக்கும் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்ட பதிவேடுகள் அக் கிளைகளில் வைத்திருக்கச் செயல்முறை விதிகள் அனுமதித்தால் அவ்விதமே செய்யலாம். இப் பதிவேடுகள் வெளிநாட்டுப் பதிவேடுகளெனக் குறிப்பிடப்படுகின்றன. அப் பதிவேடுகள் ஆரம்பித்த ஒரு மாதத்திற்குள் பதிவாளருக்கு, அவைகள் வைக்கப்பட்டுள்ள இடங்களையும், அவைகளை அவ்வப்போது மாற்றப்படும் இடங்களையும் தெரிவிக்க வேண்டும். வெளிநாட்டுப் பதிவேடும், நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேட்டின் பகுதியாகக் கருதப்படும் என்றும், அவைகளின் நகல்கள் தலைமை அலுவலகத்திலும் வைத்திருக்க வேண்டுமென்றும் 158ஆவது பிரிவு கூறுகிறது.

151ஆவது பிரிவின்படி, ஐம்பது உறுப்பினர்களுக்கு மேல் கொண்ட ஒவ்வொரு நிறுவனமும், உறுப்பினர்களின் பெயர்களைக் கொண்ட அட்டவணையைத் (index of members) தயாரித்து அவ்வப்போது ஏற்படும் திருத்தங்கள் செய்யப்பட்டு வைத்திருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறது.

## பங்குநர் பதிவேட்டை பார்வையிடுவதற்குள்ள உரிமை

163ஆவது பிரிவில் பங்குநர் ஒவ்வொருவரும், நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில், அதன் பதிவேடுகளையும் வருடாந்திரக் கணக்குகளையும் எல்லா வேலை செய்யும் நாள்களிலும் அலுவல் நேரங்களில் கட்டணமின்றிக் காண்பதற்குக் கட்டாயமாகக் காண்பிக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

## உறுப்பினர் பதிவேட்டில் திருத்தம் செய்தல் (Rectification of the members' register)

உறுப்பினர் பதிவேட்டில் தெரிந்தோ தெரியாமலோ திகழும் தவறுகளைத் திருத்துவதற்குத் தரப்பட்டுள்ள தருணங்களைத் தருகிறது 155ஆவது பிரிவு. அதன்படி உறுப்பினர் பதிவேட்டில் ஒருவர் பெயர் காரணமின்றிக் காணப்பட்டாலும் அல்லது காரணமின்றிக் காணப்படாவிட்டாலும் அல்லது காரணமின்றிக் காண்பிக்கக் காலதாமதம் செய்தாலும், நீதிமன்றம் அதனால் பாதிக்கப்பட்டவர் மனுவைத் தீர விசாரித்துத் தக்க திருத்தம் செய்யும்படி ஆணையிடலாம்.

மேலும், நிறுவனம் கலைக்கப்படும் போதும், நீதிமன்றம் பங்குக் கடப்பாட்டாளர் பட்டியல் (List of Contributories)

கணிக்கப்படுவதற்கு, உறுப்பினர் பதிவேட்டிற்கு உரிய திருத்தங்கள் செய்யலாம்.

111ஆவது பிரிவின்படி, செய்யப்பட்ட பங்குநரின் மனுவை மத்திய அரசு மறுத்த போதிலும், மேற்படி பங்குநர் மீண்டும் இப் பிரிவின்படி, நீதிமன்றத்திற்கு முறையிட்டுத் தன் குறைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். மேலும், இம் மனுவைத் தவிர, மேற்படி பங்குநர், சட்ட முறைப்படி நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு வெற்றி பெற்றுத் தன் உரிமையை நிலைநாட்டலாம்.

**உறுப்பினர் பதிவேடு உரிமை மூலம்** (Members' register is title of members)

பங்குச் சான்றிதழ்கள் உறுப்பினர்களின் உரிமைக்குச் சான்றாகும். ஆனால், உறுப்பினர் பதிவேடு அவர்களின் உரிமை மூலமாகும் (title). ஏனெனில், அதில் காணப்படும் குறிப்புகள் யாவும் உண்மையென முடிவாகக் கொள்ளப்படும். ஆகையால், உறுப்பினர் பதிவேட்டில் தவருக ஒருவர் பெயர் பதிவு செய்யப்பட்டால், அவர் அது தவறு என்று சொல்லி, பங்குநர் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. இதைக் கண்கூடாகக் காட்டுகிறது 'In re M.F.R.D Cruz, A.I.R. (1939) Mad. 803' என்ற வழக்கு. இவ் வழக்கில் வாதி ஒரு நிறுவனத்தில் 4000 பங்குகள் கோரி விண்ணப்பம் செய்தார். ஆனல், அதன்படி அவருக்கு அப் பங்குகள் அளிக்கப்படவில்லை. பின்னர் ஒருவித விண்ணப்பமும் இல்லாமல், 4000 பங்குகள் அவர் பெயருக்கு மாற்றப்பட்டு அவர் பெயர் உறுப்பினர் பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டது. மேற்படி பதிவு செய்யப்பட்டதை அறிந்தும், அதைத் திருத்த முயலாமல், மனுதாரர் வாளாவிருந்தார். பின்னர் நிறுவனம் கலைக்கப்பட்டபோது, அவரும் உறுப்பினர் என்று உறுதி செய்யப்பட்டு, பங்குக் கடப்பாட்டாளர் பட்டியலில் (list of contributories) சேர்க்கப்பட்டார்.

# 8. கடனீட்டுப் பத்திரங்கள்

## (Debentures)

ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான மூலதனத்தைப் பெரும்பாலும் பங்குகள் வழங்கியே பெறுகிறது. அந்தப் பங்குப் பணம் போதாவிட்டாலும் அல்லது பணம் தற்காலிகமாகத் தேவைப்பட்டாலும், அப் பணத்தை நிறுவனம் பொதுமக்களிடமிருந்து கடனீட்டுப் பத்திரங்கள் வழங்கிக் கடனாகப் பெறுகிறது. அந்தப் பணம் தேவையில்லாதபோது உடனே அதை திருப்பிக் கொடுத்து விடுகிறது. நிறுவனம் பணத் தேவைக்காகப் பங்குகள் வழங்கினால், அது தேவையில்லாதபோது, நிறுவனம் அப் பங்குகளை மீண்டும் வாங்கி மூலதனத்தைக் குறைப்பது எளிதானதன்று. நீதி மன்றத்தின் அனுமதியின்றி நிறுவனம் தன் பங்குகளையே வாங்க முடியாது. ஆகவே, வேண்டுமானால், நிறுவனம் மீட்கப்படும் முன்னுரிமைப் பங்குகள் (Redeemable Preference Shares) வழங்கித் தேவையான பணம் பெறலாம். ஆனால், இவ்விதம் செய்வதற்கு, செயல்முறை விதிகள் அனுமதிக்க வேண்டும். மேலும், முன்னுரிமைப் பங்குநர்கள் நிறுவனத்தின் பொறுப்புகளுக்குட்படுவதால், அவர்களுக்குச் சாதாரணக் கடன்காரர்களை விட அதிகப்படியான உரிமைகள் வழங்க வேண்டியதாகிறது.

மேற்கூறிய காரணங்களால் நிறுவனத்தின் தற்காலிகப் பணத் தேவைக்குக் கடனீட்டுப் பத்திரங்களை வழங்கிக் கடனாகப் பெறுவதுதான் சாலச்சிறந்த வழியென்பது தெளிவாகும். மேலும், ஒரு நிறுவனம் பங்குகள் வாயிலாகப் பெரும் மூலதனத்தைப் பெற்றிருப்பதால், அதன் பேரில் தனது தற்காலிகத் தேவைக்குத் தேவையான பணத்தை, பொதுமக்களிடமிருந்து மிகவும் எளிதில், குறைந்த வட்டிக்குப் பெறமுடிகிறது. இவ்விதம் எளிதில் கடன் பெறும் வாய்ப்பைப் பெற்றிருப்பது நிறுவனத்தின் சாலச்சிறந்த நன்மைகளில் ஒன்றாகும்.

**வரையறை** (Definition)

கடனீட்டுப் பத்திரம், நிறுவனச் சட்டத்திலும் சட்ட வல்லுநர்களாலும் சரிவர வரையறை செய்யப்படவில்லை. நிறுவனச் சட்டத்தில் 2 (12)ஆவது பிரிவில், கடனீட்டுப் பத்திரமென்றால் (Debenture) கடன் மூலப் பத்திரத்தையும் (Debenture Stock) சேர்ந்ததாகும் என்று குறிப்பிடுகிறது. இக் குறிப்பிலிருந்து கடனீட்டுப் பத்திரம், கடன் மூலப் பத்திரம் என்பவை என்ன என்று எள்ளளவும் தெளிவாகவில்லை. எனினும், வழக்குகளில் வழங்கப்பட்ட விளக்கங்களிலிருந்து கீழ்க்காணும் வேறுபாடுகளைக் காணலாம். அதாவது, கடனீட்டுப் பத்திரமென்பது கடனுக்குரிய சான்றாகும். நிறுவனம் தரவேண்டிய கடனுக்கு, அதனுடைய ஒப்புதலாகும். ஆனால், கடன் மூலப் பத்திரம் என்பது கடனையே குறிக்கிறது. இந்தக் கடனுக்குரிய சான்று கடன் மூலப் பத்திரச் சான்றிதழ் (Debenture Stock Certificate) என்று குறிப்பிடப்படுகிறது. பங்குக்கும் (share), பங்கு மூலத்திற்கும் (stock) உள்ள வேறுபாடுகள் அனைத்தும் இவை இரண்டுக்கும் உண்டு.

**கடனீட்டுப் பத்திரங்களின் இயல்புகள்** (Nature of Debentures)

(1) சாதாரணமாகக் கடனீட்டுப் பத்திரங்கள் சான்றிதழ் வடிவத்தில் வழங்கப்படுகின்றன. பங்குச் சான்றிதழைப்போல் இவையும் நிறுவனத்தின் முத்திரையுடன், அதிகாரங் கொண்ட அதிகாரிகளால் கையெழுத்திடப்பட்டு வழங்கப்படுகின்றன.

(2) நிறுவனம் தரவேண்டிய கடனை ஒப்புக்கொள்ளும் முறையில் இவைகள் வழங்கப்படுகின்றன.

(3) கடனீட்டுப் பத்திரங்கள் தனித் தனியாக வழங்கப்படுவதில்லை, அவைகள் எப்போதும் பெரிய எண்ணிக்கைகளாக ஒரே வரிசையைச் (series) சேர்ந்ததாக வழங்கப்படுகின்றன.

(4) சில சமயங்களில் கடனீட்டுப் பத்திரங்கள், நிறுவனத்தின் சொத்துகளின் பேரில் பற்று (charge) வைத்து வழங்குவதுமுண்டு.

**கடனீட்டுப் பத்திரத்தின் வகைகள்** (Kinds of Debenture)

கடனீட்டுப் பத்திரங்களில் கீழ்க்கண்ட வகைகள் உள்ளன:

(1) **மீட்கப்படும் கடனீட்டுப் பத்திரங்கள்** (Redeemable Debentures) : பொதுவாக நிறுவனங்கள் வழங்கும் கடனீட்டுப் பத்திரங்கள் மீட்கப்படுபவையாகும். அவ்வாறாயின், அவைகளின் மீட்கப்படும் காலமும் குறிப்பிடப்படுகிறது. 121ஆவது பிரிவின் படி மீட்கப்பட்ட கடனீட்டுப் பத்திரங்களை, செயல் முறை

விதிகள் அனுமதிக்குமாயின், நிறுவனம் வரும்பினல் மீண்டும் வழங்கலாம் அல்லது அவைகளுக்குப் பதிலாக வேறு புதிய கடனீட்டுப் பத்திரங்களை வழங்கலாம். அவ்வாறு அவைகள் மீண்டும் வழங்கப்படுமாயின், அவைகளைப் பெற்றவர் அவைகள் மீட்கப்படாதவைபோல, அவைகளுக்குள்ள முந்துரிமைகள் (priorities) சற்றும் பாதிக்கப்படாமல் அப்படியே பெறுவார்.

(2) **நிலையான கடனீட்டுப் பத்திரங்கள்** (Perpetual debentures): இவைகளின் பெயர் பறை சாற்றுவது போல் இவைகளை நிறுவனம் மீட்பதேயில்லை. 120ஆவது பிரிவு இத்தகைய கடனீட்டுப் பத்திரங்களை வழங்கவும் அனுமதிக்கிறது. இவ்வகைக் கடனீட்டுப் பத்திரங்களில் மீட்கப்படும் காலம் குறிப்பிடப்படாமலிருக்கலாம் அல்லது மீட்கப்படாதவை என்று குறிப்பிடப்படலாம்.

(3) **கொண்டவர் கடனீட்டுப் பத்திரங்கள்** (Bearer debentures): இவ்வகையான கடனீட்டுப் பத்திரங்களில், கடன் தொகை மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனல், கடனுக்குரியவர் பெயர் குறிப்பிடப்படுவதில்லை. இப் பத்திரத்தைக் கைவசம் வைத்திருப்பவர், அதிலுள்ள தொகைக்குரியவர் இவைகளைக் கைக்குக் கை உரிமை மாற்றம் செய்வது மிகவும் எளிது. எவ்விதச் சட்டச் சடங்குகளும் சற்றுமின்றி, எவ்விதத் தட்டுத்தடங்கலு மில்லாமல் இவைகள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. மாற்றுபவர், தன் கைவசம் உள்ள பத்திரத்தை மாற்றிக்கொள் பவர் கைவசம் கொடுத்தால் போதும். அதோடு, உரிமை மாற்றம் முற்றிலும் முழுமை அடைகிறது. சுருங்கச் சொன்னல் இவைகள் மாற்று முறையாவணங்களைப் போன்றன (Negotiable Instruments).

(4) **பதிவு செய்யப்பட்டவருக்கு வழங்கும் கடனீட்டுப் பத்திரங்கள்** (Debentures to registered holder): இவ் வகைக் கடனீட்டுப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு அதில் பெயர் குறிப்பிடப்பட்ட வருக்கு வழங்கப்படுகிறது. நிறுவனத்தின் பதிவேட்டில் இப் பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றன. இப் பத்திரங்களைப் பங்குச் சான்றிதழ்களைப் போல், குறிப்பிட்ட சட்ட முறைகளின்படி, கைமாற்றம் செய்ய வேண்டும்.

**கடனீட்டுப் பத்திரதாரர்கள் பதிவேடும் அட்டவணையும்** (Register of Debenture holders and Index)

கடனீட்டுப் பத்திரங்கள் வழங்கும் ஒவ்வொரு நிறுவனமும் குறிப்பிட்ட பதிவேட்டில் (Register), கடனீட்டுப் பத்திரதாரர்கள் பெயர், முகவரி, தொழில், செலுத்தப்பட்ட தொகை, சான்றிதழ்

களின் எண்ணிக்கை, அவர்கள் பதிவான தேதி, விலகிய தேதி முதலான விவரங்களைக் குறிப்பிடவேண்டும். மேலும், கடனீட்டுப் பத்திரதாரர்கள் ஐம்பது பேர்களுக்கு மேலிருந்தால், தக்கதோர் அட்டவணையும் தயாரிக்கப்பட வேண்டும்.

**பங்குநருக்கும் கடனீட்டுப் பத்திரதாரருக்குமுள்ள வேறுபாடுகள்**
(Distinction between a Share holder and a Debenture holder)

நிறுவனங்களுக்கு முதலீடு செய்வதிலும், அதன் பயனாக ஊதிய ஈடு பெறுவதிலும் மேலோட்டமான ஒற்றுமை இருப்பினும் இவர்களுக்குள் கீழ்க்காணும் வேறுபாடுகள் காணப்படுகின்றன:

(1) பங்குநர் நிறுவனத்தில் பல உரிமைகளை உடைய உறுப்பினர். ஆனால், கடனீட்டுப் பத்திரதாரர், கொடுத்த கடனுரிமையைத்தவிர, கடுகளவு உரிமையில்லா ஒரு புதியவர்.

(2) பங்குநர் நிறுவனத்தின் கடனாளி (Debtor). ஆனால், கடனீட்டுப் பத்திரதாரர் நிறுவனத்தின் கடனாளர் (Creditor).

(3) ஆதாயம் அடையும் ஆண்டுகளில் தான் பங்காதயம் பெறுகிறார் பங்குநர். வருடம் தவறாமல் வருடா வருடம் வட்டி வாங்குபவர் கடனீட்டுப் பத்திரதாரர்.

(4) ஆதாயம் அதிகமானால் அதிகமாகவும், குறைந்தால் குறைவாகவும், பங்காதாயம் பெறுகிறார் பங்குநர். ஆதாயமே இல்லாவிட்டாலும் ஆணித்தரமான உரிமையுடன் குறிப்பிட்ட வட்டியைப் பெறுகிறார் கடனீட்டுப் பத்திரதாரர்.

(5) பங்குகள் மீட்கப்படாதவை. ஆனால், கடனீட்டுப் பத்திரங்கள் மீட்கப்படுபவை (redeemable).

(6) நிறுவனம் கலைக்கப்பட்டால், பங்குநர் பங்குத் தொகையை எஞ்சியுள்ள சொத்துகளிலிருந்து இறுதியில் பெறுகின்றனர். ஆனால், கடனீட்டுப் பத்திரதாரர் கடன் தொகையை முதலில் பெறுகிறார்.

(7) பங்குநருக்கு ஓட்டு உரிமை உண்டு. ஆனால், கடனீட்டுப் பத்திரதாரருக்கு நிறுவனம் விரும்பினாலும் ஓட்டு உரிமை வழங்க முடியாது.

**கடனீட்டுப் பத்திரதாரர் நம்பக சாசனம்** (Debenture Trust Deed)

கடனீட்டுப் பத்திரதாரர்கள் நன்மைக்காக ஒரு நம்பக சாசனம் (Trust Deed) உண்டாக்கப்படுகிறது. அதன்படி அவர்களுள் சிலர் நம்பகராக நியமிக்கப்படுகிறார்கள், நிறுவனத்தின்

சொத்துகள் நம்பகர்களுக்கு அடைமானம் செய்யப்படுகின்றன. அல்லது நம்பகர்களுக்கு (Trustees) நிறுவனத்தில் சொத்துகளில் பற்று (charge) வழங்கப்படுகிறது.

**நம்பக சாசனத்தின் உபயோகங்கள்** (Advantages of the Trust Deed)

*(1)* நிறுவனம் வட்டி அல்லது முதல் தரத் தவறினல் நம்பகர்கள் உடனே நடவடிக்கை எடுக்கலாம்.

(2) நம்பகர்களே, பிணையங்களை (securities) விற்று, அவைகளைப் பணமாக்கலாம்.

*(3)* பிணையங்களில், உரிமையுள்ளவர்கள் நம்பகர்களாகையால் நிறுவனம் அவைகளைப் பிறருக்கு உரிமை மாற்றம் செய்ய முடியாது.

*(4)* நம்பகர்கள் பிணையங்களின் மதிப்புக் குறையாமல் பத்திரமாகப் பாதுகாக்க முடியும்.

**கடனீட்டுப் பத்திரதாரர்களின் சட்டத் தீர்வுகள்** (Legal remedies of the Debenture holders)

*(1)* பேணுநர் (receiver) அமர்த்திப் பிணையங்களை விற்கலாம். (2) மீட்புரிமை அடைப்புச் (by for closure) செய்து கடனை வசூலிக்கலாம். *(3)* கடனீட்டுப் பத்திரங்கள் அனுமதித்தால், சொத்துகளை விற்றுக் கடனைத் தண்டல் செய்யலாம். *(4)* நிறுவனம், நொடிப்பு நிலையுற்றால், பிணையங்களை விற்று மீதமுள்ள கடனுக்கு நொடிப்பு நிலையர் சொத்தாட்சி அதிகாரியிடமிருந்து பெறலாம். *(5)* தனக்காகவும், பிற கடனீட்டுப் பத்திரதாரர்களுக்காகவும் வழக்குப் போடலாம். *(6)* நிறுவனம் கலைக்கப்படுவதற்கு மனு கொடுக்கலாம்.

**பொது விதிகள்** (General principles)

நிறுவனம் கலைக்கப்பட்டவுடன் எல்லாக் கடனீட்டுப் பத்திரங்களும் உடனே செலுத்தப்பட வேண்டும்.

ஒரு நிறுவனம் கடனீட்டுப் பத்திரங்களை வழங்குவதில், 76ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி $2\frac{1}{2}$ சதவீதம் வரையில் தள்ளுபடி தரலாம். 79ஆவது பிரிவில், ஒரு நிறுவனம் கடனீட்டுப் பத்திரங்களுக்குத் தள்ளுபடி தரலாமா என்பதைக் குறிப்பிடாவிட்டாலும், 72 (2) (c), 129 முதலான பிரிவுகளில் இருந்து, ஒரு நிறுவனத்திற்குத் தள்ளுபடி தருவதற்குத் தடையேதும் கிடையாது என்று தெளிவுறலாம்.

# 9. படரும் பற்று
## (Floating Charge)

நிறுவனத்தின் சொத்துகளின் பேரில், பற்று (charge), அடைமானம் (mortgage) முதலான வில்லங்கங்கள் (encumbrances) உண்டாக்கப்படுவதைப் பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டும் என்று 125ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பிரிவின்படி, நிறுவனம் கீழ்க்கண்ட சொத்துகளின்பேரில் பற்று அல்லது அடைமானம் உண்டாக்கினால் அவைகளைப் பதிவாளரிடம் பதிவு செய்யாவிட்டால் அவைகள் கலைப்பதிகாரியையும் (liquidator) கடனாளர்களையும் (creditors) கட்டுப்படுத்தாது. அவை பின்வருமாறு :

(1) கடனீட்டுப் பத்திரங்களுக்கு (Debentures) உண்டாக்கப்படும் பற்று.

(2) கோரப்படா பங்குத் தொகையின் (uncalled capital) பற்று உண்டாக்குவது.

(3) அசையாப் பொருள்களின் பேரில் (immovable property) அல்லது அவைகளில் உள்ள நலனின் பேரில் (interest) பற்று உண்டாக்குவது.

(4) நிறுவனத்துக்கு வரவேண்டிய கடன் நிலுவைகளின் பேரில் பற்று உண்டாக்குவது.

(5) அசையும் பொருள்களின் பேரில் (movables), அடகு இல்லாமல் (not being pledge) பற்று உண்டாக்குவது.

(6) நிறுவனத்தின் தொழில் அல்லது எல்லா வகைச் சொத்துகளின் பேரில் கையிருப்புச் சரக்குகள் உள்படப் (Stock-in-trade) பற்று உண்டாக்குவது.

(7) கோரப்பட்ட பங்குத்தொகையில் செலுத்தப்படாத தொகையின்பேரில் பற்று உண்டாக்குவது.

(8) கப்பல் அல்லது கப்பலில் உள்ள பங்கின் பேரில் பற்று உண்டாக்குவது.

(9) செல்வாக்கு (Goodwill), புனைபொருள் உரிமை (Patent) அல்லது புனைபொருள் உரிமையில் வழங்கப்பட்ட உரிமம் (Licence), வாணிகக் குறி (Trade mark) அல்லது, வாணிகக் குறியில் வழங்கப்பட்ட உரிமம் (Licence), பதிப்புரிமை (Copy right) அல்லது பதிப்புரிமையில் வழங்கப்பட்ட உரிமம் முதலானவைகளின்பேரில் பற்று உண்டாக்குவது.

மேற்படி பற்றுகளை, அவைகளை உண்டாக்கிய முப்பது நாட்களுக்குள் பதிவாளரிடம் பதிவு செய்யவேண்டும். தகுந்த காரணம் தெரிவித்தால், பதிவாளர் மேலும் ஆறு வாரங்கள்வரை தவணை தரலாம். பதிவு செய்வதால் ஏற்படும் முக்கிய நன்மை, அந் நிறுவனம் கலைக்கப்பட்டாலும், அதைக் கட்டுப்படுத்துவதோடு, அந்தச் சொத்துகளின் பேரில் பின்னால் நலன் அடைபவர்களையும் அது கட்டுப்படுத்தும். பதிவு செய்யாவிட்டால், மேற்படி பற்று, கலைப்பதிகாரியையும் (Liquidator) கடனாளர்களையும் கட்டுப்படுத்தாது. ஆனால், அதனால் கொடுக்கப்பட்ட கடன் பாதிக்கப்படுவதில்லை.

பற்று, பதிவு செய்யப்பட்டுள்ளதற்குப் பதிவாளர், எவ்வளவு தொகைக்குப் பற்று உண்டாக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டு, ஒரு சான்றிதழ் வழங்க வேண்டும். அவ்வாறு அவர் வழங்கிய சான்றிதழ், பற்று, பதிவு செய்யப்பட்டதற்கு முடிவான சான்றாகும்.

பதிவாளரும் நிறுவனமும், பற்றுகளைப் பதிவு செய்யப்பட்ட பதிவேடு வைத்திருக்க வேண்டும். அந்தப் பதிவேட்டில், பற்று உண்டாக்கப்பட்ட தேதி, எவ்வளவு தொகைக்கு உண்டாக்கப்பட்டது, எந்தெந்தச் சொத்துகளின் பேரில் உண்டாக்கப்பட்டுள்ளது, பற்றுக்கு உரியவர்களின் விவரங்கள் ஆகிய எல்லா விவரங்களையும் குறிப்பிட வேண்டும். மேற்படி பதிவேடுகளையும், பற்று உண்டாக்கப்பட்ட ஆவணங்களையும், கடனாளர்களும் உறுப்பினர்களும், குறிப்பிட்ட கட்டணம் செலுத்திப் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும்.

**படரும் பற்று (Floating Charge)**

ஒரு நிறுவனம் கடன் பெறுவதற்கு மிகவும் சிறந்த சாதன மாக உள்ளது படரும் பற்று. பற்றுகளை இரு வகைகளாகப் பிரிக் கலாம். முதல்வகை, குறிப்பிட்ட பற்று (Fixed Charge) என்ப தாகும். ஒரு குறிப்பிட்ட பொருளின்பேரில் உண்டாக்கப்படும் பற்று குறிப்பிட்ட பற்று எனப்படுகிறது. இரண்டாவது வகை, படரும் பற்று (Floating Charge) எனப்படும். இத்தகைய பற்று வழங்கப்பட்ட பொருள்களை அது உடனடியாகப் பற்றுவதில்லை. ஆனால், இந்தப் பற்று முற்றுப் பெறும்போது, நிறுவனம் பெற்றுள்ள எல்லாப் பொருள்களையும் பற்றிக் கொள்கிறது. படரும் பற்றுக்குட்பட்ட சொத்துகளை, நிறுவனம் சற்றும் கவலை யற்றுத் தங்கு தடங்கலின்றி உரிமை மாற்றம் செய்யலாம். அவ்வாறு நிறுவனம் கைவசம் இழக்கும் பொருள்களை விட்டுவிட்டு அது அவ்வப்போது கைவசம் பெறும் பொருள்களின் மேல் படரு கிறது. மேலும், நிறுவனம் படரும் பற்றுக்குட்பட்ட சொத்துகளை மீண்டும் குறிப்பிட்ட பற்றுக்குட்படுத்தலாம். அப்போது குறிப் பிட்ட பற்று முந்தைய உரிமை (Priority) பெறுகிறது. இவ்வாறு கவர்ன்மெண்ட் ஸ்டாக் கம்பெனி v. மணிலா ரயில்வே [Govt. Stock Co. v. Manila Rly. (1897) A.C. 81] என்ற வழக்கில் விளக்கப்பட்டது. அவ் வழக்கில் நிறுவனம் கடனீட்டுப் பத்திரங் களுக்குச் (Debentures) சொத்துகளின் பேரில் படரும் பற்று உண்டாக்கியது. பின்னர், அந்தச் சொத்துகளில் சிலவற்றை அடைமானம் செய்தது. அச் சொத்துகளில் அடைமானம் பெற்றவரின் உரிமை முந்தையது என்று நீதிமன்றம் முடிவு செய்தது. படரும் பற்று இத்தகைய இயல்புகளுடைமையால், நிறுவனம் தன் கையிருப்புச் சரக்குகளின் பேரிலும் படரும் பற்று உண்டாக்கலாம்.

படரும் பற்று உண்டாக்கும் உரிமை நிறுவனம் ஒன்றுக்குத் தான் உண்டு. ஒரு தனிநபர் (Individual) அல்லது கூட்டாண்மை நிறுமம் (Partnership Firm) தங்கள் சொத்துகளின் பேரில் படரும் பற்று உண்டாக்க முடியாது. ஏனென்றால், அவர்கள் நொடிப்பு நிலையரானால் (become insolvent), அவர்கள் சொத்துரிமை யாவும் (ownership) சொத்தாட்சி அதிகாரி (Official Assigne) பெறுகிறார். ஆனால், நிறுவனம் கலைக்கப்பட்டால் அதன் சொத் துரிமை மாறுவதில்லை. இதனால் பற்று உரிமை பெற்றவர்கள் உரிமைகள் பாதிக்கப்படுவதில்லை.

**படரும் பற்று முற்றுப் பெறும் வகை (Crystallisation of the floating charge)**

(1) நிறுவனம் கலைக்கப்பட்டால் படரும் பற்று முற்றுப் பெற்று நிறுவனம் அப்போது பெற்றுள்ள எல்லாச் சொத்து களையும் பிணைக்கிறது.

(2) கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய தவணை கடந்து, கடனாளர் பற்று உரிமையை நிறைவேற்ற, வழக்குச் சொத்துப் பேணுநரை (Receiver) அமர்த்தினால், படரும் பற்று முற்றி அப்போது நிறுவனத்தின் கைவசம் உள்ள சொத்துகளைப் பிணைக் கிறது.

539ஆவது பிரிவின்படி, ஒரு நிறுவனம் கலைக்கப்படுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு அது உண்டாக்கிய படரும் பற்று செல லாததாகும் என்று குறிப்பிடுகிறது. ஆனால், அதற்குக் கீழ்க் காணும் விலக்குகள் உள்ளன :

(1) நிறுவனம் படரும் பற்று உண்டாக்கியபோது நல்ல செல்வ நிலையில் இருந்தால், படரும் பற்று பாதிக்கப்படுவதில்லை.

(2) நிறுவனம் படரும் பற்று உண்டாக்குவதற்கு மறுபயனாகப் பணம் பெற்றுக் கொண்டால், அவ்வாறு பெற்றுக்கொண்ட தொகை அளவுக்குத்தான் படரும் பற்றுச் செல்லுபடியாகும். [Re Eric Holmes Property Ltd. (1965) 2 All ER 333] என்ற இவ்வழக்கில் நிறுவனம் கடனாளருக்குச் சொத்துகளின் பேரில் படரும் பற்று உண்டாக்கியது. கடனாளர் ரொக்கமாக 400 பவுன்கள் கொடுத்தார். ஆகையால், படரும் பற்று 400 பவுன் களின் மதிப்பளவுக்குத்தான் செல்லும் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

# 10. துவக்குநர்கள்

## (Promotors)

துவக்குநர்கள் என்ற சொல் சட்டத்தில் உறுவானதல்ல. ஆனல், நிறுவனத் துறையிலே வெகுகாலமாகப் புழங்கி வரும் சொல்லாகக் கருதப்படுகிறது. இச் சொல் சட்டத்திலும், வழக்குகளில் வழங்கப்பட்ட விளக்கங்களிலும் இதுவரை சரிவர வரையறை செய்யப்படவில்லை. பொதுவாக, 'துவக்குநர்' என்ருல் ஒரு நிறுவனத்தை உண்டாக்கியதிலும், உருவாக்கியதிலும் பங்கேற்றவர் எனக் கொள்ளலாம். ஆனல், இதில் ஒருவர் துவக்குநராகக் கருதப்பட, எத்தகைய பங்கேற்க வேண்டுமென்ருே அல்லது எவ்வளவு பங்கு ஏற்க வேண்டுமென்ருே திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. ஒருவர் துவக்குநரா இல்லையா என்பதை அந்தந்தச் சூழ்நிலைகளைக் கொண்டு அவ்வப்போது முடிவு செய்யப்பட வேண்டியதாகும். ஒருவர் நிறுவனம் நிறுவப்பட்டதில் மிகச் சிறிய பங்கு பெற்றிருந்தாலும், அவர் துவக்குநராகக் கருதப்படலாம். உதாரணமாக, ஒரு நிறுவனம் அல்லது ஒரு நபர், நிறுவனத்திற்கு இயக்குநர் பெறுவதற்கு உதவி செய்தாலும் அல்லது பங்குகளை விற்க உதவி செய்தாலும், அல்லது முதனிலை ஒப்பந்தங்களைத் (Preliminary Contracts) தயாரித்தாலும், அந்த நிறுவனம் அல்லது அவர் ஒரு துவக்குநராகக் கருதப்படலாம் மற்றும், ஒருவர், நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதில் ஒரு பங்கு இல்லாமல் இருந்தாலும், பின்னர் அந்த நிறுவனத்திற்கு மூலதனம் பெறுவதற்கு உதவியவராய் இருந்தால், அவரும் துவக்குநராகக் கொள்ளப்படலாம். அதே சமயத்தில் துவக்குநர்கள் என்ருல் மிகவும் மோசமான கடந்தகாலங் கொண்ட, ஐய்யமுறத்தக்க குணமுடைய, ஏமாளிகளை ஏமாற்றும் எத்தர்கள் என்று ஒரு பரவலான எண்ணமும் கருத்தும் இருப்பதை மறுப்பதற்கில்லை.

தொழில் முறையில், ஒரு நிறுவனத்திற்குப் பணியாற்றிய வர்கள் ஒருபோதும் துவக்குநர்களாகக் கருதப்படமாட்டார்கள். உதாரணமாக, சட்ட முகவர் (Solicitor), பட்டயக் கணக்கர் (Chartered Accountant). மதிப்பிடுபவர் (Valuer) முதலானோர் தங்கள் தொழில் முறைகளில் ஆற்றிய பணிகளுக்காகத் துவக்குநர் களாகக் கருதப்படமாட்டார்கள் என்பது திண்ணம். ஆனால், அவர்கள் அந்தத் தொழில் முறைக்கும் மேற்பட்டு, நிறுவனத் திற்கு, பங்குத் தொகை பெறவும், இயக்குநர்கள் பெறவும் வழி வகை செய்தவர்களென்றால், கட்டாயமாக அவர்கள் துவக்குநர் களாகக் கருதப்படுவார்கள்.

**கடமைகளும் பொறுப்புகளும்**

சட்டத்தில், பொறுப்புக்களுக்குப் பஞ்சமேயில்லை என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் துலங்குகிறார்கள் துவக்குநர்கள். உரிமை என்ற வகையில், சட்டம் இவர்களுக்கு ஒன்றும் வழங்கா விட்டாலும் கணிசமான கடமைகளையும், பாரமான பொறுப்புகளை யும் சேர்த்துள்ளது. இவர்கள் பேரில் நிறுவனச் சட்டத்தில் துவக் குநர்களைப் பற்றி ஒரே ஒரு குறிப்புக் காணப்படுகிறது. அதாவது, திட்ட அறிவிப்புத் (Prospectus) தீட்டியதில் பங்கேற்ற துவக்குநர் களும், அதிலே காணப்படும் திரித்துக் காட்டலுக்குப் (mis-representation) பொறுப்பாகிறார்கள் என்பதாகும். அதைத் தவிர வேறெந்தக் குறிப்பும் இவர்களைப் பற்றிக் காணப்படாவிட்டா லும், சட்டம் அதோடு விட்டதாயில்லை. நீதிமன்றங்களும் சட்டத்தோடு போட்டி போட்டுக் கொண்டு இவர்களை நிம்மதி யாக நிலவ விடவில்லை.

முதற்கண் குறிப்பிடத்தக்கது, துவக்குநர்கள், தங்களால் துவக்கப்படும், அப்பாவியான, நிற்கதியற்ற, நிறுவனத்திற்கு ஒரு நம்பகர் நிலையில் (Trustee) நிற்கின்றனர் என்பது. நிறுவனத் திற்குத் தங்கள் உள்ளத்தைத் திறந்து காட்ட வேண்டிய இவர்கள், தங்கள் பதவிகளைப் பற்றாகக் கொண்டு அளவற்ற ஆதாயம் பறிக்க முடியாது. நிறுவனத்துடன் மேற்கொள்ளும் ஒவ்வொரு தொடர் பிலும், வெள்ளை உள்ளம் கொண்டவர் என்பதையும், கொள்ளும் ஆதாயம் கொள்ளை ஆதாயம் அல்ல என்பதையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்ட வேண்டிய பொறுப்புள்ளவரா கிறார்கள்.

துவக்குநர்களுடைய பொறுப்பின் ஆழத்தைப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. எர்லாங்கர் *v*. நியூ சாம்பிரிரோ பாஸ்பேட் கம்பெனி [Erlanger *v*. New Sombrero Phosphate Co., (1878) 3

A.C 1218], என்ற வழக்கு. இவ் வழக்கில், ஒரு சிலர், 'E'யின் தலைமையில், எரியம்(Phospherous) உள்ள சுரங்கங்கள் உள்ள ஒரு தீவை (Island) 55,000 பவுன்களுக்கு வாங்கினார்கள். பின்னர், துவக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு, 1,10,000 பவுன்களுக்கு விற்றார்கள். அந்த நிறுவனத்தில் ஐந்து இயக்குநர்கள் 'E' யினால் நியமிக்கப்பட்டவர்கள். அதில் இருவர் வெளிநாடு சென்றிருந்தனர். எஞ்சியுள்ள மூவரில், இருவர் 'E',யின் கைப்பாவைகள், தீவு வாங்கியதைப் பங்குநர்கள் விவரம் அறியாமல் ஒப்புக்கொண்டார்கள். நிறுவனம் கலைக்கப்பட்டபோது, கலைப்பு அதிகாரி, துவக்குநர்கள் அடித்த கொள்ளை ஆதாயம் நிறுவனத்திற்குச் சேர வேண்டும் என்றார். துவக்குநர்கள் தங்கள் ஆதாயம் அனைத்தும் இயக்குநர்களுக்கு அறிவிக்கப்பட்டது என்று கூறினார்கள். ஆனால், நீதிமன்றம் துவக்குநர்கள் கைகாட்டி பொம்மை போன்ற இயக்குநர்களுக்கு அறிவித்தது போதாது என்று குறிப்பிட்டு, அவர் அடைந்த ஆதாயம் அடியோடு நிறுவனத்துக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று முடிவு செய்தது.

மேற்கூறிய வழக்கின் முடிவிலிருந்து, துவக்குநர்கள் சட்டப்படி ஆதாயம் அடையவேண்டும் என்றால், மேற்படி ஆதாயத்தைச் சுதந்திரமுள்ள இயக்குநர்களுக்கு அறிவிக்க வேண்டும். இயக்குநர்கள் இவர்கள் கைப்பாவை என்றால், மேற்படி ஆதாயத்தைப் பெரும்பான்மையான பங்குநர்களுக்கு ஐயந்திரிபறக் காண்பிக்க வேண்டும்.

மேலும், மேற்படி பொறுப்புகளைச் செயல்முறை விதிகளையும், உடன்படிக்கைகளையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தட்டிக்கழிக்க முடியாது. ஏமாற்றப்பட்ட நிறுவனம், ஒப்பந்தத்தைக் குப்பைக்கூடையில் போட்டுவிட்டு (Rescission of the contract), துவக்குநர்கள் பெற்ற ஆதாயத்தையும் பறித்துக் கொள்ளும் உரிமை உடையதாகும்.

**உரிமைகள்**

உரிமைகள் என்ற பெயரில் சட்டம் இவர்களுக்கு ஒன்றும் வழங்காவிட்டாலும், இவர்களாகவே உரிமைகளை ஒப்பந்தங்களின் வாயிலாக உற்பத்தி செய்து கொள்வதைச் சட்டம் தடை செய்யவில்லை. அத்தகைய ஒப்பந்தங்கள் ஒன்றும் இல்லை என்றால், இவர்கள் உரிமையைப் பெறுததோடு, உரியதையும் இழப்பார்கள். உதாரணமாக, ஒப்பந்தம் இருந்தாலன்றி, துவக்குநர்கள் நிறுவனத்திற்குச்செய்த முன் செலவுகள் (Preliminary expenses), பதிவுக் கட்டணங்கள்(Registration fees) முதலானவை

களை நிறுவனத்திடமிருந்து பெற முடியாது. இதை, இன் ரீ நேஷனல் மோட்டார் மெயில் கோச் கம்பெனி லிமிடெட் [In re National Motor Mail Coach Co. Ltd., (1908) 2 Ch. 228], என்ற வழக்கு, கண்கூடாகக் காட்டுகின்றது. இவ் வழக்கில், துவக்குநர் நிறுவனம் தோன்றும் முன் பதிவுக் கட்டணத் திற்காக 460 பவுன்கள் செலவு செய்தார். பின்னர் நிறுவனம் கலைக்கப்பட்டது. நீதிமன்றம், ஒப்பந்தம் ஒன்றும் இல்லாததால், மேற்படி செலவுத் தொகையைப் பெறுவதற்கில்லை என்று முடிவு செய்தது.

ஆகவே, ஊதியம் உண்டு என்று உரிமை கொண்டாடினால் அதை உடன்படிக்கையில் கை சுட்டிக் காண்பிக்க வேண்டும். இல்லையென்றால் செய்ததைச் செலவும் பெறமுடியாதபடி கை சுட்டதோடு நிற்க வேண்டிய நிலையை அடைவர்.

**முன் ஒப்பந்தங்கள் (Preliminary contracts)**

முன் ஒப்பந்தங்கள் என்றால் நிறுவனம் தோன்றுவதற்குமுன், நிறுவனத்திற்காகத் துவக்குநர்களால் செய்யப்படும் ஒப்பந்தங்கள். இவைகளிலும் இவர்களுடைய நிலை மிகவும் பரிதபிக்கக்கூடிய தாக உள்ளது. நிறுவனம் தோன்றுவதற்கு முன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது. ஒப்பந்தங்களின் நலனை நிறுவனம் பெற்றாலும், பலனை இவர்கள் தரவேண்டிய பொறுப்புள்ளவராகின்றனர், ஏனென்றால், நிறுவனத்திற்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு இவர்களே பொறுப்புள்ளவர்க ளாகிறார்கள். இந்த நிலையைக் கண்கூடாகக் காண்கிறோம் கெல்நர் v. பேக்ஸ்டர் [Kelner v. Baxter, (1866) L. R. 2 C.P. 174] என்ற வழக்கில்.

இவ் வழக்கில் தோன்றாத ஒரு நிறுவனத்தின் உபயோகத்திற் கென, மூன்று துவக்குநர்கள் சில பொருள்களை வாங்கினார்கள். பின்னர்த் தோன்றிய நிறுவனம், அப் பொருள்களை உபயோகித்து விட்டு, அதற்குரிய பணத்தைச் செலுத்தும்முன் கலைக்கப்பட்டது. துவக்குநர்களே அப் பொருள்களுக்குப் பொறுப்புள்ளவர்களா யினர்.

ஆகவே, துவக்குநர்கள் முன் ஒப்பந்தங்களுக்குப் பொறுப்பி லிருந்து விலக வேண்டுமென்றால், மேற்படி ஒப்பந்தங்கள் நிறு வனம் பதிவு செய்யப்படும்போது உறுதி செய்யப்படவேண்டும் (Warranted by the terms of incorporation).

# 11. இயக்குநர்கள்
## (Directors)

ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் அதன் இருதயமாக இயங்குகின்றனரென்று இயம்புவது இம்மியளவும் மிகையாகாது. ஒரு நிறுவனம் செயற்கை நபராகையால் அது செயலுறுவதே அவர்களால்தான். அவர்கள் தங்கள் கருத்து வேறுபாட்டால் செயலற்றால் (Deadlock) நிறுவனமும் செயலிழந்ததாகிறது. நிறுவனம் நிலையாக நீடித்து நிற்பதும், நிலைகுலைந்து சாய்வதும் இயக்குநர்களைப் பொறுத்துள்ளது. நிறுவனத்தின் அன்றாடச் செயல்களில், இயக்குநர்கள் பல்வேறு முக்கிய பாகங்களை ஏற்பதால், நிறுவனத்தில் இவர்கள் நிலையை நிச்சயமாக நிர்ணயிக்கக் கூடியதாக இல்லை. அவைகளுள் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை மூன்று வித முக்கியப் பாகங்களாகும். அதாவது, ஒரு நிறுவனத்தில் இயக்குநர்கள், ஒரு வகையில் அதன் முகவர்களாகவும் (Agents), இன்னொரு வகையில் அதன் நம்பகர்களாகவும் (Trustees), மற்றொரு வகையில் அதன் உறுப்புகளாகவும் (Organs) செயலுறுகிறார்கள் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. இவர்கள் செயலுறும் முறைகளின் விவரங்கள் பின்வருமாறு :

**முகவர்கள் (Agents)**

ஒரு நிறுவனத்தில் அதன் இயக்குநர்கள் பெரும்பாலும் அதன் முகவர்களாகச் செயலாற்றுகின்றனர். நிறுவனவியலின் ஆரம்பத்திலிருந்தே இவர்கள் சட்டத்தின் கண்ணுக்கு அதன் முகவராய்த் தென்பட்டனர் என்பது தெளிவானதாகும். ஆகவே, முகவரையியலின் விதிகளைக் கொண்டுதான் (General principles of Agency) இயக்குநர்களுக்கும் இயக்கத்திற்கும் உள்ள தொடர்பு அவ்வப்போது நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு முகவருக்குரிய உரிமைகளும், அதிகாரங்களும், கடமைகளும், பொறுப்புகளும் இயக்குநர்களுக்கு இருக்கின்றதென இயம்பலாம்.

ஆகையால், ஒரு முகவரைப்போல், ஒரு இயக்குநரும் நிறுவனத்திற்காகச் செய்த செயலுக்குச் சொந்த முறையில் பொறுப்பாக மாட்டார். ஒரு முகவருக்கு இருப்பதுபோல், வெளிப்படை அதிகாரம் (Express authority); உட்கிடை அதிகாரம் (Implied authority), அளிக்கப்பட்ட அதிகாரம் (Real or actual authority), அவசர அதிகாரம் (Emergency authority) முதலான அனைத்து அதிகாரங்களும் படைத்தவர் நிறுவனத்தின் இயக்குநர், மேலும், இயக்குநர்களின் செயல், நிறுவனத்தின் செயலாகவும். இயக்குநர்களுக்கு வழங்கிய அறிக்கை, நிறுவனத்துக்கு வழங்கப்பட்டதாகவும் இயக்குநர்களின் தவறுதல்கள், நிறுவனத்தின் தவறுதல்களாகவும் கருதப்பட்டு, நிறுவனம் ஒரு முதல்வரைப் போல் (Principal) பொறுப்புக்குள்ளாக்கப்படுகிறது. **இயக்குநர்கள் நிறுவனத்தின் முகவர்களேயன்றி பங்குநர்களின் முகவர்கள் அல்ல என்பதை நன்றாக நினைவில் கொள்ளவேண்டும்.**

டி. ஆர். பிராட் பாம்பே லிமிடெட் v. எம். டி. லிமிடெட் (T. R. Pratt Bombay Ltd., *v.* M. T. Ltd., A.I.R. (1938) P.C. 159] என்ற இவ் வழக்கில் 'S' என்ற நிறுவனம், 'P', 'M' என்ற நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தது. 'M'ன் இயக்குநர்களே 'P'யின் இயக்குநர்களாயுமிருந்தனர். 'S' இதை அறிந்திருந்தது 'M'-க்குக் கொடுக்கப்பட்ட கடனுக்கு, 'P'-யின் சொத்துகளின் பேரில் நேர்மை நெறி முறையான அடைமானம் (Equitable mortgage) வழங்கப்பட்டது. 'P' நிறுவனம் கலைக்கப்பட்டபோது அதன் கலைப்பு அதிகாரி (Official Liquidator) மேற்படி அடைமானத்திற்குக் கட்டுப்பட மறுக்கலாமென்றும், 'S' நிறுவனத்தின் இயக்குநர்கள் அறிந்திருந்த மேற்படி விவரங்களை 'S' நிறுவனமும் அறிந்திருந்ததாகக் கொள்ளப்படவேண்டும் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

**நம்பகர்** (Trustee)

இரண்டாவதாக, இயக்குநர்கள் நிறுவனத்தின் நம்பகராகவும் கருதப்படுகின்றனர். இக் கருத்து அவ்வளவு சரியானதன்று என்றாலும், அதில் ஓரளவுக்கு உண்மையில்லாமலில்லை. அவர்கள் உண்மையில் நம்பகர்கள் என்றால் சட்டப்படி அவர்கள் நிறுவனத்தின் சொத்துகளுக்குச் சொந்தக்காரர்களாவர். ஆனால், சட்டம் அவர்களுக்கு நிறுவனத்தின் சொத்துகளில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், சொத்துகள் யாவும் நிறுவனத்தேற்கே முழுச் சொந்தமானது என்றும் செப்புகிறது. ஆனால், இயக்குநர்கள் பல சந்தர்ப்பங்களில் நம்பகர்களைப் போல்

நிறுவனத்திற்குப் பொறுப்புள்ளவராகிருர்கள். உதாரணமாக, பங்கு உரிமை மாற்றங்களுக்கு ஒப்புதல் தருவது, பங்குகளை வழங்குவது, பங்குத் தொகைகளைக் கோறுவது (Making calls), பறிமுதல் செய்வது (Forfeiture), பறிகொடுத்தலை ஏற்றுக் காள்வது, பங்கு ஆதாயம் (Dividend) வழங்குவது, நிறுவனத் தின் நிதிகளைச் செலவழிப்பது, நிறுவனத்தின் சொத்துகளைக் கொள்வினை கொடுப்பினை செய்வது முதலான பற்பல காரியங் களில் அவர்கள் நம்பகர்களைப் போல் முழு நம்பிக்கைக்குகந்தவர் களாக நிறுவனத்தின் முழு நன்மையையும் கருத்தில் ஆழக் கொண்டு முழு மூச்சுடன் முயன்று செயலாற்ற வேண்டிய கடமை யைக் கொண்டுள்ளார்கள். இக் காரணங்களால்தான். இயக்குநர்கள் நிறுவனத்தின் நம்பகர்கள் என்ற எண்ணமும் எழுந்து நடமாடுகிறது. அது எவ்வளவுக்குத் திண்ணமானது என்று மேற்கூறியவைகளைக் கொண்டு தெளிவு காணலாம். மேலும், இயக்குநர்கள் நிறுவனத்தின் நம்பகர்களாகக் கருதப்படு கிருர்களேயன்றி, பங்குநர்களின் நம்பகர்களாகவல்ல என்பதை நன்ருக நினைவில் கொள்ள வேண்டும். இதைக் கீழ்க்காணும் வழக்கு விளக்குகிறது.

பெர்சிவல் v. ரைட் [Percival v. Wright (1902) 2 Ch. 421] என்ற இவ் வழக்கில் இயக்குநர்கள் நிறுவனத்தின் தொழிலை (Uundertaking) அதிக விலைக்கு விற்க ஏற்பாடு செய்து கொண் டிருக்கையில், அதைப் பங்குநர்களுக்குத் தெரிவிக்காமல் அவர்கள் பங்குகளை வாங்கி, பின்னர் அதிக விலைக்கு விற்று ஆதாயம் அடைந்தனர். அதைக் கண்டு ஆத்திரம் அடைந்த பங்குநர்கள் போட்ட வழக்கில், இயக்குநர்கள் பங்குநர்களின் நம்பகர்கள் (Trustees) அல்ல என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

ஆனுல், அவர்கள் நன்மைக்காகச் செய்வதாகப் பொய் யுரைத்துப் பங்குநர்களை ஏமாற்றினுல், அவ்வாறு ஏமாற்றிப் பெற்ற ஆதாயத்திற்குப் பங்குநர்களுக்குப் பொறுப்புள்ளவராகி ருர்கள் இயக்குநர்கள். இதை ஆலன் v. ஹயட் (Allen v. Hyatt) என்ற வழக்கு விளக்குகிறது. இவ் வழக்கில் இயக்குநர்கள் நிறு வனம் வேருெரு நிறுவனத்துடன் இணைவதற்குப் பங்குநர்கள் இசைவு வேண்டும் என்று கூறி, அப்பங்குகளை வாங்கும் உரிமையும் பெற்றனர். பின்னர், அவர்களின் முன்னேற்பாட்டின்படி பங்கு களை அதிக விலைக்கு விற்று ஆதாயம் அடைந்தனர். ஆனுல், நீதி மன்றம் அது அடாததென்றும், அந்த ஆதாயத்தை, ஏமாந்த அந்தப் பங்குநர்களுக்கே உரியது என்றும் முடிவு செய்தது.

**நிறுவனத்தின் உறுப்புகள்** (Organs of the Company)

மூன்ருவதாக, இயக்குநர்கள் இன்றைய நிறுவனவியலில் நிறுவனத்தின் உடலுறுப்புகளாகவே கருதப்படுகின்றனர். நிறுவனங்கள் தோன்றிய நாள் தொட்டு, அவைகள் உடலுறுப்புகள் இல்லாத, எண்ணங்கள், உணர்ச்சிகள் அற்ற, தவறுகளும் தீங்குகளும் செய்யமுடியாத உருவமும் அருவமும் அற்ற ஒரு செயற்கை நபர் என்ற கருத்து மிக ஆழ வேறூன்றியிருந்தது. இதனுல் பின்னர் ஏராளமாக முளைத்த நிறுவனங்கள் தாராள மாகத் தவறுகளும் தீங்குகளும் செய்தாலும் தண்டனைகளுக்குத் தப்பி வந்தன. இவ்வாறு இயக்குநர்கள் நிறுவனத்தின் பெயரால் தீங்குகள் இழைத்து தண்டனைகளில் இருந்து தப்பிக்க முற்பட்டனர். இந் நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க, முளைத்தது முற்றிலும் புதிய கருத்து. அது நாளா வட்டத்தில் வெகு வேக மாக வளர்ந்து, இன்றைய, நிறுவனவியலில் மிக ஆழமாக வேரூன்றிவிட்டது. இக்கருத்தின்படி இயக்குநர்கள் நிறுவனத்தின் உறுப்புகளாகவே கருதப்படுகின்றனர். இயக்குநர்களின் எண்ணங்கள் நிறுவனத்தின் எண்ணங்களாகவும் இயக்குநர்களின் தீங்குகளும் குற்றங்களும், நிறுவனங்களுடையதாகவும் கருதப்பட்டு, அவைகளும் சட்டத்தின் தண்டனைகளுக்குட் படுத்தப் படுகின்றன. இந்த நிலைமைக்குக் கடைக்கால் போடப்பட்டது. லேனர்ட்ஸ் கேரியிங் கம்பெனி v ஏஷியாட்டிக் பெட்ரோலியம் கம்பெனி [Lennard's Carrying Co. v. Asiatic Petroleum Co. (1915) A.C. 705] என்ற வழக்கில் அதன் விவரங்கள் பின்வருமாறு :

வாணிபக் கப்பல் சட்டத்தின்படி (Merchant Shipping Act, 1894), ஒரு கப்பலின் சொந்தக்காரர் தன் தவறுதலின்றி விளைந்த இழப்புக்குப் பொறுப்பல்ல என்று கூறுகிறது. இவ் வழக்கில், கப்பலின் சொந்தக்காரர் ஒரு நிறுவனம். அந்தக் கப்பல் விளைத்த சேதம் (Damage) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (Managing Director) செய்த தவறுதலால் விளைந்தது. இழப்பீடு கோரி, நிறுவனத்தின் பேரில் போடப்பட்ட வழக்கில், உடலும் உயிரும் அற்ற நிறுவனம் குற்றமற்றது, தவறு செய்யும் தன்மையதல்ல என்று தர்க்கம் செய்யப்பட்டது. ஆனுல், நீதிமன்றம் இந்த வாதத்திற்குச் செவி சாய்க்காமல், நிறுவனத்தின் எண்ணமும் செயலும் இயக்குநர்களின் எண்ணமும் செயலுமேயாகும் என்றும், இயக்குநர்களின் தீங்குகளும் குற்றங்களும், நிறுவனம் செய்வதாகும் என்றும் முடிவு செய்தது நீதிமன்றம்.

மேற்கூறப்பட்ட நீதிமன்றத்தின் முடிவு இன்றைய இந்திய நிறுவனச் சட்டத்தின் பெருவாரியான பிரிவுகளில் எதிரொலிக்கப்

கப்பட்டுள்ளது. அவைகளின்படி நிறுவனங்களால் விழையும் எல்லாத் தவறுதல்களுக்கும் குற்றங்களுக்கும், நிறுவனமும் அதன் ஒவ்வொரு அதிகாரியும் சிறை தண்டனைக்கும் தண்டனை வரிக்கு முள்ளாகின்றனர்.

**வரையறை**

இவ்வாறு பல்வேறு பாகங்களேற்றுச் செயலுறும் இயக்குநர் களைப்பற்றி நிறுவனச் சட்டத்தில் தெளிவான வரையறை தரப் படவில்லை. 2 (13)ஆவது பிரிவில் இயக்குநர் என்றால் அந்தப் பதவியில் உள்ள எவரையும் சேர்ந்ததாகும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இவ் வரையறை இயக்குநரின் நிலையைத் தெளி வாக்குவதாயில்லை. இயக்குநர்கள் ஒருவரின் கட்டளைகளுக் குட்பட்டு நடந்தால், அவரும் இயக்குநராகப் கருதப்படுகிறார் (Pseudo-director). இம் முறையில் நிறுவனத்தையும் இயக்கு நர்களையும் ஆட்டிவைக்கும் கடன்காரரும் இயக்குநராவார்.

நிறுவனத்தின் இயக்குநர்கள் கூட்டாகச் செயல்பட வேண்டும். இக் குழு, இயக்குநர்கள் குழு (Board of Directors) என்று குறிப்பிடப்படுகிறது. இக் குழுதான் நிறுவனத்தின் தலைமைச் செயலாட்சித்துறை (Chief Executive), மற்ற இயக்கு நர்கள் இக் குழுவின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கு முட்பட்டு (Supervisor and Control) செயலுறவேண்டும். இக் குழு அமைக்கப்படும் வகையும், அதற்கு இயக்குநர்கள் தேர்ந் தெடுக்கப்படும் முறைகளும், அதன் அதிகாரங்களும், கடமை களும், பொறுப்புகளும் பின்வருமாறு :

**இயக்குநர்கள் குழுவின் குறைந்த உச்ச வரம்புகள்** (Minimum and Maximum number of Directors)

252ஆவது பிரிவில், இயக்குநர்கள் குழுவில், பொது நிறுவ னமாயின் (Public Co.) குறைந்தது மூன்று இயக்குநர்களும், தனியார் நிறுவனமாயின் (Private Company) குறைந்தது இரண்டு இயக்குநர்களும் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. இயக்குநர்கள் குழுவின் உச்சவரம்பு செயல்முறை விதிகளில் குறிப் பிட்டுள்ளபடி இருக்கவேண்டும். இவ் வரம்பிற்குட்பட்டு நிறுவனம் வேண்டும்போது பொதுக்கூட்டத்தில் பொதுத் தீர்மானம் (Ordin ary resolution) செய்து இயக்குநர்களின் எண்ணிக்கையை எண்ணம்போல் ஏற்றிக்கொள்ளலாம். ஆனால், அவ்வாறு அதிகப் படுத்திய எண்ணிக்கை, மத்திய அரசு ஒப்புதலின்றிச் செல்லாது, ஆனால் (1) 1951-ம் ஆண்டு ஜூலை 21ஆம் தேதியிலிருந்து செய

லுறும் நிறுவனம் அதன் செயல்முறை விதிகள் அந்தத் தேதியில் அனுமதித்த உச்ச வரம்பிற்குட்பட்டு இயக்குநர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும், (2) மற்ற நிறுவனங்கள் செயல் முறை விதிகளில் முதன் முதலாக அனுமதித்த உச்சவரம்பிற் குட்பட்டு இயக்குநர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும் (3) அதிகப்படுத்திய எண்ணிக்கை பன்னிரண்டிற்குள் இருந் தாலும், மத்தியஅரசின் ஒப்புதல் பெறத் தேவையில்லை.

**முதன் முதலாக பதவி ஏற்கும் இயக்குநர்கள்** (The First set of Directors)

நிறுவனத்தின் இயக்குநர்களின் முதல் தொகுதி அமைப்பு முறை ஏட்டில் கையெழுத்திட்ட ஆதரவாளர்களால் அமர்த்தப் படுகின்றனர். அவ்வாறு அமர்த்தாவிடில், ஆதரவாளர்களில் தனிநபராக உள்ள அனைவரும் இயக்குநர்களாகின்றனர். நிறுவனம் பதிவானவுடனே அவர்கள் இயக்குநர்களாகின்றனர். ஆனல், அவர்கள் அப்பதவிகளை அடுத்த ஆண்டுப் பொதுக் கூட்டம் வரையில் வகிப்பார்கள். அதன் பின்னர், இயக்குநர்கள் 255ஆவது பிரிவில் குறிப்பிட்டபடி அமர்த்தப்படுகின்றனர். மேலும், ஆதரவாளர்கள் இயக்குநர்களாக பதவி ஏற்றது செல்லு படி ஆகவேண்டும் என்றால் அவர்கள் ஒவ்வொருவரும் இயக்குநராக இருக்க எழுத்து மூலம் இசைவு தெரிவித்துக் கையெழுத்திட்டுப் பதிவாளரிடம் தரவேண்டும், அல்லது அமைப்பு முறை இயக்குநரின் தகுதிக்குரிய பங்குகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது தகுதிக்குரிய பங்குகளை எடுத்துக் கொள்வதாகப் பதிவாளரிடம் வாக்குறுதி தரவேண்டும்.

**இயக்குநர்கள் பொதுக்கூட்டங்களில் அமர்த்தப்படுதல்** (Appointment at General Meetings)

சாதரணமாக, முறைப்படி ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் அந்த நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் பங்குநர் களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு பொது நிறுவனத்தி லும் அதைச் சார்ந்த தனியார் நிறுவனத்திலும், இயக்குநர்கள் குழுவின் எண்ணிக்கையில், மூன்றில் ஒரு பகுதி நிலையான பதவி களாக இருக்கலாம். ஆனல், மூன்றில் இரண்டு பகுதி தவணை முறைப்படி (By rotation) பதவியிலிருந்து விலகுவதாக இருக்க வேண்டும். ஆனல், அவ்வாறு பதவியிலிருந்து விலகுபவர்களில் மூன்றில் ஒரு பகுதி தான் ஒரே ஆண்டில் விலகலாம். அவர் களுள் பதவியில் நீண்ட காலம் இருந்தவர்கள் முதலில் விலக வேண்டும். அவர்களுள் சிலர் ஒரே நாளில் பதவியேற்

றிருந்தால், யார் விலகுவது என்பது அவர்களுக்குள் ஒப்பி முடிவு செய்து கொள்ளலாம். அது இயலாவிடில், யார் விலகவேண்டும் என்பது சீட்டுக் குலுக்கி முடிவு செய்யப்பட வேண்டும் (By casting lots). காலியான பதவிகளை நிறுவனம் அதே கூட்டத்தில் நிரப்ப வேண்டும். ஆனால், பொதுக் கூட்டப் பதவிகள் நிரப்பப்பட வேண்டியதில்லை என்றும் தீர்மானம் செய்ய லாம். இவை இரண்டும் செய்யாவிடில் கூட்டம் ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. மீண்டும் கூடிய கூட் டத்திலும், புதியவர்கள் அமர்த்தப்படவில்லை என்றால், பதவி யிலிருந்து விலகிய இயக்குநர்கள் மீண்டும் கூடிய அமர்த்தப்பட்ட தாகக் கருதப்படுகின்றனர். ஆனால், தேர்தலில் நின்று தோற் கடிக்கப்பட்டவரும், பதவியிலிருக்க விருப்பமில்லாததை எழுத்து மூலம் தெரிவித்தவரும், இயக்குநருக்குரிய பங்குத் தகுதிகளை இழந்தவரும், பதவி ஏற்பதற்குத் தனிமுறை அல்லது பொதுத் தீர்மானம் தேவைப்படுபவரும் (Special or Ordinary resolutiou) மீண்டும் பதவி ஏற்க முடியாது.

காலியான பதவிகளில் புதியவர்களை அமர்த்த வேண்டுமானால் 257ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள முறைகளைக் கையாள வேண்டும். அதன்படி, புதிதாக அமர்த்தப்படுவதைப் பொதுக் கூட்டம் நடப்பதற்குப் பதினான்கு நாட்களுக்கு முன்பு நிறுவனத் திற்கு அறிக்கை தரவேண்டும். மேற்படி அறிக்கையை, அமர்த்தப் படுவதாக இருக்கும் இயக்குநர் அல்லது அவரை இயக்குநராக முன்மொழிபவர் (Proposer) தரலாம். நிறுவனம் கூட்டம் நடப்ப தற்கு ஏழு நாட்களுக்கு முன்பாக அந்த அறிக்கையை உறுப்பினர் களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

**தீர்மானம் செய்து அமர்த்தப்படல்** (Appointment by Resolution)

நிறுவனத்தின் இயக்குநர்கள் ஒவ்வொருவரையும், பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்க வேண்டும். இயக்குநர்களைக் கூட்டமாக ஓட்டு முறையில் தேர்ந் தெடுக்க முடியாது. ஒவ்வொருவராகத்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒரே தீர்மானத்தால், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், அது செல் லாததாகும். ஆனால், கூட்டம் ஒருமனதாகத் தீர்மானம் செய்வ தாயின், ஒரே தீர்மானத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இயக்குநர்கள் அமர்த்தப்படலாம். புதிதாக முதல் தடவையாக அமர்த்தப் பட்டவர் ஒரு மாதத்திற்குள் இயக்குநராக இருப்பதற்குத் தன் இசைவை எழுத்து மூலம் பதிவாளரிடம் தரவேண்டும்.

**தனிமுறைத் தீர்மானம் செய்து அமர்த்தப்படுதல்** (Appointment by Special Resolution)

ஒரு சிலரை இயக்குநர்களாக அமர்த்த வேண்டுமென்ருல், நிறுவனத்தின் தனிமுறைத் தீர்மானம் தேவைப்படுகிறது. நிறுவனத்தின் மேலாண்மை முகவருக்கு (Managing Agent) நிறுவனத்திற்கு இயக்குநர்களை அமர்த்தும் அதிகாரம் இருப்பின் அவர்கள் கீழ்க்குறிப்பிட்டவர்களை நிறுவனத்தின் தனிமுறைத் தீர்மானமின்றி அமர்த்த முடியாது. அவர்கள் விவரம் பின்வருமாறு:

(1) நிறுவனத்தின் அதிகாரி, பணியாளர், ஆதாயம் பெறும் பதவி பெற்றிருப்பவர்.

(2) வேறெரு நிறுவனம், ஆதாயம் பெறும் பதவி நிறுவனத்தில் பெற்றிருந்தால், அந்த நிறுவனத்தின் கூட்டாளி அல்லது பணியாளர்.

(3) ஒரு தனியார் நிறுவனம், ஆதாயம் அடையும் பதவி நிறுவனத்தில் பெற்றிருந்தால், அதன் உறுப்பினர், அதிகாரி அல்லது பணியாளர்.

(4) பொது நிறுவனம், ஆதாயம் அடையும் பதவி நிறுவனத்தில் பெற்றிருந்தால், அதன் அதிகாரி, பணியாளர்.

(5) மேலாண்மை முகவர் பெறும் ஊதியத்தில் பங்கு பெறும் உரிமை உடையவர்.

(6) மேலாண்மை முகவருடன் கூட்டுச்சேர்ந்தவர் (Associate) அல்லது அவர் அதிகாரி அல்லது பணியாளர்.

(7) மேலாண்மை முகவரால் நடத்தப்படும் நிறுவனங்களின் அல்லது அவைகளைச் சார்ந்த நிறுவனங்களில் உள்ள அதிகாரி, அல்லது பணியாளர்.

**ஓட்டுப்போடும் முறை** — (System of Voting)

பொதுவாக ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள், சாதாரணமாகப் பெரும்பான்மையான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் (By simple majority). இம் முறையில் ஒரு ஓட்டு அதிகமாகப் பெற்ருலும் தேர்ந்தெடுக்கப் படலாம். இதனுல் கணிசமான சிறுபான்மையினருக்கு இயக்குநரை அமர்த்தும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. இக்குறையை நீக்க, நிறுவனச் சட்டத்தில் 265 —வது பிரிவில், கூட்டு முறையில் ஓட்டுப்போட்டு இயக்குநர்களைத்

தேர்ந்தெடுக்கவும் (Proportional Representation) நிறுவனங்கள் செயல்முறை விதிகளை அமைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இம் முறையில் சிறுபான்மையினருக்கும் இயக்குநர்களை அமர்த்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

**தற்செயலாகக் காலியாகும் பதவிகள்** (Casual Vacancies)

பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகத் தற்செயலாகக் காலியாகும் பதவிகள் செயல்முறை விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி நிரப்பப்பட வேண்டும். செயல்முறை விதிகளில் மேற்படி விவரங்கள் இல்லாவிடில், இயக்குநர் குழு, அப்பதவிகளை நிரப்பலாம். அவ்வாறு பதவி ஏற்றவர் அந்தப் பதவியிலிருந்தவர் பதவி காலம் முடியும் வரையில் அப் பதவியில் இருக்கலாம்.

**கூட்டு இயக்குநர்கள்** (Additional Directors)

ஒரு நிறுவனத்தின் செயல் முறை விதிகள் அனுமதித்தால், இயக்குநர்குழு கூட்டு இயக்குநர்களை அமர்த்தலாம். ஆனால், அவ்வாறு அமர்த்தப்படுவதால் இயக்குநர்களின் எண்ணிக்கை செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உச்சவரம்பை மீறக் கூடாது. இவ்வாறு அமர்த்தப்பட்ட கூட்டு இயக்குநர்கள் நிறுவனத்தின் அடுத்தப் பொதுகூட்டம் வரையில் பதவி வகிப்பார்கள்.

தற்செயலாகக் காலியான பதவிகளை இயக்குநர் குழு நிரப்பாவிட்டால், பொதுக்கூட்டத்தில் அப் பதவிகள் நிரப்பப்படலாம். விஸ்வநாதன் *v*. டிபின்ஸ் B. A. அண்டு பிரைவேட் லிமிடெட் [Viswanathan *v*. Tiffins B A. and P. Ltd., A.I.R. (1953) Mad. 520] என்ற இவ்வழக்கில் செயல் முறை விதிகள் இயக்குநர் குழுவுக்குத் தற்செயலாகக் காலியான பதவிகளை நிரப்புவதற்கு அதிகாரம் வழங்கியது. அது அவ்வாறு செய்யுமுன் அப் பதவிகள் பொதுக் கூட்டங்களில் நிரப்பப்பட்டன. அது முறையல்லவென்று முறையிட்டுப் போடப்பட்ட வழக்கில், அது முற்றிலும் முறையானதென முடிவு செய்யப்பட்டது. ஆனால், ராம்கிஸன்தாஸ் *v*. சத்யாசரண் [Ramkisandas *v*. Satyacharan, A.I.R. (1950) (P.C.) 81] என்ற வழக்கில் செயல்முறை விதிகள் மிகத் தெளிவாகத் தற்செயலாகக் காலியான பதவிகள் இயக்குநர் குழுவினால்தான் நிரப்பப்படவேண்டும் என்று குறிப்பிட்டால் அதை மீறி, அப் பதவிகளைப் பொதுக்கூட்டங்களில் நிரப்ப முடியாது என்று முடிவு செய்யப்பட்டது.

**மத்திய அரசால் இயக்குநர்கள் அமர்த்தப்படல்**

408ஆவது பிரிவின்படி, சிறுபான்மையினர் ஒடுக்கப்படுவதையும், தவறான மேலாண்மையையும் (Mis-management) தடுக்கும் பொருட்டு, ஒரு நிறுவனத்திற்கு இரண்டு இயக்குநர்களுக்கு மேற்படாமல் அமர்த்தலாம்.

**இயக்குநருக்குரிய தகுதிகள்** (Qualifications of Directors)

நிறுவனத்தின் செயல் முறை விதிகள் இயக்குநராய் இருப்பதற்கு ஏற்றுக் கொள்ள வேண்டிய குறைந்த அளவுப் பங்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றது. அதன்படி பங்குகளை ஏற்றுக்கொள்பவர் தான் இயக்குநர் ஆகத் தகுதியுள்ளவர். மேற்படித் தகுதியை இயக்குநராக அமர்த்தப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் பெற வேண்டும். இப் பங்குகள் தகுதிக்குரிய பங்குகள் (Qualifying shares) என்று குறிப்பிடப்படுகிறது. இந்தத் தகுதிக்குரிய பங்குகளின் மதிப்பு ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படக் கூடாது. மேற்படி பங்குகளுக்குப் பதிலாகப் பங்குப் பற்றுணைகள் (Share Warrants) பெற்றிருந்தால் போதாது. இயக்குநராக அமர்த்தப்பட்டவர் தகுதிக்குரிய பங்குகளை இரண்டு மாதங்களுக்குள் பெறாவிட்டால், அவர் தன் பதவியை இழப்பதோடு, அவர் அந்தப் பதவியில் நீடித்தால் தண்டனைக்குள்ளாவார். மேலும் தகுதிக்குரிய பங்குகள் முழுவதையும் இயக்குநராக இருப்பவர் தம் பெயரிலேயே பெற வேண்டும்.

**இயக்குநருக்குரிய தகுதியில்லாமை** (Disqualification for a Director)

274ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி கீழே குறிப்பிடப்பட்டவர்கள் ஒரு நிறுவனத்தின் இயக்குநராக இருக்கத் தகுதியற்றவர்கள் :

(1) நீதிமன்றத்தால் சான்றிடப்பட்ட புத்தித் தெளிவு இல்லாதவர்கள் (Insane persons).

(2) விடுதலை பெறாத நொடிப்பு நிலையினர் (Undischarged insolvent).

(3) நொடிப்பு நிலையராக முடிவு செய்யப்படும்படி மனுச் செய்தவர்.

(4) ஒழுக்கம் தவறிய குற்றத்திற்காக ஆறு மாதத்திற்குக் குறையாமல் சிறைவாசம் அனுபவித்தவர்.

(5) ஆறு மாதங்களாகப் பங்குக் கோரிக்கைத் தொகைகளைச் செலுத்தாதவர்.

(6) 203ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி மோசடி செய்து தகுதியிழந்தவர் (Fraudulent person).

இவைகளைத் தவிர இருபது நிறுவனங்களில் இயக்குநராய் இருப்பவர், அதற்கு மேலும் இயக்குநராகத் தகுதியற்றவர்.

**இயக்குநர்கள் பதவி விலகும் வகைகள்** (Vacation of office of Directors)

(1) இயக்குநராக இருப்பதற்குரிய தகுதிகளை இழந்தவர் அல்லது தகுதியற்றவர்.

(2) இயக்குநர் குழுவின் அனுமதியின்றி, இயக்குநர் குழுவின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாக வராவிட்டாலும், அல்லது மூன்று மாதங்களில் நடைபெற்ற எல்லாக் கூட்டங்களுக்கும் போகாவிட்டாலும், பதவியை இழக்கிறார்.

(3) 295ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு மாருக, நிறுவனத்திடம் கடன் பெறுபவர், பதவி விலகுவார்.

(4) 299ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு மாருக, நிறுவனத்துடன் உள்ள தன் சொந்த நலனைத் தெரிவிக்காமல் ஒப்பந்தம் செய்து கொள்பவர் பதவியை இழப்பார்.

(5) இயக்குநராக அமர்த்தப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் தகுதிக்குரிய பங்குகளைப் பெருதவர் பதவி இழப்பார்.

(6) 203ஆவது பிரிவின்படி நீதிமன்றத்தின் ஆணைப்படி தகுதி இழப்பவர், பதவி இழப்பார்.

(7) 284ஆவது பிரிவின்படி பதவியிலிருந்து விலக்கப்படுபவர்.

(8) பதவியின் காரணமாக இயக்குநர் பதவி பெற்றவர், அப் பதவி இழந்தால் இயக்குநர் பதவியும் இழப்பார்.

(9) மேலாண்மை முகவரால் இயக்குநராக அமர்த்தப்பட்டவர், மேலாண்மை முகவர் பதவி முடிந்தால், பதவி இழப்பார்.

**இயக்குநர்களை விலக்கும் முறைகள்** (Removal of Directors)

(1) **பங்குநர்களால் விலக்கப்படுதல் :** 284ஆவது பிரிவின்படி நிறுவனம் பொதுக்கூட்டத்தில் ஒரு பொதுத் தீர்மானம் (Ordinary resolution) செய்து ஓர் இயக்குநரை அவரது பதவிக்காலம் முடிவதற்கு முன்பாக விலக்கலாம். ஆனால், இவ்வாறு விலக்குவதற்குச் சில விலக்குகள் சட்டத்திலே தரப்பட்டுள்ளன. அவை யாவன : (1) மத்திய அரசினரால் 408ஆவது பிரிவின்படி அமர்த்

தப்பட்ட இயக்குநர்கள், (2) தனியார் நிறுவனத்தில் ஆயுள் உள்ளவரை பதவி வகிக்கும் உரிமை உடையவர். (3) இயக்குநர் களில் மூன்றில் இரண்டு பங்குக்கூட்டு முறையில் தேர்ந்தெடுக்கும் நிறுவனம் (Company adopting system of proportional representation).

ஓர் இயக்குநர் விலக்கப்படுவதைப்பற்றித் தனி முறை அறிக்கை (Special Notice) தரப்பட வேண்டும். அதாவது விலக்கப்போகும் தீர்மானத்தை முன் கூட்டியே 14 நாட்களுக்கு முன்பாக நிறு வனத்திற்கு அறிக்கை செய்யவேண்டும். நிறுவனமும் மேற்படி அறிக்கையை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். விலக்கப் போகும் தீர்மானம் நிறுவனம் பெற்றவுடன். உடனே அதன் நகலை இயக்குநருக்கு அனுப்பிவைக்க வேண்டும். விலக்கப்படப் போகும் இயக்குநருக்குத் தீர்மானத்தை எதிர்த்து மறுப்புத் தெரி விக்க உரிமை உண்டு. அவர் தன் முறையீட்டை உறுப்பினர் களுக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொண்டால், நிறுவனம் அவ் விதமே செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதற்குப் போதிய நேரமில்லா விட்டால், பொதுக் கூட்டத்தில் அந்த முறை யீட்டைப் படிக்கலாம்.

ஓர் இயக்குநர் விலக்கப்படுவதால் உண்டாகும் காலி இடத்தை உடனே அதே திட்டத்தில் நிரப்பி விடலாம். ஆனல், அவ்வாறு செய்வதற்குரிய தீர்மானத்திற்குத் தனி முறை அறிக்கை (Special Notice) தரவேண்டும். அவ்வாறு காலியான இடத்தில் அமர்த்தப் பட்டவர், பதவியிலிருந்து விலக்கப்பட்டவர் எவ்வளவு காலம் அந்தப் பதவி வகித்திருக்க முடியுமா அவ்வளவு காலம் அந்தப் பதவியை வகிப்பார். விலக்கப்பட்டதால் காலியான இடம் பொதுக் கூட்டத்தில் நிரப்பப்படாவிட்டால், தற்செயலாக காலி யான பதவிபோல, அந்த இடத்தை இயக்குநர்குழு, நிரப்பி விட லாம் விலக்கப்பட்ட இயக்குநர் அதனுல் பதவி பறிபோன தற்காகத் தனக்குரிய இழப்பீடு பெறும் உரிமையை, இழக்க மாட்டார்.

**(2) மத்திய அரசினரால் விளக்கப்படுதல் :** மத்திய அரசினர் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையின் (Recommendation)படி ஓர் இயக்குநரையோ அல்லது நடத்துநர்களில் எவரேனும் ஒரு வரையோ (Managerial persons) விலக்கலாம். அதாவது, நடத்துநர்களில் எவரேனும் மோசடி, குற்றம், அடிக்கடி கவனமின்மை, நம்பிக்கைத் துரோகம் முதலானவை செய்பவ ராயினும், நிறுவனம் நல்ல வியாபார முறைகளில் நடத்தப் படாவிட்டாலும், அல்லது நிறுவனத்தின் வியாபாரத்தைக்

கெடுக்கும் வகையில் நடத்தப்பட்டாலும், அல்லது நிறுவனத்தின் கடன்காரர்களேயும், உறுப்பினர்களேயும் மோசடி செய்யும் முறையிலும், நாட்டின் பொதுநலனுக்கு முரணகவும் நிறுவனம் நடத்தப்பட்டாலும், மத்திய அரசு நீதிமன்றத்தின் விசாரணக்கு அனுப்பலாம். விசாரணயின் இடையே, நீதிமன்றம், விசாரிக்கப்படுபவர் அதிகாரங்கள் பயன்படுத்தாதவாறு தடை செய்யலாம். விசாரணயின் முடிவை, உயர்நீதிமன்றம், மத்திய அரசுக்கு அறிவிக்க வேண்டும். அதன் பேரில் மத்தியஅரசு அத்தகையவரைப் பதவியிலிருந்து விலக்கலாம். ஆனல், விலக்குவதற்கு முன்பு, அவர் சமாதானம் தெரிவிப்பதற்குத், தக்க வாய்ப்புத் தர வேண்டும். அவ்வாறு விலக்கப்பட்டவர் அதற்குப் பிறகு ஐந்து வருடங்களுக்கு மேலாண்மை பதவிகளே வகிக்கத் தகுதியற்றவர்களாகின்றனர். மேலும், பதவி இழந்ததற்கு, இழப்பு ஈடு பெறத் தகுதியற்றவராகிருர்.

(3) **நீதிமன்றத்தால் விலக்கப்படுதல்:** சிறுபான்மையோர் ஒடுக்கப்படுவதையும், முறைகேடான மேலாண்மையையும் தடுப்பதற்குச் செய்யப்பட்ட மனுவின் பேரில், தேவையெனத் தோன்றிஞல், நீதிமன்றம், இயக்குநரையோ அல்லது தவறிழைக்கும் நடத்துநர்களில் எவரையும் பதவியிலிருந்து விலக்கலாம். அவ்வாறு விலக்கப்பட்டவர் அந்த நீதிமன்றத்தின் அனுமதியின்றி வேறெந்த நிறுவனத்திலும் அதிகாரியாக ஐந்து ஆண்டுகளுக்குப் பணியாற்றத் தகுதியற்றவராகிருர். மேலும், அவர் தன் பதவி இழந்ததற்காக இழப்பு ஈடுபெறத் தகுதியற்றவராகிருர்.

**இயக்குநர்களின் அதிகாரங்கள்**

291ஆவது பிரிவில் கூறியுள்ளபடி, நிறுவனத்திற்குரிய எல்லா அதிகாரங்களுக்கும் உரியவர்கள் நிறுவனத்தின் இயக்குநர்கள். அதாவது, சட்டப்படி நிறுவனம் செய்யக்கூடிய எல்லாச் செயல்களேயும், நிறுவனம் கையாளக் கூடிய எல்லா அதிகாரங்களேயும் படைத்தவர்களாவர். ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் அதிகாரங்களுக்கு இரண்டு வரம்புகள் உள்ளன. முதலாவது, நிறுவனம் பொதுக் கூட்டத்தில் செய்ய வேண்டியதை, இயக்குநர்கள் செய்ய முடியாது. இரண்டாவது, அதிகாரங்களேச் சட்டத்திற்கும், அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதிகள் முதலானவைகளுக்குட்பட்டுக் கையாள வேண்டும்.

இயக்குநர்களுக்கும் பங்குநர்களுக்கும் உள்ள தொடர்பு உயர்ந்தவர் தாழ்ந்தவரென்பதல்ல. இயக்குநர்கள், பங்குநர்களின் முகவர்கள் அல்ல, அவரவர் வரம்பிற்குட்பட்டுச் செயலாற்ற முழு உரிமையுடையவர்கள். செயல் முறை விதி

களால், இயக்குநர் குழுவுக்கு, வழங்கப்பட்ட அதிகாரத்தில் பங்குநர்கள் பொதுவாகத் தலையிட முடியாது. அதுபோலவே, பங்குநர்களுக்குள்ள அதிகாரத்தை இயக்குநர்கள் கையாள முடியாது. ஆனால், இயக்குநர்கள் முறை தவறி நடந்தால், பங்குநர்கள் அவர்கள் அதிகாரத்தில் தலையிடுவதற்கு உரிமையுள்ளவராகின்றனர். ஆகையால், கீழ்க்கண்ட காரணங்களுக்குப் பங்குநர்கள் தலையிடுவதற்கு உரிமை உடையவர்கள் :

(1) இயக்குநர்கள் தீய எண்ணத்துடன் நடந்து கொள்வது (Mala fide)

(2) இயக்குநர் குழு திறமையற்றிருப்பது.

(3) இயக்குநர்களுக்குள் கருத்து வேறுபாட்டால் முட்டு நிலை ஏற்படுவது (Deadlock).

(4) மிச்ச அதிகாரங்களைக் (Residuary powers) கையாளுதல்.

இயக்குநர்கள் அதிகாரங்களைக் கையாளும் முறைகளை, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. 292ஆவது பிரிவின் கீழ்க்கண்ட அதிகாரங்களை இயக்குநர்கள் தங்கள் கூட்டங்களில் முறையே தீர்மானம் செய்து கையாளவேண்டும். அவைகள் பின்வருமாறு : (1) பங்குத் தொகைகளைக் கோருவது. (2) கடனீட்டுப் பத்திரங்கள் வழங்குவது. (3) கடன் வாங்குவது (4) நிறுவனத்தின் பணங்களை முதலீடு செய்வது (Investments). (5) கடன் தருவது.

மேற்கூறியவைகளில் கடன் வாங்குவது, கடன் தருவது, நிறுவனத்தின் பணங்களை முதலீடு செய்வது முதலான அதிகாரங்களை இதர இயக்குநர்களுக்கு முறைப்படி தீர்மானம் செய்து அளிப்பீடு செய்யலாம் (delegate the powers).

**அதிகாரங்களுக்குக் கட்டுப்பாடுகள்** (Restriction on Powers)

293ஆவது பிரிவின்படி, இயக்குநர்கள் நிறுவனத்தின் இசைவைப் பொதுக்கூட்டங்களில் பெற்ற பின்னரே கீழ்க்காணும் அதிகாரங்களைக் கையாளலாம். அதாவது (1) நிறுவனம் மேற்கொண்ட தொழிலை விற்பது அல்லது வாடகைக்கு விடுவது. (2) இயக்குநரால் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய கடனுக்குத் தவணை தருவது. (3) பலவந்தமாக எடுத்துக்கொள்ளப்பட்ட தொழில்களுக்குப் பெற்ற இழப்பு ஈட்டை, நம்பகப் பிணையங்கள் (Trust Securities) அல்லாதவைகளில் முதலீடு செய்வது. (4) செலுத்தப்பட்ட பங்குத் தொகைக்கும் மேலாகக் கடன் வாங்குவது. ஆனால், வங்கியிடம் (Bank) தற்காலிகமாகப் பெறும் கடன்கள் இதன்பாற்படாது. (5) தரும நீதிகளுக்கு

(Charitable Funds) ஒரே வருடத்தில் 25 ஆயிரம் ரூபாய்களுக்கு மேலாக தானம் செய்வது, அல்லது ஆதாயத்தில் 5 சதவீதத்திற்கு மேலாக தானம் செய்வது.

இயக்குநர்கள் மேற்கூறியவைகளைப் பொதுக்கூட்டத்தில் இசைவு பெறாமல் செய்தாலும், அவைகளை முழு நம்பிக்கையுடனும் நல்லெண்ணத்துடனும் கவனத்துடனும் ஜாக்கிரதையுடனும் வாங்கியவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

**இயக்குநர்கள் சொந்த நலன் கொண்ட காரியங்களில் இயக்குநர் குழுவின் இசைவு பெறவேண்டும்**

297ஆவது பிரிவின்படி, நிறுவனம் செய்யும் ஒப்பந்தங்களிலும், சொத்துகள் கொள்வினை கொடுப்பினை செய்வதிலும், இயக்குநர்கள் தனிப்பட்ட முறையில் அவைகளில் சொந்த நலன் கொண்டிருந்தால், அவைகளை, இயக்குநர் குழுவிற்கு, நன்றாக முழுவதும் அறிவித்து இசைவு பெறவேண்டும். அவ்வாறு இசைவு பெறுவிட்டாலும், அல்லது இசைவு மறுக்கப்பட்டாலும், மேற்படி ஒப்பந்தங்கள், இயக்குநர்குழுவின், இச்சைப்படி தவிர்தகு நிலையதாகும் (Voidable at the option of the Board).

**அரசியல் கட்சிகளுக்குத் தானம் தருவது தடைசெய்யப்பட்டுள்ளது** (Prohibition of donations to Political Parties)

நிறுவனச் சட்டத்திற்கு 1969ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தப்படி, நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்குத் தானம் தருவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**இயக்குநரின் கடமைகள்**

(1) முதற்கண் குறிப்பிடத்தக்கது, இயக்குநர்கள் நிறுவனத்திற்கு நம்பகர் (Trustee) நிலையில் உள்ளனர். நிறுவனத்தின் நன்மைக்காகவே முழு மூச்சுடன் செயலாற்ற வேண்டும். நம்பிக்கைக்குகந்த முறையில் நடக்கவேண்டும். அதை மீறி நம்பிக்கைத் துரோகம் செய்து ஆதாயம் அடைந்தால் அவ்வாதாயத்தை நிறுவனம் அவர்களிடமிருந்து மீளப் பெறலாம். இதை குக் *v.* டீக்ஸ் [Cook *v.* Deeks (1916) A.C. 554] என்ற வழக்கு விளக்குகிறது. இவ்வழக்கில், நிறுவனம் ரயில்வே காண்ட்டிராக்ட் வேலை செய்துகொண்டிருந்தது. அதன் இயக்குநர்கள் சில ஒப்பந்தங்களைத் தங்கள் பெயரில் செய்துகொண்டு ஆதாயம் அடைந்தனர். அந்த ஆதாயத்தை அவர்கள் அந்த நிறுவனத்துக்குத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்டது. ஆகவே, நிறுவனத்தின் பெயரால் இவர்கள் அடையும் ஆதாயம் முழுவதும் நிறுவனத்தைச் சார்ந்ததாகும்.

(2) இயக்குநர்கள் கவனத்துடனும், ஜாக்கிரதையாகவும், திறமையுடனும் செயலாற்ற வேண்டும். அவ்வாறின்றி அவர்கள் அஜாக்கிரதையாலும் அசட்டையாலும் நிறுவனத்திற்குச் சேதம் விளைவித்தால் அதற்கு அவர்கள் முழுப் பொறுப்பாகிறார்கள். இந்தப் பொறுப்பைத் தவிர்ப்பதற்குச் செய்யப்படும் உடன்படிக்கைகள் முற்றிலும் செல்லாது என்று சொல்கின்றது 201ஆம் பிரிவு. தங்கள் சொந்த விவகாரங்களில் எவ்வளவு கவனம், ஜாக்கிரதை, திறமை முதலியவை மேற்கொள்வார்களோ அவ்வளவு மேற்கொள்ள வேண்டும் நிறுவனத்தின் காரியங்களிலும்.

(3) இயக்குநர் குழுவின் கூட்டங்களுக்குத் தவறாமல் வர வேண்டும். மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாக வரத் தவறினால் பதவி பறிபோகும். மேலும், கூட்டங்களுக்கு வராமலேயே இருந்தால், அதனால் பிறர் செய்யும் மோசடிகளுக்கும் பொறுப்பாக வேண்டியிருக்கும்.

(4) அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது (Delegatus non-potest delegare). ஆனால், இதற்கும் சில விலக்குகள் உள்ளன. ஆகவே, தொழில் முறைப்படி அவசியப்பட்டால் அதிகாரத்தை அளிப்படைவு செய்யலாம். மேலும், எழுத்து வேலையைச் சேர்ந்ததாயின் (Ministerial works), அதை அளிப்படைவு செய்யலாம்.

(5) நிறுவனத்துடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களில், அல்லது நிறுவனம் கொள்வினை, கொடுப்பினை செய்யும் சொத்துகளில், இயக்குநர்கள் தனி முறையில தமக்குள்ள சொந்த நலன் முழுவதையும், நன்றாக, இயக்குநர் குழுவுக்கு, அறிவித்து அவைகளுக்கு ஒப்புதல் பெறவேண்டும். இல்லாவிடில் செல்லாது.

**இயக்குநர் குழுவின் கூட்டங்கள்**

285ஆவது பிரிவின்படி ஒவ்வொரு நிறுவனமும் குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு கூட்டமும் ஒரு வருடத்தில் குறைந்தது நான்கு கூட்டங்களும் கூட்ட வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

**கூட்டத்திற்கு அறிக்கை**

இயக்குநர்குழு கூட்டப்படுவதை ஒவ்வொரு இயக்குநருக்கும் அறிக்கை செய்ய வேண்டும். அறிக்கை அனுப்பப்பட வேண்டிய முறைகளைப் பற்றிச் சட்டத்தில் எவ்விதக் குறிப்பும் இல்லை. இயக்குநர் குழுவின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் கூட்டப்படும் என்று இயக்குநர்களுக்கு அறிவித்தால் அதுவே பின்னர் நடக்கும் கூட்டங்களுக்குப் போதுமான அறிக்கை

யாகும். அறிக்கை எவ்வளவு நாட்களுக்கு முன்பு செய்ய வேண்டும் என்றும் எவ்விதக் குறிப்பும் சட்டத்தில் இல்லை. அறிக்கையில் நிகழ்ச்சிநிரல் (Agenda) குறிப்பிட வேண்டியதில்லை. மேலும், அறிக்கையில் குறிப்பிட்டவைகளைத் தான் ஆலோசிக்க வேண்டுமென்பதில்லை. அறிக்கையில் இல்லாதவைகளையும் ஆலோசித்து முடிவு செய்யலாம்.

அறிக்கை கூட்டம் நடப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு கொடுத்தாலும் போதுமானது. தற்செயலாக நடத்தப்பட்ட கூட்டமும் முறையானதாகும். இதை, ஸ்மித் v. பரிங்கா மைன்ஸ் லிமிடெட் [Smith v. Paringa Mines Ltd. (1906) 2 ch. 193] என்ற வழக்குத் தெளிவாக்குகின்றது. இவ்வழக்கில், நிறுவனத்திற்கு, 'A', 'B' என்ற இரு இயக்குநர்கள் இருந்தனர். 'B' என்பவர் தலைவர். காலி இடத்தை நிரப்புவதற்கு நிர்வாகக் குழு கூட்டப் பட்டது. ஆனால், கூட்டத்திற்கு 'A' என்பவர் வரவில்லை. 'B' என்பவர், 'A'யின் அலுவலகத்துக்குச் சென்றார். அங்கு அவரை வழியில் கண்டார். அங்கே 'B' என்பவர், F என்பவரை முன் மொழியச் செய்தார் (Proposed) ஆனால், 'A' என்பவர் அதை எதிர்த்தார். இருந்தாலும், 'B' தன் அறுதி வாக்கைப் பயன்படுத்தி (Casting vote), 'F' தேர்ந்தெடுக்கப்பட்டதாக முடிவு செய்தார்.

## இயக்குநர் குழுக் கூட்டத்திற்குத் தேவையான குறைவெண் வரம்பு (Quorum for the meeting of the Board of Directors)

இயக்குநர் குழுக் கூட்டத்திற்குத் தேவையான குறைவெண் வரம்பு, மொத்த இயக்குநர்களில் மூன்றில் ஒரு பங்கு அல்லது இரண்டு இயக்குநர்கள் இவைகளில் எது அதிகமோ அதுவேயாகும். மூன்றில் ஒரு பகுதி கணிக்கும்போது மிச்சம் வீழ்ந்தால் அதை ஒன்றாகக் கொள்ளவேண்டும். இயக்குநர்கள் தம் சொந்த நலனால் கூட்டத்தில் அமரும் தகுதியிழந்தால் அப்போது குறைந்தது நலன் கொள்ளாத இரண்டு இயக்குநர்கள் இருந்தால் போதும். குறை வெண் வரம்பு இல்லாத காரணத்தால் கூட்டம் நடத்த முடியா விடில் அந்தக் கூட்டம் அடுத்த வாரத்துக்கு அதே கிழமைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

## கூட்டம் நடத்தப்படும் முறைகள்

கூட்டம் நடத்தப்படும் முறைகளும் விதிகளும் செயல்முறை விதிகளில் காணலாம். கூட்டத்தில் ஆலோசிக்கப் படுபவைகள் அதிக ஓட்டுப்பெறுவதே முடிவானதாகும். ஓட்டுகள் சமமாக இருந்தால், தலைவரின் அறுதிவாக்கால் (Casting vote) முடிவு

செய்யப்படுகிறது. தீர்மானங்கள் (Resolutions) கூட்டத்திலும் செய்யலாம் அல்லது அதன் நகலை ஒவ்வொரு இயக்குநருக்கும் அனுப்பி அவரவர் இசைவோ மறுப்போ பெறலாம்.

**கூட்டங்களின் நிகழ்ச்சிப் பதிவுகள்** (Minutes of the Meetings)

கூட்டங்களின் நடவடிக்கைகளும், அவைகளில் ஆலோசித்துச் செய்த முடிவுகளும் முறையாகக் குறிப்பிட்ட பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுத் தலைவரால் கையெழுத்திடப் படவேண்டும். இப் பதிவேடு, நிகழ்ச்சிப் பதிவேடு (Minutes Book) என்று குறிப்பிடப் படுகிறது. இதில் ஒவ்வொரு கூட்டமும் நடந்த தேதி, நேரம், கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் பெயர்கள், ஆலோசிக்கப்பட்ட பொருள்களும் அவைகளின் முடிவுகளும் விவரமாகப் குறிப்பிடப் படுகின்றன. நிறுவனத்தின் பெயரால் செய்யப்பட்டவை யாவும் முறையாகச் செய்யப்பட்டுள்ளன என்பதற்கு இப் பதிவேடுதான் முடிவான சான்றாகும்.

**இயக்குநர்கள் பெறும் ஊதியம்** (Remuneration of Directors)

இயக்குநர்கள் அளவுக்கு அதிகமான ஆதாயம் அடையா மலும், உழைப்புக்கு உகந்த ஊதியம் பெறுவதற்கும் நிறுவனச் சட்டம் வழி வகுத்துள்ளது. இயக்குநர்களுக்குரிய ஊதியம் நிறு வனத்தின் செயல் முறை விதிகளில் குறிப்பிடப்படுகின்றது அல்லது நிறுவனம் பொதுக் கூட்டத்தில் பொதுத் தீர்மானம் அல்லது தனி முறைத் தீர்மானத்தால் முடிவு செய்யலாம். இயக்குநர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், 198, 309ஆவது பிரிவுகளுக்குட்பட்டு இருக்க வேண்டும்.

198ஆவது பிரிவின்படி, இயக்குநர்கள், மேலாண்மை இயக்குநர், மேலாண்மை முகவர், செயலாளரும் பொருளாளரு மானவர், மேலாளர் முதலானோருக்குத் தரக்கூடிய மொத்த ஊதியம், நிறுவனத்தின் நிகர ஆதாயத்தில் (Net project), 11 சத வீதத்துக்கு மேற்படக் கூடாது என்று குறிப்பிடுகிறது. நிறுவனம் ஆதாயமே அடையாவிட்டாலும் இயக்குநர்கள் ஊதியம் பெற வழி செய்துள்ளது சட்டம். அந்தச் சமயத்தில், நிறுவனம் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, ஐம்பதாயிரம் ரூபாய்களுக்கு மேற்படா மல் ஒரு குறைந்த தொகையை இயக்குநர்களுக்கு ஊதியமாக வழங்கலாம். மத்திய அரசு மனநிறைவு பெற்றால், இந்தத் தொகைக்கு மேலும் வழங்குவதற்கு அது அனுமதிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட ஊதியத்தின் உச்ச வரம்பு, இயக்குநர்கள் பெறும் வீடு, வைத்தியம், கல்வி, ஓய்வு முதலான எல்லா வசதி

களும் உட்பட்டதாகும். ஆனுல், அவர்கள் அடையும் அமரும் கட்டணம் (Sitting fees) அந்த வரம்புக்கு உட்பட்டதல்ல. மேற்படி வரம்புக்குட்பட்டு மேற்படி ஊதியத்தை, இயக்குநர் களுக்கு, மாதமொருமுறை அல்லது மூன்று மாதங்களுக்கொரு முறை யெனவும் வழங்கலாம். இவ் வரம்பிற்கு மேற்பட்டு ஊதியம், இயக்குநர்கள் பெற்ருல், அதை மீண்டும் நிறுவனத் திற்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்புள்ளவரா கிருர்கள். இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத்தை, அதிகமாக்க விரும்பினுல், நிறுவனம், அதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறவேண்டும்.

**தொழில் பணிக்குப் பெறும் ஊதியம்** (Remuneration for profes soinal service)

இயக்குநர்கள் நிறுவனத்திற்கு ஆற்றிய தொழில் சம்பந்த மான பணிகளுக்குப் பெறும் ஊதியம் இந்த உச்சவரம்பிற்குட் பட்டதல்ல. அவ்வாறெனின் இயக்குநர்கள் தொழிலுக்குரிய தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**வருமான வரியில்லா ஊதியத்திற்குத் தடை** (Prohibition of tax free payment)

நிறுவனச் சட்டத்தில் 200ஆவது பிரிவால் நிறுவனங்கள் வருமானவரியில்லா ஊதியங்கள் வழங்குவது தடை செய்யப் பட்டுள்ளது.

**பதவி இழப்பதற்கு இழப்பீடு** (Compensation for loss of office).

ஒரு நிறுவனம் மேலாண்மை இயக்குநர்களுக்கும், மற்றும் முழு நேர இயக்குநர்களுக்கும் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கும் அல்லது பதவியிலிருந்து விலகி ஓய்வு பெறுவதற்கும் இழப்பீடு தரலாம். ஆனுல், கீழ்க்கண்டவர்களுக்கு, மேற்படி இழப்பீடு வழங்கக்கூடாது.

(1) நிறுவனம் மற்ருெரு நிறுவனத்துடன் இணைவதற்காக அல்லது நிறுவனம் மறுநிர்மாணத்திற்காக (Re-construction) பதவியிலிருந்து விலகி, இணைந்த அல்லது நிர்மாணிக்கப்பட்ட நிறுவனத்தில் பதவி பெறுபவர்.

(2) பதவியிலிருந்து தானே விலகியவர்.

(3) 203, 283ஆவது பிரிவுகளின்படி பதவியிலிருந்து விலக்கப்பட்டவர்.

(4) கவனமின்மையால் நிறுவனம் கலைக்கப்படுவதற்குக் காரணமாய் இருந்தவர்.

(5) மோசடி, நம்பிக்கைத் துரோகம், முறைகேடான மேலாண்மை முதலானவைகளுக்குக் காரணமாய் இருந்தவர்.

(6) பதவி விலகுவதற்குத் தானே காரணமாய் இருப்பவர்.

வழங்கப்படும் இழப்பு ஈடு, அவர் மீதிருக்கும் பதவிக்கால ஊதியம் அல்லது அவருக்குரிய மூன்று வருட ஊதியம் இவை இரண்டில் எது குறைவோ அந்த அளவேயாகும்.

# 12. நடத்துநர்கள்

## (Managerial Personnels)

**மேலாண்மை முகவர்** (Managing Agent)

ஒரு நிறுவனத்தின் மேலாண்மை முகவர் என்பவர் அந்த நிறுவனத்தின் முழு விவகாரங்களையும் அல்லது ஏறத்தாழ எல்லா விவகாரங்களையும் மேலாண்மை செய்யும் உரிமை உள்ளவர். ஒரு நிறுவனம் அல்லது ஒரு கூட்டாண்மை நிறுமம் (Firm), அல்லது ஒரு தனி நபர், ஒரு நிறுவனத்தின் மேலாண்மை முகவ ராக அமர்த்தப்படலாம். இந்த உரிமைகளை ஒருவர் அமைப்பு முறை ஏடு அல்லது செயல் முறை விதிகளின் வாயிலாகவும் அல்லது நிறுவனத்துடன் செய்யப்படும் ஒப்பந்தத்தின் வாயிலாகவும் பெற லாம். மேலும், ஒரு மேலாண்மை முகவர், செயல் முறை விதிகள் அனுமதித்தால், நிறுவனத்தின் இயக்குநர்கள், ஐவருக்கு மேற்பட்டால் இரண்டு இயக்குநர்களையும் ஐவருக்கு மேற்படா விட்டால் ஒரு இயக்குநரையும், நியமிக்கவும், அவ்வாறு நியமிக்கப் பட்டவர்களை விலக்கவும் உரிமை பெறலாம்.

நிறுவனங்கள் தோன்றிய நாள்தொட்டு இந் நாள் வரை, நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், அவைகள் தற்போது அடைந் துள்ள முதிர்ச்சிக்கும் அவர்கள் ஆற்றிய அரும்பெரும் பணிகளை நிறுவனங்களின் வரலாறு மறுக்கவும் மறக்கவும் முடியாது. ஆனால், இவர்களில் பலர் இழைத்த இன்னல்கள் நாளுக்கு நாள் பெருகி வந்தமையால் இன்று இப் பதவிக்கே இன்னல் விளைந்து விட்டது. 1956ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நிறுவனச் சட்டம் குறிப்பிட்ட சில தொழில்களைத் தவிர, மற்றத் துறைகளில் உள்ள நிறுவனங்கள் ஒருவரையும் இப் பதவியில் அமர்த்தக்கூடாது என்று தடை விதித்தது. மேலும், இப் பதவி அனுமதிக்கப்பட்ட துறைகளிலும் அப் பதவிகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளையும் கண்காணிப்புகளையும் அச் சட்டம் ஏற்படுத்தியது. ஆனால்

அதோடு நில்லாமல், 1969ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்திற்குச் செய்த திருத்தத்தின்படி நிறுவனங்களில் இப் பதவியை அடியோடு தடை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இன்றுள்ள நிலையில் நிறுவனங்கள் எதுவும், இப் பதவியில் ஒருவரை அமர்த்த முடியாது. ஒரு காலத்தில் நிறுவனங்களின் முதுகு எலும்புகளாக விளங்கிய இவர்கள், இன்று நிறுவனங்களில் கால் எடுத்துவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் இவர்கள் பதவியில் அமரும் முறையும், விலகும் வகையும், பதவிக்கு விதிக்கப்பட்ட தடைகளும் கட்டுப்பாடுகளும், அதிகாரங்களும் கடமைகளும் அறிவது தேவையற்றதாகிறது.

**செயலாளரும் பொருளாளரும்** (Secretaries and Treasurers)

ஒரு நிறுவனத்தின் முழு விவகாரங்களையும் அல்லது ஏறத்தாழ எல்லா விவகாரங்களையும் மேலாண்மை செய்ய உரிமை பெற்ற ஒரு நிறுவனம் அல்லது ஒரு கூட்டாண்மை நிறுமம் (Firm) அந் நிறுவனத்தின் செயலாளர்களும் பொருளாளர்களும் என்று குறிப்பிடப்படுகிறது. இப் பதவிக்கு ஒரு தனிநபரை (Individual) நியமிக்க முடியாது. இதைத் தவிர இப் பதவிக்கும், மேலாண்மை முகவர் பதவிக்கும் வேறுபாடுகள் கிடையாது. ஆகையால், 1969ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்திற்குச் செய்துள்ள திருத்தத்தின்படி, நிறுவனங்கள் இப்பதவிக்கு ஒருவரையும் நியமிக்க முடியாது. ஆகையால் இப் பதவிக்குரிய உரிமைகளும், அதிகாரங்களும், கடமைகளும், பொறுப்புகளும் அறிவது தேவையற்றதாகிறது.

**மேலாண்மை இயக்குநர்** (Managing Director)

ஒரு நிறுவனத்தை நடத்துவதற்கு ஏராளமான அதிகாரங்களைத் தாராளமாக வழங்கப்பட்டுள்ள இயக்குநர், மேலாண்மை இயக்குநர் என்று குறிப்பிடப்படுகிறார். அவ்வதிகாரங்கள் அவருக்கு அமைப்பு முறை யேட்டில் அல்லது செயல் முறை விதிகளில் அல்லது நிறுவனத்தின் பொதுத் தீர்மானத்தில் அல்லது இயக்குநர் குழுவின் தீர்மானத்தில் வழங்கப்படலாம். இவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் வாங்கிக் கொள்ளப்படலாம் (revoked), அல்லது மாற்றப்படலாம், அல்லது குறைக்கப்படலாம்.

ஒரு மேலாண்மை இயக்குநரின் அதிகாரங்கள் வேண்டும் போது மாற்றப்படலாம். ஆனால், பதவியே பறிக்கப்பட்டால் அதற்கு இழப்பு ஈடு (Damages) தரவேண்டும். உதாரணமாக ஹெரால்டு ஹோல்ட்ஸ் வொர்த் அண்டு கம்பெனி v. காடீஸ்

[Harold Holdsworth and Co. v. Caddies (1955) 1 All E. R. 725], என்ற வழக்கில், மேலாண்மை இயக்குநர் நிறுவனத்தின் தொழிலையும் அதனால் கொள்ளப்பட்ட நிறுவனங்களின் (Subsidiaries) தொழிலையும் செய்வதற்கு அதிகாரங்கள் வழங்கப் பட்டார். அவர் நிறுவனத்துடன் செய்துக்கொண்ட ஒப்பந்தத் தால். பின்னர், இயக்குநர்கள் தீர்மானம் செய்து அவர் அதிகாரங் களைக் குறைத்து, ஒரே ஒரு கொள்ளப்பட்ட நிறுவனத்தின் தொழிலை நடத்தும்படி முடிவு செய்தனர். இயக்குநர்கள் அவ்வாறு முடிவு செய்தது மிகவும் முறையானது என்று முடிவு செய்தது நீதிமன்றம்.

நெல்சன்ஸ் v. ஜேம்ஸ் நெல்சன்ஸ் அண்டு சன்ஸ் லிமிடெட். [Nelson v. James Nelsons and Sons Ltd, (1914) 2 K. B. 770 C A] இவ் வழக்கில், ஒருவர் இயக்குநராக இருக்கும் வரையில் மேலாண்மை முகவராக இருக்கலாம் என்று நியமிக்கப்பட்டார் பின்னர் அவர் இயக்குநராகப் பதவியில் இருக்கும்போதே மேலாண்மை இயக்குநர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அத னால் அவருக்கு இழப்பீடு தரப்பட வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டது.

ஒரு மேலாண்மை இயக்குநரின் பதவி முடிவடையும் வகையில் செயல் முறை விதிகள் மாற்றப்பட்டால், நிறுவனம் அவருக்கு இழப்பீடு (Damages) தர வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது, சதர்ன் ஃபவுண்ட்ரிஸ் லிமிடெட், v. ஷர்லா [Southern Foundries Ltd. v. Shirlaw, (1940) AC 70] என்ற வழக்கில். ஆனால் அவரை அப் பதவியில் அமர்த்திய இயக்குநர்கள், இயக்குநர்களாயிருக்கத் தகுதியற்றவர்களானால், அவர் இழப்பீடு பெறமுடியாது. அதற்குப் பதிலாக அவரது பணிகளுக்கு நியாயமான ஊதியம் (Quantum merit) பெறுவதற்கு உரிமை உடையவர் என்று கிரேவன்-எல்லிஸ் v கேனன்ஸ் லிமிடெட் [Craven-Ellis v. Cannons Ltd, (1936) 2 KB 403 CA] என்ற வழக்கில் தெளிவாக்கப் பட்டது.

**மேலாண்மை இயக்குநரை அமர்த்துதல்**

ஒரு நிறுவனம் மேலாண்மை இயக்குநரை முதன் முதலாக அமர்த்துவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். மேற் படி ஒப்புதல் அமர்த்தப்பட்ட மூன்று மாதங்களுக்குள் பெற்றால் போதுமானது. முன்பாகவே பதவியில் இருப்பவர்களை மீண்டும் அமர்த்துவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறவேண்டும். இல்லாவிடில் அது செல்லாததாகும். மேலும் மத்திய அரசு

மேற்படி ஒப்புதலைக் குறிப்பிட்ட கட்டுத்திட்டங்களுக்குட்படுத்தியும் வழங்கலாம்.

**தகுதிகள்** (Qualifications) : நிறுவனத்தின் இயக்குநருக்குரிய தகுதிகளை அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் பெற்றிருக்கவேண்டும்.

**தகுதிக் குறைவுகள்** (Disqualifications) : கீழ்க்கண்டவர்களை மேலாண்மை இயக்குநர்களாகப் பதவியில் அமர்த்தக்கூடாது.

(a) விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையர் (undischarged insolvent) அல்லது நொடிப்பு நிலையராக எப்பொழுதேனும் முடிவு செய்யப்பட்டவர்.

(b) கடன் திருப்பித் தராமல் தள்ளி வைப்பவர் (Suspends payment) அல்லது கடனாளர்களுடன் ஒத்திசைவு செய்தவர் (Composition with creditors).

(c) ஒழுக்கம் தவறிய (Offence involving moral turpitude) குற்றவாளி எனத் தீர்ப்புக் கூறப்பட்டவர்.

மேலும், ஒரு நிறுவனத்திற்கு மேலாக மேலாண்மை இயக்குநராக இருப்பவரை அப் பதவியில் அமர்த்த முடியாது. ஒரு மேலாண்மை இயக்குநரை ஐந்து வருடங்களுக்கு மேல் அப் பதவியில் அமர்த்த முடியாது. அந்தப் பதவிக் காலம் முடிவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாக அதைப் புதுப்பிக்கக் கூடாது. அதோடு அப்பதவிக்குரிய உடன்படிக்கைகளை மத்திய அரசின் ஒப்புதல் இன்றி மாற்றக்கூடாது.

ஒரு மேலாண்மை இயக்குநருக்கு வழங்கப்படும் ஊதியம், நிறுவனத்தின் நிகர ஆதாயத்தில் (Net Profits) ஐந்து சதவீதத்திற்கு மேற்படக்கூடாது. மேலாண்மை இயக்குநர்கள் ஒருவருக்கு மேற்பட்டால், அவர்களுக்கு வழங்கப்படும் மொத்த ஆதாயம், நிறுவனத்தின் நிகர ஆதாயத்தில் 10 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது.

**மேலாளர்** (Manager)

மேலாளர் என்பவர் ஒரு நிறுவனத்தை நடத்துவதற்கு எல்லா அதிகாரங்களும் அல்லது ஏறத்தாழ எல்லா அதிகாரங்களும் படைத்தவர். ஒரு நிறுவனத்தையோ அல்லது ஒரு கூட்டாண்மை நிறுமத்தையோ இப் பதவியில் அமர்த்த முடியாது. மேலாண்மை இயக்குநர், இயக்குநர்களில் ஒருவர். ஆனால் மேலாளர் இயக்குநர் அல்லர். மேலாண்மை இயக்குநர் நிறுவனத்தின் பணியாளர் அல்லர். ஆனால் மேலாளர் நிறுவனத்தின் பணியாளர்.

மேலாளரை முதன்முதலாக அமர்த்துவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும். மேலும் ஒருவரை மேலாளராக ஐந்து வருடங்களுக்கு மேல் அமர்த்த முடியாது. மேலாளரின் ஊதியத்தை அதிகப்படுத்துவதற்கும் மத்திய அரசின் ஒப்புதல் பெறவேண்டும். இரண்டு நிறுவனங்களுக்கு மேல் ஒருவர் மேலாளராக இருக்கக் கூடாது. ஆனால், நிறுவனங்களுக்குப் பொதுவாக ஒரு மேலாளர் தேவை என்று கருதினால் மத்திய அரசு ஒருவரை இரண்டு நிறுவனங்களுக்கு மேல் மேலாளராக அனுமதிக்கலாம்.

**தகுதிக் குறைவுகள் (Disqualifications)**

கீழ்க்கண்டவர்களை மேலாளராக அமர்த்தக்கூடாது

(1) விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையினர் அல்லது நொடிப்பு நிலையராக முடிவு செய்யப்பட்டவர் (Adjudged insolvent).

(2) கடன் திருப்பிக் கொடாமல் தள்ளிப்போட்டவர் அல்லது கடனாளர்களுடன் ஒத்திசைவு செய்தவர் (Compromise with creditors).

(3) ஒழுக்கம் தவறிய குற்றம் செய்ததாகத் தீர்மானிக்கப் பட்டவர்.

**ஊதியம் (Remuneration)**

ஒரு மேலாளரின் ஊதியம் நிறுவனத்தின் நிகர ஆதாயத்தில் (Net profits), 5 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது.

**தகாதவர்கள் நிறுவனங்களின் பதவி ஏற்பதற்குத் தடை (Prevention of management by undesirable persons)**

விடுவிக்கப்படாத ஒரு நொடிப்பு நிலையர், ஒரு நிறுவனத்தின் இயக்குநராகவோ, மேலாண்மை முகவராகவோ, செயலாளர்களும் பொருளாளர்களுமாகவோ, மேலாளராகவோ, பணியாற்றினாலும் அல்லது நிறுவனத்தை உண்டாக்குவதிலும் உருவாக்குவதிலும், நிருவாகத்திலும் (Promotion formation and management) பங்கேற்றார்கள் என்றால் அவர்கள் இரண்டு வருடங்கள் வரை சிறைத்தண்டனையும் ஐயாயிரம் ரூபாய்கள்வரை தண்டனையும் விதிக்கப்படுவர்.

ஒரு நிறுவனத்தை உண்டாக்கியதிலும் உருவாக்கியதிலும், நிருவாகத்திலும், குற்றம் செய்ததாகத் தீர்மானிக்கப்பட்டவரையும், அல்லது நிறுவனம் கலைக்கப்படும்போது, குற்றங்கள் செய்தவராகக் கருதப்பட்டவரையும் அல்லது மோசடி, தீங்குகள்

முதலானவைகளைச் செய்தவர்களையும், நீதிமன்றம் அவர்கள் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத காலம்வரை நிறுவனங்களில் இயக்குநராகவும் அல்லது நிறுவனங்களை உண்டாக்குவதிலும், உருவாக்குவதிலும் நிருவாகத்திலும் தன் அனுமதியின்றிப் பங்கேற்கலாகாது என்று தடை செய்யலாம். இத் தடையை மீறுபவர்கள் இரண்டு வருடங்கள் வரை சிறைத் தண்டனையும், 5000 ரூபாய்கள்வரை தண்டவரியும் விதிக்கப்படுவர்

மேற்கண்டவாறு விரும்பத்தகாதவர்கள் நிறுவனங்களில் கால் எடுத்துவைக்காத வகையில் நிறுவனச் சட்டம் கடுமையாகத் தடை செய்துள்ளது.

# 13. கூட்டங்களும் தீர்மானங்களும்
## (Meetings and Resolutions)

ஒரு நிறுவனத்தின் கூட்டங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு :

(a) சட்ட முறையான கூட்டம் (Statutory meeting)

(b) வருடாந்திரப் பொதுக் கூட்டம் (Annual general meeting).

(c) சிறப்புப் பொதுக் கூட்டம் (Extraordinary general meeting).

**சட்ட முறையான கூட்டம் (பி. 165)**

ஒரு நிறுவனத்தின் பங்குநர்கள் முதன் முறையாகக் கூடும் கூட்டம் சட்ட முறையான கூட்டம் என்று குறிப்பிடப்படுகிறது. ஒரு நிறுவனத்தின் வாழ்நாளிலேயே ஒரே ஒரு முறை தான் இக் கூட்டத்தைக் கூட்டும் வாய்ப்பு உள்ளது. இக் கூட்டம் நிறுவனம் தொழிலைத் தொடங்குவதற்கு உரிமை பெற்ற ஒரு மாதத்திற்கு மேற்பட்டும், ஆறு மாதத்திற்குள்ளாகவும் கூட்டப்பட வேண்டும். தவறினால் அது நிறுவனம் கலைக்கப்படுவதற்குக் காரணமாகின்றது. இக் கூட்டம் கூட்டப்படுவதின் நோக்கம் பங்குநர்களுக்கு நிறுவனம் உருவாக்கப்பட்ட விவரங்களையும், வெற்றி வாய்ப்புகளையும் அறிந்து ஆலோசித்து ஆவன செய்வதற்காகும்.

**சட்ட முறையான அறிக்கை (Statutory Report)**

கூட்டத்திற்கு குறைந்தது 21 நாட்களுக்கு முன்பாக நிறுவனத்தின் இயக்குநர்கள் ஓர் அறிக்கையைத் தயாரித்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்ப வேண்டும். இவ்வறிக்கை சட்டமுறையான அறிக்கை என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வறிக்கை உண்மையானதென உறுதி செய்து, இரண்டு இயக்கு

நர்களால் கையெழுத்திடப்பட்டு, தணிக்கையாளர்களால் (Auditors) சான்றிடப்படவேண்டும். மேலும், அவ்வறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களைக் குறிப்பிட வேண்டும்.

(1) வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையும், அவைகள் முழுவதும் செலுத்தப்பட்டவையா அல்லவா என்ற விவரங்கள்.

(2) மொத்தம் செலுத்தப்பட்ட பங்குத் தொகை.

(3) வரவு செலவுக் கணக்குகளும் முன் செலவினங்களும் (Preliminary experses).

(4) இயக்குநர்கள், மேலாண்மை முகவர், செயலாளரும் பொருளாளரும், மேலாளர் முதலானோர் பெயர்கள் முகவரிகள் முதலியன.

(5) நிறுவனம் மேற்கொண்ட ஒப்பந்தங்களின் விவரங்கள்.

(6) நிறுவனம் பங்குகளை விற்கச் செய்த தரகு ஒப்பந்தங்கள்.

(7) கொடுபட வேண்டிய கோரிக்கைத் தொகைகளின் விவரங்கள்.

(8) நிறுவனம் செலுத்திய தரகுத் தொகையின் விவரங்கள்.

**வருடாந்திரப் பொதுக் கூட்டங்கள்** (Annual General Meetings)

ஒவ்வொரு நிறுவனமும் ஒவ்வொரு வருடமும் ஒரு பொதுக் கூட்டம் கூட்டவேண்டும். கூட்டத்திற்கு அனுப்பப்படும் அறிக்கையில் அது ஆண்டுக் கூட்டம் என்பதை அறிவிக்க வேண்டும். இரண்டு ஆண்டுக் கூட்டங்களுக்கு இடையில், 15 மாதங்களுக்கு மேல் இடைவெளி இருக்கக் கூடாது. ஒரு நிறுவனத்தின் முதல் ஆண்டுக் கூட்டம், அது பதிவான பதினெட்டு மாதங்களுக்குள் கூட்டப்பட வேண்டும். பதிவாளர் முதல் ஆண்டுக் கூட்டத்தைத் தவிர, மற்ற ஆண்டுகளைக் கூட்ட 3 மாதம் வரை நீடிப்பு அனுமதிக்கலாம். பொதுக் கூட்டம் அலுவல் நாட்களில், நிறுவனத்தின் அலுவலகத்தில் கூட்டப்படவேண்டும். ஆண்டுக் கூட்டம் கூட்டப்படாவிட்டால், உறுப்பினர் மனுவின் பேரில், மத்திய அரசு பொதுக் கூட்டம் கூட்டும்படி ஆணையிடலாம். பொதுக் கூட்டம் கூட்டப்படாவிட்டாலும், அல்லது மத்திய அரசின் ஆணைப்படி கூட்டம் கூட்டப்படாவிட்டாலும், நிறுவனமும் அதன் அதிகாரிகளும் தண்டனைக்குள்ளாவார்கள்.

மீனாட்சி மில்ஸ் கம்பெனி லிமிடெட் v. அசிஸ்டென்ட் ரிஜிஸ்டிரார் ஆஃப் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி [Meenakshi Mills Co. Ltd. v. Assistant Registrar of Joint Stock Companies, A.I.R.

(1938) Mad. 640] என்ற இவ்வழக்கில் நிறுவனம் 1934-ல் ஒரு பொதுக்கூட்டம் கூட்டியது. 1935-க்கு ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் நிறுவனம் 1936-ல் அடுத்த ஆண்டுக் கூட்டம் கூட்டியது. அது 1935–ல் ஆண்டுக் கூட்டம் கூட்டாததற்குத் தண்டிக்கப் பட்டது.

இவ்விதமே வேறொரு நிறுவனம், கணக்குப் புத்தகங்கள் நீதி மன்றத்தில் இருந்த காரணத்தால், பொதுக் கூட்டம் கூட்டாத தற்குத் தண்டிக்கப்பட்டது [In Re Brahamanabaria Loan Co. Ltd., A.I.R. (1934) Cal. 624]

ஒரு நிறுவனத்தின் தலைவிதியை நிர்ணயிப்பது பங்குநர்கள் கைவசம் உள்ளது. ஆகையால், ஆண்டுக்கு ஒரு முறை கூடும் இக் கூட்டத்தில் நிறுவனத்தின் வளர்ச்சியையும், அதன் வருங்கால வாய்ப்புகளை வாதாடி அலசி ஆராய்ந்து ஆலோசித்து ஆவன செய்கின்றனர் பங்குநர்கள். இப் பொதுக்கூட்டங்களில் வழக்க மாகக் கவனிக்கப்படும் அலுவல்கள் பின்வருவனவாகும்:

(a) தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும், ஐந்தொகைக் குறிப்பு, ஆதாய இழப்பீடு கணக்குகள் முதலானவை.

(b) ஆண்டு அறிக்கையை ஆலோசித்து ஆவன செய்வது.

(c) பங்கு ஆதாயம் வழங்குவது.

(d) இயக்குநர்கள் தணிக்கையாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பது.

**(3) சிறப்புப் பொதுக் கூட்டம்** (Extraordinary General Meeting) *(பி. 169)*

சட்ட முறையான கூட்டம், ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் தவிர, மற்றப் பொதுக் கூட்டங்கள் சிறப்புப் பொதுக் கூட்டங் களெனப்படும். இக்கூட்டம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படாத அலுவல்களைக் கவனிக்கவும், மிகவும் முக்கிய மான அலுவல்களைக் கவனிக்கவும் கூட்டப்படுகிறது. இக் கூட்டம் இயக்குநர்களே கூட்டலாம், அல்லது பங்குநர்கள் கேட்டுக்கொண் டதின் பேரில் இயக்குநர்களால் கூட்டப்படலாம், அல்லது பங்கு நர்களாலேயே கூட்டப்படலாம் அல்லது நீதி மன்றத்தாலும் கூட்டப்படலாம்.

இயக்குநர்கள் பொதுவாக ஆண்டுக் கூட்டங்களில் ஆலோசிக்க முடியாத அலுவல்களைக் கவனிக்கவும், மிக முக்கிய அலுவல்களைக் கவனிக்கவும் இக் கூட்டத்தைக் கூட்டுவார்கள்.

நிறுவனம் பங்குத் தொகைக் கொண்டதாயின் பங்குத் தொகையில் பத்தில் ஒரு பங்கு உடையவர்களும், அவ்வாறில்லா விட்டால், பத்தில் ஒரு பங்கு ஓட்டுரிமை பெற்றவர்களும், முறையே கையெழுத்திட்டு, ஆலோசிக்கப்படும் அலுவல்களைக் குறிப்பிட்டு நிறுவனத்தின் அலுவலகத்திற்கு அனுப்பினால், அதன் படி இயக்குநர்கள் பொதுக் கூட்டத்தைக் கூட்டவேண்டும்.

மேற்படி கூட்டம் கூட்டுவதற்கு விண்ணப்பம் செய்த 21 நாட்களுக்குள், இயக்குநர்கள், விண்ணம் அளித்த 45 நாட்களுக்குள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முயலாவிடில், விண்ணப்பம் செய்தவர்களே மேற்படி கூட்டத்தை, விண்ணப்பம் செய்த 3 மாதங்களுக்குள் கூட்டலாம். மேற்படி கூட்டத்தைக் கூட்ட விண்ணப்பம் செய்தவர்கள் அந்தக் கூட்டத்துக்கான செலவுகளை நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ளலாம்.

186ஆவது பிரிவின்படி, நீதிமன்றம் விரும்பினால், அல்லது ஒரு இயக்குநர் அல்லது ஒரு உறுப்பினர் விண்ணப்பம் செய்து கொண்டதின் பேரில், நிறுவனத்தைக் கூட்டம் கூட்டும்படி ஆணையிடலாம். அக் கூட்டம் நிறுவனத்தால் கூட்டப்பட்டதைப்போல் கருதப்படும்.

**கூட்டங்களுக்குரிய பொது விதிகள்** (General Provisions relating to meetings)

அறிக்கை (Notice) ஒரு நிறுவனத்தின் பொதுக் கூட்டத்திற்கு சுத்தமாக 21 நாட்கள் அறிக்கை தரப்படவேண்டும். அறிக்கை காலத்தை ஆண்டுப் பொதுக் கூட்டமாயின், எல்லாப் பங்குநர்களும் இசைந்தால் விட்டுக் கொடுக்கலாம் (Waived). மற்றக் கூட்டங்களாயின் குறைந்தது 95 சதவீதம் பங்குத் தொகை கொண்டவர்கள் அல்லது ஓட்டுரிமை உடையவர்கள் இசைய வேண்டும்.

பொதுக் கூட்டத்தில் பொதுத் தீர்மானமோ (Ordinary resolution), சிறப்புத் தீர்மானமோ (Special resolution) செய்ய வேண்டும் என்றால் அவைகளுக்கும் சுத்தமாக 21 நாட்கள் அறிக்கை தரவேண்டும். அதாவது, அறிக்கை அளிக்கப்பட்ட நாளும், கூட்டம் அழைக்கப்பட்ட நாளும் நீங்கலாக, 21 நாட்கள் இருக்க வேண்டும்.

நாகப்பச் செட்டியார் v மதறாஸ் ரேஸ் கிளப், [Nagappa Chettiar v. Madras Race Club, ILR (1949), Mad. 808] என்ற இவ் வழக்கில், அறிக்கையில் கூட்டத்தில் ஆலோ

சிக்சப்படவேண்டிய அலுவலைக் குறிப்பிடவில்லை. ஆகையால், மேற்படி அலுவலைக் கூட்டம் தீர்மானிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டது.

அவ்வாறே, அறிக்கை இல்லாமல் ஒரு தீர்மானம் செய்யப்பட்டால் அது செல்லாது என்று கேயில் *v.* கிராய்டன் டிராம்வேஸ் கம்பெனி [Kayl *v.* Croydon Tramways Co., (1917) A.C. 607] வழக்கில் கூறபட்டது.

**அறிக்கையில் குறிப்பிட வேண்டியவை :** அறிக்கையில் கூட்டம் கூடும் இடம், தேதி, நேரம், ஆலோசிக்கப்பட வேண்டிய அலுவல்கள் முதலானவைகளைக் குறிப்பிட வேண்டும். சூழ்நிலை வசத்தால் கூட்டம், அறிக்கையில் குறிப்பிட்ட இடமேயன்றி, வேறொரு இடத்தில் கூடினாலும், கூட்டத்தின் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதில்லை. இதை, எம்.ஆர்.எஸ். ரத்தினவேலுஸ்வாமி *v.* எம்.ஆர்.எஸ். மாணிக்கவேலு செட்டியார் [M.R.S. Rathanevaluswamy *v.* M.R.S. Manickavelu Chettiar, A.I.R. (1951) Mad. 542] என்ற வழக்கு தெளிவாக்குகின்றது. இவ்வழக்கில், உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டபடி கூட்டம் கூட்டப்படாததால், உறுப்பினர்களே கூட்டத்தை நிறுவனத்தின் அலுவலகத்தில் கூடுவதற்கு அறிக்கைவிடப்பட்டது. ஆனால், கூட்டத்தன்று, மேலாண்மை இயக்குநர் அலுவலகத்தை மூடிவிட்டார். அதனால் கூட்டம் வேறு ஓர் இடத்தில் கூடியது. இருந்த போதிலும் அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகள் சட்ட முறையானவை என்று முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தின் அறிக்கை ஒவ்வொரு உறுப்பினருக்கும், அல்லது அவருடைய சட்டச் சார்பாளருக்கும், நிறுவனத்தின் தணிக்கையாளர்களுக்கும் அனுப்ப வேண்டும். எதிர்பாராமல், கூட்டத்தின் அறிக்கை ஓர் உறுப்பினருக்குத் தரப்படவில்லை என்றாலும், கூட்டத்தின் நடவடிக்கைகள் அதனால் பாதிக்கப்படுவதில்லை.

**குறைவெண்** (Quorum) : கூட்டத்திற்குத் தேவையான குறைவெண், நிறுவனத்தின் செயல் முறை விதிகள் அதிகமாகக் குறிப்பிட்டாலொழிய, பொது நிறுவனமாயின் ஐவரும், தனியார் நிறுவனமாயின் இருவரும் கூட்டத்திற்கு நேரில் வந்தால், அதுவே போதுமானது. ஆனால், ஒரு தனியார் நிறுவனம், 43A பிரிவின்படி பொது நிறுவனமாகக் கருதப்பட்டால், அந்த நிறுவனத்திற்கு இருவர் இருந்தால் போதும். நீதிமன்றத்தின் ஆணையின் பேரில் கூட்டம் கூட்டப்பட்டால், அக்கூட்டத்திற்கு ஒருவர் இருந்தாலும் போதும். கூட்டத்திற்குத் தேவையான குறைவெண்ணைக்

கணிக்க, கூட்டத்தில் கலந்து கொள்ளும் உரிமை உள்ளவர்கள் தான் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். மேலும், குறைவெண் எண்ணிக்கை கூட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தால் மட்டும் போதாது. கூட்டம் முடியும் வரையிலும் குறைவெண் எண்ணிக்கை இருக்க வேண்டும். ஆனால், மாறான கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. In Re Hartley Beard Ltd., (1955) 1 Ch. 143] என்ற வழக்கில் அதன்படி குறைவெண் கூட்டம் அலுவலை ஆரம்பிக்கும் வரையில் இருந்தால் போதும். பின்னர், குறைந்தால் கூட்டத்தின் அலுவல்கள் பாதிக்கப்படாது என்பதாகும்.

**குறைவெண் இல்லாததின் விளைவுகள் :-** குறைவெண் இல்லாமல் கூட்டம் நடந்தால் அதன் நடவடிக்கைகள் செல்லாது. உறுப்பினர்களால் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு குறைவெண் இல்லாவிடில், கூட்டம் கலைக்கப்பட்டதாகும். மற்றக் கூட்டங்களில் குறைவெண் இல்லாவிடில், கூட்டம் அடுத்த வாரத்திற்கு அதே கிழமைக்கு ஒத்திப்போகும். இயக்குநர்கள் வேறொரு நாளையும் குறிப்பிடலாம். ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திலும் குறைவெண் இல்லாவிடில், அப்போதைய கூட்டத்தில் இருப்பவர்களில் எண்ணிக்கை போதுமானது.

பிறர் வாக்குகளைத் தன் வசம் கொண்ட ஒருவர் மட்டும் கூட்டத்திற்கு வந்தால் போதுமா என்ற கேள்விக்கு, ஷார்ப் v. டாவிஸ் [Sharpe v. Dawes, (1876) 2 Q.B.D. 26] என்ற வழக்கு விடை தருகிறது. இவ் வழக்கில் பங்குத் தொகை கோருவதற்காக ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு ஒரே ஒரு பங்குநர் வந்தார். ஆனால் அவர் பிற பங்குநர்களின் வாக்குகளைப் பெற்றிருந்தார். கூட்டத்திற்கு அவரே தலைமை வகித்து, தீர்மானம் செய்து பின்னர் நன்றியும் தெரிவித்தார். ஆனால், நீதிமன்றம் அக்கூட்டம் சட்ட முறையானதல்ல என்று கூறியது.

மத்திய அரசு 167, 186ஆவது பிரிவுகளின்படி கூட்டம் கூட்டும்படி ஆணையிட்டால், கூட்டத்திற்கு ஒருவர் வந்தாலும் போதுமானது என்று மத்திய அரசு குறிப்பிடலாம்.

**கூட்டத்திற்குத் தலைமை :** தலைவர் இல்லை என்றாலும், அல்லது கூட்டத்துக்கு வரவில்லை என்றாலும், அல்லது அவர் தலைமை வகிக்க இசையாவிட்டாலும், இயக்குநர்கள் தங்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம். செயல் முறை விதிகள் அனுமதித்தால் கூட்டத்திற்கு வந்த பங்குநர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம்.

கூட்டத்திற்கு வரும் பங்குநர் நேரடியாகக் கலந்துகொள்ளலாம் (in person) அல்லது வேறொருவர் மூலமாகக் கலந்து கொள்ளலாம் (in Proxy).

**தீர்மானங்கள்** (Resolutions) : நிறுவனங்கள் செய்யும் தீர்மானங்கள் இருவகைப்படும். அவையாவன : பொதுத் தீர்மானம் (Ordinary Resolution), தனிமுறைத் தீர்மானம் (Special resolution).

**பொதுத் தீர்மானம் :** இந்தத் தீர்மானத்திற்கு அதிகப்படியான ஓட்டுகள் கிடைத்தால் போதுமானது.

**தனிமுறைத் தீர்மானம் :** (1) அறிக்கையில் தனிமுறைத் தீர்மானம் என்பதைக் குறிப்பிடவேண்டும். (2) தீர்மானம் செய்யப்படுவதை 21 நாட்கள் அறிக்கை தரவேண்டும். (3) தீர்மானத்தை ஆதரித்த ஓட்டுகள், தீர்மானத்தை எதிர்த்த ஓட்டுகளைப் போல் மூன்று பங்குக்கும் குறையக் கூடாது.

**தனி முறை அறிக்கை** (Special Notice) : தனி முறை அறிக்கை என்பது நிறுவனத்திற்குச் சுத்தமாக 14 நாட்களுக்கு முன்பு அறிக்கை தரவேண்டும். நிறுவனமும் மேற்படி அறிக்கையை உறுப்பினர்களுக்குக் கூட்டத்திற்கு 7 நாட்களுக்குக் குறையாமல் தபால் மூலமாக அல்லது விளம்பரம் மூலமாக அறிக்கை செய்யவேண்டும்.

**கீழ்க்கண்டவைகளுக்குத் தனி முறைத் தீர்மானம் செய்யப்பட வேண்டும்**

(1) நிறுவனத்தின் நோக்கங்களை மாற்றுவது அல்லது அலுவலகத்தை மாற்றுவது.

(2) நிறுவனத்தின் பெயரை மாற்றுவது.

(3) செயல்முறை விதிகளை மாற்றுவது

(4) செலுத்தப்பட வேண்டிய பங்குத் தொகையை நெருக்கடி நிதியாக மாற்றுவது.

(5) பங்குத் தொகையைக் குறைப்பது.

(6) பங்குத் தொகையிலிருந்து வட்டி தருவது.

(7) மத்திய அரசை நிறுவனத்தின் விவகாரங்களை விசாரணை செய்யும்படி கேட்டுக் கொள்வது.

(8) மேலாண்மை முகவரைச் சேர்ந்தவரை இயக்குநராக அமர்த்துவது.

(9) இயக்குநர்களுக்கு அதிகப்படியான ஊதியம் தருவது

(10) இயக்குநரையோ அல்லது அவரது உறவினரையோ ஆதாயம் உள்ள பதவியில் வைப்பது.

(11) அதிகாரியின் பொறுப்பை வரம்பற்றதாக்குவதற்கு அமைப்பு முறை ஏட்டை மாற்றுவது.

(12) மேலாண்மை முகவரை, கவனமின்மை, முறைகேடான நிர்வாகம் முதலான காரணங்களுக்காக விலக்குவது.

(13) மேலாண்மை முகவருக்கு அதிக ஊதியம் வழங்குவது.

(14) மேலாண்மை முகவரை அல்லது அவரைச் சேர்ந்தவரை விற்பனை முகவராகவோ அல்லது கொள்முதல் முகவராகவோ அமர்த்துவது.

(15) மேலாண்மை முகவரை நிறுவனத்துக்குப் போட்டியாக தொழில் நடத்த அனுமதிப்பது.

(16) நிறுவனம் கட்டாயமாகக் கலைக்கப்படுவது.

**கீழ்க்கண்டவைகளுக்குத் தனிமுறை அறிக்கை தரவேண்டும் :**

(1) பதவியிலிருந்து விலகும் தணிக்கையாளருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிப்பது.

(2) பதவியிலிருந்து விலகும் தணிக்கையாளர் மீண்டும் அமர்த்தக்கூடாது என்பதற்கு.

(3) மேலாண்மை முகவரைச் சேர்ந்தவரைத் தவணைமுறையில் இயக்குநராக அமர்த்துவது.

(4) இயக்குநரை அவருடைய பதவிக் காலம் முடிவதற்கு முன்பாக விலக்குவது.

(5) பதவியிலிருந்து விலக்கப்படும் இயக்குநருக்குப் பதிலாக வேறு ஒருவரை அமர்த்துவது.

### நிகழ்ச்சிக் குறிப்பேடு (Minute Book)

ஒவ்வொரு நிறுவனமும், நிகழ்ச்சிக் குறிப்பேடு வைத்திருக்க வேண்டும். அதில் எல்லாப் பொதுக் கூட்டங்கள், இயக்குநர் குழுக் கூட்டங்கள், இதர குழுக் கூட்டங்கள் முதலானவைகளின் நடவடிக்கைகளைப் பதிவு செய்யவேண்டும்.

# 14. கணக்குகளும் தணிக்கைகளும்
## (Accounts and Audit)

ஒரு நிறுவனத்தின் நரம்புகளும் நாடியும் அதன் கணக்குகளே யாகும். ஆகவே, அவைகளை வைத்திருக்க வேண்டிய முறைகளும் அவைகளைத் தணிக்கை செய்யப்படவேண்டிய வகைகளையும் நிறு வனச் சட்டம், தெளிவாக்கியுள்ளது.

ஒரு நிறுவனம் 209ஆவது பிரிவின்படி கீழ்க்கண்ட பதிவேடு களை வைத்திருக்கவேண்டும். அவையாவன :

(1) எல்லா வரவு செலவுக் கணக்குகளும் அவைகள் எவ் வெவைகளுக்கானவை என்ற விவரங்களும்.

(2) நிறுவனம் செய்த எல்லாப் பொருள்களின் கொள்முதல் களும் அவைகளின் விற்பனைகளும்.

(3) நிறுவனத்தின் எல்லாச் சொத்துகளும் பொறுப்புகளும்.

(4) நிறுவனம் உற்பத்தி செய்தல், தயாரித்தல் அல்லது சுரங்கத்தொழில் முதலானவைகளைச் செய்வதாயின், மூலப் பொருள்கள், கூலி மற்றும் இதர செலவுகளின் முழு விவரங்கள், அரசினர் ஆணையிட்ட முறையில் வைத்திருக்கவேண்டும்.

மேற்கூறிய பதிவேடுகள் நிறுவனத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கவேண்டும். நிறுவனத்திற்குக் கிளை அலுவலகங்கள் இருப்பின் அவ்விடங்களிலும் அவ்வக் கிளைகளுக்குரிய பதிவேடுகளை வைத்திருப்பதோடு, அவைகளின் நகல்களைத் தலைமை அலுவலகத் திலும் வைத்திருக்கவேண்டும். மேற்படி கணக்குப் புத்தகங்களை எல்லா அலுவல் நேரங்களிலும் இயக்குநர்களுக்கும், பதிவாள ருக்கும் பார்வையிடுவதற்கும், வேண்டும்போது அதன் நகல்களை எடுத்துக்கொள்ளவும் உரிமையுண்டு. 209ஆவது பிரிவின்படி, ஒரு நிறுவனம், கணக்குப் புத்தகங்களையும், பற்றுச்சீட்டுகளும்

செலவுச்சீட்டுகளும் (receipts and vouchers) பத்திரமாக எட்டு வருடங்களுக்கு வைத்திருக்கவேண்டும்.

**வருடாந்திரக் கணக்குகளும் ஐந்தொகைக் குறிப்பும்** (Annual Accounts and Balance Sheet)

ஒவ்வொரு நிறுவனமும் தெளிவான வகையில், தேவைக் கேற்றபடி தொழில் முறைக் கேற்றவாறு தேவையான பதிவேடு களை வைத்திருக்க வேண்டும். அவைகள் உண்மைகளை உரைப்ப தோடு தேவையான விளக்கங்களைத் தருவனவாகவும் இருக்க வேண்டும். ஆண்டு இறுதியில் கூடும் பொதுக் கூட்டத்தில், இயக்குநர்கள் நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட ஆதாய இழப்புக் கணக்குகளும் (Profit and Loss Account), ஐந்தொகைக் குறிப்பும் (Balance Sheet) தக்க முறையில் தயாரித்து வைக்க வேண்டும். வியாபாரம் செய்யாத நிறுவனமாயின், அது வெறும் வரவு செலவுக் கணக்குகளையும், ஐந்தொகைக் குறிப்பும் தயாரித்து வைத்தால் போதும். மேற்குறிப்பிட்ட கணக்குகளுடன் இயக்குநர்களின் ஆண்டு அறிக்கையையும் இணைத்து வைக்க வேண்டும் அந்த ஆண்டு அறிக்கையில் நிறுவனத்தின் சென்ற காலச் செயல்களையும் நிகழ்கால நிலவரங்களையும் வருங்கால வாய்ப்புகளையும் அலசி அறிவிப்பதோடு, நிறுவனத்தின் நிதிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகைகளையும், பங்கு ஆதாயம் (Dividend) வழங்கப்படும் தொகையையும் குறிப்பிட வேண்டும்.

**ஐந்தொகைக் குறிப்பின் வடிவமும் பொருளடக்கமும்** (Form and Contents of a Balance Sheet)

ஐந்தொகைக் குறிப்பு ஒரு நிறுவனத்தின் நிதி நிலைகளை நன்றாக நவின்றிடும் ஒரு நிலைக் கண்ணாடி எனின் அது மிகையா காது. நிறுவனத்தின் முழு விவரங்களைக் காட்டும் ஒரு திரைப்பட மாக விளங்குகிறது. ஆகவே, விவாதத்துக்கு இடமில்லாத வகையில் அதன் வடிவமும் அது விளக்க வேண்டிய விவரங்களும் நிறுவனச் சட்டத்தின் ஆறாவது பின் இணைவில் (VI Schedule) வழங்கப்பட்டுள்ளது. திட்ட வட்டமாகக் கொண்ட நிறுவன மாயின் (Holding Company) கொள்ளப்பட்ட நிறுவனத்தின் (Subsidiary Company) முழு விவரங்களை வெள்ளையாகக் காட்ட வேண்டும்

ஆறாவது பின் இணைவின் முதல் பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி ஐந்தொகைக் குறிப்பில், பங்குத் தொகை, கோரிக்கைத் தொகை, நிறுவன அதிகாரிகளிடம் நிலுவையாக நிற்கும் விவரங்கள், நிலை

யான சொத்துகளுக்குச் (Fixed Assets) செய்யப்பட்ட செலவுகள், மூலதனம் குறையின் அதன் விவரங்கள், ஆண்டு இறுதியில் உள்ள சொத்துகளை முந்தைய ஆண்டுப்புள்ளி விவரங்களுடனும், பொறுப்புகளும் அதை மீட்கும் வகைகளும் காட்டப்பட வேண்டும். இரண்டாவது பகுதியில் வரவுசெலவுக் கணக்குகளும் ஆதாய இழப்புக் கணக்குகளும் தயாரிக்கப்படவேண்டிய முறை களை விளக்குகின்றன.

மேற்கண்டபடி தயாரிக்கப்பட்ட ஐந்தொகைக் குறிப்பு இரண்டு இயக்குநர்களால் கையெழுத்திடப்படவேண்டும். பொதுக் கூட்டத்தில் வைத்த 30 நாட்களுக்குள், மேற்படி ஐந்தொகைக் குறிப்பு, ஆதாய இழப்புக் கணக்குகளின் மூன்று நகல்களை இயக்கு நர்கள் கையெழுத்திட்டுப் பதிவாளருக்கு அனுப்பவேண்டும். பொதுக் கூட்டத்தில் ஐந்தொகைக் குறிப்பும், ஆதாய இழப்புக் கணக்குகளும் ஒப்புக்கொள்ளப்படாவிட்டாலும், பதிவாளருக்கு அனுப்பப்படும் நகல்களில் அதையும் குறிப்பிடவேண்டும்.

**பங்கு ஆதாயம் (Dividend)**

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அறிகுறி அது ஆண்டாண்டு தோறும் அளிக்கும் பங்கு ஆதாயம் ஆகும். ஆகவே, ஒரு நிறு வனம் ஆதாயத்தைப், பங்குத்தொகை விகிதாவாரியாக, பிரித்துக்கொடுக்கும் ஆதாயத்தைப் பங்கு ஆதாயம் என்று குறிப் பிடப்படுகிறது. பங்கு ஆதாயம் அளிப்பது ஒரு நிறுவனத்திற்கு உள்ளடங்கிய அதிகாரமாகும் (Inherent powers). அதைச் செயல்முறை விதிகள், செப்பவேண்டியதில்லை. அமைப்பு முறை ஏடு அளிக்கவேண்டியதில்லை.

பங்கு ஆதாயம் வழங்குவதற்குக் கட்டுப்பாடுகள் இல்லை என்றாலும், அதை வழங்குவதில் ஒரு சில கட்டுப்பாடுகள் உள்ளன. அவையாவன :

(1) பங்கு ஆதாயம் நிறுவனத்தின் ஆதாயத்தில் இருந்து தான் வழங்கப்படவேண்டும்.

(2) பங்கு ஆதாயம் மூலதனத்திலிருந்து வழங்கக் கூடாது. மீறி வழங்கினால் இயக்குநர்கள் அதை நிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்துவதற்குப் பொறுப்புள்ளவராகின்றனர்.

(3) பங்கு ஆதாயம் கீழ்க்கண்ட தொகைகளில் இருந்துதான் வழங்கவேண்டும்.

(a) அந்தந்த ஆண்டு அடைந்த ஆதாயத்திலிருந்து, நிறுவனத்தின் சொத்துகளுக்குச் சட்ட முறைப்படி தேவையான தேய்மானத் தொகை (Depreciation) ஒதுக்கிய பிறகு, எஞ்சியுள்ள ஆதாயத்திலிருந்து பங்கு ஆதாயம் வழங்கலாம்!

(b) போன ஆண்டுகளில் பெற்ற ஆதாயத்திலிருந்தும் பங்கு ஆதாயம் வழங்கலாம்.

(c) மத்திய அல்லது மாநில அரசு அவைகள் மேற்கொண்ட பொறுப்புறுதியின் காரணமாக வழங்கிய உதவி நிதியிலிருந்து பங்கு ஆதாயம் வழங்கலாம்.

(4) 93ஆவது பிரிவின்படி, செயல் முறை விதிகள் அனுமதித்தால், பங்குத் தொகையில் செலுத்தப்பட்ட தொகைகளின் விகிதா வாரியாகப் பங்கு ஆதாயம் வழங்கலாம் மற்றபடி, பொதுவாகப் பங்கு ஆதாயம் பங்குத் தொகையின் விகித வாரியாக வழங்கப்படவேண்டும்.

(5) பங்கு ஆதாயம் எப்போதும் பணமாகவே வழங்கப்படவேண்டும் (in cash). ஆனல், நிறுவனம் வழங்கலாம். மற்றபடி, பொதுவாகப் பங்கு ஆதாயம் ஆதாயத்திலிருந்து முழுவதும் செலுத்தப்பட்ட மிகை ஊதியப் பங்குகளை வழங்கலாம் (Fully paid bonus shares).

(6) அதிக ஆதாயம் அடைந்தாலும், நிறுவனம், பங்கு ஆதாயம் வழங்கவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. இயக்குநர்கள் பங்கு ஆதாயம் வழங்குவதற்கு முடிவு செய்த பின்னர்தான் பங்குநர்கள், அவ்வுரிமையைப் பெறுகின்றனர். இயக்குநர்கள் இசையவில்லை என்ருல், பொதுக் கூட்டமே விரும்பினுலும் சட்டப்படி பங்கு ஆதாயம் வழங்கமுடியாது. ஆனல், இயக்குநர்கள் தீய எண்ணங்கொண்டு (Malafide) மோசடி செய்யும் கருத்துடன் பங்கு ஆதாயம் வழங்க மறுத்தால் பங்குநர்கள் நீதி மன்றத்தின் உதவியைப் பெறலாம்.

(7) பங்கு ஆதாயம் பதிவு செய்யப்பட்ட பங்குநர்களுக்கு அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற வங்கிகளுக்கு (Banks) வழங்க வேண்டும். நிறுவனம் பங்குப் பற்றுணைகள் (Share Warrants) வழங்கியிருந்தால் அவைகளைக் கொண்டவர்களுக்கு (Bearers) வழங்கலாம். பங்கு ஆதாயம் வழங்கப்பட்டபோது பங்குக் கைமாறினல், உரிமை மாற்றம் பங்கு ஆதாயம் உள்பட இருப்பின் (cum dividend), அதை மாற்றிக் கொண்டவர் பெறுவார் (Transferee). ஆனல், உரிமை மாற்றம் பங்கு ஆதாயம் நீங்கலாக

இருப்பின் (Ex dividend) அதை மாற்றுபவர் (Transferor) பெறுவார்.

*(8)* பங்கு ஆதாயம் வழங்க முடிவு செய்த பிறகுதான் அது கொடுக்கப்பட வேண்டிய கடனாகிறது. பங்கு ஆதாயம் வழங்க உறுதி செய்தவுடன், அவ்வாறு உறுதி செய்த 42 நாட்களுக்குள் அவைகள் வழங்கப்படவேண்டும். தவறினால் நிறுவனமும், ஒவ்வொரு அதிகாரியும் தண்டிக்கப்படுவார்கள். ஆனால், பங்கு ஆதாயம் செலுத்தச் சட்டங்களால் தடங்கல் ஏற்பட்டாலும், பங்குநர் கேட்டுக் கொண்ட முறைப்படி செலுத்த முடியாவிட்டாலும், பங்கு உரிமையில் தகராறு இருந்தாலும், பங்குநர் நிறுவனத்திற்குத் தரவேண்டிய கடனுக்கு ஈடு செய்து கொண்டாலும் தாமதத்திற்கு நிறுவனத்தின் தவறுதல் அல்லவென்றாலும் மேற்படி தண்டனையிலிருந்து தப்பிக்கலாம்.

*(9)* இயக்குநர்கள் இசைந்தால் இடைக்காலப் பங்கு ஆதாயமும் (Interim Dividend) வழங்கலாம். பின்னர் ஆதாயம் சரிவர கணிக்கப்பட்ட பிறகு, இடைக்காலப் பங்கு ஆதாயம் உறுதி செய்யப்பட்டு எஞ்சியுள்ள பங்கு ஆதாயமும் பங்குநர்களுக்குச் செலுத்தப்படுகிறது. பொதுவாக, மிகச் செம்மையாகச் செயலுற்று சிறந்த செல்வாக்குடன் நடைபெறும் நிறுவனங்கள் தான், இடைக்காலப் பங்கு ஆதாயம் வழங்கமுடியும்.

**முக்கிய வழக்குகள்** (Leading Cases)

*(1)* Flitcraft's case (1882) 21 Ch. 530 என்ற இவ் வழக்கில், ஒரு நிறுவனம் வாரக் கடன்களை வந்தவையாகக் கொண்டு, அதிக ஆதாயம் காட்டி, அதிலிருந்து பங்கு ஆதாயம் வழங்கியது. அது சட்ட விரோதமானதென்றும், இயக்குநர்கள் மேற்படி தொகையை நிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆதாயம் இல்லாதபோது, உள்ளாந்திரமாக (Indirectly) பங்கு ஆதாயம் வழங்க முயன்றாலும் இயக்குநர்கள் அதற்குப் பொறுப்பாகிறார்கள் என்பதைக் கீழ்க்கண்ட வழக்குத் தெளிவாக்குகின்றது.

*(2)* Re Walters' Deed of Guarantee (1933) 1 Ch. 321 என்ற இவ் வழக்கில் 'A' என்பவர் ஒரு நிறுவனத்தின் முன்னுரிமைப் பங்குகளுக்குப் பங்கு ஆதாயம் 3 வருடங்களுக்கு வழங்குவதற்குப் பொறுப்புறுதி ஏற்றார் (guaranteed). நிறுவனம் அவருக்கு மேற்படி இழப்பை ஈடு செய்வதாக ஒப்புக்கொண்டது. ஆனால், நீதிமன்றம் அந்த ஒப்பந்தம் சட்ட விரோதமானது என்று முடிவு செய்தது.

**தணிக்கையாளர்கள் (Auditors)**

ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒரு தணிக்கையாளர் அல்லது தணிக்கையாளர்கள் அமர்த்தப்படவேண்டும். தணிக்கையாளர் என்பதை நிறுவனச் சட்டத்தில் வரையறை செய்யப்படவில்லை.

**தகுதிகள் :** நிறுவனத்தின் தணிக்கையாளர், ஒரு சுதந்திர முள்ளவராக இருக்கவேண்டும். அவர் ஓர் பட்டயம் பெற்ற கணக்கராக இருக்கவேண்டும். (Chartered Accountant). ஒரு கூட்டாண்மை நிறுமத்தில், கூட்டாளிகள் அனைவரும், பட்டயம் பெற்ற கணக்கர்களாயிருப்பின், அந்த நிறுமம் தணிக்கையாள ராக அமர்த்தப்படலாம்.

தணிக்கையாளர்களாக்க கீழ்க்கண்டோரை அமர்த்தக் கூடாது.

(1) நிறுவனத்தின் அதிகாரி அல்லது பணியாளர்.

(2) மேற்படி அதிகாரி அல்லது பணியாளரின் பணியாளர் அல்லது கூட்டாளி.

(3) நிறுவனத்திற்கு 100 ரூபாய்களுக்கு மேல் கடன் பட்டவர்.

(4) மேலாண்மை முகவராக இருக்கும் நிறுமத்தின் (Firms) அல்லது தனியார் நிறுவனத்தின் உறுப்பினர், இயக்குநர் அல்லது கூட்டாளி.

(5) நிறுவனத்தின் இயக்குநர் அல்லது நிறுவனத்தில் 5 சத வீதத்துக்குமேல் பங்குகளைப் பெற்றிருப்பவர்.

**தணிக்கையாளரை நியமித்தல் (Appointment of Auditors) :** ஒரு நிறுவனம் ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் தணிக்கை யாளரை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்காவிட்டால் மத்திய அரசு அந்த நிறுவனத்திற்குத் தணிக்கையாளரை நியமிக்க லாம். முதல் தணிக்கையாளரை நிறுவனம் பதிவான ஒரு மாதத்திற்குள் இயக்குநர்கள் அமர்த்தவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நிறுவனம் பொதுக் கூட்டத்தில் தணிக்கை யாளரை அமர்த்தலாம். மேலும் இயக்குநர்கள் அமர்த்திய தணிக்கையாளரை விலக்கலாம். இயக்குநர்கள் தற்காலிகமாகக் காலியாகும் இடங்களை நிரப்பலாம். வேறொரு தணிக்கையாளரை அமர்த்த அறிக்கை செய்யப்பட்டாலன்றி அல்லது விலகும் தணிக்கையாளர் தகுதி இழந்தாலன்றி அல்லது பதவி ஏற்று விருப்பமில்லாதிருந்தாலன்றி, பதவியில் இருந்து விலகும் தணிக்

கையாளரே மீண்டும் அமர்த்தப்படுவார். வேறொருவரைப் புதிதாகத்தணிக்கையாளராக அமர்த்துவதற்குத் தனிமுறை அறிக்கை தரவேண்டும். மேலும், அந்த அறிக்கையின் நகலைப் பதவியிலிருந்து விலகும் தணிக்கையாளருக்கும் அனுப்பவேண்டும்.

ஒரு பொதுக் கூட்டத்தில் அமர்த்தப்பட்ட தணிக்கையாளர் அடுத்த பொதுக் கூட்டம் வரையில் பதவியில் இருப்பார். தணிக்கையாளர் நியமிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் அவருக்குத் தெரிவிக்க வேண்டும். தணிக்கையாளரும் தன்னுடைய ஒப்புதலையோ அல்லது மறுப்பையோ 30 நாட்களுக்குள் பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

**விலக்கப்படுதல்** (Removal) : ஒரு நிறுவனம் மத்திய அரசின் அனுமதி பெற்றுத் தணிக்கையாளரை அவர் பதவிக்காலம் முடிவதற்கு முன்பு பொதுக் கூட்டத்தில் விலக்கலாம். தணிக்கையாளர் நொடிப்பு நிலையானலும் (Insolvent) பதவியிலிருந்து விலக்கப்படலாம்,

**ஊதியம்** (remunration) தணிக்கையாளர் இயக்குநர்களால் நியமிக்கப்பட்டால் இயக்குநர்களாலும், மத்திய அரசால் நியமிக்கப்பட்டால் மத்திய அரசாலும் அவர் ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது.

**உரிமைகளும் அதிகாரங்களும்**

(1) நிறுவனத்தின் கணக்குகளை எப்போதும் பார்வையிடலாம். (2) நிறுவனத்தின் அதிகாரிகளிடருமிந்து தனக்குத் தேவையான விவரங்களைக் கேட்டறியலாம். (6) கணக்குகளைத் தணிக்கை செய்ய நிறுவனத்தின் கிளை அலுவலகங்கள்களுக்குச் செல்லலாம். (4) நிறுவனத்தின் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும், பேசவும் உரிமை உண்டு.

(5) கணக்குகளிலிருந்து நிறுவனத்தின் நிலைமை நன்றாகத் தென்படா விட்டால் அதை உறுப்பினர்களுக்கு அறிவிக்கலாம்.

**கடமைகள்** (1) ஐந்தொகைக் குறிப்பு, ஆதாயம் இழப்பீடு கணக்குகளைத் தணிக்கை செய்து உறுப்பினர்களுக்கு அறிக்கை தருவது. (2) தேவையான விவரங்களையும், விளக்கங்களையும் பெறுவது. (3) கணக்குப் பதிவேடுகள் முறைப்படி வைக்கப்பட்டுள்ளனவா என்பது. (4) கிளைகளின் கணக்குகள் முறைப்படி தணிக்கை செய்யப்பட்டுள்ளதா என்பது. (5) ஐந்தொகைக் குறிப்பும், ஆதாயம் இழப்பீடு கணக்குகள் புத்தகங்களின்படி தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பது. (6) நிறுவனத்தை விசா

ரணைசெய்ய அமர்த்தப்பட்டவர்களுக்கு உதவி செய்வது.

**தனிமுறைத் தணிக்கை** (Special Audit) *(பி. 233 A)*

மத்திய அரசு கீழ்க்கண்ட காரணங்களுக்கு, ஒரு நிறுவனத்தின் கணக்குகளைத் தனிமுறைத் தணிக்கை செய்யும்படி ஆணையிடலாம்:

(1) நிறுவனத்தின் விவகாரங்கள் நல்ல தொழில் முறைப்படி நடத்தப்படாமலிருப்பது.

(2) நிறுவனம் வியாபாரத்துறையைப் பாதிக்கும்படி நடத்தப்படுவது.

(3) நிறுவனத்தின் நிதிநிலைமை சீர்கேடாயிருத்தல்.

தனிமுறைத் தணிக்கை செய்பவர் தன் அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். தனிமுறைத் தணிக்கைக்காகும் செலவுகளை நிறுவனம் செய்யவேண்டும். மத்திய அரசு தனிமுறைத் தணிக்கையாளரின் அறிக்கையின்பேரில் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். மேலும், மத்திய அரசு தணிக்கை அறிக்கையின் பகுதிகளை நிறுவனத்திற்கு அனுப்பி அதை உறுப்பினர்களுக்கு அறிவிக்கும்படியும் அல்லது அவைகளை நிறுவனத்தின் பொதுக்கூட்டங்களில் படித்துக் காட்டும்படியும் கட்டளையிடலாம்.

# 15. ஒப்பந்தங்களும் மறு நிர்மாணமும் இணைதலும்
## (Contracts Reconstruction and Amalgamation)

**ஒப்பந்தங்கள்** (Contracts)

ஒரு நிறுவனம் சட்டப்படி ஒரு தனி நபர் ஆயினும் அது ஒரு இயற்கை நபரைப்போல் தன்னிச்சையான ஒப்பந்தங்கள் செய்ய முடியாது. அதன் நோக்கங்களுக்குட்பட்ட ஒப்பந்தங்களைத் தான் ஒரு நிறுவனம் செய்யமுடியும். ஒப்பந்தங்கள் நோக்கங்களை மீறியதாயின் அவை செல்லாதவையாகும் என்று ஆஸ்பரி ரெயில்வே கம்பெனி *v.* ரிச்சி [Ashbery Railway Co. *v.* Ritchie] என்ற வழக்கில் தெளிவாக்கப்பட்டது. மற்றபடி நிறுவனம் தன் வரம்பிற்குட்பட்டுச் செய்யும் ஒப்பந்தங்களும், ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டவையாகும்.

ஒரு நிறுவனம் ஒப்பந்தம் செய்யும் முறைகளை 46ஆவது பிரிவில் விளக்கப்பட்டுள்ளன. அதன்படி ஓர் ஒப்பந்தம் எழுத்து வடிவத்தில் இருக்க வேண்டுமாயின், அந்த ஒப்பந்தத்தை நிறுவனத்தின் சார்பாக, அதன் அதிகாரத்தை வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ பெற்ற ஒருவர், கையெழுத்திட வேண்டும். ஒப்பந்தம் வாய்மொழியில் (verbal) இருக்கலாம் என்றால் அந்த ஒப்பந்தத்தை, நிறுவனத்தின் சார்பாக அதன் அதிகாரத்தை வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ பெற்ற ஒருவர் செய்ய வேண்டும்.

நிறுவனம் செயற்கை நபராகையால் அது ஒப்பந்தங்களைப் பிறர் மூலமாகத்தான் செய்ய முடியும். ஆகையால், மேற்கூறிய முறைகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு, நிறுவனம் கட்டுப்பட்டதாகும் என்று 46ஆவது பிரிவு கூறுகிறது.

அவ்விதமே ஒரு மாற்றுச் சீட்டு (Bill of exchange) அல்லது ஒரு உண்டியல் (Hundi), அல்லது ஒரு கடன் உறுதிச் சீட்டு (Promissory Note), நிறுவனத்தின் அதிகாரத்தை வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ பெற்றவரால் நிறுவனத்தின் சார்பாக, நிறுவனத்தின் பெயரால் செய்யப்படுமாயின் அது நிறுவனத்தால் செய்யப்பட்டதெனக் கருதப்படுகிறது.

நிறுவனத்தின் சார்பாக ஆவணங்கள் எழுதுவதற்கு, நிறுவனம் ஒருவரைத் தன் முத்திரையிட்ட எழுத்து மூலம், ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கோ அல்லது பொதுவாக எல்லாக் காரியங்களுக்கோ, நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்டவர் நிறுவனத்தின் சார்பாக ஆவணங்களில் (deeds) நிறுவனத்தின் முத்திரையிட்டுக் கையெழுத்திடலாம். அவ்வாறு கையெழுத்திடப்பட்ட ஆவணங்கள் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும்.

பொதுவாக நிறுவனத்தின் சார்பாக ஒப்பந்தங்களைச் செய்ய இயக்குநர் குழுவிற்கு அதிகாரமுண்டு. மேற்படி அதிகாரத்தை அவர்கள் நிறுவனத்தின் அதிகாரி ஒருவருக்கு அளிப்படைவுச் (delegate) செய்யலாம். ஒப்பந்தத்தில் இயக்குநர் எவரேனும் நலன் கொண்டிருந்தால், மேற்படி ஒப்பந்தத்திற்கு இயக்குநர் குழுவின் அனுமதி பெறவேண்டும்.

நிறுவனத்தின் சார்பாகச் செய்யப்படும் முன் ஒப்பந்தங்களும் (Preliminary Contracts), தற்காலிகமான ஒப்பந்தங்களும் (Provisional Contracts), அவைகளைப் செய்யப்படும் முறைகளும் அவைகளின் வினைவுகளும் முற்பகுதிகளில் தெளிவாக்கப்பட்டன.

**நடுவர் முடிவு** (Arbitration)

389ஆவது பிரிவின்படி ஒரு நிறுவனம், இந்திய நடுவர் முடிவு சட்டப்படி, தகராறுகளை முடிவு செய்து கொள்ளலாம். இதனால் ஒரு நிறுவனம், வெளிநாடுகளில் ஏற்படும் தகராறுகளை, நடுவர் முடிவு செய்வதற்குத் தடையாய் இருந்தது. ஆகையால் 1960-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்திற்குச் செய்யப்பட்ட திருத்தப்படி 389ஆவது பிரிவு புறக்கணிக்கப்பட்டது. தற்போது நிறுவனங்கள் தங்களுக்குள் உண்டாகும் தகராறுகளைத் தங்கள் இச்சைப்படி நடுவர் முடிவுக்கு விடலாம்.

**ஒத்திசைவும் ஏற்பாடுகளும்** (Compromise and arrangements)

ஒரு நிறுவனம் தகராறு இல்லாமல் (without dispute) ஒத்திசைவு செய்யமுடியாது. ஆனால் தகராறு இல்லாதிருப்பினும்

அது கடனுளர்களுடன் அல்லது உறுப்பினர்களுடன் வேறு ஏற்பாடு செய்யலாம்.

ஒரு நிறுவனம் கடனுளர்களுடன் அல்லது உறுப்பினர்களுடன் ஒத்திசைவு அல்லது வேறு ஏற்பாடு செய்துக் கொள்ள முடிவு செய்தால், அது நீதி மன்றத்திற்கு மனு போடவேண்டும். மேற்படி 391ஆவது பிரிவின்படி செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் விசாரித்து, கடனுளர்கள் அல்லது உறுப்பினர்கள் கூட்டம் கூட்டும்படி ஆணையிடலாம். அக்கூட்டத்தின் முக்கால் பங்குக் கடன் தொகையுள்ளவர்களும் அல்லது முக்கால் பங்கு எண்ணிக்கை உள்ள உறுப்பினர்களும் அந்த ஒத்திசைவையோ ஏற்பாட்டையோ ஒப்புக் கொண்டால், நீதிமன்றம், அவைகள், நிறுவனத்திற்கு நன்மை பயப்பதாயின், அவைகளை அனுமதிக்கலாம்.

**மறுநிர்மாணமும் இணைதலும்** (Reconstruction and Amalgamation)

ஒரு நிறுவனம் தன் வியாபாரத்தை அல்லது தொழிலை வேறொரு புதிய நிறுவனத்திற்கு மாற்றிய போதிலும், மேற்படி புதிய நிறுவனத்தில் அதே உறுப்பினர்கள் நலன் கொண்டிருந்தால், அது நிறுவனத்தின் மறு நிர்மாணம் எனப்படும். இரண்டு நிறுவனங்கள் ஒன்றொடொன்று இணைந்து வேறு ஒரு புதிய நிறுவனமாக உருமாறுதல், இணைதல் எனப்படும்.

நிறுவனத்தின் மறு நிர்மாணம் அல்லது இணைதல் கீழ்க்கண்ட முறைகளில் ஏற்படலாம் :

(a) நிறுவனம் தன் தொழிலை மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றுவது (பி. 394).

(b) நிறுவனம் தன் பங்குகள் யாவையும் வேறொரு நிறுவனத்திற்கு மாற்றுவது (பி. 395).

(c) மத்திய அரசு ஆணையிடுவது (பி. 396).

நீதிமன்றம் நிறுவனங்கள் செய்து கொள்ளும் ஒத்திசைவு அல்லது ஏற்பாட்டை அனுமதித்துக் கீழ்க்கண்டவாறு ஆணையிடலாம் :

(a) ஒரு நிறுவனத்தின் தொழில் அல்லது சொத்துகள் அல்லது பொறுப்புகளை மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றுவது.

(b) மாற்றிக்கொள்ளும் நிறுவனம் (Transferee Company) வழங்கவேண்டிய அல்லது ஒதுக்கீடு செய்து கொள்ளவேண்டிய

(appropriation) பங்குகளை அல்லது கடனீட்டுப் பத்திரங்களைக் குறிப்பிடுவது.

(c) சட்ட முறையான நடவடிக்கைகளைத் (Legal Proceedings) தொடர்ந்து செயல் படுத்துவது.

(d) நிறுவனத்தைக் கலைக்காமல் (Without winding up) அதற்கு முடிவு கட்டுவது (dissolution).

(e) மாறுதலை மறுப்பவருக்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகள்.

(f) மறு நிர்மாணத்திற்கு அல்லது இணைதலுக்குத் தேவையான அல்லது அதன் தொடர்பான ஆணைகள் தருவது.

396ஆவது பிரிவின்படி மத்திய அரசினர் பொது நலத்தைக் கருதி (Public interest) இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நிறுவனங்கள் இணைவதைப்பற்றி ஆணையிடலாம். மத்திய அரசு மேற்கண்ட ஆணையிடுமுன் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அறிக்கை செய்து குறிப்பிட்ட காலத்திற்குள் மறுப்புகளைத் தெரிவிக்கத்தக்க வாய்ப்பு அளிக்க வேண்டும். இணைப்பினால் ஏற்பட்ட நிறுவனத்தின் அமைப்பு, சொத்துகள், உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் முதலானவை, மத்திய அரசு குறிப்பிடுபவையாகும். ஒவ்வொரு உறுப்பினரும், கடனாளரும், உரிமை பாதிக்கப்படாமல், பாதுகாக்கப்படுகின்றனர். நிறுவனங்கள் இணைவதற்கு இடப்பட்ட ஆணைகளை மத்திய அரசு பாராளுமன்றத்திற்குக் காண்பிக்க வேண்டும்.

இணைக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை மத்திய அரசின் ஆணையின்றி அழித்துவிடக்கூடாது.

# 16. புலன் விசாரணை

## (Investigation)

### (பி.235-பி251)

தவருன முறையிலும் தான்தோன்றித்தனமாகத் திரியும் நிறு ணங்களைத் தடுத்து நல்வழப்படுத்தவும் திருந்தாதவைகளைத் தக்கபடி தண்டிக்கவும் மத்திய அரசினர் கைவசம் உள்ள புலன் விசாரணை செய்யும் அதிகாரம் சாலச்சிறந்த தண்டாயுதமாகும். மத்திய அரசின் இவ்வதிகாரங்கள் நிறுவனச் சட்டத்தில் (235-251) பிரிவுகளில் மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. போலிக் கலசம் பூண்டு நடமாடும் நிறுவனங்களைக் கண்டுகொள்ள உதவி யாயுள்ளன இவ்வதிகாரங்கள். சட்டம் இதோடு நில்லாமல் 234ஆம் பிரிவில் அவருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தால், பதிவாளரையும் ஆயுதபாணியாக்கியுள்ளது.

**பதிவாளரின் புலன் விசாரணை** (பி.234.)

பதிவாளர், தன்னிடம் வழங்கப்பட்ட ஆவணங்களைப்பற்றி, மேலும் விவரங்களும் விளக்கங்களும், வழங்கும்படி, நிறுவனத் தைக் கேட்கலாம். மேற்படி விவரங்கள் வழங்கப்படாவிட்டா லும் அல்லது வழங்கப்பட்ட விளக்கங்களில் நிறுவனத்தின் தவருன போக்குகள் புலனுயின், பதிவாளர் மத்திய அரசுக்கு அறிவிக்கலாம். மேலும் ஒரு கடனுளர் அல்லது பங்குநர் அல்லது நிறுவனத்தில் நலன் கொண்டவர் எவரேனும் நிறுவனம் மோசடி செய்யும் முறையில் நடத்தப்படுவதாக முறையிட்டால், அதன் பேரில் நிறுவனத்தை அவைகளுக்கு விளக்கம் கேட்டுப் புலன் விசா ரணை செய்யலாம். மேற்கூறியவைகளைச் செய்யத் தேவைப்பட் டால், குற்றத்துறை நீதிபதியின் அதிகாரம் பெற்று, நிறுவனத் தின் அலுவலகங்களுக்குள் நுழையவும், பதிவுருக்களைத் (Records)

தேடவும், அவைகள் அழிக்கப்படாமலிருக்கும் பொருட்டு அவைகளைப் பறிக்கவும், பதிவாளர் அதிகாரம் பெற்றிருக்கிறர்.

**மத்திய அரசின் புலன் விசாரணை**

235ஆவது பிரிவின்படி, பங்குத் தொகையுள்ள நிறுவனமாயின், குறைந்தது 200 உறுப்பினர்கள் அல்லது நிறுவனத்தின் ஓட்டு உரிமையில் குறைந்தது பத்தில் ஒரு பாகம் கொண்ட உறுப்பினர்கள், அல்லது நிறுவனம் பங்குத் தொகையற்றதாயின், ஐந்தில் ஒரு பாகத்துக்குக் குறையாத உறுப்பினர்கள், செய்த விண்ணப்பத்தின் பேரிலும் பதிவாளர் 234ஆவது பிரிவின்படி செய்த அறிக்கையின் பேரிலும், மத்திய அரசு மேற்படி நிறுவனத்தைப் புலன்விசாரணை செய்ய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பார்வையாளர்களை (Inspectors) நியமிக்கலாம். உறுப்பினர்கள் மனு செய்தால், அவர்கள், மனுவில் குறிப்பிட்டவைகளை நிரூபிக்கச் சான்றுகளும், செலவு தொகைகளுக்குப் பிணைகளும் (Securitie's for costs) வழங்கவேண்டும்.

237ஆவது பிரிவின்படி, நிறுவனம் புலன் விசாரணை செய்யத் தனிமுறைத் தீர்மானம் செய்தாலும், அல்லது, புலன்விசாரணை செய்ய நீதிமன்றம் ஆணையிட்டாலும், அல்லது மத்திய அரசு, நிறுவனம் மோசடி செய்வதற்கும் சட்ட விரோதமானவைகளைச் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்றும், சிறுபான்மையான உறுப்பினர்கள் ஒடுக்கப்படுகின்றனர் என்றும், நிறுவனத்தை உருவாக்கியவர்களும் நடத்துபவர்களும் மோசடி, தீங்கு மற்றும் பிற தவறு செய்தவர்கள் என்றும், நிறுவனத்தைப்பற்றிய விவரங்களை உறுப்பினர்களுக்கு அறிவிக்க மறுக்கப்படுகின்றதென்றும், கருதினுல், அவைகளைப் புலன் விசாரணை செய்வதற்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தகுதிபெற்ற பார்வையாளர்களை நியமிக்கலாம்.

**புலன் விசாரணை செய்யும் பார்வையாளர்களின் அதிகாரங்கள் (பி. 239.)**

மத்திய அரசினரால் 235, 237ஆவது பிரிவுகளின்படி அமர்த்தப்பட்ட பார்வையாளர், தேவை என்று கருதினுல், புலன் விசாரணை செய்யப்படும் நிறுவனத்துடன் தொடர்புடைய வேறு நிறுவனத்தை அல்லது மேலாண்மை முகவரைப்பற்றியும் மத்திய அரசின் அனுமதி பெற்றுப் புலன் விசாரணை செய்யலாம்.

நிறுவனத்தின் நிருவாகிகள் அதிகாரிகள் ஆகிய அனைவரும் நிறுவனத்தின் பதிவேடுகள், காகிதங்கள் முதலியவைகளைப்

பார்வையாளர்களுக்குக் காண்பிப்பதோடு, அவருக்குத் தேவையான உதவிகளையும் செய்யவேண்டும். மேலும், பார்வையாளர் அவர்களை ஆணையுறுதியின் பேரில் விசாரிக்கலாம் (examine on oath), மேற்படி விசாரணையின் குறிப்புகளைப் பின்னர் சான்றாகப் பயன்படுத்தலாம். நிருவாகிகளும் :அதிகாரிகளும் பார்வையாளருடன் மேற்கண்ட வகையில் ஒத்துழைக்காவிடில், நீதிமன்றம் அவர்களை விசாரித்துத் தண்டிக்கலாம்.

நிறுவனத்தின் பதிவேடுகளும், பதிவுருக்களும் (records அழிக்கப்படலாம் அல்லது திருத்தப்படலாம் என்று மேற் பார்வையாளர் கருதினால், குற்றத்துறை நீதிபதிக்கு, மனுச் செய்து அவைகளைப் பறிக்கும்படி செய்து, தன் கைவசம் பெற்று அவைகளை விசாரணை முடியும் வரையில் தம்மிடம் வைத்திருக்கலாம்.

மத்திய அரசு கட்டளையிட்டால் பார்வையாளர் புலன் விசாரணையைப்பற்றி இடைக்கால அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். பின்னர் விசாரணை முடிந்ததும் அவருடைய முடிவான அறிக்கையையும் அனுப்பிவைக்கவேண்டும். மத்திய அரசு பார்வையாளரின் அறிக்கையைப் பெற்றபிறகு, அதன் நகலை, நிறுவனத்திற்கும், மற்றும் அதில் தொடர்புடைய அனைவருக்கும் அனுப்பவேண்டும். பார்வையாளரின் அறிக்கையில் இருந்து யாரேனும் குற்றங்கள் செய்துள்ளதாக அறிந்தால், அவர் பேரில் குற்ற வழக்குத் (Prosecute) தொடரலாம். மேற்படி நடவடிக்கையில், நிறுவனத்தின் அதிகாரிகள், மத்திய அரசுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவேண்டும்.

மேற்படி பார்வையாளரின் அறிக்கையில் இருந்து நிறுவனம் கலைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு கருதினால், அது எவரையும் நிறுவனம் கலைக்கப்படுவதற்கு மனுப் போடும்படி நியமிக்கலாம். மற்றும் அறிக்கையிலிருந்து மோசடி, தீங்குகள் முதலானவை செய்யப்பட்டுள்ளதாகக் கண்டால், அவைகளைச் செய்தவரிடமிருந்து இழப்பீடு பெறுவதற்கு மத்திய அரசு அவர்கள் பேரில் வழக்குத் தொடரலாம். புலன் விசாரணைக்குண்டான செலவுகளை மத்திய அரசு மேற்படி தவறுகளைச் செய்தவர்களிடமும், நிறுவனத்திடமிருந்தும் பெறுவதற்குரிமை உண்டு.

**நிறுவனத்தில் கொண்டுள்ள சொத்துரிமைகளைப் புலன் விசாரணை செய்தல்** (Investigation of the ownership of the company) *(பி.247—249)*

ஒரு நிறுவனத்தில் நலன் கொண்டுள்ளவர்களை (Persons financially interested in the company) அறிய வேண்டியது அவ

சியம் என்று மத்திய அரசு கருதினுல், அதைப் புலன் விசாரிக்க ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பார்வையாளர்களை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள், 235, 237ஆவது பிரிவுகளின்படி நியமிக்கப்பட்ட பார்வையாளர்களின் அதிகாரங்களைப் பெறுவர். பார்வையாளர் விசாரணையை முடித்து அனுப்பிய அறிக்கையின் நகலை மத்திய அரசு நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டியதில்லை. மேற்படி விசாரணையின் செலவுகளை மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டியது.

மேலும், ஒரு குறிப்பிட்ட நிறுவனம், கூட்டாண்மை நிறுமம் (Partnership Firm) அல்லது நபர் மேலாண்மை முகவருடன் தொடர்புடையவரா என்பதைப் பார்வையாளர் நியமிக்காமலே, மத்திய அரசே, புலன் விசாரணை செய்யலாம். ஆனுல், தேவைப் பட்டால் இதற்காகப் பார்வையாளரை நியமித்தும் புலன் விசாரணை செய்யலாம்.

**நிறுவனச் சட்டவியல் குழு** (Company Law Board)

மத்திய அரசு நிறுவனச் சட்டத்தின், 10 E பிரிவின்படி நிறுவனச் சட்டவியல் குழு ஒன்று அமைப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ளது. நிறுவனச் சட்டம் மத்திய அரசினருக்கு வழங்கியுள்ள எல்லா அதிகாரங்களையும் வேலைகளையும் செய்வதுதான் இக் குழுவின் வேலை.

மத்திய அரசின் கருத்துக்குட்பட்டு, அது ஐவருக்கு மேலிடாமல் இக் குழுவின் உறுப்பினர்களை நியமித்து அதில் ஒருவரைத் தலைவராகவும் அமர்த்தலாம். இக் குழு மத்திய அரசுக்குட்பட்டுத் தன் அதிகாரங்களைக் கையாளவேண்டும். இக்குழு தன் அதிகாரங்களை மத்திய அரசின் ஒப்புதல்பெற்று, தலைவருக்கு அல்லது வேறு உறுப்பினருக்கு அல்லது குழுவின் தலைமை அதிகாரிக்கு அளிப்படைவு (Delegate) செய்யலாம். இக் குழுவின் அமைப்பில், குற்றங் குறைகள் இருப்பினும், அதன் செயல்கள் சற்றும் அதனுல் பாதிக் கப்படுவதில்லை.

**ஆலோசனைக் குழு** (Advisory Committee)

நிறுவனச் சட்டத்தின் 410ஆவது பிரிவு மத்திய அரசுக்கு ஓர் ஆலோசனைக் குழு அமைப்பதற்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதன்படி மத்தியஅரசும், நிறுவனச் சட்டவியல் குழுவும் அவ்வப் போது அனுப்பும் அலுவல்களில், ஆலோசனை அளிக்க, ஓர் ஆலோசனைக் குழு அமைத்து, அதில் தக்க தகுதிகள் பெற்ற, ஐவருக்கு மேற்படாத, உறுப்பினர்களை நியமிக்கலாம். இந்த ஆலோசனைக் குழுவிற்கு முன்பு செயலாற்றிய ஆலோசனை ஆணைக் குழுவை (Advisory Commission), நிறுவனங்கள் (திருத்தம்) சட்டம் 1965, (Companies Amendment Act, 1965) கலைத்துவிட்டது.

# 17. சிறுபான்மையினரின் உரிமைகள்

(Rights of minority)

ஒரு நிறுவனத்தில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் போக்கைத் தடுக்க முடியாதென்றும், ஒரு நிறுவனம் பெரும் பான்மையான பங்குநர்கள் விருப்பப்படி செயலுறவேண்டும் என்றும் ஃபாஸ் v. ஹர்பாய்ட்டல் [Foss v. Harboitle, 67 ER 189] என்ற வழக்கில் தெளிவாக்கப்பட்டது. மேலும், அவ்வழக்கின் முடிவுக்குச் சில விலக்குகள் (exceptions) உள்ளதைச் செயல் முறை விதிகள் அத்தியாயத்தில் விளக்கப்பட்டது. ஆனால், கூட்டம் அதோடு நில்லாமல், சிறுபான்மையினர், பெரும்பான்மையினரால் ஒடுக்கப்பட்டு இன்னலுற்றுத் துன்புறாமல், முன் எச்சரிக்கையாக, மேலும் சில பாதுகாப்புகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது. அவைகள் 397-409ஆவது பிரிவுகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு :

ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள், தாங்கள் ஒடுக்கப்படும் வகையில் நிறுவனத்தை நடத்துவதாகவும், அல்லது நிறுவனத்தின் நலத்திற்கு விரோதமான முறைகளில் நிறுவனத்தை நடத்துவதாகவும் அல்லது நிறுவனத்தின் நிருவாகத்தில் ஏற்பட்ட பல முக்கிய மாறுதல்களினால் நிறுவனத்தின் நலத்திற்கு விரோதமாக நிறுவனத்தை நடத்துவதாகவும் நீதிமன்றத்துக்கு முறையீடு செய்தால், நீதிமன்றம் மேற்படி மனுவை விசாரித்து அதற்குகந்த ஆணையை வழங்கலாம்.

மேற்கூறிய எண்ணிக்கை உள்ள உறுப்பினர்களின் இசைவு பெற்ற ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள், அனைவர் சார்பாக மனுப் போடலாம்.

மேற் குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள உறுப்பினர்கள் இல்லாவிட்டாலும் மேற்படி மனுவைப் போட சட்டம் வழி செய்

துள்ளது. அதாவது, மத்திய அரசு மேற்படி மனுப் போட நீதியும் நேர்மையுமான சூழ்நிலைகள் உள்ளன என்று கருதினல், அது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை மேற்படி மனுச் செய்வதற்கு அனுமதிக்கலாம். அப்படியாயின் மேலே குறிப் பிட்ட எண்ணிக்கை உள்ள உறுப்பினர்கள் தேவையில்லை. ஆனல், மத்திய அரசு அவ்வாறு அனுமதிக்குமுன் அவைகளைச் செலவுத் தொகைகளுக்குப் போதுமான பிணையம் (Security) வழங்குமாறு கூறலாம்.

நீதிமன்றம் 397, 398ஆவது பிரிவுகளின்படி செய்த மனுவைப் பற்றி, மத்திய அரசுக்கு அறிக்கை விடவேண்டும். முடிவான ஆணை அளிப்பதற்கு முன்பு, மத்திய அரசு ஏதேனும் முறையிட்டால், நீதிமன்றம் அதையும் கருத வேண்டும்.

401ஆவது பிரிவின்படி மத்திய அரசே 397, 398ஆவது பிரிவுகளின்படி மனுப் போடலாம் அல்லது வேறு எவரையேனும் மனுச் செய்யும்படி குறிப்பிடலாம்.

**நீதிமன்றத்தின் அதிகாரங்கள்** : நீதிமன்றத்திற்குப் பொதுவாக உள்ள அதிகாரங்களோடு கீழ்க்கண்ட அதிகாரங்களும் உண்டு :

(a) நிறுவனத்தின் விவகாரங்களைக் கட்டுப்படுத்துவது.

(b) உறுப்பினர்களின் பங்குகளையோ நலனையோ மற்ற உறுப்பினர்களை அல்லது நிறுவனத்தை வாங்கச் செய்வது.

(c) நிறுவனம் பங்குகளை வாங்குவதாயின், அதன் மூலதனத்தைக் குறைப்பது.

(d) மேலாண்மை முகவர், மேலாண்மை இயக்குநர், செயலாளர்களும் பொருளாளர்களும், இயக்குநர்கள், மேலாளர்களும், நிறுவனம் செய்த உடன்படிக்கைகளைப் புறக்கணிப்பது அல்லது மாற்றுவது (Setting aside or modification).

(e) நிறுவனம் பிறருடன் செய்த ஒப்பந்தங்களைப் புறக்கணிப்பது அல்லது மாற்றுவது.

(f) நிறுவனம் செய்த உரிமை மாற்றங்களைப் புறக்கணிப்பது.

(g) நீதியும் நேர்மையுமான யாவற்றையும் செய்வது (Court can do anything just and equitable).

நீதிமன்றம் தேவை என்று கருதினால், மனுவை முடிவு செய்வதற்கு முன்பு, இடைக்கால ஆணைகளையும் (Interim orders) இடலாம். நீதிமன்றம் அமைப்பு முறை ஏடு அல்லது செயல் முறை விதிகள் முதலானவைகளை மாற்றம் செய்தால் பின்னர், நிறுவனம், நீதிமன்றத்தின் அனுமதியின்றி மேற்படி மாற்றங்களைப் பாதிக்கும் வகையில், அமைப்பு முறை ஏடு, செயல் முறை விதிகள் முதலியவைகளுக்கு எவ்வித மாற்றமும் செய்யக் கூடாது.

**மத்திய அரசின் அதிகாரங்கள் (408 பி )**

மத்திய அரசும் கீழ்க்கண்ட அதிகாரங்களை உடையது. அதாவது குறைந்தது 100 உறுப்பினர்கள் அல்லது பங்குத் தொகையில் பத்தில் ஒரு பாகம் பெற்றிருக்கும் உறுப்பினர்கள் செய்த மனுவின் பேரில், மத்திய அரசு மேற்படி நிறுவனத்திற்கு இரண்டுக்கு மேற்படாத இயக்குநர்களை அமர்த்தலாம். அவ்வாறு அமர்த்தப்பட்ட இயக்குநர்களுக்குப் பங்குத் தகுதிகள் (Share qualifications) தேவையில்லை. மேலும், அவர்கள் தவணை முறைப்படி (By rotation) பதவி விலகத் தேவையில்லை. மத்திய அரசு வேண்டும்போது அவர்களை விலக்கலாம். அவ்வாறு விலக்கும்வரை அவர்கள் பதவியில் தொடர்ந்திருக்கலாம். மத்திய அரசால் நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் இருக்கும்வரையில் இயக்குநர் குழுவில், மத்திய அரசின் இசைவு இன்றி நிறுவனம் எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது.

மேலும், ஒரு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அல்லது இயக்குநர்கள், மேலாண்மை முகவர் அல்லது செயலாளர்களும் பொருளாளர்களும், நிறுவனத்தின் பங்குகளில் சொத்துரிமை பெரிதும் மாறுபட்டமையால் அல்லது மாற்றம் ஏற்படப்போவதால், இயக்குநர்களில் மாறுதல் ஏற்படலாமென்றும், அத்தகைய மாறுதல் நிறுவனத்தின் நலத்திற்கு நன்மையானதல்ல என்று முறையிட்டால், மத்திய அரசு மேற்படி முறையீடு முறையானது என்று முடிவு செய்தால், அது அந்த மாறுதலை உறுதி செய்த பின்னரே இயக்குநர்களில் ஏற்பட்ட மாறுதல் செயற்படும். மத்திய அரசு தேவை என்று கருதினால், மனுவை முடிவு செய்யும் முன் இடைக்கால ஆணைகளையும் இடலாம்.

**முக்கிய வழக்குகள் (Leading cases)**

ஒடுக்கப்படுவது (oppression) என்றால் என்ன என்பது எடுத்துக் காட்டப்பட்டது, எல்டர் *v*. எல்டர் அண்டு வெட்சன் லிமிடெட் [Elder *v*. Elder and Wetson Ltd. (1952) S.C. 49] என்ற வழக்கில் அதன்படி, ஒடுக்கப்படுவது என்பது கண்ணோட்

டத்தில் காணக்கூடிய, நல்ல தரமுள்ள முறைக்கு முற்றிலும் மாறான நடத்தையாகும் என்று நீதிமன்றம் தெளிவாக்கியது.

[Re Hindustan Co-operative Insurance Society Ltd., A.I.R. (1961) Cal. 443] என்ற இந்த வழக்கில் ஒரு நிறுவனத்தின் ஆயுள் காப்பீட்டுத் தொழிலை (Life Insurance business), இந்திய ஆயுள் காப்பீடு இணையம் (Life Insurance Corporation of India), கட்டாயமாகக் கைப்பற்றியது (Compulsorily acquired). அதற்காக வழங்கப்பட்ட இழப்பு ஈடு தொகையை, பங்குநர்களுக்குப் பிரித்துத் தராமல் வேறு தொழில்களில் உபயோகப்படுத்த இயக்குநர்கள் முடிவு செய்தனர். நீதிமன்றம் அவ்வாறு செய்வது சிறுபான்மையினரை ஒடுக்கிக் கட்டாயப்படுத்துவதாகும் என்று குறிப்பிட்டது.

மோகன்லால் சந்த்மல் *v*. தி பஞ்சாப் கம்பெனி லிமிடெட் [Mohanlal Chandmul *v*. The Punjab Co. Ltd., A.I.R. (1961) Punj. 435] என்ற இந்த வழக்கில் ஒரு நிறுவனம் வியாபாரம் செய்யாத உறுப்பினர்களின், ஓட்டுப்போடுவது, இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பது, பங்கு ஆதாயம் பெறுவது முதலான உரிமைகளைப் பறிக்கும் முறையில் செயல்முறை விதிகளை மாற்றியது, நீதிமன்றம், நிறுவனத்தின் செய்கை, சிறுபான்மையினரை ஒடுக்குவது மட்டுமின்றி, மிகவும் கொடுமையானது என்றும் குறிப்பிட்டு, நிறுவனத்தை அந்த உறுப்பினர்களின் பங்குகளை வாங்கிக் கொள்ளுமாறு ஆணையிட்டது.

ஆனால், சிறு பிழைகளாயிருப்பின் அவைகள் ஒடுக்கப்படும் நடத்தையாகக் கருதப்பட மாட்டாது என்று லலிதா ராஜ்ய லட்சுமி *v*. இன்டியன் மோட்டார் கோ., [Lalita Rajya Lakshmi *v*. Indian Motor Co., A.I.R. (1962) Cal. 127] என்ற வழக்கில் தெளிவாக்கப்பட்டது. அவ் வழக்கில் இயக்குநர்கள் செலவினங்களை மிகைப்படுத்தி, வருமானத்தைக் குறைத்துள்ளனர் என்றும், நிறுவனத்தின் பேருந்துகளில் (Buses) பிரயாணிகள் சீட்டு (Ticket) இல்லாமல் பயணம் செல்வது தடை செய்யப்படவில்லை என்றும், நில எண்ணை (Petrol) உபயோகப்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்தப்படவில்லை என்றும் மனுதாரர்கள் முறையிட்டனர். ஆனால், நீதிமன்றம் மேற்கூறியவைகள் அத்தனையும் உண்மையாக இருந்தாலும், அவைகளைக்கொண்டு மனுதாரர்கள் ஒடுக்கப்படுவதாகக் கருதமுடியாது என்று தெளிவாக்கியது.

**துர்நிர்வாகம்** (Mismanagement)

துர்நிர்வாகத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கீழ்க் கண்ட வழக்கைக் குறிப்பிடலாம்.

ராஜமந்திரி எலெக்ட்ரிக் சப்ளை கார்பரேஷன் v. ஏ. நாகேஸ்வர ராவ் [Rajahmundry Electric Supply Corporation v. A. Nageswara Rao, AIR (1956) S. C. 213] என்ற இவ் வழக்கில் நிறுவனத்தின் துணைத்தலைவர், நிறுவனத்தின் நிதிகளில் பெருந்தொகையைச் செலவிற்கு உபயோகப்படுத்திக் கொண்டார். அரசினருக்குத் தரவேண்டிய கடன் அதிகமாக இருந்தது. இயந்திரங்கள் கவனிப்பாரற்றுக் கெட்டுப்போயின. நீதிமன்றம் நிறுவனம் மிகவும் சீர்கேடான முறையில் நிர்வாகம் செய்யப்பட்டதாக முடிவு செய்தது.

# 18. நிறுவனங்கள் கலைக்கப்படுதல்

## (Winding up of companies)

கால வரையறையின்றி ஓடிடும் நிறுவனங்களையும் கல்லறையில் தள்ளி மூடிடவும் வழி வகுத்துள்ளது சட்டம். அதற்கான நுணுக்குறும் சட்டச் சடங்குகளைக் கண்ணுறுங்கால், ஒரு திருமணத்தைக் கலைப்பது (Divorce) எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினமானது ஒரு நிறுவனத்தைக் கலைப்பது என்று ஆங்கிலச் சட்ட வல்லுநர் 'கவர்' (Gover) கூறியுள்ளதில் மிகை ஒன்றும் இல்லை என்பது தெளிவாகும். ஒரு திருமணத்தைக் கலைப்பதற்குக் காலதாமதம் ஆவதைப்போல் ஒரு நிறுவனத்தைக் கலைப்பதற்கும் நீண்டகாலமாகிறது.

நிறுவனங்கள் கலைக்கப்படுவதற்கு மும்முறைகள் நிறுவனச் சட்டத்தின் 425ஆவது பிரிவில் வகுக்கப்பட்டுள்ளன. அவைகளாவன :

(1) கட்டாயமாகக் கலைக்கப்படுதல் (Compulsory winding up).

(2) தானாகக் கலைக்கப்படுதல் (Voluntary winding up).

(3) நீதிமன்றத்தின் மேற்பார்வையில் கலைக்கப்படுதல் (Winding up under the Supervision of the Court).

### (1) கட்டாயமாகக் கலைக்கப்படுதல்

ஒரு நிறுவனம், நீதிமன்றத்தின் ஆணையின்பேரில் கலைக்கப்படுமானால், கட்டாயமாகக் கலைக்கப்படுதல் என்று குறிப்பிடப்படுகிறது. கட்டாயமாகக் கலைக்கப்படுவதற்குரிய காரணங்கள் கீழ்க்கண்டவாறு 433ஆவது பிரிவு கூறுகிறது.

**தனிமுறைத் தீர்மானம்** (Special Resolution)

ஒரு நிறுவனம் தனிமுறைத் தீர்மானம் செய்து கலைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யலாம். ஆனால், அந்த முடிவு முடிவானதல்ல. நீதிமன்றத்தின், தீர்ப்புரிமைக்கு (Discretion) உட்பட்டது. நீதிமன்றம், நிறுவனத்தின் முடிவு முறையானதென்று முடிவு செய்தால் அதை அனுமதிக்கலாம். அவ்வாறில்லாமல், பொதுநலத்துக்கும் (Public interest) நிறுவனத்தின் நலத்துக்கும் உகந்தது அல்ல என்று கருதினால் அம் முடிவுக்குச் செவிசாய்க்காது இருக்கலாம். எனவே, இம்முறையில் நிறுவனம் கலைக்கப்படுவதை, முடிவாக முடிவு செய்வது நீதிமன்றமேயாகும்.

(b) **சட்டமுறைக் கூட்டம் கூட்டப்படாமை** (Default in holding statutory meeting)

ஒரு நிறுவனம் சட்டமுறை அறிக்கை (Statutory Report) பதிவாளருக்குத் தராமலும் அல்லது சட்டமுறைக் கூட்டம் (Statutory meeting) கூட்டாமலும் இருந்தால், அது கலைக்கப்படலாம். ஆனால், இம்முறையிலும் நிறுவனம் கலைக்கப்படுவது, நீதிமன்றத்தின் தீர்ப்புரிமைக்கு உட்பட்டது. நீதிமன்றத்திற்குத் தேவையென்று தோன்றினால், நிறுவனத்திற்குச் சட்டமுறை அறிக்கை தரவும், சட்டமுறைக் கூட்டம் கூட்டவும் வாய்ப்பு அளிக்கலாம்.

(c) **தொழிலைத் தொடங்காதிருத்தல்** (Failure to commence business)

ஒரு நிறுவனம் பதிவானதிலிருந்து ஒரு வருடத்திற்குள் தன் தொழிலைத் தொடங்காதிருந்தாலும் அல்லது அதன் தொழிலை ஒரு வருடம் வரையில் செய்யாதிருந்தாலும், அது கலைக்கப்படலாம். இம்முறையிலும் நிறுவனம் கலைக்கப்படுவது நீதிமன்றத்தின் தீர்ப்புரிமைக்கு உட்பட்டது. தகுந்தக் காரணங்களுக்காகத் தொழிலை நிறுத்தியிருந்தாலும் அல்லது தற்காலிகமாகத் தொழிலை நிறுத்தியிருந்தாலும், நிறுவனம் கலைக்கப்பட மாட்டாது. இதை முரளிதர் v. பெங்கால் ஸ்டீம்ஷிப் கம்பெனி [Murlidhar v. Bengal Steamship Co. AIR 1920 Cal. 722] என்ற வழக்கு விளக்குகிறது. இவ் வழக்கில் ஒரு நிறுவனம் ஒரு கப்பலையும் இரண்டு குடியிருப்புப் பகுதிகளையும் (Flats) தன் தொழிலில் உபயோகப்படுத்தி வந்தது. போர் மூண்ட காரணத்தால் (Out break of war) அரசினர் நிறுவனத்தின் குடியிருப்புகளைக் கட்டாயத்தின் பேரில் பறித்துக் கொண்டனர். விலை ஏற்றத்தினால், வேறு தகுதியான குடியிருப்புகள் நிறுவனம் பெற இயலாத

படியால் இதன் தொழிலே ஒரு வருடத்திற்கு மேலாக நிறுத்த வேண்டியதாயிற்று. அதன் காரணமாக நிறுவனம் கலேக்கப்பட வேண்டுமென மனு போடப்பட்டது. ஆனால், நிறுவனம் தொழிலேத் தகுந்த காரணங்களுக்கு நிறுத்த வேண்டிய நிலே ஏற் பட்டதால், அந்த மனு தள்ளப்பட்டது.

ஆனல், ஐந்து ஆண்டுகளாகியும் தொழிலேத் தொடங்காம லும், அதற்குப் பிறகும் தொடங்கும் அறிகுறியே இல்லாமலுமிருந் தால், அந்த நிறுவனம் கலேக்கப்படும்படி ஆணையிடப்படும்.

**(d) உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தவரம்புக்கும் குறைந்து போதல்** (Number of members falling below the Statutory minimum)

ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பொது நிறுவனமாயின் ஏழு பேர்களுக்குக் குறைந்தாலும் அல்லது தனி யார் நிறுவனமாயின் இரண்டு பேர்களுக்குக் குறைந்தாலும், அந்த நிறுவனம் கலேக்கப்படலாம்.

**(e) கடன்களே அடைக்க முடியாமை** (Inability to pay debts)

ஒரு நிறுவனம் தன் கடன்களே அடைக்க முடியாத நிலேயில் இருந்தால் அந்த நிறுவனம் கலேக்கப்படவேண்டும். 434ஆவது பிரிவு, ஒரு நிறுவனம் கடனடைக்க முடியாத நிலேயில் உள்ளது என்பதை எவ்வாறு கருதப்படுகிறதென்பதை விளக்குகிறது, அதாவது, (1) 500 ரூபாய்களுக்கு மேல் வரவேண்டிய கடனுக் குரியவர் நிறுவனத்திற்குக் கடனேத் திருப்பித்தரும்படி அறிக்கை செய்தும் நிறுவனம் அக்கடனே மூன்று வாரங்களில் கொடாம லிருந்தாலும், (2) நிறுவனத்தின் மேல் செய்யப்பட்ட நிறை வேற்றம் மனுவில் (Execution Petition) கடன் தொகை முழுவதும் அல்லது ஒரு பகுதி தண்டல் ஆகாமலிருந்தாலும், (3) நிறுவனம் கடனே அடைக்க முடியாத நிலேயில் உளளது என்பதை நீதிமன்றம் மன நிறைவு பெறும் வரையில் நிருபித்தலும், நிறுவனம் கடனே அடைக்க முடியாத நிலேயில் உள்ளது என்று கருதப்படும்.

மேலும், கடன் தொகை உடனே கொடுக்கப்பட வேண்டிய தாய் இருக்கவேண்டும். அது உண்மையிலேயே கொடுக்கப்பட வேண்டியதாய் இருக்கவேண்டும். கடனேத்திருப்பிக் கேட்பவர் முழு உரிமை கொண்டவராய் இருக்கவேண்டும். நிறுவனம் கடனேத் திருப்பிக் கொடுக்காததற்குத் தகுந்த காரணம் இருந் தால் மனு தள்ளுபடி செய்யப்படும். ஆனல், தக்க காரணம் இல்லாமல் நிறுவனம் கடனேத் திருப்பிக் கொடாமலிருந்தால் அது அதனுடைய இயலாத நிலேயைக் காண்பிக்கிறது. வனஸ்பதி

இன்டஸ்டரீஸ் லிமிடெட். v. ஃபர்ம் பிரபா தயாள் [Vanaspathi Industries Ltd. v. Firm Prabha Dayal A. I. R (1950) E.P. 142] என்ற இவ் வழக்கில் நிறுவனம் கொடுக்கப்படவேண்டிய கடனை மறுக்கவில்லை. ஆனால், தனக்கு எதிர் பாத்தியதை (Counter claim) உள்ளதால் கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்று கூறியது. ஆனால், நீதிமன்றம் நிறுவனத்தின் பாத்தியதை முறையானதல்லவென்று கண்டு, அதைக் கடன்கொட இயலாமைக்காகக் கலைக்கும்படி ஆணையிட்டது.

## (f) நீதியும் நேர்மையுமான காரணம் (Just and equitable ground)

நீதியும் நேர்மையுமான காரணம் என்பது மேலே குறிப்பிட்ட காரணங்களை ஒத்த காரணங்கள் அல்ல. அதாவது இனங்கொளல் விதியின்பாற்பட்டது அன்று (Not on the principle of Ejusdem Generis). நீதியும் நேர்மையுமான காரணம் என்பதன் மூலம் நீதிமன்றம் மிகவும் விரிந்த தீர்ப்புரிமை உடையதாக விளங்குகிறது (Wide discretion). எவ்வெவ்வகையான காரணங்கள் நீதியும் நேர்மையுமானதாகும் என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியாவிட்டாலும், நீதிமன்றம், அவ்வாறானவை என்று முடிவு செய்யப்பட்ட காரணங்களைக் கொண்டு, நீதியும் நேர்மையுமான காரணம் எத்தகையது என்பதை ஒருவாறு தெளிவு கொள்ளலாம் அதாவது, நீதிமன்றம் கீழ்க்கண்ட காரணங்களுக்கு நிறுவனத்தைக் கலைப்பது, நீதியும் நேர்மையுமானது என்று முடிவு செய்து உள்ளது.

(1) **முட்டு நிலை** (Dead lock): 'In re Yenirlyiye Tobacco Co. Ltd.; (1916) 2 Ch. 420; என்ற இவ் வழக்கில், நிறுவனத்தின் இரண்டே இயக்குநர்களுக்குள், கருத்து வேறுபாட்டினால், அவர்களுக்குள் பேச்சு வார்த்தை நின்று, நிறுவனத்தில் முட்டுநிலை ஏற்பட்டது. நீதிமன்றம் மேற்கூறிய காரணத்திற்கு, நிறுவனத்தைக் கலைப்பது, நீதியும் நேர்மையுமான காரணமாகும், என்று முடிவு செய்தது.

(2) **நிறுவனத்தின் முக்கிய நோக்கத்தை நிறைவேற்ற முடியாமலிருப்பது** (Loss of Substratum): 'In re German Date Coffee Co. (1882) 20 ch. D. 169' என்ற இவ் வழக்கில், ஜெர்மானியப் புனைபொருள் உரிமை கொண்டு (German Patent), பேரீச்சத்திலிருந்து, காபி தயாரிப்பதற்கு நிறுவப்பட்ட நிறுவனம், மேற்படி புனைபொருள் உரிமையைப் பெற முடியவில்லை. அதன் முக்கிய நோக்கம் நிறைவேறாததால், அதைக் கலைப்பது நீதியும் நேர்மையுமாகுமென்று நீதிமன்றம் முடிவு செய்தது.

(3) இழப்புகள் அடைவது (Incurring losses): ஒரு நிறுவனம் ஆதாயம் அடையும் அறிகுறி அறவே அன்றி, தொழிலைத் தொடர்ந்து செய்வதால் இழப்புகள் அடைவது திண்ணம் என்ற நிலையில் இருப்பின் அது கலைக்கப்படுவது, நீதியும் நேர்மையுமாகு மென்று நீதிமன்றம் முடிவு செய்யும். ஆனால், நிறுவனம் தொடர்ந்து இழப்புகளை அடையும் என்ற, வெறும் பயமும் சந்தேகமும் இருந்தால் மட்டும் போதாது. மேலும், ஒரு நிறுவனம் தொடர்ந்து இழப்புகளுற்றாலும் அது ஆதாயம் அடையும் அறிகுறி இருப்பின் அது கலைக்கப்படமாட்டாது.

(4) மோசம் செய்யும் அல்லது சட்ட விரோதமான நிறுவனங்கள் கலைக்கப்படுதல் (Fraudulent and illegal Companies): மோசடியில் முளைத்த நிறுவனங்களும் சட்டவிரோதமான நிறுவனங்களும், கலைக்கப்படுதல் நீதியும் நேர்மையுமாகும் என்பது சொல்லாமலே விளங்குவதாகும். இத்தகைய நிறுவனங்களை உடனடியாகக் கலைக்கும்படி நீதிமன்றத்தால் ஆணையிடப்படும்.

(5) சிறுபான்மையினரை ஒடுக்குதல் (Oppression of minority): ஒரு நிறுவனத்தில் பெரும்பான்மைபராயிருக்கும் பங்குநர்கள், சிறுபான்மையராயிக்கும் பங்குநர்களை அடக்கி ஒடுக்கி, அவர்களுக்கு இன்னல்களும் இடைஞ்சல்களும் விளைவித்தால் நீதிமன்றம் அந்த நிறுவனம் விலக்கப்படுவது நீதியும் நேர்மையுமாகுமென முடிவு செய்யலாம்.

ஆகவே, நிறுவனம் கட்டாயமாகக் கலைக்கப்படுவதற்கு, நீதிமன்றத்தின் பாசக்கயிறு நிறுவனத்தை நிலை சாய்ப்பதற்கு, மேற்கூறிய காரணங்களில் ஏதேனும் ஒன்று காரண காரியத்துடன் நிருபிக்கப்பட்டு நீதிமன்றம் மனநிறைவு பெற வேண்டும். நிறுவனம் மேற்படி மனநிறைவு பெற்றால், நிறுவனம் கலைக்கப்பட வேண்டுமென ஆணையிடப்படும். அந்த ஆணை, நிறுவனம் பங்குநர்கள், கடன்காரர்கள் ஆகிய அனைவரையும் கட்டுப்படுத்துவதாகும்.

**மனு போட உரிமை உடையவர்கள்**

439ஆவது பிரிவு, நிறுவனம் கலைக்கப்படுவதற்காக மனுப் போடுவதற்கு உரிமை உள்ளவர்களை உரைக்கிறது. அவர்கள் பின்வருமாறு:

(1) நிறுவனம்: நிறுவனம் கலைக்கப்படுவதற்கு, நிறுவனமே மனுச் செய்யலாம். முக்கியமாக, நிறுவனம் கலைக்கப்படுவதற்கு அது செய்த தனிமுறைத் தீர்மானம் ஒன்றுதான் காரணமென்றால், நிறுவனம்தான் மேற்படி மனுவைப்போட வேண்டும். மேலும்,

நிறுவனம் செய்த தீர்மானம் முறையானதாக இருக்க வேண்டும் (Valid). மேலும், மேற்படி தீர்மானம் இல்லாமல், பெரும்பாலான பங்குநர்கள் பொதுக்கூட்டத்தில் நிறுவனம் கலைக்கப்பட வேண்டும் என்று தங்கள் கருத்தை வெளியிட்டாலும் அது போதவே போதாது என்று புகன்றது நீதிமன்றம் (ஓரியண்டல் நேவிகேஷன் கம்பெனி v. பானராம் அகர்வாலா, [Oriental Navication Co. v. Bhanaram Agarwala, AIR (1922) Cal 365] அது போலவே, [In re Patiala Banaspathi Co., AIR 1953 Pepsu 195] என்ற வழக்கில் நிறுவனம் கலைக்கப்பட மேலாண்மை இயக்குநர் செய்த மனு, நிறுவனத்தின் தனி முறைத் தீர்மானம் இல்லாததால், செல்லாது என்று செப்பியது நீதிமன்றம்.

(2) **கடன் கொடுத்தவர் :** கடன் கொடுத்தவர் என்ருல் பிணைக்கடனுளரையும் (Secured creditor), கடனீட்டுப் பத்திரம் கொண்டவரையும் (debenture holder) குறிப்பதாகும். வருங் காலக் கடனுளரும் (Prospective creditor), உறுதி செய்ய முடியாத கடனுளரும் (contingent creditor) மனுப்போடலாம், ஆனல், அதைப் போடுவதற்கு முன்பு, நீதி மன்றத்தின் அனுமதி பெறுவதோடு, செலவுத் தொகைகளுக்குப் பிணையமும் (Furnish Security for costs). வழங்க வேண்டும் பிணைக்கடனுளர் தன் பிணையத்தைக் கைவிட்டு விடுவதாக உறுதியளிக்க வேண்டிய தில்லை. ஒரு கடனுளர், நிறுவனம் சட்டமுறை அறிக்கை தரத் தவறியது அல்லது சட்டமுறைக்கூட்டம் கூட்டவில்லை என்ற காரணத்திற்கு மனுச் செய்யமுடியாது என்று பிரிவு தெளிவுபடுத்துகிறது. மேலும், [In re Bengal Flying Club, (1966) 2 comp. L.J. 213] என்ற வழக்கில், நிறுவனம் அதன் முக்கிய நோக்கியத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளது என்ற காரணத்துக்கு மனுச்செய்ய சட்டப்படி தடை எதுவும் இல்லாவிட்டாலும் அது முறையானதல்ல என்று முடிவு செய்தது. மற்றக் கடனுளர்கள் மனுவை மறுத்தால் நீதிமன்றம் பெரும்பான்மையான கடனுளர்களின் கருத்தைக் கண்டறிய வேண்டும். மேலும், நீதிமன்றம் பெரும்பான்மையோர் கருத்துக்குக் கட்டுப்பட்டதல்ல. நிறுவனத்திற்கு எது உகந்ததோ, அதைச் செய்வதற்கு நீதிமன்றம் ஆணையிடலாம். கடன் கொடுத்தவர்கள் ஒருவராகவோ அல்லது பலராகவோ மனுச் செய்யலாம்.

(3) **பங்குக் கடப்பாட்டாளர்** (Contributory) **:** பங்குக் கடப்பாட்டாளர்கள் ஒருவராகவோ அல்லது பலராகவோ மனுச் செய்யலாம். பங்குத் தொகை முழுவதும் செலுத்தப்பட்டிருந்தாலும், அந்தப் பங்குநர், பங்குக் கடப்பாட்டாளராகக் கருதப்

படுவதோடு, நிறுவனம் கலைக்கப்படுவதற்கு மனுப்போடவும் உரிமை உடையவர். நிறுவனத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்த வரம்புக்கும் குறைந்துவிட்டது என்ற காரணமாயின், பங்குக் கடப்பாட்டாளர் எவர் வேண்டுமாயினும் மனுப் போடலாம். ஆனால், வேறு காரணங்கள் காட்டபடுமாயின், பங்கு, தனக்கு முதன் முதலாக வழங்கப்பட்டதென்றுவது அல்லது நிறுவனம் கலைக்கப்படுவதற்குப் பதினெட்டு மாதங்களுக்குள், குறைந்தது ஆறு மாதங்களுக்குப் பதிவு செய்யப்பட்ட பங்குநராய் இருந்தாரென்றும் நிரூபிக்கவேண்டும். சமீபத்தில் முடிவு செய்யப் பட்ட [Re Gathapordo Ltd., (1969) 2 All. E R 344], என்ற வழக்கில் 1967ஆம் ஆண்டு ஜூன் மாதம் கைமாற்றம் செய்யப் பட்ட பங்கு, 1968ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தான் நிறுவனத்தால் பதிவு செய்யப்பட்டது. பின்னர், நிறுவனம் கலைக்கப் படுவதற்கு அந்தப் பங்குநர், 1968ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மனுச் செய்ய அருகதை அற்றவர் என்று நீதிமன்றம் தெளிவுறுத்தியது. ஆனால், பங்கை வழங்குவதற்கு ஆணையிட்ட பிறகும் நிறுவனம் அவ்வாறு செய்யாவிடில், அதனால் பாதிக்கப்பட்டவர் நிறுவனம் கலைக்கப்படுவதற்கு மனுப்போட உரிமை உள்ளவர் என்று [In re Patent Steam Engines Co., (1878) 8 Ch. D 464] என்ற வழக்கில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

*(4)* நிறுவனம், கடனுளர்கள், பங்கு கடப்பாட்டாளர்கள் ஆகிய அனைவரும் ஒன்றாகவோ அல்லது வெவ்வேறாகவோ மனுப் போடலாம்.

**(5) பதிவாளர்** (Registrar): நிறுவனம் கலைக்கப்படுவதற்கு 433-ஆவது பிரிவில் கூறப்பட்ட முதல் காரணம் தவிர, மற்ற எல்லாக் காரணங்களுக்கும், பதிவாளரும் மனுப்போடலாம். ஆனால், அவ்விதம் மனுச் செய்வதற்கு முன், பதிவாளர் மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். மத்திய அரசு மேற்படி அனுமதியை, நிறுவனத்திற்கு அதை மறுத்து முறையீடு செய்வதற்குத் தக்க வாய்ப்பு வழங்காமல் தரக்கூடாது. மேலும், நிறுவனத்தின் ஐந்தொகைக் குறிப்பிலிருந்து (Balance sheet) அல்லது சிறப்பு தணிக்கையாளர் அல்லது பார்வையாளர்கள் அறிக்கைகளிலிருந்தும் அதன் செல்வ நிலையை அறிந்திருந்தாலொழிய, நிறுவனம் கடனடைக்க முடியாத நிலையில் உள்ளதென்று மனு போடக் கூடாது.

***(6) மத்திய அரசு:*** 243ஆவது பிரிவின்படி, நிறுவனத்தை விசாரணை செய்வதற்கு அமர்த்தப்பட்ட பார்வையாளர்கள், (Inspectors) அறிக்கைகளிலிருந்து நிறுவனம் மோசடியாகவோ,

அல்லது சட்ட முரணை நோக்கங்களில் நடத்தப்படுவதாகவோ மத்திய அரசு அறிந்தால் அது நிறுவனம் கலைக்கப்படுவதற்கு மனுப் போட எவரையும் நியமிக்கலாம்.

**நீதி மன்றத்தின் உளத்தேர்வு** (Discretion of the Court)

நிறுவனம் கலைக்கப்படுவதற்காகப் போடப்பட்ட மனுவை நீதிமன்றம் தீர விசாரித்து மேற்படி மனுவைச் செலவு கொடுத்தோ அல்லது கொடுக்காமலோ தள்ளி விடலாம், அல்லது விசாரணையைத் ஒத்தி வைக்கலாம் அல்லது இடைக்கால ஆணை (Interium order) போடலாம்; அல்லது நிறுவனம் கலைக்கப் படும்படி ஆணை போடலாம். மேற்கூறியவைகளில் எதையும் நீதி மன்றம் தன் உளத் தேர்வின்படி (in its discretion) செய்யலாம்.

**நிறுவனம் கலைக்கப்படுவதின் ஆரம்பம்** (Commencement of Winding up)

நிறுவனம் கலைக்கப்படுவதின் ஆரம்பம், நீதிமன்றம் ஆணை யிட்ட தேதியிலிருந்தல்ல, மனுப் போடப்பட்ட தேதியி லிருந்து அது ஆரம்பமாவதாகக் கருதப்படுகிறது. ஆனால், மனுப் போடுவதற்கு முன்பாக. நிறுவனம் தானாகக் கலைக்கப்படுவதற்குத் (Voluntary Winding up) தீர்மானம் செய்திருந்தால், அவ்வாறு தீர்மானம் செய்யப்பட்ட தேதியிலிருந்து நிறுவனம் கலைக்கப் படுவது ஆரம்பமாகிறது என்று கருதப்படும்.

**கலைக்கப்பட இட்ட ஆணையின் விளைவுகள்** (Consequences of Winding up order)

(1) முதற்கண் குறிப்பிடத்தக்கது, நிறுவனம் கலைக்கப்பட இட்ட ஆணை நிறுவனத்தின் மரணச் சங்கென (Death Knell) முழங்கி, கலைப்பு அதிகாரி, பதிவாளர், மனுதார், கடனாளர், பங்குக் கடப்பாட்டாளர் முதலானோர் செவிகளில் விழுகிறது. உடனே அவரவர் தத்தமக்குரிய கடமைகளைச் செய்ய கடமைப் பட்டவராயுள்ளனர். அதாவது, நிறுவனம் நியமிக்கப்பட் டதை நீதிமன்றம் உடனே கலைப்பு அதிகாரிக்கும் (Official Liquidator), பதிவாளருக்கும் தெரிவிக்கிறது. உடனே மனு தாரர், ஆணையிடப்பட்ட முப்பது நாட்களுக்குள் ஆணையின் சான்றிட்ட நகலைப் (Certified copy) பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். உடனே பதிவாளரும் மேற்படி ஆணையைப் பற்றிய குறிப்பைத் தன் பதிவேட்டில் குறிப்பிட்டு, மேலும் அவ் வாறு ஆணையிடப்பட்டதை அரசிதழில் (Official Gazettee) விளம் பரம் செய்ய வேண்டும்.

(2) இரண்டாவதாக, நிறுவனம் கலைக்கப்பட இட்ட ஆணை, நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவருக்கும் வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக, விடுத்த அறிக்கையாகும்.

(3) மூன்றாவதாக, நிறுவனம் கலைக்கப்பட இட்ட ஆணை கடனாளர்கள், பங்கு கடப்பாட்டாளர்கள் ஆகிய எல்லோருடைய நலனுக்காக இடப்பட்டதாகும்.

(4) நான்காவதாக, நிறுவனம் கலைக்கப்பட ஆணையிட்ட பிறகு, நிறுவனத்துக்கு எதிராக, நீதிமன்றத்தின் அனுமதியின்றி யாதொரு வழக்கும் அல்லது சட்ட முறையான நடவடிக்கையும் எடுக்க முடியாது. மேலும், ஆணையிடப்பட்ட தேதியில், நிறுவனத்திற்கு எதிராக, யாதொரு வழக்கும் (Suit) அல்லது சட்ட முறையான நடவடிக்கையும் (Legal Proceeding), நிலுவையில் இருந்தால் (Pending), அதாவது முடிவடையாமல் இருந்தால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி அவைகளை மேலும் தொடர்ந்து எடுக்க முடியாது. இந்த விளைவுகளால், நிறுவனத்தின் பணமும், சொத்துகளும் தாறுமாறாகப் பல்வேறு வழக்குகளிலும், சட்ட முறை நடவடிக்கைகளிலும் செலவழிக்கப்படாமல் சேகரிக்கப்பட்டு எல்லோருடைய நன்மைக்காகவும் பயன் படுத்தப்படுகின்றன.

(5) இறுதியாக, நிறுவனம் கலைக்கப்பட இட்ட ஆணையுடன், சட்டத்தின் இரும்புக்கரங்களைக் கொண்ட கலைப்பு அதிகாரி (Official Liquidation), நிறுவனத்தின் இறுதிச் சடங்குகளை செய்யத் தொடங்குகிறார். ஆணையிட்ட உடனேயே அவர் அதற்கு சட்ட முறைப்படி ஆவனசெய்ய ஆரம்பிக்கிறார்.

**கலைப்பு அதிகாரிகள்** (Official Liquidators)

ஒவ்வொரு உயர்நீதிமன்றத்துடன் இணைந்து வேலை செய்வதற்கு ஒரு கலைப்பு அதிகாரி மத்திய அரசினரால் அமர்த்தப்பட வேண்டும். அவ்விதமே மாவட்ட நீதிமன்றங்களுடன் (District Courts) இணைந்து வேலை செய்வதற்கு ஒரு கலைப்பு அதிகாரி (Official Receiver) அமர்த்தப்படுகிறார். கலைக்கப்படும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சட்டப்படி இறுதிச் சடங்குகளைச் செய்வது இவர்களுடைய பதவிகளைச் சார்ந்த கடமைகளாகும். மனு முடிவு செய்யப்படு முன், நிறுவனத்துக்குத் தக்க வாய்ப்பு அளித்த பிறகு, தற்காலிகக் கலைப்பு அதிகாரி (Provisional Liquidator) நியமிக்கப்படுவார்.

கலைப்பு அதிகாரிகள், நீதிமன்றத்தின் கட்டளைகளின்படி செயலுறவேண்டும். கலைப்பு அதிகாரியின் பணிகளுக்காகக் குறிப்

பிடப்பட்ட கட்டணம், மத்திய அரசுக்குச் செலுத்தப்பட வேண்டும். கலைப்பு அதிகாரி அமர்த்தப்பட்டதிலும் அல்லது அவர் தகுதிகளிலும் குறைகள் இருந்தாலும், அவர் சட்டத்தின் சார்பாகச் செய்த செயல்கள் யாவும் சட்டப்படி செவ்வையாகச் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

**நிறுவனத்தின் விவரப்பட்டி** (Statement of Affairs of the Company) *(பி. 454)*

நிறுவனம் கலைக்கப்படுவதற்கு ஆணையிடப்பட்ட 21 நாட்களுக்குள், நிறுவனத்தின் இயக்குநர் அல்லது மேலாளர் அல்லது செயலாளர் அல்லது ஒரு தலைமை அதிகாரி, அல்லது, நீதிமன்றத்தின் கூட்டாணைப்படி, கலைப்பதிகாரியால் கோரப்படுபவர், நிறுவனத்தின் விவகாரங்களைக் கொண்ட ஒரு விவரப்பட்டியல் தயாரித்து, கலைப்பு அதிகாரியிடம் தரவேண்டும். மேற்படி விவரப்பட்டி கீழ்க்கண்ட விவரங்களைத் தெளிவாகக் காண்பிக்க வேண்டும்.

(1) நிறுவனத்தின் சொத்துகள் கையிருப்புப் பணம், வங்கியில் உள்ள பணம், மாற்று முறையாவனங்கள் (Negotiable securities) முதலானவை தனித் தனியே காட்டப்பட வேண்டும்.

(2) நிறுவனத்தின் கடன்களும், பொறுப்புகளும்.

(3) கடனுளர்களின் பெயர், முகவரி, முதலான விவரங்களும் அதில் பிணைக் கடன்கள் (Secured debts), பிணையில்லாக் கடன்கள் எவ்வளவு என்பதையும் காட்டப்பட வேண்டும்.

(4) நிறுவனத்திற்குச் சேரவேண்டிய கடன் தொகைகளும், கடன் கொடுக்க வேண்டியவர்களின் பெயர், முகவரி, முதலானவைகளும். அதில் எவ்வளவு தொகை கைவரக்கூடும் (realised) என்பதைத் தெளிவாகக் காட்டவேண்டும்.

(5) கோரப்பட்ட வேறு விவரங்கள்.

மேற்படி விவரப் பட்டியை 21 நாட்களுக்குள் அல்லது கலைப்பு அதிகாரியால் மூன்று மாதத்திற்கு மேற்படாமல் நீடிக்கப்பட்ட காலத்திற்குள் தரப்படவேண்டும். மேற்படி விவரப் பட்டியலைத் தயாரித்தவர்களுக்கு, அதற்கு உண்டான செலவுத் தொகைகளை நிறுவனத்தின் பணத்திலிருந்து கலைப்பு அதிகாரி கொடுக்கலாம். கடனுளர்களுக்கும், பங்குக் கடப்பாட்டாளர்களுக்கும், குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தினால், மேற்படி விவரப் பட்டியலைப் பார்வையிடவும், அதன் நகலை எடுத்துக் கொள்ளவும் அனுமதியுண்டு.

**கலைப்பு அதிகாரியின் அறிக்கை** (Report by Official Liquidator) *(பி. 455)*

கலைப்பு அதிகாரி, விவரப்பட்டி கிடைக்கப் பெற்றவுடன் வெகு விரைவில், ஆணையிட்ட ஆறு மாதத்திற்குள், அல்லது அதற்கு மேலும் நீதிமன்றம் நீடித்த காலத்திற்குள், நீதிமன்றத் திற்குக் கீழ்க்கண்ட அறிக்கை அனுப்ப வேண்டும் :

(1) நிறுவனம் வழங்கிய பங்குத் தொகையும், அதில் செலுத் தப்பட்ட தொகையும், நிறுவனத்தின் சொத்துகளும், பொறுப்பு களும் காட்டப்பட வேண்டும்.

(2) நிறுவனம் நடைபெறவில்லை என்றால், அது தவறியதற் குரிய காரணங்கள் காட்டப்பட வேண்டும்.

(3) நிறுவனம் தவறியதற்கு, நிறுவனம் தொடக்கப்பட்டது அல்லது நிறுவப்பட்டவைகளைப் பற்றி மேலும் விசாரணை தேவையா என்பதைப் பற்றி அவர் கருத்து தெரிவிக்க வேண்டும்.

**கலைப்பு அதிகாரி நிறுவனத்தின் சொத்துகளுக்குக் காப்பாளர்** (Custodian of Company's Property).

நிறுவனம் கலைக்கப்பட ஆணையிட்டவுடன், கலைப்பு அதிகாரி நிறுவனத்தின் எல்லாச் சொத்துகளையும் கைவசம் கொள்ள வேண்டும். நிறுவனத்தின் சொத்துகள் வெவ்வேறு இடங்களில் இருந்தால் கலைப்பு அதிகாரி, மாகாணக்-குற்றத்துறை தலைமை நீதி பதியையும் (Chief Presidency Magistrate), மாவட்டக் குற்றத் துறை நீதிபதிகளையும் (District Magistrates), அவரவர் அதிகார வரம்புள்ள இடங்களில் (in their jurisdiction) உள்ள சொத்து களைக் கைவசம் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளலாம். அதன் பேரில், மேற்படி குற்றத்துறை நீதிபதிகள், மேற்படி சொத்துகளை கைப்பற்றி, அவைகளைக் கலைப்பு அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். மேற்படி சொத்துகளைக் கைப்பற்ற, குற்றத்துறை நீதிபதிகள், அதற்குகந்தபடி தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி அவைகளைக் கைப்பற்றலாம்.

**கலைப்பு அதிகாரியின் அதிகாரங்கள்** (Powers of the Official Liquidator)

ஒரு கலைப்பு அதிகாரி, நீதி மன்றத்தின் அனுமதியுடன் கீழ்க் கண்ட அதிகாரங்களை வழங்கலாம் :

(1) உரிமையியல், குற்றவியல் பற்றிய வழக்கு (Suit) அல்லது குற்ற வழக்குத் தொடர்பு (Prosecution) அல்லது சட்டமுறை

நடவடிக்கை (Legal proceeding), நிறுவனத்தின் பெயரால் அல்லது நிறுவனத்திற்காகப் போடுவது அல்லது எதிர்ப்பது.

(2) நிறுவனம் கலேக்கப்படுவதை நல்ல முறையில் செய்து முடிக்கத் தேவையான அளவுக்கு நிறுவனத்தின் தொழிலைத் தொடர்ந்து நடத்துவது.

(3) அசையும் பொருள்கள், அசையாப் பொருள்களை (Movables and Immovables) விற்பது. அவைகளைப் பொது ஏலத்தில் அல்லது தனி ஒப்பந்தங்களால் விற்பதும், அவை முழுவதையும் அல்லது பகுதிகளாக உரிமை மாற்றம் செய்வது.

(4) நிறுவனத்தின் சொத்துகளின் பேரில் தேவைப்படும் கடன் வாங்குவது.

(5) நிறுவனத்தின் விவகாரங்களை முடிப்பதற்கும் அதன் சொத்துகளைப் பகிர்வதற்கும் தேவையான எல்லாச் செயல்களையும் செய்யலாம்.

நீதிமன்றம் மேற்படி அதிகாரங்களைத் தன் அனுமதியின்றியே செய்யும்படி ஆணையிடலாம்.

கலைப்பு அதிகாரி நீதிமன்றத்தின் அனுமதியின்றிச் செய்யக் கூடிய அதிகாரங்கள் பின்வருவனவாகும் :

(1) நிறுவனத்தின் பெயரால் எல்லாச் செயல்களையும் செய்வது, ஒப்பாவணம், மற்றும் பிற ஆவணங்களை எழுதிக் கொடுப்பது, பற்றுச்சீட்டுகள் (Receipts) வழங்குவது, தேவைப் படும்போது நிறுவனத்தின் முத்திரையை உபயோகிப்பது.

(2) பதிவாளர் அலுவலகத்தில் நிறுவனத்தைப்பற்றிய பதிவுகளையும், விவர அறிவிப்புகளும் பார்வையிடுவது.

(3) நொடிப்பு நிலையுற்ற பங்குக் கடப்பாட்டாளருக்குச், சேரவேண்டியவைகளைப் பெறுவது.

(4) நிறுவனத்தின் பெயரால் மாற்று முறையாவணம் எழுதிக் கொடுப்பது, அல்லது ஒப்புக் கொள்வது அல்லது அதை உரிமை மாற்றம் செய்வது.

(5) தன் பதவியின் பெயரால், இறந்துவிட்ட பங்குக் கடப் பாட்டாளரின் சொத்துகளுக்கு நிர்வாக உரிமைப் பத்திரம் பெறுவதும் (Letters of administration), அந்தச் சொத்துகளில் இருந்து வரவேண்டிய பணத்தைத் தண்டல் செய்வதும்.

(6) தன்னல் செய்ய முடியாததைச் செய்வதற்கு முகவரை Agent) அமர்த்துவது.

கலைப்பு அதிகாரி மேற்கூறிய அதிகாரங்களை நீதிமன்றத்துக்குட் பட்டுப் பயன்படுத்த வேண்டும். பாதிக்கப்படும் பங்குக் கடப் பாட்டாளரும், கடனுளரும் நீதிமன்றத்திற்கு முறையிடலாம். கடனுளர்களும் பங்குக் கடப்பாட்டாளர்களும் செய்யும் தீர்மானங்களைக் கருத்தில் கவனமாகக் கொண்டு பணியாற்ற வேண்டும். அதற்காக, அவர்கள் கூட்டங்களை, அவசியப்படும் போது கூட்டி, அவர்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் கருத்துப்படி செயலாற்ற வேண்டும்.

கலைப்பு அதிகாரி கலைக்கப்படும் நிறுவனத்தின் வரவு செலவு களை வருடத்திற்கு, இருமுறை நீதிமன்றத்துக்கு வழங்க வேண்டும். மேற்படி வரவு செலவுகளைத் தணிக்கை செய்யும்படி நீதிமன்றம் செய்கிறது. கலைப்பு அதிகாரி, அச்சிடப்பட்ட வரவு செலவுக் கணக்குகளை ஒவ்வொரு கடனுளருக்கும் பங்கு கடப்பாட் டாளருக்கும் அனுப்பி வைக்கவேண்டும். மேலும், பதிவாள ருக்கும் ஒரு நகல் அனுப்பப்பட வேண்டும்.

**மத்திய அரசின் அதிகாரங்கள்**

மத்திய அரசுக்கு, கலைப்பு அதிகாரியின் நடத்தைகளைக் கண்காணிக்கவும், கவனிக்கவும் அதிகாரமுண்டு. கலைப்பு அதிகாரி நேர்மையாக நடக்காவிட்டாலும், சட்டப்படி செய்யா விட்டாலும், கடனுளர் அல்லது பங்குக் கடப்பாட்டாளர்களால் குற்றம் சாற்றப்பட்டாலும், மத்திய அரசு அவைகளைத் தீர விசாரித்து அவைகளுக்கு ஆவன செய்ய அதிகாரம் உண்டு.

**பார்வைக் குழு** (Committee of Inspection)

கலைப்பு அதிகாரியுடன் இணைந்து வேலை செய்யவும், அவர் செயல்களைப் பார்வையிடவும், நீதிமன்றம் ஒரு பார்வைக்குழு அமர்த்தும்படி ஆணையிடலாம். அவ்வாறு ஆணையிட்ட இரண்டு மாதத்திற்குள் கலைப்பு அதிகாரி குழுவின் உறுப்பினர்களை நிர்ண யிக்கக் கடனுளர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். மேற்படி கூட்டம் நடந்த 14 நாட்களுக்குள் கடனுளர்களின் கருத்துகளைக் கருதுவதற்குப் பங்குக் கடப்பாட்டாளர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். இருதரப்பினருக்கும் கருத்து வேறுபட்டால், கலைப்பு அதிகாரி, நீதிமன்றத்தை, முடிவு செய்யும்படி கோரலாம்.

பார்வைக் குழு 12 பேர்களுக்கு அதிகமாகாத உறுப்பினர் களைக் கொண்டதாய் இருக்க வேண்டும். குழுவிற்கு, கலைப்பு அதிகாரியின் கணக்குகளைப் பார்வையிட அதிகாரமுண்டு. குழு அவ்வப்போது தேவைப்படும்போது கூடலாம். கலைப்பு அதிகாரி அல்லது குழுவின் உறுப்பினர் வேண்டும்போதும் கூட்டம் கூட்டப்

படுகிறது. கூட்டத்திற்கு குறைவெண் வரம்பு (Quorum), உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு அல்லது இரண்டு பேர் இவைகளில் எது அதிகமோ அதுவேயாகும். குறைவெண் வரம்பின்றி, கூட்டம் நடத்தக்கூடாது. குழு பெரும்பான்மையோர் கருத்துப்படி செயலாற்றவேண்டும். உறுப்பினர் பதவியிலிருந்து விலக, கலேப்பு அதிகாரிக்கு எழுத்து மூலம் அறிக்கை அனுப்பவேண்டும். ஓர் உறுப்பினர் நொடிப்பு நிலேயுற்ருலும், கடனுளருடன் ஒத்திசைவு செய்தாலும் (Compounding), தொடர்ச்சியாக அனுமதியின்றி 5 கூட்டங்களுக்கு வராவிட்டாலும், பதவியிலிருந்து விலகுகிருர். மேலும், ஓர் உறுப்பினர் எந்தத் தரப்பினரின் பிரதிநிதியோ (Representative) அவர்களால் விலக்கப்படலாம். அவ்வாறு விலக்கப்படுவதற்கு அக் கூட்டத்தின் தீர்மானமும், அந்தத் தீர்மானத்தைப்பற்றி ஏழு நாட்களுக்கு முன் செய்யப்பட்ட அறிக்கையும் தேவையாகும். காலியான பதவிகளே, அப் பதவியை நிரப்புவதற்குரிய கடனுளர் அல்லது பங்குக் கடப்பாட்டாளர்கள் கூட்டத்தில் நிரப்பப்படுகின்றன. குழுவில் பதவிகள் காலியிருந்தாலும், மீதியுள்ள உறுப்பினர்கள் இரண்டு பேர்களுக்குமேல் இருந்தால், அவர்கள் தொடர்ந்து செயலாற்றலாம். மேலும், கலேப்பு அதிகாரி அப்போது உள்ள நிலேமைகளேக் கருத்தில் கொண்டு, காலியான பதவிகளே நிரப்பவேண்டியதில்லே என்று கருதிஞல், அவ்வாறே அவ் விடங்களே நிரப்பாமல் விட்டுவிடலாம்.

### நீதிமன்றத்தின் பொதுவான அதிகாரங்கள் (General Powers of the Court)

நிறுவனத்தின் சொத்துகளே விரைவாகவும் சிறப்பாகவும் சேகரித்து, பாதுகாத்து, அவைகளே நிறுவனத்தின் கடன்களேயும், பொறுப்புகளேயும் அடைப்பதற்குப் பயன்படுத்துவதற்கு நீதிமன்றத்துக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. அதற்காகப் பங்குக் கடப்பாட்டாளர்கள் பட்டியல் தயாரிக்கவும், உறுப்பினர்கள் பதிவேட்டைத் திருத்தவும், பங்குகளில் மீதி செலுத்தப்பட வேண்டிய தொகைகளேக் கோரவும் நீதிமன்றம் அதிகாரம் கொண்டுள்ளது. மேற்கூறியவைகளால் நீதிமன்றத்தின் ஆணே, மேன்முறையீடு (Appeal) விதிகளுக்குட்பட்டு முடிவானதாகும்.

### ஈடு செய்து கொள்ளல் (Right of set off)

நிறுவனம் வரம்பற்ற பொறுப்புள்ளதாயின் (unlimited Company) பங்குக் கடப்பாட்டாளர் பங்குகளில் செலுத்த வேண்டிய தொகையைத் தனக்கு நிறுவனத்திடமிருந்து தனிப்பட்ட முறையில் அல்லது ஒப்பந்தத்தின் வாயிலாக வரவேண்டிய தொகையுடன் ஈடுசெய்து கொள்ள நீதிமன்றம் அனுமதிக்கலாம்.

ஆனால், அவர் தனக்கு நிறுவனத்திடமிருந்து, வரவேண்டிய பங்கு ஆதாயம் அல்லது ஆதாயத்தைத் தான் நிறுவனத்திற்குத் தர வேண்டிய தொகையுடன் ஈடுசெய்ய அனுமதிக்கமாட்டார். நிறுவனம் வரம்புற்ற பொறுப்புள்ளதாயின் (Limited liability), அதன் இயக்குநர்கள், மேலாண்மை முகவர், செயலாளரும் பொறுப்பாளரும், மேலாளரும் வரம்பற்ற பொறுப்புள்ளவர்களாயின் அவர்களுக்கும் அவ்விதமே ஈடுசெய்து கொள்ள, நீதிமன்றம் அனுமதிக்கலாம். நிறுவனம் வரம்புற்றதாயினும் அல்லது வரம்பற்றதாயினும், அதன் கடன்கள் யாவும் அடைபட்ட பிறகு, பங்குக் கடப்பாட்டாளர்களுக்கு நிறுவனத்திடமிருந்து வரவேண்டிய தொகை எதுவாயிருந்தாலும் அதை அவர்கள் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையுடன் ஈடு செய்து கொள்ளலாம். மேலே குறிப்பிட்டதைத் தவிர, மற்றபடி, பங்கு கடப்பாட்டாளர்கள் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையைத் தங்களுக்கு வரவேண்டிய கடனுடன் ஈடு செய்து கொள்ளாமல் செலுத்த வேண்டும்.

**சொத்துகளை ஒப்படைத்தல்**

நிறுவனத்தின் பங்கு கடப்பாட்டாளர், நம்பகர் (Trustee), பேணுநர் (Receiver), வங்கி (Bank), முகவர் (Agent) அல்லது அதிகாரி எவரேனும் நிறுவனத்தின் பணத்தையோ, சொத்துகளையோ அல்லது கணக்குப் புத்தகங்களையோ கைவசம் வைத்திருந்தால், அவைகளை உடனே கலைப்பதிகாரியிடம் ஒப்படைக்கும்படி ஆணையிடலாம். மேலும், ஓர் அதிகாரியோ அல்லது வேறு நபரோ நிறுவனத்தின் சொத்துகளை வைத்திருப்பதாக அறிந்தாலும் அல்லது ஐயப்பட்டாலும், அல்லது நிறுவனத்திற்குக் கடன் பட்டுள்ளதாகக் கருதினாலும், அல்லது நிறுவனத்தின் சொத்துகளையும் அதன் விவகாரங்களையும் அறிந்தவர் என்றாலும், நீதிமன்றம் அவருக்கு அழைப்பாணை (Summons) அனுப்பி, ஆணையுறுதி (Oath) செய்யச் சொல்லி விசாரிக்கலாம். நீதிமன்றம் அவர் கைவசம் உள்ள சொத்துகளையோ அல்லது புத்தகங்களையோ கொணரும்படி கேட்கலாம். விசாரணைக்கு வருவதற்கு அவருக்குண்டான பயணச் செலவுகளை நீதிமன்றம் வழங்கலாம். மேற்படி விசாரணையில், அவரிடம் நிறுவனத்தின் சொத்துகளோ அல்லது பணமோ இருப்பதாகக் கண்டால், அவைகளை உடனே, கலைப்பு அதிகாரியிடம், ஒப்படைக்கும்படி ஆணையிடலாம். நீதிமன்றத்தின் மேற்படி ஆணைகளை அவர் மீறினால் நீதிமன்றம் சட்டப்படி அவரை தண்டிக்கலாம்.

**பொதுவிசாரணை** (Public Examination)

நிறுவனத்தை உண்டாக்கியதிலும் உருவாக்கியதிலும் (in the Promotion and formation) எவரேனும் மோசடி செய்துள்ளதாக, கலைப்பு அதிகாரி தன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தால், நீதி மன்றம் அவரைப் பொதுவிசாரணைக்கு (Public Examination) வருமாறு கட்டளையிட்டு, அவரைப் பொதுவிசாரணை செய்ய லாம். விசாரணை நிறுவனம் உண்டாக்கியதையும் உருவானதைப் பற்றியும், அவருடைய நடத்தையும் நடவடிக்கைகளைப் பற்றியதாக இருக்கவேண்டும்.

இச்சட்டத்தின்படி பொது விசாரணை செய்வது ஒரு குற்ற விசாரணை அல்ல. ஆகையால் இந்த விசாரணைக்கு இந்திய அரசியல் சட்டத்தில் (Indian Constitution) தடை ஏதும் கிடையாது.

பொது விசாரணையில் கலைப்பு அதிகாரியும் பங்கு ஏற்றுக் கொள்ள வேண்டும். நீதிமன்றம் தனக்குகந்தது எனக்கருதும் கேள்விகளைக் கேட்கலாம். விசாரணை ஆணையுறுதியின் பேரில் (Oath) நடக்க வேண்டும். விசாரிக்கப்படுபவர் தமக்காக ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ளலாம். கடனாளர்களும், பங்குக் கடப்பாட்டாளர்களும், தாங்களே அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாக விசாரணையில் பங்கேற்றுக் கொள்ளலாம். நீதி மன்றம் கேட்கும் கேள்விகளுக்கு அல்லது அனுமதிக்கும் கேள்விகளுக்கு விசாரிக்கப்படுபவர் பதிலளிக்க வேண்டும். விசாரணையில் கூறப் பட்டவைகள் எழுதப்பட்டு, விசாரிக்கப்பட்டவருக்குப் படித்துக் காட்டப்பட்டு அவர் கையெழுத்திடப்படவேண்டும். அதற்குப் பிறகு அதை அவருக்கு விரோதமான சான்றாக உபயோகப் படுத்தலாம்.

**நிறுவனம் கலைக்கப்படுதல்** (Dissolution of the Company)

நிறுவனம் கலைக்கப்படுவது போதுமான அளவுக்குச் செய்தாகி விட்டது என்றாலும் அல்லது அதை மேலும் தொடர்ந்து செய்வ தற்கு நிறுவனத்திடம் பணம் இல்லை என்றாலும், அல்லது அது இருக்கும் சூழ்நிலைகளில் வேறு தகுந்த நீதியும் நேர்மையுமான காரணமிருந்தாலும், நீதிமன்றம், நிறுவனம் கலைக்கப்பட்டது என்று ஆணையிடலாம். அந்த ஆணைதான் நிறுவனத்தைக் கலைத் துச் சமாதியில் இறுத்துகிறது. ஆணையிட்ட முப்பது நாட் களுக்குள், கலைப்பதிகாரி ஆணையின் நகலைப் பதிவாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். அதைப்பெற்ற பதிவாளர் உடனே அதைத் தன் பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும். இவைகளே, கலைப்பதிகாரியும், பதிவாளரும் நிறுவனத்திற்குச் செய்யும்

இறுதிச் சடங்குகளாகும். அதோடு அந்த நிறுவனம் தனக்குப் பொல்லாங்கு செய்த இந்த உலகில் இருந்து விடைபெறுகிறது.

## (2) தானாகக் கலைக்கப்படுதல்
### (Voluntary Winding up)

ஒரு நிறுவனம் தானாகவே கலைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யலாம். ஒரு நிறுவனம் குறிப்பிட்ட காலத்திற்கு நடைபெறும் என்று செயல்முறை விதிகளில் குறிப்பிட்டிருந்தால், அக்காலம் முடிந்ததும், நிறுவனம் கலைக்கப்படலாம். மேலும், செயல் முறை விதிகள், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி ஏற்பட்டால் நிறுவனம் கலைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டால், மேற்படி நிகழ்ச்சி ஏற்பட்டவுடன் நிறுவனம் கலைக்கப்படலாம். இவ்விரண்டு காரணங்களுக்கும் நிறுவனம் கலைக்கப்பட ஒரு பொதுத் தீர்மானம் செய்தால் போதும். மற்றபடி நிறுவனம் எப்போது வேண்டு மானாலும் ஒரு தனிமுறைத் தீர்மானம் செய்து, கலைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யலாம்.

நிறுவனம் கலைக்கப்படுவது தீர்மானம் செய்த தேதியிலிருந்து ஆரம்பமாகிறது. தீர்மானம் செய்த 14 நாட்களுக்குள், நிறுவனம், அரசிதழிலும் (Official Gazettee), அந்த நிறுவனத்தின் அலுவலகமுள்ள மாவட்டத்தின் வட்டாரத்தில் புழக்கத்திலிருக்கும் செய்தித்தாளிலும், மேற்படி தீர்மானத்தை விளம்பரம் செய்ய வேண்டும். நிறுவனத்தின் கூட்டுருமம் நிலையும் (Corporate Status) அதிகாரங்களும் அது இறுதியாகக் கலைக்கப்படும்வரை தொடரும். ஆனால், அது தொழிலை மேலும் தொடர்ந்து செய்வது, நிறுவனம் கலைக்கப்படுவதற்குத் தேவையான அளவேயாகும்.

**செல்வநிலை விளம்பல்** (Declaration of Solvency)

நிறுவனம் தானாகக் கலைக்கப்படுவது இரு வகைப்படும். முதலாவது, உறுப்பினர்களால் கலைக்கப்படுவது. இரண்டாவது, கடனாளர்களால் கலைக்கப்படுவது. ஒரு நிறுவனம், சட்ட முறைப்படி செல்வநிலை விளம்பினால், அது உறுப்பினர்களால் கலைக்கப்படுதலாகும் (Members Voluntary Winding up). அவ்வாறு செல்வநிலை விளம்பாவிடில் அது கடனாளர்களால் கலைக்கப்படுவதாகும் (Creditors Voluntary Winding up).

செல்வநிலை விளம்பல், இயக்குநர்குழுக் கூட்டத்தில், பெரும்பான்மையான இயக்குநர்களால் செய்யப்பட்டு, ஆணையுறுதிப்

பத்திரத்தால் உறுதிமொழி அளிக்க வேண்டும் (Verified by an affidavit). அவர்கள் நிறுவனத்தின் விவகாரங்களை ஆராய்ந்த பிறகு நிறுவனத்திற்குக் கடன்கள் இல்லை என்று அல்லது நிறுவனத்தின் கடன்கள் மூன்று வருடங்களுக்குள் குறிப்பிட்ட காலத்தில் அடைபடும் என்று கருதுவதாக விளம்ப வேண்டும். மேலும், மேற்படி விளம்பல் செல்லவேண்டுமென்றால், அது தீர்மானம் செய்யப்பட்ட 5 வாரங்களுக்குள், அதைச் செய்வதோடு, அதைப் பதிவாளரிடம் அந்தக் காலத்திற்குள் வழங்கவேண்டும். அதோடு, செல்வநிலை விளம்பப்பட்ட தேதிவரை வரையப்பட்ட ஆதாய இழப்புக்கணக்குகளும், ஐந்தொகைக் குறிப்பும் (Balance Sheet), சொத்துகளும் பொறுப்புகளும் கொண்ட விவரப் பட்டியும், தணிக்கையாளர் அறிக்கையுடன் அனுப்பிவைக்க வேண்டும்.

நிறுவனம் தன் கடன்களை அடைக்க முடியும் என்று தகுந்த காரணமில்லாமல் விளம்பினால் அதற்குத் தண்டனை தரப்படும். நிறுவனம் குறிப்பட்ட காலத்திற்குள் கடன்களை அடைக்கா விட்டால், விளம்பலுக்குத் தகுந்த காரணம் இல்லை என்று கொள்ளப் படும்.

**உறுப்பினர்களால் கலைக்கப்படுதல்**

உறுப்பினர்கள் ஒரு கலைப்பாளரை (Liquidator) அமர்த்தி அவர் ஊதியத்தையும் நிர்ணயிக்கின்றனர். அவ்வாறு நிர்ணயிக் கப்பட்ட ஊதியம் பின்னர் எக்காரணம் கொண்டும் அதிகப்படுத் தக்கூடாது. ஊதியம் நிர்ணயிக்கப்படாமல் கலைப்பாளர் பதவி ஏற்கலாகாது. பதவி காலியானால் நிறுவனம் அதைப் பொதுக் கூட்டத்தில் நிரப்ப வேண்டும். கலைப்பாளர் அமர்த்தப்பட்ட பத்து நாட்களுக்குள் அதே மாதிரி அப் பதவியில் மாற்றம் செய்த பத்து நாட்களுக்குள் நிறுவனம், பதிவாளருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். கலைப்பாளர் அமர்த்தப்பட்ட 30 நாட் களுக்குள் பதிவாளருக்கு அறிக்கை அனுப்புவதோடு அதை அரசி தழில் விளம்பரம் செய்யவேண்டும்.

கலைப்பாளர் நியமிக்கப்பட்டவுடன், நிறுவனமோ அல்லது கலைப்பாளரோ மேலும் அனுமதித்தாலொழிய, இயக்குநர்கள், மேலாண்மை முகவர்கள் முதலானோர் அதிகாரங்கள் முடிவுக்கு வருகின்றன.

கலைக்கப்படும் நிறுவனத்தின் சொத்துகளை வேறொரு நிறுவனத்திற்கு விற்பதற்கு மறுபயனாக அந்த நிறுவனத்தின் பங்குகளை ஏற்றுக் கொள்வதாயிருந்தால், அதை அனுமதிப்பதற்கு

நிறுவனத்தின் தனிமுறைத் தீர்மானம் வேண்டும். அதற்கு இசையாத உறுப்பினர்களின் பங்குகளை, நிறுவனம் நிர்ணயித்த விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும்.

நிறுவனம் கடன்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அடைக்க முடியாது என்று தெளிந்தவுடன் கலைப்பாளர் கடனாளர்களின் கூட்டத்தைக் கூட்டி, அதன்முன், நிறுவனத்தின் சொத்துகளும் பொறுப்புகளும் கொண்ட விவரப்பட்டியைத் தயாரித்து வைக்க வேண்டும். அதன் பிறகு நிறுவனம் கடனாளர்களால் கலைக்கப்படுவதைப் போலாகும்.

நிறுவனம் கலைக்கப்படுவது ஒரு வருடத்திற்கு மேல் நீடித்தால், ஒவ்வொரு வருட இறுதியிலும் கலைப்பாளர் நிறுவனத்தின் கூட்டத்தைக் கூட்டி, அவர் செய்தவைகளையும், நிறுவனம் கலைக்கப்படுவது எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது என்பதையும் விளக்க வேண்டும்.

நிறுவனத்தின் விவகாரங்கள் முழுவதும் முடிந்தவுடன், நிறுவனத்தின் பொதுக்கூட்டத்தைக் கூட்டி, அதன் முன் நிறுவனம் கலைக்கப்பட்ட விதத்தையும் அதன் சொத்துகள் பரிமாறப்பட்ட வகையினையும் விளக்கமாகக் குறிப்பிட்டு வைக்க வேண்டும். நிறுவனத்தின் பொதுக்கூட்டம் கூட்டப்படுவதையும், கூட்டம் கூடும் நேரம், இடம், நோக்கம் முதலானவைகளை அரசிதழிலும் அவ்விடத்திய செய்தித்தாளிலும் விளம்பரம் செய்ய வேண்டும். கூட்டம் நடந்த ஒரு வாரத்திற்குள், கணக்குகளின் நகல்களைப் பதிவாளருக்கும், கலைப்பு அதிகாரிக்கும் (Official Liquidator) அனுப்ப வேண்டும்.

பதிவாளர் மேற்படி கணக்குகளையும் விவரங்களையும் பதிவு செய்கிறார். கலைப்பு அதிகாரி அவைகளைப் பார்வையிட்டு நீதி மன்றத்துக்குத் தன் அறிக்கையை அனுப்புகிறார். அந்த அறிக்கையில் தவறு ஒன்றும் காண்பிக்கப்படவில்லை என்றால், அறிக்கை அனுப்பிய தேதியிலிருந்து நிறுவனம் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும்.

ஆனால், அந்த அறிக்கையில் இருந்து நிறுவனம் உறுப்பினர் நலத்தையும் பொதுநலத்தையும் பாதிக்கும் வகையில் நடத்தப்பட்டது என்று நீதிமன்றம் அறிந்தால், அது கலைப்பு அதிகாரியை மேலும் விசாரணை செய்யும்படி ஆணையிட்டு, அதைச் செய்வதற்குரிய அதிகாரங்களை அவருக்கு வழங்கலாம். நீதிமன்றம் அவர் அறிக்கையை மீண்டும் பெற்ற பிறகு, நிறுவனம் கலைக்கப்பட்ட

தென ஆணையிடலாம் அல்லது அந்த அறிக்கையில் கண்டுள்ளவைக் கேற்ப ஆணையிடலாம்.

**கடனுளர்களால் கலைக்கப்படுதல்** (Creditors Voluntary Winding up)
(பி. 500-ல் இருந்து பி. 509 வரை)

இந்த முறையிலும் முதலில் நிறுவனத்தின் உறுப்பினர்கள் நிறுவனம் கலைக்கப்படுவதற்குத் தீர்மானம் செய்ய வேண்டும். அதன் பின்னர் நிறுவனம் கடனுளர்களின் மேற்பார்வையில் கலைக்கப்படுகிறது. அதனுல், இம்முறை கடனுளர்களால் கலைக்கப் படுதல் என்று குறிப்பிடப்படுகிறது. நிறுவனம், கடன்களை அடைக்க முடியாத நிலையில் இருப்பின் இம் முறை கையாளப்படு கிறது.

கூட்டத்திற்கான அறிக்கை, உறுப்பினர்களுக்கும் கடனுளர் களுக்கும் ஒரே சமயத்தில் அனுப்பப்படுவதோடு, அதை அரசிதழி லும் (Official Gazette), நிறுவனமுள்ள வட்டாரங்களில் புழங் கும் இரு செய்தித்தாள்களிலும் விளம்பரம் செய்ய வேண்டும். கடனுளர்கள் கூட்டம், உறுப்பினர்கள் கூடிய அன்றே அல்லது அடுத்த நாளன்று கூடலாம். இயக்குநர்கள் கடனுளர்கள் கூட்டத்தில் நிறுவனத்தின் விவகாரங்களையும், கடனுளர்களின் பட்டியலையும், அவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை களையும் தெளிவாகக் காண்பிக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில், கடனுளர்கள் செய்த தீர்மானத்தைப் பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உறுப்பினர்களும் கடனுளர்களும் தங்கள் தங்கள் கூட்டங் களில் நிறுவனத்தைக் கலைப்பாளரை (Liquidator) நியமிக்க வேண்டும். இரு தரப்பினரும் வெவ்வேறு நபர்களை நியமித்தால், கடனுளர்களால் நியமிக்கப்பட்டவரே கலைப்பாளராக அமர்த்தப் படுவார். இதில் இயக்குநர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் குறை யிருந்தால் நீதிமன்றத்துக்கு முறையிடலாம். கடனுளர்கள் கலைப்பாளரை நியமிக்கவில்லை என்றுல், உறுப்பினர்களால் நியமிக்கப்பட்டவர் கலைப்பாளராக அமர்த்தப்படுவார்.

**பார்வைக் குழு** (Committee of Inspection)

கடனுளர்கள் ஐவர் கொண்ட ஒரு பார்வைக் குழு அமர்த்த லாம் நிறுவனமும் ஐவரை அக் குழுவில் அமர்த்தலாம். ஆனுல், கடனுளர்கள் அதை மறுத்தால், நீதிமன்றம் அந்தச் சிக்கலைப் போக்கலாம். பார்வைக் குழு இல்லாவிடில், கடனுளர்கள் கலைப் பவர் ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு செய்யா

விடில், நீதிமன்றம் கலேப்பவர் ஊதியத்தை நிர்ணயிக்கிறது. கலேப்பவர் அமர்த்தப்பட்டவுடன் இயக்குநர் குழுவின் அதிகாரங்கள் முடிவடைகின்றன. கலேப்பவர், உறுப்பினர்களால் கலேக்கப்படும் முறைகளேயே கையாளவேண்டும். ஆனல், இவர் உறுப்பினர்கள், கடனுளர்கள் ஆகிய இரு தரப்பினரையும் கலந்து ஆலோசித்து ஆவன செய்யவேண்டும்.

**இரு முறைகளுக்கும் உகந்த முறைகள்** (Provisions applicable to every voluntary Winding up) *(பி-510 முதல் 521)*

நிறுவனத்தின் இயக்குநர்கள், மேலாளர், செயலாளர் அல்லது அதிகாரி நிறுவனத்தின் விவகாரங்களே விளக்குகின்ற விவரப் பட்டியலேக் கலேப்பவருக்கு அனுப்பவேண்டும். அதில், (1) நிறுவனத்தின் சொத்துகள், கைவசமுள்ள பணம், வங்கிகளில் உள்ள பணம், முறையாவணங்கள் முதலானவைகளும், (2) நிறுவனத்தின் கடன்களும் பொறுப்புகளும், (3) நிறுவனத்தின் கடனுளர்கள், அவர்கள் பெயர், முகவரி, பிணேப்புள்ள அல்லது பிணேப்பில்லாக் கடன்கள் (Secured and unsecured debts) முதலானவைகளும், (4) நிறுவனத்திற்கு வரவேண்டிய கடன்களும், கடனுளிகளின் (Debtors) பெயர், முகவரி, வரும் கடன், வாராக் கடன் (Realisable and unrealisable) முதலான விவரங்களும், (5) மற்றும் கலேப்பவரால் கேட்கப்பட்ட இதர விவரங்களும், மிகவும் தெளிவாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டப்பட வேண்டும்.

**நிறுவனத்தைக் கலேப்பவரின் அதிகாரங்கள்** (Powers of the Voluntary Liquidator)

கலேப்பவருக்கு (Voluntary Liquidator), கலேப்பு அதிகாரிக்கு (Official Liquidator) உள்ள எல்லா அதிகாரங்களும் உண்டு. கலேப்பு அதிகாரி நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுச் செய்கிறார். ஆனல், கலேப்பவர், கலேக்கப்படும் முறைக்குகந்தவாறு, உறுப்பினர்களின் அல்லது கடனுளர்களின் அனுமதி பெற்றுச் செய்கிறார். ஆனல், தாளுகக் கலேக்கப்படும் முறையில் கலேப்பவருக்குக் கீழ்க்கண்ட அதிகாரங்கள் உண்டு.

(a) பங்குக் கடப்பாட்டாளர்கள் பட்டியலேத் தயாரிப்பது, (b) பங்குத்தொகையில் செலுத்தவேண்டிய தொகைகளேக் கோருவது, (c) நிறுவனத்தின் பொதுக்கூட்டங்களேக் கூட்டுவது. கட்டாயமாகக் கலேக்கப்படுவதில் (Compulsory Winding up) மேற்கூறிய அதிகாரங்களே நீதிமன்றம் வகுக்கின்றது. ஆனல், இவரும், மேற்கூறிய அதிகாரங்களே, நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்டுப் பயன்

படுத்தவேண்டும். ஆகையால், அவைகளில் குறை காணுவோர் நீதிமன்றத்திற்கு முறையிடலாம். மேலும், நீதிமன்றத்துக்கு, கலைப்பவரை, தகுந்த காரணம் காட்டப்பட்டால் விலக்கவும், அவருக்குப் பதில் வேறொருவரை அமர்த்தவும் அதிகாரம் உண்டு. கலைப்பவர், உறுப்பினர், கடனாளர் ஆகிய எவரும், நிறுவனம் கலைக்கப்படும்போது எழும் பிரச்சினைகளைக் காண முடிவு செய்யவும், கட்டாயமாகக் கலைக்கப்படும்போது நீதிமன்றம் வகிக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தும்படியும் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளலாம்.

கலைப்பவர் நிறுவனத்தை உண்டாக்கியதிலும், உருவாக்கியதிலும் (Promotion and formation) மோசடி உள்ளது என்று நீதிமன்றத்துக்கு அறிக்கை அனுப்பினால், நீதிமன்றம் அவ்வாறு செய்ததாகக் குறிப்பிடப்பட்டவரை பொது விசாரணை செய்ய (Public Examination) ஆணையிடுகிறது.

## நீதிமன்றத்தின் மேற்பார்வையில் கலைக்கப்படுதல்

(Winding up subject to the supervision of the Court) *(பி, 522 to 527)*

நிறுவனம் தானாகக் கலைக்கப்படுவதற்குத் தீர்மானம் செய்த பிறகு அவ்வாறு கலைக்கப்படுவது தன் மேற்பார்வையில் செய்யப்படவேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிடலாம். அதன் பிறகு நீதிமன்றம் கலைப்பாளருடன் இணைந்து வேலை செய்ய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுக் காப்பாளர்களை (Additional liquidators) நியமிக்கலாம். கலைப்பாளர்களை விலக்கவும், காலியான இடங்களை நிரப்பவும் நீதிமன்றத்துக்கு அதிகாரங்கள் உண்டு. கலைப்பாளர்கள் தம் அதிகாரங்களை நீதிமன்றத்தின் கட்டுதிட்டங்களுக்குட்பட்டுப் பயன்படுத்தவேண்டும். நீதிமன்றத்தின் மேற்பார்வையில் கலைக்கப்படும்போது, நீதிமன்றம் கட்டாயமாகக் கலைக்கப்படும்போது உள்ள எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்தலாம்.

**மும்முறைகளுக்கும் உகந்த முறைகள்** (Provisions applicable to every mode of winding up) *(பி. 528 to 560)*

ஒரு நிறுவனம் எம்முறையில் கலைக்கப்பட்டாலும், கீழ்க் காணும் விதிகளைக் கலைப்பு அதிகாரியும், கலைப்பாளர்களும் பின்பற்ற வேண்டும்.

**பங்குக் கடப்பாட்டாளர்களின் பொறுப்பு**

நிறுவனம் கலைக்கப்பட ஆணையிட்ட தேதியில் உறுப்பினராக இருப்பவர்கள் அனைவரும் தத்தம் பங்கில் செலுத்தப்படவேண்

டிய தொகையை நிறுவனத்திற்குத் தேவைப்பட்டால் செலுத்து வதற்குப் பொறுப்புள்ளவராகிறார்கள். கலைக்கப்படுவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பே விலகிய உறுப்பினர்களுக்கு எவ்விதப் பொறுப்புமில்லை. ஆனால் நிறுவனம் விலக்கப்படுவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பு விலகியவர்கள் பொறுப்புள்ளவராகிறார்கள். ஆனால், இவர்கள் உறுப்பினர்களாய் இருந்தபோது நிறுவனம் பெற்ற கடன்களுக்குத்தான் பொறுப்புள்ளவராவர். அந்தக் கடன் களுக்கும், உறுப்பினர்கள்தான் முதலில் பொறுப்புள்ளவர்கள். அவர்கள் செலுத்தவில்லை என்றால்தான் இவர்களுக்குப் பொறுப் புண்டாகிறது. உறுப்பினர்கள் இறந்தால் அவர்களுடைய சட்டச் சார்பாளர்கள் (Legal representatives) அதற்குப் பொறுப்புள்ளவ ராகிறார்கள். இயக்குநர்கள், மேலாண்மை முகவர், மேலா ளர்கள் முதலானோர் வரம்பற்ற பொறுப்பேற்றிருந்தால், அவர்கள் பங்குத் தொகைக்கும் மேலாக நிறுவனத்தின் கடன்களும் பொறுப்புகளும் முழுவதையும் அடைப்பதற்குத் தேவையான தொகையைத் தரவேண்டும். பொறுப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்கள், தாங்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்பிற்குள்ளாக, நிறுவனத்திற்குக் கடன்களை அடைக்கத் தேவைப்படும் தொகை யைத் தரவேண்டும்.

**கொடுபடவேண்டிய கடன்கள்** (Debts payable (பி. 528)

நிறுவனத்தின் எல்லாக் கடன்களும், அவைகள், நிச்சயிக்கப் பட்டதாயினும் அல்லது நிச்சயிக்கப்படாவிட்டாலும், நிகழ்வு சார்ந்த கடனாயிருந்தாலும் (Contingent), நிகழ்காலக் கடன் அல்லது எதிர் காலக் கடன்களாயிருந்தாலும், குறிப்பிட்ட தொகையாயிருந்தாலும் அல்லது நிச்சயிக்கப்பட வேண்டிய தொகையாக அவைகளுக்குரியவர்களுக்குச் செலுத்தப்பட வேண் டும். பிணைக்கடனாளர் (Secured Creditor) தன் பிணையத்தை விற்றுக் கடனை எடுத்துக் கொள்ளலாம். அல்லாவிடில் தன் பிணை யத்தை விட்டுக் கொடுத்துவிட்டு, இதர கடனாளர்களைப்போல் கடன் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

**முதன்மையாகக் கொடுபடவேண்டிய கடன்கள்** (Preferential Debts) (பி. 530)

நிறுவனத்தின் சொத்துகளில் இருந்து, நிறுவனம் கலைக்கப் படுவதற்குத் தேவையான தொகை போக, மீதியுள்ளதிலிருந்து முதலில் கொடுபடவேண்டிய கடன்கள் பின்வருமாறு:

(a) மத்திய, மாநில அரசினர்களுக்குச் சேரவேண்டிய கடன் கள், வரிகள், கட்டணங்கள்.

(b) நிறுவனத்தின் பணியாளர்களுக்குக் கொடுபடவேண்டிய நான்கு மாதச் சம்பள பாக்கி.

(c) பணியாளர்களுக்கு விடுமுறை நாட்களுக்குத் தரப்பட வேண்டிய தொகை.

(d) தொழிலாளர் காப்பீட்டுச் சட்டப்படி ஒரு வருடத்திற்குள் கொடுபடவேண்டிய தொகை முழுவதும்.

(e) தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்படி தரப்படடிய தொகைகள்.

(f) தொழிலாளர்களுக்குக் கொடுபட வேண்டிய ஓய்வு ஊதியம் (Pension), வருங்காலச் சேமநிதி (Provident Fund), பணிக் கொடை (Gratuity) முதலான தொகைகள்.

(g) 235 அல்லது 237ஆவது பிரிவுகளின்படி செய்யப்பட்ட விசாரணைகளின் செலவுத் தொகைகள்.

மேற்கூறிய கடன்கள் யாவும் ஒன்றுக்கொன்று சமமாகக் கருதப்பட்டு, முழுவதும் செலுத்தப்படவேண்டும். அவைகளுக்கு நிறுவனத்தின் சொத்துகள் போதவில்லை என்றால், விகிதாவாரியாகக் கொடுபடவேண்டும். இந்தக் கடன்கள் யாவும் செலுத்தப் பட்ட பிறகு, மீதியுள்ள சொத்துகளிலிருந்து இதர கடன்களை அடைக்கவேண்டும்.

கடன்கள் யாவும் அடைபட்ட பிறகு, எஞ்சியுள்ள சொத்துகளைப் பங்குக் கடப்பாட்டாளர்களுக்கு, அவர்களுடைய பங்குத் தொகையின் விகிதப்படி செலுத்தப்படவேண்டும். அதற்குப் பிறகும் மிஞ்சியுள்ள தொகைகளை இந்தியச் சேம வங்கியில் (Reserve Bank of India) நிறுவனம் கலைக்கப்பட்ட கணக்கில் செலுத்த வேண்டும் (Companie's Liquidation Fund Account).

**நிறுவனம் கலைக்கப்படுமுன் செய்யப்பட்ட செயல்கள்** (Antecedent transactions) *(பி. 531 முதல் 534)*

நிறுவனம் கலைக்கப்படுவதற்கு முன்பு, நிறுவனத்தின் சில செயல்கள் செல்லாதவைகளாகக் கொள்ளப்படுகின்றன. அவை பின்வருமாறு :

**(1) ஓர வஞ்சகக் கடனடைப்பு** (Fraudulent preference) : நிறுவனம் கலைக்கப்பட்ட ஆறு மாதத்திற்கு முன்பு செய்யப்பட்ட சொத்துரிமை மாற்றம், அல்லது செலுத்தப்பட்ட கடன்தொகை ஓரவஞ்சகக் கடனடைப்பாகக் கருதப்படுகிறது. மேற்படி உரிமை மாற்றங்கள் செல்லாதவையாகி அவைகள் கலைப்பு அதிகாரியைக் கட்டுப்படுத்தாது.

'Re Eric Holmes (Property Ltd,.) 1965, 2 All E.R. 333' என்ற இவ்வழக்கில் ஒரு நிறுவனம் நிலங்கள் வாங்கி, அவைகளில் கட்டடம் கட்டும் தொழிலே மேற்கொண்டிருந்தது. அதன் பங்குநர் ஒருவர், நிறுவனத்திற்கு அவ்வப்போது கடன் கொடுத்து உதவினுர். மேற்படி கடன்களை அந்தப் பங்குநர் கேட்கும்போது சொத்துகளின் பேரில் பற்று (Charge) வழங்குவதாக நிறுவனம் உறுதி செய்தது. நிறுவனம் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாதபோது, பங்குநர் சொத்துகளின் பேரில் பற்று வழங்கும் படி கேட்டார். நிறுவனமும் அவ்விதமே செய்தது. ஆனுல், அவ்வாறு செய்த இரு மாதங்களுக்குள் நிறுவனம் கலேக்கப்பட்டது. கலேப்பு அதிகாரி, நிறுவனம் வழங்கிய பற்று செல்லாது என்றும், அது தன்னைக் கட்டுப்படுத்தாது என்றும் கூறினுர். ஆனுல், நீதிமன்றம் அவர் கூறுவது முறையல்ல என்றும், வேண்டும்போது பற்றுத் தருவதாக முன்னதாகவே, செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி செய்தது ஒருபோதும் ஓர வஞ்சனைக் கடனடைப்பு ஆகாது என்றும் முடிவு செய்தது.

அபிஷியல் லிக்யூடேட்டர் *v.* வெங்கடரத்னம் [Official Liquidator *v.* Venkataratnam, (1966) 1 Comp. L.J. 243 Andh.] என்ற இவ் வழக்கில் ஒரு மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தின் பேரில், தரப்பட வேண்டிய கடனுக்காக வழக்குப் போடப் பட்டது. வழக்கில் ஒத்திசைவின் பேரில் (Under Compromise) நிறுவனத்தின் 3 பேருந்துகளைக் கடனுளருக்குக் கொடுத்தது. பின்னர் சில நாட்களுக்குள் நிறுவனம் கலேக்கப்பட்டது. கலேப்பு அதிகாரி, நிறுவனம் பேருந்துகளைக் கொடுத்த ஓர வஞ்சனையான செயல் என்று சாதித்தார். ஆனுல், நீதிமன்றம் அதை ஒப்புக் கொள்ளாது, நிறுவனம் செய்தது ஓரவஞ்சனை அல்ல என்று முடிவு செய்தது.

*(2)* **தன்னிச்சையான உரிமை மாற்றம்** (Voluntary transfer) (531 A பி.) நிறுவனம் கலேக்கப்பட்ட ஒரு வருடத்திற்குள் நிறுவனம் செய்த உரிமை மாற்றம் எதுவும் செல்லாததாகி, கலேப்பதிகாரியைக் கட்டுப்படுத்தாது. ஆனுல், பின்கண்ட உரிமை மாற்றங்கள் பாதிக்கப்படவில்லே :

(a) நிறுவனம் பொதுவாகத்தான் தொழில் நடைமுறைப் படி செய்த உரிமை மாற்றங்கள் (Transfers made in the ordinary course of business)

(b) நன்னம்பிக்கையோடு (good faith) மறுபயன் கொடுத்து மாற்றம் பெற்றவருக்குச் செய்த உரிமை மாற்றம்.

**பொறுப்பிணைச் சொத்துகளைப் பொறுப்பேற்காதிருத்தல்** (Disclaimer of Onerous Property) *(பி.535)*

கலைப்பதிகாரி பொறுப்பிணைச் சொத்துகளை, நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுப் பொறுப்பேற்காதிருக்கலாம். பின்வரும் சொத்துகள் பொறுப்பிணை யுள்ளவையாகக் கருதப்படுகின்றன : (1) கடுமையான உடன்படிக்கைகள் உள்ள நிலக் குத்தகைகள், (2) நிறுவனத்தின் பங்குகளும், பங்கு மூலமும் (Shares and stocks), (3) விற்க முடியாத அல்லது எளிதில் விற்கமுடியாத சொத்துகள், (4) ஆதாயம் இல்லா ஒப்பந்தங்கள்.

அபிஷியல் லிக்யூடேட்டர் v. ராகா கெமிகல்ஸ் புட் ப்ரொடெக்ட்ஸ் லிமிடெட் [Official Liquidator *v.* Raka Chemicals Food Products Ltd., (1968) 1Comp. L. .J 220] என்ற இவ் வழக்கில் கலைக்கப்பட்ட ஒரு நிறுவனத்தை, மற்றொரு நிறுவனம் கோரிக்கைத் தொகையான 46,052 ரூபாய்கள் செலுத்தும்படி கேட்டது. கலைப்பு அதிகாரி அதைச் செலுத்துவதற்குத் தவணை பெற்றுக் கொண்டு, நீதிமன்றத்திடம், அந்த நிறுவனம் நல்ல செல்வ நிலையில் இல்லாமையால் அப் பங்குகளைப் பொறுப்பேற்காதிருப்பதற்கு அனுமதி கேட்டார். நீதிமன்றமும் அவ்வாறே அனுமதித்தது.

கலைப்பதிகாரி பொறுப்பேற்காததை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். மேலும் அதை நிறுவனம் கலைக்கப்பட்ட ஒரு வருடத்திற்குள் செய்ய வேண்டும். கலைப்பதிகாரி நிறுவனம் கலைக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் மேற்படி சொத்துகள் இருப்பதை அறியாதிருந்தால், அவர் அவைகளைப் பின்னர் அறிந்த தேதியிலிருந்து 12 மாதங்களுக்குள் பொறுப்பேற்காததைத் தெரிவிக்க வேண்டும்.

நிறுவனங்களை மோசடி செய்யும் முறைகளில் நடத்தினாலும், அல்லது பொய்க் கணக்குகள் எழுதி வைத்தாலும்,மேற்படி தவறுகளைச் செய்தவர்களை விசாரித்து தண்டிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிறுவனத்திற்குத் தீங்கிழைத்து இழப்புகளை அடையச் செய்தவர்களை மேற்படி இழப்புகளை நிறுவனத்திற்கு ஈடு செய்யும்படி நீதிமன்றம் ஆணையிடலாம்.

**நிறுவனம் கலைக்கப்பட்டதைச் செல்லாததாக்குதல்** (Annulment of Dissolution) *(பி. 559)*

சமாதியில் நித்திய நித்திரையிலாழ்ந்த நிறுவனத்தை நிமிர்ந்து உயிர் பெற்றெழச் செய்யவும் சட்டம் வழி செய்துள்ளது. நிறு

வனம் கலைக்கப்பட்ட இரண்டு வருடங்களுக்குள், கலைப்பதிகாரி அல்லது வேறு நலன் கொண்ட நபர், செய்த மனுவின் பேரில் நிறுவனம் கலைக்கப்பட்ட ஆணையை நீக்கி, நிறுவனத்தை மீண்டும் உயிர்ப்பிக்கலாம். அதன் பிறகு, நிறுவனம் கலைக்கப்படாததைப் போல எந்த நடவடிக்கையும் எடுக்கலாம். யாருடைய மனுவில் ஆணையிடப்பட்டதோ அவர் ஆணையிட்ட 30 நாட்களுக்குள் சான்றிட்ட ஆணையின் நகலைப் பதிவாளருக்கு அனுப்பவேண்டும்.

**செயலற்ற நிறுவனங்கள்** (Defunct Companies) பி. 560

ஒரு நிறுவனம் செயலற்றதாயுள்ளது என்று பதிவாளர் கருதினால், அந்த நிறுவனத்திற்குத் தபால் மூலம் அறிக்கை அனுப்பி அது தொழிலைச் செய்கிறதா என்று விசாரிக்கலாம். அதற்கு 30 நாட்களுக்குள் பதில் வரவில்லை என்றால், மறுபடியும், 30 நாட்கள் முடிந்த 14 நாட்களுக்குள், பதிவு செய்யப்பட்ட அறிக்கை மூலம் (Registered notice) 30 நாட்களுக்குள் பதில் அனுப்பும்படியும், அப்படி அனுப்பத் தவறினால் நிறுவனத்தின் பெயரைப் பதிவேட்டில் அடிக்கப்படும் என்றும் தெரிவிக்க வேண்டும். அதற்கும் 30 நாட்களுக்குள் பதில் இல்லை என்றால், பதிவாளர் அரசிதழில் அந்த நிறுவனம் மூன்று மாதங்களுக்குள் தக்க சமாதானம் காட்டாவிட்டால், அதன் பெயர் பதிவேட்டில் அடிக்கப்படும் என்றும் விளம்பரம் செய்ய வேண்டும். பெயர் அடிக்கப்பட்டதும் நிறுவனம் கலைக்கப்பட்டதாகிறது.

அவ்விதமே கலைக்கப்படும் நிறுவனத்தில், கலைப்பதிகாரி யாரும் பதவியில் இல்லை என்றாலும் அல்லது ஆறு மாதங்களுக்கு மேலாக வரவு செலவுக் கணக்குகளை அனுப்பவில்லை என்றாலும், பதிவாளர் அறிக்கைகளை மேற்படி குறிப்பிட்ட வகையில் அனுப்பி, பதில் இல்லை என்றால், நிறுவனத்தின் பெயரை மேலே குறிப்பிட்டவாறு அடித்துவிடலாம். அதோடு நிறுவனம் கலைக்கப்படுகிறது.

ஆனால், அவ்வாறு கலைக்கப்பட்ட 20 வருடங்களுக்குள், நிறுவனமோ, உறுப்பினரோ அல்லது கடனாளரோ மனுச் செய்து, நீதிமன்றம், நிறுவனம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கருதினால், அவ்விதமே ஆணையிடலாம். மேற்படி ஆணையின் சான்றிட்ட நகலைப் பதிவாளருக்கு அனுப்பிய உடனே, நிறுவனம் பெயர் அடிக்கப்படாததைப் போல எப்போதும் போல செயலாற்றலாம்.

**பதிவாகாத நிறுவனங்கள் கலைக்கப்படுதல்** (Winding up of unregistered Companies)

இந்திய நிறுவனச் சட்டத்தின் பத்தாவது பாகத்தில் பதிவாகாத நிறுவனங்கள் கலைக்கப்படும் முறைகளையும் விதிகளையும்

குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கூறிய விதிகளை 582 to 590 பிரிவு களில் காணலாம்.

இப் பாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளைத் தவிர, மற்றபடி ஒரு பதிவாகாத நிறுவனம், பதிவான நிறுவனங்கள் கலைக்கப்படும் இதர விதிகளுக்குட்பட்டதாகும்.

ஒரு பதிவாகாத நிறுவனம் எந்த மாநிலத்தில் தலைமை அலுவலகம் கொண்டுள்ளதோ அந்த மாநிலத்தின் நீதிமன்றமே அந்த நிறுவனத்தைக் கலைப்பதற்குரிய அதிகாரமுடையதாகும்.

ஒரு பதிவாகாத நிறுவனம், தானாகக் கலைக்கப்படும் முறை யையோ அல்லது நீதிமன்றத்தின் மேற்பார்வையில் கலைக்கப்படும் முறையையோ பின்பற்ற முடியாது. ஆகவே ஒரு பதிவாகாத நிறுவனம் கட்டாய முறையில்தான் கலைக்கப்பட வேண்டும்.

**கலைக்கப்படுவதற்குரிய காரணங்கள் :** ஒரு பதிவாகாத நிறுவனம் கீழ்க்காணும் காரணங்களுக்காகக் கலைக்கப்படலாம் :

(a) நிறுவனம் கலைக்கப்பட்டதாகவோ அல்லது தொழிலைச் செய் யாமலோ அல்லது கலைக்கப்படுவதற்காகவே செயலுறுவதாக இருக்க வேண்டும்.

(b) கடன்களை அடைக்க முடியாமை.

(c) நீதியும் நேர்மையுமான காரணம்.

ஒரு வெளிநாட்டு நிறுவனம் (Foreign Company) செயலற்ற தாயின், அதையும் ஒரு பதிவாகாத நிறுவனத்தைப் போன்றே கலைக்கப்படலாம்.

நிறுவனத்தின் கடன்களுக்கும் பொறுப்புகளுக்கும், உறுப் பினர்களுக்கிடையே உள்ள உரிமைகளைச் சரி செய்யவும், நிறுவனத்தைக் கலைப்பற்குரிய செலவுகளுக்கும் தேவையான தொகைக்குப் பொறுப்புள்ள ஒவ்வொரு நபரும் பங்குக் கடப்பாட் டாளராவர் (Contributory).

ஒரு பதிவாகாத நிறுவனம் நீதிமன்றத்தால் கலைக்கப்பட ஆணையிடப்பட்ட பிறகு, நீதிமன்றத்தின் அனுமதியின்றி யாதொரு வழக்கும் அல்லது சட்ட முறையான நடவடிக்கையும் நிறுவனத்திற்கெதிராக எடுக்க முடியாது. மேலும், ஒரு பதிவா காத நிறுவனம் வழக்காடவோ அல்லது வழக்குத் தொடுக்கவோ உரிமையற்றதாயின், மேற்படி உரிமைகளையும், அதன் சொத்து களில் உள்ள உரிமைகளையும் நீதிமன்றம் கலைப்பதிகாரிக்கு வழங்க லாம்.

மேற்குறிப்பிட்ட தனிமுறை விதிகளைத் தவிர, மற்றும் ஒரு பதிவான நிறுவனம் கலைக்கப்படுவதற்கு அனுசரிக்கப்படும் எல்லா விதிகளும் ஒரு பதிவாகாத நிறுவனத்திற்கும் அனுசரிக்கப்படும்.

# சென்னைப் பல்கலைக்கழக வினாக்கள்
## (Madras University Questions)

### முதனிலை
### (Preliminary)

1. What is a Company? What are its characteristic features? (Apr. 1971).

2. Distinguish a Company from a Partnership (Apr. 71).

3. What are the steps to be taken for forming a Company? (Apr. 72).

4. Write a short note on Illegal Association (Oct. 72).

5. What is a Private Company and state its Privileges

Describe the procedure for converting a Private Company into a Public Company. (Oct. 72).

6. Define a Company. Distinguish a Company from (a) Partnership (b) Illegal Association (c) A club (Oct. 73).

7. (a) What are the advantages and disadvantages of incorporation? (b) What are the kinds of Companies that can be incorporated under the Companies Act. (Oct. 1973).

*Short Notes*

8. (a) Illegal Association (Oct. 72).

(b) Government Company (Oct. 72).

(c) Salomon *v.* Salomon Ltd. (Apr. 73).

9. Describe the process by which a Company is incorporated under the Companies Act. (Oct. 73)

10. State the provisions for the Statutory Conversion of a Private Company into a Public Company. Can a Public Company be Converted into a Private Company ? (Apr. 74).

11. 'Once the formalities of the Companies Act are complied with, the registered Company exists as a legal entity distinct in Law from those persons who from time to time are its members, Discuss (Oct. 74).

12. Define a 'Company' and an 'existing Company'. Also bring out clearly the difference between a Company and a Partnership. (Oct. 74).

## அமைப்பு முறை ஏடு
## (Memorandum)

1. What do you understand by a Memorandum of Association of a Company ?

What are its contents ?

Compare it with Articles of Association (Apr. 71).

2. Write short notes on—

A Sibary Railway Carriage and Iron Co. *v.* Richie (Oct. 1971).

3. Indicate the Procedure for reduction of share capital of a Company (Apr. 1972).

4. How can a Company alter its memorandum ?

Describe the Procedure to be followed (Oct. 1972).

5. If a Company borrows beyond its powers what are the remedies open to a Creditor ?

(a) Where the Company still retains the money ?

(b) Where the Company has used the money to discharge some of its debts ? (Oct. 1972).

6. When can a Company make a change in the following ? Describe the procedure for making a change.

(a) Name clause.

(b) Objects clause.

(c) Registered Office clause. (Apr. 1973).

7. Discuss the relative importance of—

(a) Memorandum of Association of a Company.

(b) The Articles of Association of a Company. (Oct. 73).

8. (a) Explain the Doctrine of ultra vires under the Company Law.

(b) What are the Consequences of ultra vires acts of a Company. (Apr. 71), (Oct. 73).

9. Explain briefly the procedure by which a company may reduce its share capital (Apr. 1973).

10. Write short notes

Shanti Prasad *v.* Kalinga Tubes Ltd. (Apr. 72).

11. Examine the procedure for the reduction of capital under the Indian Companies Act, 1956. (Apr. 74).

12. Role of Memorandum of Association in regulating the relations between a Company and its members-Comment (Apr. 74).

13. By what method and to what extent may a Company alter its objects as set out in the memorandum of association (Oct. 74).

## செயல்முறை விதிகள்
## (Articles of Association)

1. Explain the meaning of Articles of Association of a Company and its function.

How can the Articles of Association be altered ? (Oct. 1971).

2. Examine how far the Memorandum and Articles of Association bind

(a) the members to the Company

(b) the members interse

(c) the Company and outsiders

(d) the Company to the members (Apr. 72).

3. Explain the Doctrine of Indoor management. What are the exceptions to the Doctrine ? (Apr. 73) (Oct. 72).

4. State the scope of articles of Association of a Company. When can a Company alter its articles ? (Apr. 73).

*Shorts Notes*

5 (a) Prospectus (Oct. 73),

*Problem*

6. Directors of a Company had power to borrow money but under the articles if they borrowed more than Rs 5,000/- they had to get the consent of the shareholders. Without such consent, they borrowed Rs. 10,000/- from themselves. To what extent the Company is bound by the debentures (Apr. 74).

7. The Articles of a Company provided that a dismissed employee of the Company shall surrender his shares to the Company. Is the provision ultra vires the Company. (Oct. 74).

## திட்ட அறிவிப்பு
## (Prospectus)

1. (a) Define a prospectus :

What are the important matters to be set out in a prospectus ?

(b) What are the consequences of mis-statements in a prospectus ? (Apr. 71).

*Short Notes*

2. Prospectus (Apr. 74).

3. What is a statement in lieu of Prospectus ? By what companies is it issued, and what is its effect ? (Oct. 74).

*Problem*

4. X, induced by the fraudulent statements of Y, has signed the memorandum of association of a company for fifty shares. Advise X as to his remedy in this case. (Oct. 74).

## பங்குகள்
## (Shares)

1. (a) Explain what is meant by allotment of shares and how is it made ?

(b) What is the effect of irregular allotment ? (Apr. 71)

2. How can shares in a company be transferred ?

When can a company refuse to transfer shares ? (April 1972)

3 (a) Explain how a share in a company is transferred.

(b) When can a company refuse to register transfer of shares (Oct. 73).

4 A Transferred his shares to B, but Directors refused to register the shares. Later on, a call was made on A, could A recover the amount of the call from B. (Apr. 74).

*Write Short Notes*

(a) Calls (Apr. 71, Apr. 73, Oct. 73).
(b) Forfeiture of shares (Apr. 72, Apr. 73).
(c) Lien on shares (Oct. 72).
(d) Share warrants (Apr. 71, Apr. 73).
(e) Preference shares (Oct. 71), (Apr. 73).
(f) Redeemable preference shares (Apr. 73).
(g) Dividend (Oct 73).
(h) Share warrant (Oct 74).

5. What is the difference between 'shares' and 'stock' ? (Oct. 74).

## மூலதனமும் பங்குகளின் வகைகளும்
## (Capital and Kinds of Shares)

1. What are the kinds of share capital that can be issued under the Companies Act ? Point out the distinction between them (Oct. 71)

*Short Notes*

(a) Preference Shares (Oct. 71), (Apr. 73).
(b) Redeemable preference shares (Apr. 73).
(c) Share certificate (Apr. 74)

3. Distinguish between :

(a) Share certificate and share warrant.
(b) Transfer and Transmission of shares (Apr. 74).

*Short Notes*

4. Reserve capital (Oct. 74).

## கடனீட்டுப் பத்திரங்கள்
## (Debentures)

1. Explain the meaning of 'Debenture' What are the powers available to a debenture holder to realise his amount? (Oct. 72).

*Short Notes*

2. Debenture (Oct. 73).

## பங்குநர்கள்
## (Share holders)

1. How one can become a member of a Company? What are the rights and liabilities of members? When does a person cease to be a member of a company? (Oct. 71).

2. State the different modes by which a person can become a member of a company (Apr. 74).

*Problem*

A, a minor, misrepresented his age in his application for shares and was allotted shares. A received dividends during minority and also continued to receive the same on attaining majority. Later on when the company was being wound up, A was placed on the list of contributories. Could A dispute his liability as a contributory? (Apr. 74).

## துவக்குநர்கள்
## (Promotors)

1. Who are promotors and what is their part in the formation of a company? (Oct. 71)

2. 'The relationship between a promotor and a company floated by him is of a fiduciary character' Discuss (Apr. 74).

3. Define a promotor and explain his legal position vis-a-vis the company be promotes (Oct. 74).

## இயக்குநர்கள்

(Directors)

1. Discuss the position and powers of Directors in a Company (Apr. 71).

2. How are the meetings of the Board of Directors to be held under the Companies Act? What are the Powers of the Board and restrictions on such Powers? (Apr. 72).

3. What are the powers and duties of a Chairman in the conduct of a meeting of a Company? (Oct. 72).

4. (a) Discuss briefly the position of Directors in a Company.

(b) What are the disabilities of Directors of a Company? (Oct. 73).

5. Discuss the position of Directors under the Indian Companies Act, 1951. (Apr. 74).

6. State the powers and disabilities of Directors under the Indian Companies Act, 1956. (Oct. 74).

7. X is a Director of a public limited company. The Board of Directors unanimously appointed him as a manager of the compony on a monthly salary of Rs. 2,000/-. The company refuses to pay his salary on the plea that X being a Director cannot hold an Office of Profit. Advise X. (Oct. 74).

## நடத்துநர்கள்

(Managerial Persons)

1. How is the management of a company by undesirable persons prevented by the Companies Act? (Apr. 72).

## கூட்டங்களும் தீர்மானங்களும்

(Meetings and Resolutions)

1. What do you understand by an Annual General Meeting? Indicate its importance.

What are the consequences when a company defaults in holding annual general meeting? (Apr. 71).

2. What is the nature and purpose of a statutory meeting?

What are the matters to be set out in a statutory report? (Apr. 72).

3. State briefly the rules under the Companies Act, regarding the annual general meeting? (Apr. 73).

4. (a) What are the various kinds of meetings that can be held under the Companies Act?

(b) Explain the importance of statutory meeting. (Oct. 73).

*Write Short Notes*

5. (a) Quorum (Oct. 71).
   (b) Statutory meeting (Oct. 71).
   (c) Proxies (Oct. 71), (Apr. 73).
   (d) Poll (Apr. 72), (Apr. 74).

6. What are the powers and duties of a chairman in the conduct of meeting of a Company? (Oct. 72).

7. Statutory meeting (Oct. 74).

## கணக்குகளும் தணிக்கைகளும்
## (Accounts and Audit)

1. What are the powers and duties of Auditors under the Companies Act?

Discuss the liability of auditors for negligence of duty. (Oct. 71).

2. Indicate in outline the form and contents of balance sheet (Apr. 73).

3. What are the rights and powers of an auditor of a company? (Oct. 73).

4. In re London and General Bank (Oct. 72).

[They should be watch dogs and not blood hounds. They are not concerned with the prudence or non-prudence of the Companies Activities.

Not concerned wiih the policy of the company nor whether it is well managed.]

5. An Auditor is a Watch-dog but not a blood hound. Comment (Apr. 74).

## புலன் விசாரணை

## (Investigation)

1. State the circumstances under which the Central Government can order investigation into the affairs of a company.

What are the powers of the persons appointed for carrying out such investigations? (Oct. 71).

2. When can the Central Government appointed inspectors to investigate into the affairs of a company? What are the powers of the inspectors? (Oct. 72).

3. When can inspectors investigate into the affairs of a company? What are their powers? (Apr. 73).

*Short Notes*

4. Company Law Board (Apr. 74).

## சிறுபான்மையினர்

## (Minority)

1. Explain the meaning of oppression and mis-management in the affairs of a company. What are the powers of the court to prevent such oppression and mis-management? (Apr. 71).

*Write Short Notes*

2. Shanti Prasad *v.* Kalinga Tubes Ltd. (A.I.R. 1965 S.C. 1535) (Apr. 72).

(Oppression must be continuous and not mere lack of confidence) Scope under S. 397.

3. Powers of Central Government to prevent oppression and mis-management (Apr. 74).

## ஒப்பந்தங்கள்

## (Contracts)

1. Describe the manner in which contracts may be made on behalf of a company. What is the effect of such contracts on the company? (Oct. 71).

*Short Notes*

2. Director's contract with the company. (Apr. 74)

## மறுநிர்மாணமும் இணைதலும்
## (Reconstruction and Amalgamation)

1. Discuss briefly the provisions of the Companies Act for reconstruction and Amalgamation of Companies (Oct. 71).

## படரும் பற்று
## (Floating Charge)

*Write Short Notes*

1. Floating Charge (Apr. 71).

## நிறுவனம் கலைக்கப்படுதல்
## (Winding up of Companies)

1. (a) What is meant by winding up of a company?

(b) State the circumstances in which a court can order winding up of a company (Apr. 71).

2. What are the powers of a liquidator in a winding up court?

What are the powers of control of Central Government over such a liquidator? (Oct. 71).

3. What are the duties and powers of a liquidator in a voluntary winding up? (Apr. 72).

4. How are unregistered companies wound up under the Companies Act. (Apr. 72) [Part X S. 582–590].

5. Who is a Contributory?

Who may be made contributories in a winding up?

What is the nature of contributory's liability? (Oct. 72)

6. State the circumstances under which a company may be wound up voluntarily? (Apr. 73) (Oct. 72).

7. Summarise briefly the duties and powers of an Official liquidator under the Companies Act (Apr. 73).

*Write Short Notes*

8. (a) Contributory (Apr. 71), (Oct. 73).
   (b) Committee of Inspection (Apr. 72), (Oct. 73).
   (c) Declaration of Solvency (Oct. 72).

9. State the consequences of a winding up order in respect of:
   (a) Creditors.
   (b) Officers and servants of the company (Apr. 74).

10. When may a Company be wound up by the Court (Oct. 74.)

***Short** Notes*

11. Fraudulent preference (Oct. 74).

# மேற்கோள் நூற்பட்டியல்

## (Bibilography)


Palmer On Companies

L. C. Gower on Companies

Buckland On Companies Act

Lindley on Companies

Indian Companies Act, 1956 as Amended

Law lexicon (சட்டச் சொல் அகராதி)

Glossary of Administrative Terms (ஆட்சிச் சொல்லகராதி)

# கலைச்சொற்கள்

## A

| | | |
|---|---|---|
| Acceptance | — | ஏற்பு |
| Accountant | — | கணக்கர் |
| Accounts | — | பற்று வரவுக் கணக்கு |
| Agency | — | முகவரை |
| Agent | — | முகவர் |
| Advisory Committee | — | ஆலோசனைக் குழு |
| Agreement | — | ஒப்பந்தம் |
| Allotment of Shares | — | பங்குகளை வழங்குதல் |
| Alteration | — | மாறுதல் |
| Amalgamation | — | இணைதல் |
| Amendment | — | திருத்தம் |
| Annual General Meeting | — | வருடாந்திரப்பொதுக்கூட்டம் |
| Annual Returns | — | வருடாந்திரக் கணக்குகள் |
| Annulment | — | நீக்கல் |
| Apparent Authority | — | வெளிப்படை அதிகாரம் |
| Appointment | — | அலுவல் |
| Arbitration | — | நடுவர் முடிவு |
| Arrangement | — | ஏற்பாடு |
| Articles of Association | — | செயல் முறை விதிகள் |
| Association Clause | — | சேர்க்கைக் கூறு |
| Association | — | சேர்க்கை |
| Adoption | — | ஏற்றுக்கொள்ளல் |
| Assets | — | சொத்துகள், சொத்திருப்பு |
| Assignment | — | உரிமை மாற்றம் |
| Associate | — | கூட்டுச் சேர்ந்தவர் |

| | |
|---|---|
| Audit | — தணிக்கை |
| Auditor | — தணிக்கையாளர் |
| Audited Accounts | — தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் |

**B**

| | |
|---|---|
| Balance Sheet | — ஐந்தொகைக் குறிப்பு |
| Banking Company | — வங்கி நிறுவனம் |
| Bankruptcy | — நொடிப்பு நிலைமை |
| Bankrupt | — நொடிப்பு நிலையர் |
| Bearer | — கொணர்பவர் |
| Bearer-debenture | — கொணர்பவர் கடனீட்டுப் பத்திரம் |
| Bill of Exchange | — மாற்றுச் சீட்டு |
| Board of Directors | — இயக்குநர்கள் குழு |
| Board Meetings | — இயக்குநர் குழுக் கூட்டங்கள் |
| Bonus Shares | — மேலூதியப் பங்குகள் |
| Book-debts | — ஏட்டு நிலுவைகள் |
| Books | — பதிவேடுகள் |
| Books of Accounts | — கணக்குப் பதிவேடுகள் |
| Borrowing | — கடன் கொளல் |
| Breach of Trust | — நம்பிக்கை நாசம் |
| Brokerage | — தரகு |
| Broker | — தரகர் |
| Business | — தொழில் அல்லது வியாபாரம் |
| Business hours | — அலுவல் நேரம் |
| Buying Agent | — கொள்முதல் முகவர் |
| Benefit Fund | — நலந்தரும் நிதி |

**C**

| | |
|---|---|
| Calls | — கோரிக்கைகள் |
| Call Money | — கோரிக்கைத் தொகை |
| Cancellation of Shares | — பங்குகள் நீக்கம் |
| Capital | — மூலதனம் |
| Cash | — ரொக்கம் அல்லது பணம் |
| Citizen | — குடிமகன் |
| Central Government | — மத்திய அரசு |
| Certificate | — சான்றிதழ், சான்றுச் சீட்டு |
| Certificate of Incorporation | — நிறுவனம் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் |

Certification of Transfer — உரிமை மாற்றமானதைச் சான்று செய்வது

Certificate of commencement of business — தொழில் துவக்கப்பட்டதற்கான சான்றிதழ்

Charge — பற்று

Charitable Contribution — ஈகைத் தொகை

Chartered Companies — பட்டயம்பெற்றநிறுவனங்கள்

Circular — சுற்றறிக்கை

Commencement of Business — தொழில் துவக்கம்

Commission — தரகு

Committee — குழு

Committee of Inspection — பார்வைக் குழு

Compensation — நிறையீடு

Company — நிறுவனம்

Compromise — ஒத்திசைவு

Conclusiveness — முடிந்த நிலையது

Condition — நிபந்தனை

Construction — விளக்கம்

Constructive Notice — கொள்நிலை அறிவிப்பு

Contract — ஒப்பந்தம்

Contribution — விகிதப் பொறுப்பு

Contributories — பங்குக் கடப்பாட்டாளர்கள்

Court — நீதிமன்றம்

Creditors — கடனுளர்கள்

Civil Liability — உரிமையியல் பொறுப்பு

Crown Debts — அரசுக்குரிய கடன்கள்

Criminal Liability — குற்றவியல் பொறுப்பு

Cumulative Preference Shares — திரட்டப்படும் முன்னுரிமைப் பங்குகள்

Cumulative Voting — திரட்டப்படும் வாக்கெடுப்பு

## D

Dead Lock — முட்டு நிலை

Debentures — கடனீட்டுப் பத்திரங்கள்

Debenture-holder — கடனீட்டுப் பத்திரதாரர்

Debts — கடன்கள்

Debtors — கடனாளிகள்

Deceit — வஞ்சகம், மோசம்

Declaration — விளம்பல்

Declaration of Solvency — செல்வநிலை விளம்பல்
Deed — ஒப்பாவணம்
Defamation — அவதூறு
Deferred Shares — பின்னுரிமைப் பங்குகள்
Definition — வரையறை
Defunct Company — செயலிழந்த நிறுவனம்
Delegation — ஒப்படைவு
Depreciation — தேய்மானம், மதிப்பிறக்கம்
Directors — இயக்குநர்கள்
Disclainer — பொறுப்பேற்காதிருத்தல்
Disclosure — தெரிவித்தல்,வெளிப்படுத்தல்
Discount — தள்ளுபடி
Disputed Debt — தகராறு செய்யப்படும் கடன்
Disqualification — தகுதியின்மை
Dissolution — கலைத்தல்
Dividend — பங்கு ஆதாயம்
Domicile — நிலையகம்

**E**

Ejusdem Generis Rule — இனங் கொளல் விதி
Equity Share — சம உரிமைப் பங்கு
Examination — விசாரணை
Expenses — செலவுகள்
Estoppel — முரண்தடை
Expert — வல்லுநர்
Extraordinary Meeting — சிறப்புக் கூட்டம்
Extraordinary Resolution — தனிமுறைத் தீர்மானம்

**F**

False Statement — பொய்யுரை
Fictitious person — புனைநபர்
Fiduciary position — நம்பிக்கைக்குப் பாத்திர மான பதவி
Fiduciary Relationship — நம்பக உறவு
First General Meeting — முதற் பொதுக் கூட்டம்
Fixed Charge — நிலையான பற்று
Floating Charge — படரும் பற்று
Foreign Company — வெளிநாட்டு நிறுவனம்
Forfeiture — பறிமுதல்
Forged Transfer — பொய்யான உரிமை மாற்றம்

| | |
|---|---|
| Forgery | — பொய்யாவணம் புனைதல் |
| Formation of a Company | — நிறுவனத்தை உருவாக்குதல் |
| Founder's Shares | — நிர்மாணித்தவர் பங்குகள் |
| Fraud | — மோசடி |
| Fraudulent Preference | — ஓர வஞ்சகம், மோசடியான சலுகை |
| Fraudulent Trading | — மோசடியான தொழில் |

## G

| | |
|---|---|
| General Meeting | — பொதுக் கூட்டம் |
| Government Companies | — அரசினர் நிறுவனங்கள் |
| Guarantee Company | — பொறுப்புறுதி நிறுவனம் |

## H

| | |
|---|---|
| Holding Company | — கொண்ட நிறுவனம் |
| Honorarium | — மதிப்பூதியம் |

## I

| | |
|---|---|
| Illegal Associations | — சட்ட முரணான சேர்க்கைகள் |
| Incorporation | — ஒன்று சேர்த்தல், இணைதல் |
| Implied Powers | — உட்கிடை அதிகாரங்கள் |
| Indoor Management | — உட்புற நடைமுறைக் கோட்பாடு |
| Infant | — இளவர் |
| Insolvency | — நொடிப்பு நிலைமை |
| Inspection | — பார்வையிடல் |
| Inspectors | — பார்வையாளர்கள் |
| Interest | — வட்டி |
| Interium Dividend | — இடைக்காலப் பங்கு ஆதாயம் |
| Interpretation | — விளக்கம் |
| Intra Vires acts | — வரம்புக்குட்பட்ட செயல்கள் |
| Investigation | — புலனாய்வு, விசாரணை |
| Investments | — முதலீடு |
| Irregularities | — முறைகேடானவைகள் |
| Issuing House | — பங்குகள் வழங்கும் தொழிலகம் |

## J

| | |
|---|---|
| Joint Stock Company | — கூட்டுப் பங்கு மூலமுடைய நிறுவனம் |

Jurisdiction of Court — நீதிமன்றங்களின் அதிகார எல்லை

Just and Equitable — நீதியும் நேர்மையுமான

L

Laches — காலந் தவறுதல்
Liability — பொறுப்பு
Lien — பற்றுரிமை
Lifting the Veil — திரை தூக்குதல்
Limited — வரம்புற்றது
Liquidation Account — கலைப்புக் கணக்கு
Liquidator — கலைப்பாளர்
List — பட்டியல்
Loans — கடன்கள்
Loss of Office — பதவி இழப்பு
Lost Capital — இழந்த மூலதனம்

M

Management — மேலாண்மை
Manager — மேலாளர்
Managing Agent — மேலாண்மை முகவர்
Managing Agency — மேலாண்மை முகவரை
Managing Director — மேலாண்மை இயக்குநர்
Maximum Number — உச்ச எண்ணிக்கை
Meetings — கூட்டங்கள்
Members — உறுப்பினர்கள், அங்கத்தினர்கள்

Memorandum of Association — அமைப்பு முறையேடு
Minimum Number — குறைந்த எண்ணிக்கை
Minimum Subscrition — குறைந்த கட்டணம்
Minority — சிறுபான்மையினர்
Minutes — நடவடிக்கைக் குறிப்பு
Misfeasance — குற்றச் செயல்கள்
Mismanagement — ஒழுங்கீனமான மேலாண்மை
Misrepresentation — திரித்துக் காட்டல்
Mortgage — அடைமானம்

N

Negligence — கவனமின்மை
Nidhis — நிதி

Negotiable Instruments — மாற்றுமுறையாவணங்கள்
Nominal Capital — சொல்லத்தக்க மூலதனம்
Notice — அறிவிப்பு

## O

Objects — நோக்கங்கள்
Office of Profit — ஆதாயமுள்ள அலுவல்
Officers — அதிகாரிகள்
Official Liquidator — கலைப்பு அதிகாரி
One Man Company — ஒரு நபரின் நிறுவனம்
Oppression — ஒடுக்குதல்
Ordinary Share — சாதாரணப் பங்கு
Ordinary resolution — சாதாரணத் தீர்மானம்

## P

Partnership — கூட்டாண்மை
Past Director — முன்னாள் இயக்குநர்
Past Member — முன்னாள் உறுப்பினர்
Perpetual existence — நிலையாக நடமாடல்
Perpetual Sucession — நிலையான வழியுரிமை
Perpetual Debentures — நிலையான கடனீட்டுப் பத்திரங்கள்
Poll — வாக்கெடுப்பு
Preference Shares — முன்னுரிமைப் பங்குகள்
Preferential Payments — முதன்மையாகக் கொடுபட வேண்டிய கடன்கள்
Preliminary Contracts — முன் ஒப்பந்தங்கள்
Preliminary Expenses — முன் செலவுகள்
Premium — மிகையூதியம்
Present Member — இந்நாள் உறுப்பினர்
Presumptions — துணிபு
Pre-emption — வாங்கு முன்னுரிமை
Private Company — தனியார் நிறுவனம்
Priority — முதன்மை
Promotors — துவக்குநர்கள்
Procedure — நடைமுறை
Proceedings — நடவடிக்கைகள்
Profit and Loss Accounts — ஆதாய இழப்புக் கணக்குகள்
Profits — ஆதாயம்
Prosecution — சட்ட நடவடிக்கைத் தொடர்பு

Promotions — உண்டாக்குதல்
Prospectus — திட்ட அறிவிப்பு
Provident Fund — வருங்காலச் சேம நிதி
Proxy — மாற்ருள்
Public Company — பொது நிறுவனம்
Public Examination — பகிரங்க விசாரணை
Public Document — அரசு ஆவணம்

## Q

Qualifications — தகுதிகள்
Quorum — குறைவெண் வரம்பு

## R

Receiver — பேணுநர்
Reconstruction — மறு நிர்மாணம்
Rectification — திருத்தம்
Redeemable Preference Shares — மீட்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள்
Reduction of Capital — மூலதனம் குறைத்தல்
Registrar — பதிவாளர்
Register of Charges — பற்றுகள் பதிவேடு
Register of Directors — இயக்குநர்கள் பதிவேடு
Register of Members — உறுப்பினர்கள் பதிவேடு

## R

Registered Office — பதிவு பெற்ற அலுவலகம்
Registration — பதிவு செய்தல்
Re-issue — மீண்டும் வழங்குதல்
Remuneration — ஊதியம்
Re-organisation of Share Capital — மூலதனத்தைத் திருத்தி அமைத்தல்
Report — அறிக்கை
Rescission — இறுத்தம்
Reserve Capital — ஒதுக்கப்பட்ட மூலதனம்
Resignation — பதவி விலகல்
Resolution — தீர்மானம்
Retirement — ஓய்வு
Rotation — முறைப்படி

## S

| | | |
|---|---|---|
| Science | — | அறிவியல் |
| Scheme | — | திட்டம் |
| Seal | — | முத்திரை |
| Secretaries and Treasurers | — | செயலாளரும்பொருளாளரும் |
| Security | — | பிணையம் |
| Selling Agent | — | விற்பனை முகவர் |
| Set off | — | ஈடு செய்தல் |
| Secured creditor | — | பிணையங்கொண்ட கடனுளர் |
| Share Capital | — | மூலதனம் |
| Share Certificate | — | பங்குச் சான்றிதழ் |
| Share holders | — | பங்குநர்கள் |
| Shares | — | பங்குகள் |
| Share Premium Account | — | பங்கு மிகை ஊதியக் கணக்கு |
| Share Warrants | — | பங்குப் பற்றுணை |
| Special Notice | — | தனிமுறை அறிவிப்பு |
| Special Resolution | — | தனிமுறைத் தீர்மானம் |
| Special Audit | — | தனிமுறைத் தணிக்கை |
| Specific Performance | — | ஏற்றது ஆற்றல் |
| Statement in lieu of Prospectus | — | திட்ட அறிவிப்புக்குப் பதிலாக விவரப்பட்டி |
| Statutory meeting | — | சட்ட முறைக் கூட்டம் |
| Statutory Report | — | சட்ட முறை அறிக்கை |
| Statement of affairs | — | அலுவல்கள் விவரப்பட்டி |
| Steps | — | நடவடிக்கைகள் |
| Stocks | — | பங்கு மூலங்கள் |
| Stock Exchange | — | பங்கு மாற்றும் களம் |
| Subscribers to the Memorandum | — | அமைப்பு முறையேட்டின் ஆதரவாளர்கள் |
| Subscriber | — | கட்டணம் தருபவர் |
| Subsidiary Company | — | கிளை நிறுவனம் |
| Substratum | — | முக்கியக் குறிக்கோள் |
| Surrender of Shares | — | பங்குகளைப் பறிகொடுத்தல் |
| Supervision | — | மேற் பார்வை |
| Schedule | — | பின் இணைவு |

## T

| | | |
|---|---|---|
| Table | — | அட்டவணை |
| Trading Company | — | வியாபார நிறுவனம் |

| | | |
|---|---|---|
| Transfer of Shares | — | பங்குகள் உரிமை மாற்றுதல் |
| Transmission of shares | — | பங்குகள் உரிமை மாறுதல் |
| Trustee | — | நம்பகர் |
| Trust Deed | — | பொறுப்புரிமை அமைப்பு ஆவணம் |

**U**

| | | |
|---|---|---|
| Ultra Vires | — | வரம்பு மீறிய |
| Uncalled capital | — | கோரப்படாத மூலதனம் |
| Unlimited Liability | — | வரம்பற்ற பொறுப்பு |
| Unregistered Company | — | பதிவாகாத நிறுவனம் |

**V**

| | | |
|---|---|---|
| Vacancy | — | காலியிடம் |
| Voluntary Winding up | — | தானாகக் கலைக்கப்படுதல் |
| Votes | — | வாக்குகள் |
| Voting right | — | வாக்குரிமை |

**W**

| | | |
|---|---|---|
| Winding up | — | கலைக்கப்படுதல் |